தனிப்பாடல் திரட்டு

முனைவர் க.த.திருநாவுக்கரசு
M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு

மணியகம்
3/30 , இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை 600085.
9444453737

தனிப்பாடல் திரட்டு

முனைவர்
க. த. திருநாவுக்கரசு

வெளியீடு
மணியகம்
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை–600 085
9444453737

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	தனிப்பாடல் திரட்டு
பொருள்	:	பாடல்கள் –விளக்கங்கள்
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	நான்காம் பதிப்பு –அக்டோபர் 2024 முதற்பதிப்பு – 1960 மூன்றாம் பதிப்பு – 1977 மீனாட்சி பதிப்பகம், கீழ இராச வீதி, புதுக்கோட்டை
நூலின் அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	xii + 270 = 282
தாள்	:	80 GSM Maplitho
எழுத்துரு	:	Tau–Marutham, Pt.11
அச்சிட்டோர்	:	அரசு ஆர்ட்ஸ் 78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை –600 014 044 – 28351101, 28588056 E–mail : arasuarts@gmail.com www.arasuarts.com
வெளியீடு	:	மணியகம் பதிப்பகம், 3/30, இரண்டாவது பிரதான சாலை, கோட்டூர் தோட்டம், கோட்டூர்புரம் சென்னை – 600 085 9444453737, tambalavanan@gmail.com
உரிமை	:	பதிப்பகத்திற்கே
விலை	:	இலவச வெளியீடு
எண்ணிக்கை	:	25 புத்தகங்கள்
ISBN	:	978–93–48345–13–4

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1.	கடவுள் வாழ்த்து	1
2.	அம்பிகாபதி	3
3.	அருணாசலக் கவிராயர்	8
4.	அழகிய சொக்கநாத பிள்ளை	13
5.	அவ்வையார்	20
6.	இரட்டையர்	40
7.	இராம கவிராயர்	46
8.	இராமச்சந்திர கவிராயர்	50
9.	இராமசாமிக் கவிராயர்	58
10.	ஒப்பிலாமணிப் புலவர்	62
11.	ஒட்டக்கூத்தர்	67
12.	கம்பர்	74
13.	கொட்டாம்பட்டி கருப்பையா பாவலர்	86
14.	காளமேகம்	90
15.	சத்திமுற்றப் புலவர்	111
16.	சவ்வாதுப் புலவர்	114
17.	சிவப்பிரகாச சுவாமிகள்	117
18.	சுந்தரகவிராயர்	124
19.	சுப்பிரதீபக் கவிராயர்	129

20. சொக்கநாதப் புலவர் 134
21. பலபட்டடை சொக்கநாதப் புலவர் 141
22. நமச்சிவாயப் புலவர் 150
23. படிக்காசுத் தம்பிரான் 156
24. புகழேந்தி 166
25. பொய்யாமொழிப் புலவர் 171
26. மதுர கவிராயர் 176
27. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 181
28. கடிகை முத்துப் புலவர் 188
29. பாடுவார் முத்தப்பச் செட்டியார் 194
30. வரதுங்க பாண்டியன் 196
31. அந்தகக்கவி வீரராகவ முதலியார் 200
32. வேதநாயகம் பிள்ளை 214
33. பல்சுவைப் பகுதி 242
34. நூலாசிரியரின் நூல்கள் 247
35. தமிழில் வெளியிட்ட கட்டுரைகள் 251
36. வாழ்க்கைக் குறிப்பு 268

முதல் பதிப்பில்
அகிலனின் அணிந்துரை

தமது 'நெஞ்சிலே இட்ட நெருப்பான' காதல் உணர்வால் கீழ்க்கண்டவாறு உளம் துடித்துக் கவிதைக் குரல் கம்பர் மகன் அம்பிகாபதி. உணர்வால் எழுப்புகிறார்

'உருகி, உடல் கருகி உள்ளீரல் பற்றி
எரிவது அவியாது; என்செய்வேன்?'

அந்த இளம் கவிஞரை இந்தத் திரட்டின் தொடக்கத்தில் சந்திக்கும் நாம், 'உண்ணவிருந்த சோற்றை ஒரு நாய் வந்து கௌவ்விக் கொண்டு கருடன் போல் பறந்துவிட்டதே! பசியால் என் வயிறு நெருப்பாய்ப் பற்றி எரிகிறதே! ' என்று பதறித் துடிக்கும் அந்தகக் கவி வீரராகவ முதலியாரை இதன் கடைசியில் இல் கண்டு, அவர் உணர்ச்சியிலும் பங்கு கொள்ளுகிறோம் முன்னவருக்கு நெஞ்சில் நெருப்பு; பின்னவருக்கு வயிற்றில் நெருப்பு; அவர்களுடன் பழகும் நமக்கோ தீஞ்சுவைத் தமிழ் அமுதம்!

இந்தத் தனிப் பாடல் திரட்டுச் சுருக்கத்தில் சிற்சில பிறவிக் கவிவாணர்களையும், சில சொற்சிலம்புப் புலவர்களையும் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் இதன் ஆசிரியை. அவர்களுடைய பாடல்களையும் வாழ்க்கையையும் சுருக்கமாகக் கொடுத்திருக்கிறார்; பிறவிக் கவிஞர்கள் தங்களது உணர்ச்சி வெள்ளப் பெருக்கில் நம்மையும் இழுத்துக்கொண்டு செல்கிறார்கள். மற்றவர்களோ தமது புலமைத் திறமையால் நம்மை வியக்கச் செய்கிறார்கள்.

பயன் கருதியும் படிக்கலாம்: பொழுது போக்காகவும் ரசிக்கலாம். தமிழ் பொழுது போக்கிலேயே ஓர் மறைமுகமான பலன் இருக்கிறது.

பாடல்களைப் பதம் பிரித்து போட்டிருக்கும் முறை எளிதில் எல்லோரையும் படிக்கத் தூண்டுகிறது. பொழிப்புரையும் தேவையான அளவுக்குப் பத உரையும் இதில் காண்கிறோம். இவ்வாறு நமக்குச் சுவையான தமிழ்த் தேன் துளிகளைப் பொறுக்கு மலர்களிலிருந்து திரட்டித் தந்த இதன் ஆசிரியை கலைச்செல்விக்கு என் வாழ்த்துகள். ரசிகத் தேனீயின் உழைப்பு இந்தத் திரட்டில் தெரிகிறது.

மீனாட்சி பதிப்பகத்தார் இந்த நூலை உயர்ந்த முறையில் வெளியிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். இத் தகைய நன் முயற்சிகளுக்கு எப்போதுமே தமிழகத்தின் ஆதரவு உண்டு. அவர்களது இம்முயற்சி வெற்றிபெற்று, வளர்ச்சிக்கு ஆக்கம் தருமாக!

சென்னை 14,
23–1–1960

அகிலன்.

மூன்றாம் பதிப்பின் பதிப்புரை

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!"

பண்டைத் தமிழக வேந்தர்கள் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைத் தங்கள் ஆருயிரெனப் போற்றினர். பாட்டிசைக்கும் பாவலரைப் பாராட்டிச் சிறப்புக்கள் பல செய்தனர். அன்று முடியாட்சி நிலவியது; இன்று குடியாட்சியில் வாழுகிறோம். அன்று மொழியை வளர்ப்பது மன்னர்கள் கடமையாக இருந்தது; இன்று மக்களுடைய கடமையாக உள்ளமை குறிப்பிடத் தக்கது

நல்ல தமிழ் நூல்களைத் தேர்ந்தெடுத்து நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் அளிக்க விரும்பும் விளுமிய நோக்கத்தோடு இப்பதிப்பகத்தைத் தொடங்கினோம். இதன் முதல் வெளியீடே தனிப்பாடல் திரட்டின் சுருக்கம். மக்கள் யாவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்னும் கருத்தினால் இதனை மலிவுப் பதிப்பாக வெளியிடுகிறோம். தமிழ் அன்னையின் திருவடிகளில் இவ் அன்புமலரை அணிவித்து வழிபடுகிறோம்.

ஆசிரியைக்கு இது புதிய முயற்சியாக இருப்பினும் அறிஞர்கள் குறை கூறமுடியாத அளவில் புலவர் வரலாற்றையும் பொருள் விளக்கத்தையும் தந்துள்ளார்கள்.

தமிழகம் இந்நூலுக்கு அளித்த வரவேற்பு, எங்களை பல நூல்களைத் தொடர்ந்து வெளியிட ஊக்குவித்தது.

நல்லதொரு அணிந்துரை வழங்கி இந்நூலினைச் சிறப் புறச் செய்த திரு. அகிலன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகும்.

தமிழகத்தின் நல்ல வரவேற்பின் காரணமாக இந்த நூல் மூன்றாவது பதிப்பாக வெளிவருகிறது. வாசகர்களுக்கு எங்கள் நன்றி.

பதிப்பகத்தார்.

முதல் பதிப்பின் முன்னுரை

புலவன் தன் உள்ளத்து ஊற்றெடுக்கும் உணர்ச்சியோடு, தன் வாழ்க்கை அனுபவம் என்னும் வண்ணத்தைக் கலந்து, கற்பனை என்னும் மெருகிட்டு, மொழி என்னும் கிழியில் தீட்டும் சொல்லோவியமே இலக்கியமாகும்.

தமிழ்மொழி தொன்றுதொட்டு வற்றாத இலக்கிய ஊற்றாக நின்று நிலவி வருவதோடு,பொன்றாப்புகழ் பெற்றுத்திகழ்கிறது. சங்ககாலம், தமிழ் இலக்கியத்தின் 'பொற்காலம்' எனப் போற்றப்படுகிறது. அக்காலந்தொட்டே பல புலவர்கள் பாடிய தனிப் பாடல்கள் பலவற்றைத் தொகுத்து நூலாக்கும் பணியில் பல பாவலர்களும் காவலர்களும் ஈடுபட்டனர் என்பதைப் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் எடுத்தியம்புகின்றன.

சங்க காலத்திற்குப் பிறகு குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது சமய மலர்ச்சிக் காலம். அக்காலத்து இறை அடியார்களின் உள்ளங்களிலிருந்து பெருக்கெடுத்தோடிய அணைகடந்த அன்புவெள்ளம் சைவத் திருமுறைகளாகவும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகவும் நாட்டு மக்களின் நாவில் எல்லாம் நடமாடிக் கொண்டிருப்பதை யாவரும் அறிவர்.

அணைவதற்கு முன்பு அகல்விளக்குச் சுடர்விட்டுப் பேரொளி வீசுவது இயற்கை.அதைப்போன்று தமிழகப் பேரரசும், தமிழ்ப்பண்பாடும் நலியத் தொடங்குவதற்கு முன்பு, இந்திய அரசியல் வானில் ஒரு பேரொளிப் பிழம்பாக விளங்கியது பிற்காலச் சோழப் பேரரசு. மாபெரும் சோழ மன்னர்களது ஆட்சிக் காலத்துத் தமிழகத்தில் கலைமகளும் திருமகளும்

களிநடம் புரிந்தனர். புவிச்சக்கரவர்த்திகளுக்குப் போட்டியாகக் கவிச்சக்கரவர்த்திகள் பலர் (செயங்கொண்டார் ஒட்டக்கூத்தர், சேக்கிழார், கம்பர்) தோன்றினர். தமிழ் மொழி ஒப்பற்ற இலக்கியங்களை உலகிற்குத் தந்துதவியது.

சோழப் பேரரசின் வீழ்ச்சி தமிழ் இலக்கிய வரலாற்றின் திருப்பு மையமாகும். அதற்குப் பிறகு ஈடு இணையற்ற மாபெரும் தமிழ் இலக்கியம் ஒன்று கூடத் தோன்றவில்லை என்று கூறுவது மிகையாகாது. புற்றீசல் போலப் புலவர்கள் பலர் தோன்றினர். அவர்கள் பாடிய தல புராணங்களோ கணக்கில் அடங்கா. ஆயினும், அவையாவும் கால வெள்ளத்தை எதிர்த்து நீந்திக் கரையேறாது வெள்ளத்தோடு சென்றுவிட்டன. காலவெள்ளம் கரையோரத்தில் ஒதுங்கிச் சென்றவை சிதறுண்ட பல தனிப்பாடல்களேயாகும்.

அவற்றைப் பாடிய புலவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவராவர்; பல திறப்பட்ட சமயத்தவராவர்; பலவகைத் தொழில் செய்து வாழ்க்கை நடத்தியவருமாவர். அவர்களைப் போற்றிய புரவலர்களும், வள்ளல்களும் மகிழுமாறு பாடுவதையே இடைக்காலப் புலவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்களுக்கும், இடைக் காலப் புலவர்களுக்கும் கருத்து அளவில் பெரும் வேறுபாடு காணப்படுவதைச் சுட்டிக் காட்டாமல் செல்லுவதற்கில்லை. சங்ககாலச் சான்றோர்கள் விழுமிய கருத்துக்களைத் தெளிவாக, உள்ளத்தில் பதியுமாறு பாடுவதையே கடமையாகக்கொண்டு இருந்தனர். இடைக்காலப் புலவர்கள் கருத்தைப்பற்றிக் கவலைப்படாது. வெறும் சொல் அலங்காரத்தில் மூழ்கித் திளைத்தனர். இதனால் சங்கப் புலவர் பாடல்களில் சொல்லழகு இல்லை என்பது பொருளன்று. சங்கப் பாடல்கள் கருத்தழகும், சொல்லழகும் செறிந்த அறிவுக்கருவூலம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. சங்கப் புலவர்கள் கருத்தழகிற்கு முதன்மையான இடம் கொடுத்தனர். இடைக் காலப் புலவர்கள் பாட்டின் உயிராகிய கருத்தைப் பற்றிக் கவலைப்படாது, வெற்றுடலாகிய

செய்யுளுக்குச் சொற்களாகிய ஆடை அணிகளை அணிவித்து மகிழ்ந்தனர். இந்நிலை பாரதி தோன்றும் வரை தமிழகத்தில் நிலவி இருந்தமை வருந்தத் தக்கதேயாகும்.

ஆயினும், இடைக் காலப் புலவர்களின் பாடல்கள், அவர்கள் வாழ்ந்த காலத்திய தமிழகத்தின் சமூக வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் ' காலக் கண்ணாடி'களாக அமைந்துள்ளன. அவற்றை எல்லாம் தொகுத்து, பல ஆண்டுகளுக்கு முன்பே 'தனிப்பாடல் திரட்டு' என்று இரண்டு தொகுதிகளாகத் தமிழ் அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாடல்களை முறையாக இக்காலத் தமிழ் மக்களால் படித்துப் பயன்பெற இயலாத காரணத்தினால், அவற்றுள் எளிமையும், இனிமையும், தெளிவும், சொல் நயமும், பொருள் நயமும் வாய்ந்த பாடல்கள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்குரிய பொழிப்புரையும், விளக்கவுரையும், நயமும் தக்க இடத்தில் அமையுமாறு, தனிப்பாடல் திரட்டின் சுருக்கமாக இந்நூலினை யாத்துள்ளேன்.

இந்நூலின் முதற்பகுதியில் முப்பதுக்கும் மேற்பட்ட புலவர்களின் பாடல்களைக் காணலாம். ஒவ்வொரு புலவருடைய வரலாற்றையும் ஓரளவிற்குப் படிப்போர் தெரிந்திருத்தல் நலம் எனக்கருதி, ஆராய்ச்சிக்குப் பொருந்தும் வண்ணம் ஆசிரியர் வரலாற்றை வரைந்துள்ளேன். இரண்டாம் பகுதியில் பல வகைப்பட்ட சுவையுடைய பாடல்கள் சிலவற்றிற்கு விளக்கம் தந்துள்ளேன்.

எனது முயற்சிக்கு ஊக்கம் தரும் வகையில் இந்நூலினைத் தங்கள் முதல் வெளியீடாக வெளியிட முன்வந்த புதுக்கோட்டை மீனாட்சி பதிப்பகத்தாருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

அணிந்துரை வழங்கிய தமிழகத்தின் சிறந்த எழுத்தாளரான திரு. அகிலன் அவர்கட்கு என் நன்றி உரித்தாகுக.

'கலைச் செல்வி.'

1. கடவுள் வாழ்த்து

சார்பினால் தோன்றாது. தான் அருவாய் எப்பொருட்கும் சார்பெனநின்று, எஞ்ஞான்றும் இன்பம் தகைத்தரோ வாய்மொழியான், மெய்யான், மனத்தான், அறிவிறந்த தூய்மையதா மைதீர் சுடர்.

தான் ஒரு பற்றுக்கோடும் இல்லாமல் தோன்றி, 'இப்படியன், இந்நிறத்தன்,இவ்வண்ணத்தன்,இவன்இறைவன்'என்றுகூறத்தக்க வடிவம்இல்லாதஅருவமாய்,தத்துவங்கள்அனைத்தையும்கடந்து, அறிவினால்ஆராய்ந்துஅறியமுடியாதகுற்றமற்றதூயஒளிப்பிழம்பாய், உலகில் உள்ள பொருள்கள் யாவும் குறைவற்ற இன்பத்தை நுகருமாறுதிருவருள்புரியும்பரம்பொருள்நமதுமனம்,மொழி,மெய் ஆகியவற்றுள்நீக்கமறநிலைபெற்றுள்ளான்.அப்பரம்பொருளைப் போற்றி வணங்குவோம்.

குறிப்பு: மெய்யுணர்வு பெற்ற பண்டைத் தமிழ்ச் சான்றோர் இறைவன் 'ஒருபற்றுமற்று அருவாய்த்தானே நிற்கும் தத்து வம் கடந்தபொருளாக'உள்ளதைஉணர்ந்து,'கந்தழி'என்னும்பெயரால் அவனைப்போற்றிவழிபட்டனர்.இப்பாடல்அக்கருத்தைவிளக்கும் வகையில்அமைந்துஇருக்கிறது.இதைப்பாடியபெருந்தகையின் பெயர் தெரியவில்லை.

சார்பு–பற்று,அருவாய்–உருவம்அற்றதாய்;தகைத்தரோ–குறைவுஇல்லாமல், இறந்த–கடந்த, மைதீர்–குற்றமற்ற, அரோ–அசை.

2. அம்பிகாபதி

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் மகன் அம்பிகாபதி. அவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவராவர். கவிபாடுவதில் நன்கு தேர்ச்சி பெற்றவர். 'தந்தையர் ஒப்பர் மக்கள்' எனும் பழமொழிக்கு ஏற்ப இளமைப் பருவத்திலேயே சிறந்த கவிஞராய்த் திகழ்ந்து சீரும் சிறப்பும் பெற்று விளங்கினார்.

அம்பிகாபதியின் வாழ்க்கை வரலாறு ஒரு காதல் காப்பிய மாகும். உலக ஏடுகளில் பொன்றாப் புகழ் பெற்ற 'லைலா– மஜ்னு' 'ரோமியோ – ஜூலியட்' 'அனார்கலி – சலீம்' ஆகியோருக்கு இல்லாப் பெரும் சிறப்பு, நம் 'அம்பிகாபதிக்கும் –அமராபதிக்கும்' உண்டு. அவர்கள் எல்லாம் உலகம் போற்றக் கூடிய ஒப்பற்ற காதலர்களாக வாழ்ந்தனர்; மறைந்தனர். பாட்டிசைக்கும் பாவலனாகிய அம்பிகாபதி, நாடாளும் காவலன் காரிகையின் காதலைத்தனது கவித்திறனுக்குத் திறையாகப் பெற்றான். இருவரும் காதலுக்காக வாழ்ந்தனர். காதலன் கொலைக் களத்தே தனது ஆருயிரைக் காதல் தெய்வத்திற்குப் பரிசாகத் தந்தான் என்ற செய்தி செவியினுள் நுழையு முன்பே அரசிளங்குமரி அன்பனது ஆருயிருக்குத் தக்க துணையாகப் பின்தொடர்ந்து சென்றாள்.

அம்பிகாபதியின் வாழ்வு அழியாப் பெருவாழ்வு. வாழ்வில், தான் உணர்ந்த காதலின் நுட்பத்தை நுகர்ந்த இன்பத்தின்

எக்களிப்பைக் 'கற்பனை' எனும் வண்ணத்தில் குழைத்துத் 'தமிழ்' எனும் கிழியில், 'அகப்பொருள்' எனும் எழுதுகோலால் 'கோவை' எனும் அழகு ஒழுகும் உயிர் ஓவியமாகத் தீட்டி, இறந்தும் இறவாப் பெறும் புகழுடன் நம்மிடையே வாழ்ந்து வருகிறான் அம்பிகாபதி, 'அம்பிகாபதிக் கோவை' என்று அவருடைய பெயரையே சிறந்த அடைமொழியாகக் கொண்டு இலங்கும் இந்நூல் தமிழில் உள்ள சிற்றிலக்கியங்களுள் ஈடும் இணையும் அற்றதாகும்

அரசன் மகளை அம்பிகாபதி புகழ்ந்து பாடியுள்ள பாடல்கள் அவருடைய உள்ளத்தில் ஊற்றெடுத்த காதல் உணர்வின் வேகத்தையும், ஆழத்தையும், ஆற்றலையும் அறிவிப்பனவாக உள்ளன. அவை சொற்சுவையும் பொருட்சுவையும் பயப்பன வாகும். தனது தந்தை இயற்றிய இராமாயணத்திற்குக் 'கம்ப நாடன்' எனத் தொடங்கும் சிறப்புப் பாயிரத்தை அம்பிகாபதி பாடியருளினார் என்பர்.

இளைஞனாக இருந்த காலையில் காதலுக்காக உயிர்நீத்த இப் புலவர் பெருமகனார், நெடுநாட்கள் வாழ்ந்திருப்பின் தமிழ் இலக்கியம் பல வகையில் வளம் பெற்றிருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அம்பிகாபதி மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்) வாழ்ந்தவராவர்.

அம்பிகாபதி அரசகுமாரியைப் புகழ்ந்து பாடியது

மைவடிவக் குழலியர்தம் வதனத்தை
நிகர்ஒவ்வா மதியே! மானே!
செய்வடிவைச்,சிற்றிடையைத், திருநகையை,
வேய்த்தோளைத் தெய்வமாக
இவ்வடிவைப் படைத்தவடிவு எவ்வடிவோ?
யான் அறியேன்! உண்மையாகக்
கைபடியத் திருமகளைப் படைத்து, இவளைப்
படைத்தனன் நல் கமலத்தோனே!

கரிய மேகத்தின் வண்ணமாகிய கூந்தலுக்கு இடையே தோன்றும் ஒளிமிகுந்த இம்மங்கையின் முகத்திற்கு இணை இல்லாத மதியே! அழகிய மிரளும் இவள் விழிகளுக்கு ஒப்புமை கூற இயலாத கண்களை உடைய மான்களே! 'வடிவழகும். உடுக்கைபோன்ற சிறுத்த இடையும், முத்துப்போன்று ஒளி விடும் அழகிய பற்களையும், மூங்கில் போன்று உருண்டு திரண்ட தோள்களையும் உடைய இந்த அழகுத் தெய்வத்தைப் படைத்தது யார்?' என்பதை யான் அறியேன்! தாமரை மலரில் வாழும் பிரமதேவன் முதலில் திருமகளின் எழில் உருவைப் படைத்து படைப்புக் கலையிலே ஓரளவிற்குக் கைப் பழகிய பின்னரே, திருமகளினும் சிறந்த இவள் எழில் உருவை படைத்திருக்க வேண்டும்.

நயம்:அரசகுமாரியின்திருமுகத்திற்குமதியும்இணையாகாது. விழிகளுக்கு மான்விழியும் ஒப்பாகாது. வடிவழகில் திருமகளும் நிகராகாள்.இத்தகையபேர்அழகியைப்படைக்கபிரமன்எவ்வளவு அரும்பாடுபட்டுமுயன்றுஇருக்கவேண்டும்என்பதுஅம்பிகாபதியின் கருத்து.

மை – கரிய; வதனம் – முகம்; வேய் – மூங்கில்: கமலத்தோன் – பிரமன்.

உருகி, உடல்கருகி உள்ளீரல் பற்றி
எரிவது அவியாது; என்செய்வேன்?– வரிஅரவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே இட்ட நெருப்பு.

வரிகளையுடையபாம்பினதுநஞ்சில்தோய்க்கப்பட்டசெந்தாமரை மலர்போன்றகண்களையுடையபெண்ணரசி.எனதுஉள்ளத்தில் காதல்தீயினைமூட்டிவிட்டாள்.அத்தீஎனதுஉடலைக்கருக்கி, உள்ளத்தைஉருக்கிஉள்ளேயுள்ளஎனதுஇதயத்தில்கொழுந்துவிட்டு எரிகிறதே! அவிந்த பாடில்லையே! இத் துன்பத்தைத் தணிக்கும் மருந்தைப் பெறுவதற்கு யான் என் செய்வேன்?

குறிப்பு:– எழில்மிக்க அரசகுமாரியைப் பல நாட்கள் சந்திக்க இயலாது.உளம்சோர்ந்து.உடல்மெலிந்துதுன்புற்றபோதுஅம்பிகாபதி அவள் தந்த நோயின் தன்மையைக் கூறியதாகும்.

அரவம் – பாம்பு; நளினம்– தாமரை.

சோழ மன்னன் தன் மகளிடத்து அம்பிகாபதி காதல் கொண்டு இருப்பதாகக் கேள்வியுற்று வியப்பு அடைந்தான். அதனை அறிதற்பொருட்டுத் தன் அரண்மனையில் கம்பரையும், அம்பிகாபதி முதலியோரையும் ஒரு நாள் விருந்துண்ணுமாறு அழைத்தான். அரசன் தன் மகளை உணவு பரிமாறச் செய்தான். அவள் கையில் கிண்ணத்தைச் சுமந்து விருந்து பரிமாற ஒய்யாரமாக நடந்து வந்தாள், அவளைக் கண்ட அம்பிகாபதி மெய் மறந்து தன் காதலியின் வடிவழகை வருணிக்கத் தொடங்கி 'இட்டடி, நோவ, எடுத்த அடி கொப்பளிக்க–வட்டில் சுமந்து மருங்கு அசைய' என்று பாடத் தொடங்கினான். அதைக் கேட்ட கம்பர் தன் மகனுக்குத் தீங்கு வரும் என்று அஞ்சி கலைமகளைத் தியானித்தார். அந்நிலையில் தெருவில் ஒருத்தி கொட்டிக் கிழங்கு விலை கூறிக்கொண்டு சென்றாள். உடனே கம்பர் தன் மகன் பாடிய பாட்டிற்குப் பொருந்த எஞ்சிய பகுதியைப் பாடி முடித்தார்.

இட்டடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க,
வட்டில் சுமந்து மருங்கு அசையக்.– கொட்டிக்
கிழங்கோ கிழங்கு' என்று கூறுவாள் நாவில்
வழங்கு ஓசை வையம் பெறும்.

நிலத்தில் மிதித்துள்ள அடி வருந்தவும், நிலத்தினின்று எடுக்கப்பட்ட மற்றொரு அடி பூமியில் அழுந்தியதனால் கொப்புளம் காணவும், வட்டிலைக் கையில் தாங்கிச் சிறுத்த இடையானது அசையவும், 'கொட்டிக் கிழங்கோ கிழங்கு' என்று கூறுவாள் நாவில் இருந்து எழுகின்ற சொற்களானது உலகம் மதிக்கத் தக்கதாகும்.

வட்டில் – கிண்ணம்: மருங்கு – இடை; கொட்டிக்கிழங்கு – நீரில் படரும் ஒருவகைக் கொடியின் கிழங்கு; வையம் – உலகம்.

தன் மகளைக் காதலித்ததற்காக அரசன் அம்பிகாபதிக்குக் கொலைத்தண்டனை விதித்தான். ஆயினும் கவியரசர் கம்பருடைய மகன் என்ற காரணத்தினால் அம்பிகாபதி சிற்றின்பம் கலவாது, பேரின்பத்தைப் பற்றி நூறு பாடல்களைப் பாடினால், அவனைத் தண்டிக்காமல் விட்டுவிடுவதாகக் கூறினான். அவ்வாறே அரசனது அவையில் அம்பிகாபதி, பேரின்பத்தைப்பற்றிக் தொண்ணூற்று ஒன்பது பாடல்கள் பாடினான். மறைவாய் இருந்து அவனுடைய பாடல்களை எண்ணிக்கொண்டிருந்த அரசிளங்குமரி, தொண்ணூற்று ஒன்பதாவது பாடல் பாடியவுடன் காப்புச் செய்யுளையும் அதனோடு சேர்த்து நூறு என்று தவறாகக் கணக்கிட்டு அம்பிகாபதியை எட்டிப் பார்த்தாள். அவளைக் கண்ட அம்பிகாபதி சிற்றின்பக் கருத்து அமைய பாடியது.

சற்றே பருத்த தனமே குலுங்கத், தரளவடம்
துற்றே அசையக், குழை ஊசலாட துவர்கொள்
[செவ்வாய்
நற்றேன் ஒழுக, நடன சிங்கார நடையழகின்
பொற்றேர் இருக்கத் தலயலங்காரம் புறப்பட்டதே!

சிறிது அளவு பருத்துள்ள கொங்கைகள் குலுங்கவும், முத்துமாலையானது அதன்மீது நெருங்கி அசைந்தாடவும் காதுகளில் அணிந்துள்ள அழகிய குழைகள் அசையவும், பவழம் போன்ற செவ்விதழ்களை உடைய வாயில் தேனினும் இனிமையான சொற்கள் எழ, அன்னம் போல் சிங்கார நடை அழகு அமைந்த பொன்போன்ற பொலிவுமிக்க உடலாகிய தேர் இருக்க, அழகாக அலங்கரிக்கப்பட்ட தலைப் பகுதி மட்டும் வெளித்தோன்றியது வியப்பிற்குரியது.

நயம் : பொன் தேர் இருக்க – அல்குலாகிய மறைவு இடம் இருக்க, முழுமதியம் போன்று ஒளிரும் முகத்துடன் கூடிய தலைச் சிகரம் வெளித் தோன்றிற்று என்பது சிற்றின்பக் கருத்தாகும்.

தனம் – மார்பகம் ; தரளம் – முத்து; துற்று – மேலே தொங்கி அல்லது நெருங்கி; குழை – பெண்கள் காதணி;துவர் – பவழம்.

3. அருணாசலக் கவிராயர்

(கி.பி.1712 – 1779)

சோழ நாட்டில் தரங்கம்பாடியை அடுத்துள்ள தில்லையாடியில், நல்ல தம்பிப் பிள்ளைக்கும் வள்ளி அம்மைக்கும் மகனாகத் தோன்றினார். இவருடைய தந்தையார் இளமையில் சமணராக இருந்து, பின்னர்ச் சைவரானவர். அருணாசலம் இளமைப் பருவத்திலேயே இசையுடன் பாடக்கூடிய திறமையைப் பெற்றிருந்தார். இவரது பன்னிரண்டாம் வயதில் பெற்றோர் இருவரும் இறந்தனர்.

தன்னை ஆதரிப்பார் யாரும் இல்லாத காரணத்தால், கல்வி கற்பதற்காக தருமபுர ஆதீனத்திற்குச் சென்றார். அங்கு இலக்கண இலக்கியங்களிலும், சமய நூல்களிலும் தக்க புலமை எய்தினார். வடமொழியிலும், தெலுங்கிலும் ஓர் அளவு பயிற்சி பெற்றார். இயல் தமிழ்ப் பாடல்களும், இசைத் தமிழ்ப் பாடல்களும் இயற்றும் ஆற்றலையும் பெற்றார். முப்பதாவது வயதில் திருமணம் செய்துகொண்டு, காசுக்கடை வைத்து இல்வாழ்க்கை நடத்தி வந்தார்.

ஒருமுறை சீர்காழிக்குச் சென்றபோது அங்கிருந்த தவத்திரு சிதம்பரத் தம்பிரான் அருணாசலத்தின் புலமையைக் கண்டு வியந்து பாராட்டினார். அவருக்குச் சீர்காழியில் வீடுகட்டிக் கொடுத்து அங்கேயே வாழுமாறு செய்தார். அதனாலேயே இவர் சீர்காழி அருணாசலக் கவிராயர் என அழைக்கப்படுகிறார். இவருடைய மாணவர்களின் வேண்டு கோளுக்கு இணங்கி, இவர் 'இராம நாடகக் கீர்த்தனை' என்ற நூலை இயற்றினார். அந்நூல் எளிய இனிய சொற்களால் அமைந்தது; இசை நாடகங்களுக்கு ஏற்ற முறையில் இயற்றப்பட்டது. அதனால் எல்லோராலும் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது. திருவரங்கத்தில் அதனை அரங்கேற்றம் செய்தார்."

பிறகு பல குறுநில மன்னர்களுடைய அவையிலும், பல செல்வந்தர்கள் முன்னிலையிலும் அந்நூலினை விரிவுரை ஆற்றிப் பரிசுகள் பல பெற்றார். இவர் தமது அறுபதாவது வயதில் இராம நாடகக் கீர்த்தனையைப் பாடியருளினார். அறுபத்து ஏழாம் வயதில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

இவர் பல தனிப் பாடல்கள் பாடியிருப்பதுடன், அசோமுகி நாடகம், சீர்காழித் தலபுராணம், சீர்காழிக் கோவை. அனுமார் பிள்ளைத் தமிழ் முதலிய பல நூல்களும் இயற்றியுள்ளார்.

இராம நாடகக் கீர்த்தனை அரங்கேற்றத்திற்கு உதவி புரியுமாறு மணலி முத்துக்கிருஷ்ண முதலியார் மீது பாடியது.

சித்திதரு கிறவல்லி, புத்திதரு கிறவல்லி,
தேவர்கள் வணங்குவல்லி,

தில்லைநா யகவல்லி, சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணையாலே,

சத்தியவா சகன்என்று பூமண்டல அதிபர்கள்
தாம்எங் கணும் துதிக்கும்

சகலபா ஷாநிபுண மணலிமுத்துக் கிருஷ்ண
சதுரநீ வாழி! கண்டாய்;

நத்துமலர் குவளைநான்; மதியநீ! செஞ்சாலி
நான்; கருவி மழைமேகநீ!

நளினநான்; பரிதிநீ! பிள்ளை நான்; அன்னை நீ
நான் கவிஞன்; வழுதிநீகாண்!

சுத்தமுள ராமாய ணம்தனைக் கொண்டுனது
சுமுகம் அது பெறவருகிறேன்;

சொற்பொருள் அறிந்தஅளவு சொல்லுவேன் கேட்கவே
துணையாக வேணும்நீயே!

நினைத்த செயல் கைகூடுமாறு காரிய சித்தியை அளிக்கின்றவள் கொடி போன்று உள்ள அம்பிகை; அறிவினைத் தருகின்ற தேவியாகிய அவ் அம்பிகையைத்

தேவர்கள் வழிபடுகின்றனர். அவள் தில்லைக்குத் தலைமை பூண்டு, 'சிவகாமி' என்னும் திருப்பெயருடன் திகழ்கின்றாள். அவ்வம்மையின் திருக்கண்களின் அருள் நோக்காலே 'பொய்யா மொழியான்' என்று நிலவுலகத்தார் போற்றுகின்ற எல்லா மொழிகளிலும் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று, மணலி என்னும் ஊரில் வீற்றிருக்கின்ற முத்துக் கிருஷ்ண முதலியாராகிய திறமைசாலியே!நீ நீடூழி வாழ்வாயாக! சங்குகள் தங்கும் குவளை மலரைப் போன்றவன் நான்; அதற்கு மலர்ச்சி தருகின்ற சந்திரனைப் போல்வாய் நீ! செந்நெல் கதிர் நான்; கார்காலத்து மழை பொழிகின்ற மேகம் நீ! தாமரைப்பூ நான்; சூரியன் நீ! குழந்தை நான்; தாய் நீ! நான் பாட்டிசைக்கும் பாவலன்; பாட்டிற்குப் பரிசு அளிக்கும் பாண்டியன் நீ! குற்றம் இல்லாமல் செய்த இராமாயணக் கீர்த்தனையோடு உனது நன்மதிப்பைப் பெற வருகிறேன்; சொல்லின் பொருளை யான் அறிந்த அளவு எடுத்து இயம்புவேன்; அதை எல்லாரும் கேட்கும்படி நீ உதவி செய்ய வேண்டும்.

பேய்.

தன்னைப் புகழ்வானும், சாட்சிசொல்லி நிற்பானும்,
பொன்னை மிகத்தேடிப் புதைப்பானும், – ஒன்னலர்தம்
நண்புத்தி கேட்பானும், நாணமில்லா தானும்,
பெண்புத்தி கேட்பானும் பேய்

தன் பெருமை பாராட்டுகின்றவனும், பொய்ச்சாட்சி சொல்லுபவனும், பொருளை அதிகமாகச் சேர்த்து நிலத்திற்குள் மறைத்துவைப்பவனும்,பகைவருடையபொய்நட்பினைஅறியாது அவர்களுடைய அறிவுரையை நம்புகிறவனும், தன்மானம் இல்லாதவனும்,மையல்காரணமாகப்பெண்கள்கூறுவதைக்கேட்டு நடப்பவனும் பேயைப் போன்றவர்களாவர்.

ஒன்னலர் – பகைவர்; நண்பு – நட்பு.

வஞ்சகர் பண்பு

செங்கமலப் போது அலர்ந்த செவ்விபோ லும்வதனம்,
தங்குமொழி சந்தனசீ தம்போலும்,– அங்கிளரி
கத்திரியைப் போலுமாம் காரிகையே! வஞ்சர்மனம்
குத்திரர்பான் மூன்று குணம்.

பெண்ணே! வஞ்சக நெஞ்சம் உடைய பொய்யர் இடத்தில் மூன்று பண்புகள் காணப்படும்.முதலாவதாக அவருடைய முகம் செந்தாமரைப் பூவின் மலர்ச்சிபோல் அழகு உடைய தாகக் காணப்படும். இரண்டாவதாக அவர்கள் வாயினின்று வெளிவரும் சொற்கள் சந்தனத்தின் குளிர்ச்சியைப்போன்று இருக்கும். மூன்றாவதாக அவர்களுடைய வெப்பம் மிக்க உள்ள மானது எதையும் துண்டுபடுத்துகிற கத்திரியைப் போன்று இருக்கும்.

கமலம் – தாமரை; வதனம் – முகம்; சீதம் – குளிர்ச்சி; குத்திரர் – பொய்யர்

உள்ளம் பெரும் கோயில்.

வெண்ணெயுற்று நெய்தேட வேண்டுமோ? தீபமுற்று
நண்ணு கனல்தேடல் நன்றாமோ? – எண்மனத்தை
நாடிசிவனிருக்க, நாடாமல் ஊர்தோறும்
தேடித் திரிவதுஎன்ன செப்பு?

வெண்ணெய் கையில் இருக்கும்போது நெய்யைத்தேட வேண்டிய தேவை இல்லை; விளக்கு இருக்கும்போது அதில் பொருந்தியதீயினைத்தேடுதல்நலமோ?தன்னைத்தியானிக்கின்ற மனத்தை விரும்பித் தங்குவதற்குச் சிவபெருமான் தயாராய் இருக்கும்பொழுது,அவரைஉள்ளத்தில்தேடிக்காணாமல்தலங்கள் தோறும்தேடிஅலைவதற்குக்காரணம்என்னவென்றுகூறுவாயாக.

நல்லோரும் தீயோரும்.

நல்லவர்கள் வாயால் நவிலுமொழி பொய்யாமல்.
'இல்லை' யெனாது உள்ளமட்டும் ஈவார்கள் நல்லகுணம்
அல்லவர்கள் 'போ. வா' என்று ஆசைசொல்லி நாள்
'இல்லை' என்பார் இப்பாரி லே. [கழித்தே

இந்நிலவுலகில் நல்ல இயல்புடையவர்கள் தம்முடைய வாயினால் கூறிய சொற்களைத் தப்பாதபடி இரப்பவர்களுக்கு 'இல்லை' என்று சொல்லாது, தங்கள் இடத்தில் இருக்கிற அளவு கொடுப்பார்கள். தீய குணம் உடையவர்கள் இரப்பவர்களைப் 'போங்கள், வாங்கள்' என்று ஆசை உண்டாக்கும் சொற்களைச் சொல்லி, வீணாகக் காலதாமதம் செய்து, கடைசியாக 'இல்லை' என்று செல்லுவார்கள்.

நல்லோருடைய பண்புகள்.

ஞானம். பெருமை நயம் கருணை, உண்மை அபி
மானம், பொறுமை வணக்கா, உயர் – தானமுடன்,
சற்குணம், ஆசாரம். தகுகல்வி, நீதிநெறி
சற்குணருக்கு உண்டுஎன்றே சாற்று.

அறிவு, பெருமை, நேர்மை, இரக்கம்,பற்று, பொறுமை பணிவு, மேலான ஈகை என்பவற்றோடு நல்லதன்மை ஒழுக்கம், அறநெறி நாட்டம் என்பன நற்குணம் உடையவர்களிடத்து உள்ள பண்புகளாகும்.

4. அழகிய சொக்கநாத பிள்ளை

திருநெல்வேலி மாவட்டத்தில் தச்சநல்லூரில் பிறந்தவர். வேளாளர் குடியினைச் சேர்ந்தவர். இளமையில் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ச்சியுற்றார்; கவிபாடும் திறமை கைவரப் பெற்றார்.

முத்துசாமிப் பிள்ளை என்பவர் புலவர் பெருமானைப் ஆதரித்துப் போற்றி வந்தார். செய்ந்நன்றி' மறவாத அழகிய சொக்கநாத பிள்ளை அவர்கள், தம்மை ஆதரித்த வள்ளலாகிய முத்துச்சாமிப் பிள்ளை மீது "காதல்" என்னும் நூல் இயற்றி பெருமைப்படுத்தியுள்ளார். தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் 'காதல்' என்பது ஒருவகை இலக்கியம். அக் 'காதல்' இலக்கியத்தைச் சார்ந்த நூல்களுள் திரு.பிள்ளை அவர்களுடைய நூல் சிறப்புடையதாக விளங்குகிறது.

திருநெல்வேலியில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள காந்திமதி அம்மைமீது, காந்தி அம்மை பிள்ளைத் தமிழ் மாலை, அந்தாதி முதலிய நூல்கள் பாடியுள்ளார். அவை சொல்லழகும், பொருளழகும் பக்தி சுவையும் உடையனவாகும். அழகிய சொக்கநாத பிள்ளை அவர்கள் பாடியுள்ள தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கு மேற்பட்டனவாகும். அவற்றுள் சிறப்புடையன சிலேடையாகப் பாடப்பட்டுள்ளனவாகும். இப்பாடல்களில் பொதிந்துள்ள நகைச்சுவையும்,கருத்து ஆழமும் 'சிலேடை பாடுவதில் வல்லவர்' பிள்ளை என்பதைப் பறைசாற்றுகின்றன.

அழகிய சொக்கநாத பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராவர். இவர் 1885–ல் இயற்கை எய்தினார்.

கலைமகள் வாழ்த்து.

மேவுஇனிய பேரமுதின் மிக்கான வாக்குநல்கும்.
பூவின் அர சாட்சி பொருந்தநல்கு– நாவின் இடத்
தாள்; கமலத் தாள்: அபயத் தாள்; வரதத்தாள்; எகினத்
தாள்; வெண்ணிறத் தாள்; கனகத் தாள்.

மக்களுடைய நாவில் வீற்று இருப்பவள்; வெண் தாமரை மலரில் வீற்று இருப்பவள்; அடைக்கலம் அருளல், திரு அருள் புரிதல் ஆகியவற்றின் அடையாளமாகத் திருக்கைகளை உடையவள்; அன்னத்தின் மீது எழுந்தருள்பவள்; வெண்ணிறமேனி உடையவள்; தலையில் பொன்முடி தரித்த வள் கலைமகள். அவள் பெறுவதற்கு அரியதும் இனியதும் ஆன சிறந்த தேவர் அமிழ்தத்தைக் காட்டிலும் சிறந்த சொல்வன்மையை அளிப்பாள். நில உலகில் அரசு செய்யும் அதிகாரத்தைப் பொருந்தும்படி அருள் செய்வாள்.

பூ – உலகம்; கமலம் – தாமரை: அபயம் – அடைக்கலம்; எகினம் – அன்னம்.

சிவனுக்கும் தேங்காய்க்கும் சிலேடை.

கல்லால் அடியுறலால், கண்மூன்று இருப்பதனால்,
எல்லோரும் பூசைக்கு எடுத்திடலால்,– வல்லோடு
கொள்ளுகையால், கங்கா குலமுத்து சாமிமன்னா!
கள் இதழி யான்நிகர் தேங்காய்.

கங்கை குலமாகிய வேளாளர் குலத்தில் பிறந்த முத்துசாமி வேந்தனே! கல் ஆல மரத்தின் அடியில் தட்சணா மூர்த்தியாய் எழுந்து அருளி இருப்பதனாலும், மூன்று கண்களை உடைமை யாலும் எல்லாரும் வழிபாட்டிற்குச் சிவலிங்கத்தைச் சிறப்பாக எடுத்துக் கொள்வதாலும், வலிய மண்டை ஓட்டைப் பிச்சைக் காகக் கையில் எடுத்துக்கொண்டதாலும், தேன்சொரியும் கொன்றை மாலையை உடைய சிவபெருமான், – கல்லிடத்து உடைக்கப்படுவதாலும், மூன்று கண்களைப் பெற்றிருப்பதாலும்

எல்லோரும் பூசையின்பொழுது தெய்வத்திற்குப் படைக்க விரும்பி எடுத்துக்கொள்வதாலும், வலிய ஓட்டை உடைய தேங்காய்க்கு ஒப்பாவர்.

வல்லோடு – வலியஓடு; கள் – தேன்; கல்லால் –கல் + ஆல் – கல் ஆலமரம்.

சிவனுக்கும் வாழைப்பழத்திற்கும் சிலேடை.

நஞ்சுதின் னப்பெறலால், நல்லதோல் உரித்திடலால்,
மிஞ்சும் கனிதலைமேல் கொளலால், – விஞ்ச
உரமருவும் சீப்பணியால், ஓங்குமுத்து சாமீ!
பரமசிவன் வாழைப் பழம்.

சிறப்புற்று விளங்கும் முத்துசாமி மன்னனே! பாற்கடலில் எழுந்த ஆலகாலவிடத்தை உண்டதனாலும், நல்ல யானையின் தோலை உரித்ததனாலும், வெள்ளமாகப் பெருக்கு எடுத்துவந்த கங்கைக் கன்னியை (ஆற்றை)த் தனது தலைமேல் கொண்டுள்ளதாலும், மார்பிலே மிகச் சீறுகின்ற பாம்பை அணிந்துள்ளமையாலும் சிவபெருமான், – நன்கு நையப் பெற்றபின் தின்னப்படுவதாலும், நன்றாகத்தோல் உரிக்கப் படுவதாலும், மிகுதியாகக் கனிந்து பழமாகின்ற தன்மை உடைமையாலும், நல்ல வளம் பொருந்திய சீப்பாக அழகுடன் பொலிவுறும் வாழைப்பழத்திற்கு, நிகராவர்.

நஞ்சு – விஷம், நைந்து; தோல் உரித்திடலால் – வாழைப்பழத்தின் தோலை உரிப்பதனால், சிவபெருமான் யானைத்தோலினை உரித்ததால்: கனி – கனிந்த வாழைப்பழம்; கனி – கன்னி – கங்கை; உரமருவும் – மார்பிலே பொருந்திய, வளம் பொருந்திய; சீப் பணி – சிறுகின்ற பாம்பு, சீப்பு அணி – அழகிய சீப்பாக

திருமாலுக்கும் கைக்கடிகாரத்திற்கும் சிலேடை.

சக்கரத்தி னால், அரவம் தாங்குதலி னோடும் உள்எட்டு
அக்கரத்தி னால் வேலை யார்வதினான், மிக்க அன்பர்
முக்கியமாய்க் கைக்கொளலான் முத்துசுவாமித்துரையே!
கைக்கடியாரம் திருமால் காண்.

முத்துசாமி துரையே! திருமால் சக்கர ஆயுதத்தை உடையவர்; ஆதிசேடனாகிய பாம்பின்மேல் படுத்து உறங்குபவர் அட்டாட்சரம் என்னும் மந்திரத்தினால் மனதினுள் தியானிக்கப் படுபவர்; திருப்பாற்கடலில் தங்கி இருப்பவர்; பக்தி மிக்க அன்பர்கள் முக்கியமாக அவரைக் கைக்கூப்பித் தொழுவர்.

சக்கரமாகிய கருவியை உடையது கடிகாரம்; ஓசையைத் தன்னிடத்தே கொண்டு உள்ளது; முள் தொடுகின்ற எழுத்துக்களை உடையது; சிறந்த வேலைப்பாடு உடையது; பல அன்பர்களால் முக்கியமாகக் கையில் வைத்துக் கொள்ளப்படுவது. இக் காரணங்களால் கடிகாரம் திருமாலோடு ஒப்புமை உடையது ஆகும்.

அரவம் – பாம்பு, ஓசை; அக்கரம் – எழுத்து, அட்டாட்சரம் – எட்டு எழுத்துக்களையுடைய ஓம் நமோ நாராயணா!; எட்டு –எட்டு என்னும் எண், எட்டுகின்ற தொலைவு; கைக்கொள்– கைக்கூப்பித் தொழுதல், கையில் கட்டிக்கொள்ளுதல்.

மன்மதனுக்கும் நெருப்புக்கும் சிலேடை.

கரும்புகையினால் எரியும் காட்சியினால், யாரும்
விரும்புதலான், மையல் விளக்க – வரும்பொலிவால்,
எத்திசைக்கும் கீர்த்திபெற்ற எங்கள்முத்து சாமிமன்னா!
சித்தசனை ஒப்பாகும் தீ.

எல்லாத்திக்குகளிலும் புகழ் பரவப்பெற்ற எங்களுடைய அரசே! கரும்பினை வில்லாகக் கையில் உடையவன் மன்மதன் சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்டத் தோற்றத்தை உடையவன் ; யாரும் விரும்பத்தக்க வடிவத்தை உடையவன்; காதல் மயக்கத்தைத் தெளிவாக உண்டாக்கும் பொலிவை உடையவன்.

தீ (புகை) கரிய நிறமுடையது; எரிகின்ற தோற்றத்தை உடையது; ஒளியின் பொருட்டு எல்லாராலும் விரும்பப்படுவது; மை போன்ற கார் இருளில் பொருளைக் காட்டுவதற்கு விளக்கத்தைத் தந்து உதவும் பொலிவு உடையது. இதனால் நெருப்பு மன்மதனுக்குச் சமமாகும்.

கரும்புகையினால் – கரும்பு கையினால், கரும் புகையினால், மையல் – மயக்கம், காதல் மோகம்; மை அல் – கரிய இருட்டு, மைபோன்ற இருட்டு; சித்தசன் – மன்மதன்.

விலை மகளுக்கும் நாய்க்கும் சிலேடை.

ஆட்டுக்குஆ வல்படலால், ஆரிடத்தி லும்நயப்புக்
காட்டிச்சுணங் கிக்கடித் திடலால், –நாட்டில் எங்கும்
போம்இயல்பால், தம்இனமேல் போராட லான்முத்து
சாமிமன்னா! நாய்க்குஇணைவே சை.

முத்துசாமி மன்னனே! நடனம் ஆடுவதில் விருப்பம் உடையவள் விலைமகள்; யாரிடத்தும் இனிமை காட்டிக் குழைந்து கூடிக் கடித்திடுவாள்; நாட்டில் எவ்விடத்திற்கும் செல்லும் இயல்பு உடையவள்; தன் இனத்தைச்சார்ந்த விலை மகளிரோடு சண்டை இடுவாள்.

நாய் ஆட்டு இறைச்சியைத் தின்பதில் பெரும் விருப்பம் உடையது; எல்லோரிடத்திலும் வாலைக் குழைத்துப் பழகுவது போல் காட்டி நெருங்கிக் கடித்துவிடும்; ஊரில் எங்கும் திரியும்; மற்ற நாய்களோடு சண்டையிடும். இப்பண்புகளால் நாய், விலைமகளுக்கு ஒப்பாகும்.

ஆட்டுக்கு –ஆடுவதற்கு, ஆட்டுக்கடாவிற்கு: நயப்பு – இனிமை. குழைவு: இணம் – சாதி.

திருடனுக்கும் செருப்புக்கும் சிலேடை.

அங்கங் களவா லதுகண்டு தைப்புறலால்,
எங்கு 'மிதி, யடி,'யென் றேசொல லால, வெம்கல்
காடுமுட்கு அஞ்சாததினால்காமர் முத்துசாமீ!
திருடனை ஒப் பாகும்செ ருப்பு.

அழகிய முத்துசாமி வள்ளலே! திருட்டு அடையாளம் உடைமையாலும, அந்த அடையாளத்தைக் கண்டு மக்கள் உதைப்பதனாலும், செல்லும் இடம் எல்லாம், 'அவனை மிதிக்க

வேண்டும், உதைக்கவேண்டும்' என்று கூறுவதைக் கண்டு கரடுமுரடான கொடிய பாறைகளும் முள்ளும் நிறைந்த வழியில் திருடன் அஞ்சாது ஓடுவதனால், காலின் ஒவ்வோர் உறுப்புக்கும் தக்கபடி அளவான பகுதி உடையதும், அளவு கண்டு தைக்கப்படுவதும், எவ்விடத்தும் 'மிதியடி' என்ற பெயரை உடையதும், கடுமையான கல்லுமுள்ளு காடானவழி என்பவற்றை அஞ்சாது மிதிக்கப் பயன்படுவதும் ஆகிய செருப்பு திருடனுக்கு ஒப்பாகும்.

அங்கங் களவா – அங்கங்கு அளவால். அளவையுடைய செருப்பு; அங்கங் களவா– உடம்பில் திருட்டு அடையாளம் உடைய; அதுகண்டுதைப் புறலால்–உதைப்பு உறலால் – அடிவாங்குவதால் திருடன்; அளவுகண்டு தைக்கப்படுவதால் செருப்பு; காமர் – அழகிய.

'காய்' என்று எடுத்து 'இலை' என்று முடித்தது.

காய்சினம் இல்லாதான், கருணைமுத்து சாமிவள்ளல்
வாய்மையுளான், பாடிவருவோர்க்கு – தாய்நிகர்வான்
எல்லையில்லா மாண்பொருளை ஈவான், இவனிடத்தில்
இல்லையென்ற சொல்லே இலை.

கொதித்து எழுகின்ற கோபம் இல்லாத கருணை மிக்க முத்துசாமி என்னும் கொடையாளன் உண்மையே பேசுவான்; பாட்டு இயற்றி வருகின்ற புலவர்களுக்குத் தாயைப் போன்றவன்; அவர்களுக்கு அளவற்ற சிறந்த செல்வத்தை கொடுப்பான்; அவன் இடத்தில் 'இல்லை' என்று கூறும் சொல்லே இல்லை.

புதையல்.

முற்பாதி போய்விட்டால், இருட்டே யாகும்;
முன்எழுத்து இல் லாவிட்டால், பெண்ணே யாகும்;
பிற்பாதி போய்விட்டால், ஏவற் சொல்லாம்;
பிற்பாதி யுடன் முன்எழுத்து இருந்தால், மேகம்;
சொற்பாகக் கடைதலைசின் மிருகத்தீனி;
தொடர்இரண்டாம் எழுத்து, மா தத்தினால் ஒன்றாம்;
பொற்பார்திண் புயமுத்து சாமி மன்னா!
புகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே!

இக்கதையின் உட்பொருளை ஆராய்ந்து முத்துசாமி வள்ளலே சொல்லுக! ஒரு சொல்லின் முதற்பாதியை நீக்கி விட்டால் இருப்பது 'அல்' என்பது; அதற்கு இருட்டு, இருள் என்பது பொருள். அச்சொல்லில் முதல் எழுத்தாக உள்ள 'பு' வினை நீக்கிவிட்டால் ''தையல்' ஆகும். தையல் எனும் சொல்விற்குப் பொருள் 'பெண்'ணேயாகும். அச்சொல்லின் பிற்பகுதியை நீக்கிவிட்டால் 'புதை' என்று கட்டளையிடும் சொல்லாக மாறும். பிற்பாதியோடு முதல் எழுத்துச் சேர்ந்தால் மேகம் எனும் பொருள்படும் 'புயல்' ஆகும். அந்தச் சொல்லின் முதல் எழுத்தாகிய 'பு'வையும், கடைசி எழுத்தாகிய 'ல்'லையும் சேர்த்தால் விலங்குகள் தின்னும் 'புல்' ஆகும். இச்சொல்லின் இரண் டாம் எழுத்தாகிய 'தை' மாதத்தில் ஒன்றாகும்.

நயம்: 'புதையல்' என்ற சொல்லைப் பலவாறு பிரித்துப் பல அரிய பொருள் விளங்குமாறு 'சொல் விளையாட்டில்' ஈடுபடும் புலவர் தமிழ்ச் சொல்வளத்தின் மாண்பினைப் புலப்படுத்துகிறார்.

காய்கள்.

வெள்ளரிக் காயா? விரும்பும்அவ ரைக்காயா?
உள்ளமிள காயா? ஒருபேச் சுரைக்காயா?

வெண்ணிறமுடைய திருமாலுக்கு (அவர் நரசிங்கமாகத் தோன்றிய தூணான) தாயா? (தூணைப்போல் இருக்கிறாயே! நீ தூணா?) உன்னை விரும்புவோரை இயல்பாகக் கோபம் கொள்ளும் உன் மனம் என்பால் இளகி இரக்கம் காட்ட மாட்டாயா? ஒருமொழி உரைக்கமாட்டாயா?

குறிப்பு: ஒரு பெண்ணைக் கண்டு அவளிடம் காதல் கொண்ட தலைவன், அவளுடைய கருத்தைச் சொல்லுமாறு வேண்டியபொழுது அவள் பேசாமடந்தையாக நிற்பதைக் கண்டு திகைப்புற்றான். வேடிக்கையாக 'வாய்திறந்து ஒரு சொல் சொல்லமாட்டாயா?' என்று வேண்டுகிறான் என்பது கருத்து.

இதனைப் புலவர் பாநயம் தோன்ற வெள்ளரிக்காய், அவரைக்காய், மிளகாய், பேச்சுரைக்காய் முதலிய காய்களின் பெயர்களைக் கொண்டு இனிய பாடலைப் பாடியுள்ளார்.

5. அவ்வையார்

'தமிழ் மூதாட்டி', 'தமிழ்க் கிழவி' என்று பலவாறாகப் பாராட்டப்படுபவர் அவ்வையார் என்னும் பெண்பால் புலவராவர். 'அம்மை' என்னும் சொல்லின் திரிபாகிய 'அவ்வை'என்ற சொல்லுடன், சிறப்பு உணர்த்தும் விகுதியாகிய 'ஆர்' சேர்ந்து, 'அவ்வையார்' (அம்மையார்) என்னும் சொல் பெண்களில் உயர்ந்தவரைக் குறிக்க வழங்கியது. தமிழகத்தில் தனிச் சிறப்புடன் விளங்கிய பெண்பாற் புலவர்களுள் அவ்வையார் எனும் பெயருடையவர் மூவர் இருந்தனர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இவருள் முதன்மையானவர் சங்க காலத்தில் ஏறக்குறையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பர், ஒட்டக் கூத்தர் ஆகியோருடன் வாழ்ந்தவர்'இடைக்காலத்து அவ்வையார்' எனப்படுவர்'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி' என்னும் பாடலைப் பாடியவர் பிற்காலத்து அவ்வையாராவர். 'வான்கோழி' இந்தியாவிற்கு வந்தது ஐரோப்பியர்கள் கடல் வழியைக் கண்டுபிடித்த பிறகேயாகும். வான்கோழி இந்திய நாட்டு விலங்கு இனத்தைச் சேர்ந்தது அன்று, ஆகவே, வான் கோழியைப் பாடிய அவ்வையாரின் காலம் கி. பி. பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது ஆகலாம். இப்புலவர் பெருமாட்டியே ஆத்திசூடி, கொன்றைவேந்தன். மூதுரை நல்வழி ஆகிய நீதி நூல்களை இயற்றியவர் என்பர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அவ்வையார் பாடிய தனிப் பாடல்கள் பல கிடைத்துள்ளன. அவ்வையாரைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. தனிப் பாடல்களாக உள்ளவை. சில கதைகளுக்குச் சான்றுபோல் உள்ளன. ஆயினும் இந்தப் பாடல்கள் எப்போது பாடப் பெற்றன என்பதும், எவரால் தொகுக்கப்பட்டன என்பதும் தெளிவாக ஆராய்ந்து கூற முடியாமையால், இவற்றைச் சான்று எனக் கொள்வது

பொருத்தம் அற்றதாகும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

அவ்வையாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி ஒன்றும் தெளிவாக அறிய முடியவில்லை. ஆயினும் இவரைப் பற்றி வழங்கும் பல கதைகளினின்று ஓர் உண்மை புலனாகின்றது. அவ்வையார் குழந்தைப் பருவத்தில் பாணர் குடியில் வளர்ந்தார் என்பதும், மணப் பருவம் அடைந்த போது மணம் செய்து கொள்ள விரும்பாமல், மக்களின் அறியாமையைப் போக்கி அவர்கள் அறிவொளியைப் பெற்று வாழ்வாங்கு வாழுமாறு 'நாளும் இன்னிசையால் தமிழ்ப்பாட்டு இசைக்கும்' திருத்தொண்டில் ஈடுபட்டிருந்தார் என்பதும் இலைமறை காய்போல் இனிது புலனாகின்றது.

இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களாக வழங்கும் கதைகளுக்கு ஆதாரமாக உள்ள தனிப்பாடல்கள் சொற்செட்டும், கருத்துச் செறிவும், கற்பனை நயமும், கவிதைச் சுவையும் உடையனவாகும். இவர் பெயரால் வழங்கும் கல்வி ஒழுக்கம், நன்னூற் கோவை, பந்தனந்தாதி, அருந்தமிழ் மாலை, தரிசைப் பத்து முதலிய நூல்கள் இப்போது கிடைக்கவில்லை. அவ்வை இயற்றிய 'அசதிக்கோவை' என்னும் நூலில் சில பாட்டுக்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது.

வான்குருவியின்கூடு, வல்லரக்குத் தொல்கரையான்,
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் – 'யாம்பெரிதும்
வல்லோமே' என்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது.

தூக்கணாங் குருவியின் கூடும், வலிமையதாகிய பொன் மெழுகும், பழமையுடைய சிதலும், தேன்சிலம்பியின் கூண்டும் மனிதர்கள் எவராலும் செய்ய முடியாதனவாகும். ஆதலின், 'நாம் சிறந்த வல்லமையுடையேம்' 'என்று செருக்கு அடைய வேண்டாம். ஒவ்வொருவரும் அவரவர்களுடைய தகுதி,

திறமைக்கு ஏற்ற ஒரு செயலை எளிதில் செய்து முடிக்கலாம்.

வான்குருவி தூக் கணாங்குருவி. தேன்சிலம்பி – தேன் ஈ.

பழக்கமும் பிறவிக்குணமும்.

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம், – நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும்,தயையும்,
கொடையும் பிறவிக் குணம்.

அழகிய ஓவியம் எழுதுவது கைப்பழக்கத்தினால் உண்டான திறமையினால் ஆகும்; செவ்விய தன்மை வாய்ந்த தமிழில் தேர்ச்சி அடைவது நாவின் பழக்கத்தினால் ஆகும். நினைவில் வைக்கத்தக்க கல்வி அறிவு மனதின் பயிற்சியினால் உண்டானதாகும் ; நாள்தோறும் நடந்துகொள்ளும் நடத்தையும் ஒழுக்கத்தினால் ஏற்படும் பண்பாகும். நட்பும், கருணையும்,ஈகையும் அவரவர்களின் பிறவிதோறும் தொடர்ந்துவரும் ஊழின் வலியால் அமையும் இயற்கைப் பண்புகளாகும்.

நித்தம் – நாள்தோறும் ; கொடை –கொடுக்கும் (உதவும்) தன்மை.

வலியாரைக் கண்டு மெலியார் அஞ்சுவர்.

காணாமல் வேணதுஎல்லாம் கத்தலாம்; கற்றோர்முன்,
கோணாமல் வாய்திறக்கக் கூடாது; – நாணாமல்
'பேச்சுப்பேச்சு' என்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச்சு என்னும் கிளி.

கிளி சொன்ன சொற்களை எந்நேரமும் சொல்லிக்கொண்டிருக்கும்; பெரிய பூனை வந்துவிட்டால் அதைக் கண்டு அஞ்சி, 'கீச்சுகீச்சு' என்று சத்தமிடும். அதுபோல பிறர் காணாதவாறு அவருக்குப் பின்னே விரும்பியவாறு எல்லாம் கத்துவோர். கற்று அறிந்த சான்றோர் முன்னிலையில்

மாறுபாடில்லாமல் வாய்திறந்து பேசுவதற்குக் கூசுவார்கள்.

வேணது – வேண்டியது; விரும்பியது.

ஆடம்பரக் கவி.

விரகர் இருவர் புகழ்ந்திடவும் வேண்டும்;
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்;–அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

அறிஞர் இருவர் ஒன்று சேர்ந்து போற்றிப் புகழ்ந்திட வேண்டும்; விரல்கள் ஒவ்வொன்றிலும் அழகான மோதிரங்கள் அணிந்து இருக்கவேண்டும்; இடுப்பிலே மெல்லிய நூல் ஆடையாகிலும், பட்டாடையாகிலும் உடுத்தி இருக்க வேண்டும். இத்தகைய வெளிப்பகட்டு உடையவர் பாடும் பாட்டுக்கள் நஞ்சைப் போலக் கொடியதாகவும், வேம்பைப் போன்று கசப்பாக (பல குறைகளை உடையதாக) இருந்தாலும், அதைச் சிறந்தது என்று உலகம் புகழ்ந்துரைக்கும்.

விரகர் – அறிஞர்; நஞ்சு – விஷம்; வேம்பு – வேப்பம்பழம்.

அவ்வைக்கு உண்வளிக்க வேண்டும் என்று, ஒருவன் தன் மனைவியிடம் சொன்னவுடன் அவள் நடந்துகொண்ட நிலையைப் பாடியது.

இருந்து முகந்திருத்தி, ஈரொடு பேன்வாங்கி,
"விருந்து வந்ததென்று' விளம்ப,– வருந்தி
ஆடினாள்; பாடினாள்; ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்.

மனைவியின் அருகிலிருந்து முகத்தைத் தடவிக் கொடுத்து, அவள் கூந்தலை வாரி, அதிலிருந்த ஈரையும் பேணையும் வழித்திட்டு, மெல்ல 'விருந்தாளி வந்து இருகிறது' என்று கணவன் சொன்னான். உடனே அவள் மனம் வருத்தம் அடைந்தாள்; எழுந்து குதித்தாள்; திட்டினாள்; ஓடிப் போய்

பழ முறத்தைக் கொண்டுவந்து கணவனை ஓடோட விரட்டி அடித்தாள்.

அன்பு இல்லாத ஒருத்தி அமுதிட்டமையைக் குறித்துப் பாடியது.

காணக்கண் கூசுதே! கையெடுக்க நாணுதே!
மாண் ஒக்க வாய்திறக்க மாட்டாதே! –வீணுக்கென்
என்பெல் லாம்பற்றி எரிகின்றது; ஐயையோ!
அன்பில்லாள் இட்ட அமுது.

ஐயையோ! அன்பு இல்லாதவள் அளித்த உணவைக் காணும்போது கண் கூசுகிறது; கைகள் அந்த உணவை எடுக்க நடுங்குகின்றன.அதைத்தின்பதற்குப்பெருமைபொருந்தியஎனது வாயைத்திறக்கமுடியவில்லை;முகமலர்ந்துஅன்புடன்உபசரியாத அவள்முகத்தைப்பார்க்கும்போதுஉடம்பின்எலும்புகளில்எரிச்சல் எடுக்கின்றது.

மாண் ஒக்க – பெருமை பொருந்திய; என்பு – எலும்பு.

பண்பற்ற மனைவியோடு வாழ்வதைக் காட்டிலும் துறவியாகி வெளியேறுவதே நல்லது.

பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதை உண்டானால்,
எத்தாலும் கூடி இருக்கலாம் – சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே ஆமாயின்,
கூறாமல் சந்நியாசங் கொள்!

கணவனுக்குத் தகுந்த கற்பு நெறியுள்ள மனைவி வாய்த்து இருந்தால் எவ்விதம் ஆயினும் சேர்ந்து மகிழ்ச்சி அடையலாம். அவ்விதம் இல்லாமல் சிறிதேனும் ஏறுமாறாக மதிப்பின்றி நடப்பவளாக இருப்பாளாயின், யாரிடமும் சொல்லாமல் துறவறத்தைக் கைக்கொள்வாயாக.

பத்தா – பர்த்தா; கணவன்; பதிவிரதை – கற்புடைய மனைவி; எத்தாலும்– எப்படியாகிலும்.

பண்பற்ற மனைவியோடு வாழ்வதைக் காட்டிலும் தீயில் விழுந்து இறப்பது நல்லது.

சண்டாளி, சூர்ப்பநகை, தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்என்று கொண்டாயே! – தொண்டர்
செருப்படிதான் செலலாவுன் செல்வம்என்ன செல்வம்?"
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்.

இழிந்த தன்மை உடையவளை, சூர்ப்பநகையைப் போலவும், தாடகையைப் போலவும், கொடூரமான வடிவு உடையவளை மனைவி என்பதாகப் பெற்றாயே! தொண்டர்களுடைய செருப்படித் தூசுக்கும் இணையில்லாத உனது செல்வம் ஒரு செல்வம் ஆகுமா? அதைக்காட்டிலும் நெருப்பில் வீழ்ந்து இறப்பது நேர்மையாகும்.

சண்டாளி – கயமகள்; சூர்ப்பநகை – இராவணனின் தங்கை ; தாடகை – விசுவாமித்திரர் ஆசிரமத்தில் இராமனால் கொலை செய்யப்பட்ட ஓர் அரக்கி,

கம்பர் ஐந்நூறு பொன் வாங்கிக்கொண்டு 'சிலம்பி' என்னும் தாசிக்காகப் பாடிய அரைப்பாடலை, அவ்வை கூழுக்காகப் பாடி முடித்தது.

தண்ணீரும் காவிரியே ! தார்வேந்தன் சோழனே!
மண்ணாவ தும்சோழ மண்டலமே!– பெண் ஆவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாள் அணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு,

குளிர்ச்சி பொருந்திய நீரும் காவிரி ஆறேயாகும்; ஆத்தி மலர்மாலையை அணிந்த மன்னன் சோழ அரசனே ஆவான். நல்லவளம் பொருந்திய மண்ணாக விளங்குவதும் சோழ நாடேயாகும். பெண்களிற் சிறந்தவள் பொன் போன்ற வடிவழகினை உடைய 'சிலம்பி' என்பவளாகும். கால்

சிலம்புகளில், அவளது தாமரை மலர்போன்ற பாதங்களில் பூண்டுள்ள செம்பொன்னால் செய்யப்பட்ட சிலம்பே சிறந்ததாகும்.

தார் – மாலை ; அரவிந்தம் – தா மரை.

கம்பர் அவ்வையை 'ஒருகாலடி நாலிலைப் பந்தலடி!' எனச் சொல்லிப் பொருள் கேட்டபோது பாடியது.

எட்டேகால் லட்சணமே! எமன் ஏ றும்பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே! – முட்டமேல்
கூரை இல்லா வீடே! குலராமன் தூதுவனே!
ஆரையடா சொன்னாய் அடா!

அவலட்சணமே!யமன்வாகனமாகியஎருமைக்கடாவே!அளவு இல்லாது அழகுகெட்ட மூதேவியின் வாகனமாகிய கழுதையே! முழுதும்கூரை இல்லாவீடாகியகுட்டிச்சுவரே!மேன்மைதங்கிய இராமனுடையதூதனாகியஅனுமாரேநீசொன்னதுஆரைக்கீரையடா.

விளக்கம்:–கம்பர்'ஒருகால்அடிநால்இலைப்பந்தல்அடி!'என்றது ஒருகொடியைஅடியாகக்கொண்டுள்ளதும்,நான்குஇலைகளைப் பந்தல்போலஉடையதுமானஆரைக்கீரையைக்குறிப்பதாகும்.'அடீ!' என்பதுஅவ்வையைக்கேலிசெய்யும்வகையில்கூறியசொல்லாகும். அவ்வை,கம்பரைஇழித்தும்பழித்தும்கூறியதோடு'அடா'என்றுகூறி அவரை எள்ளி நகையாடுகிறார்.

மழையில் நனைந்து குளிரால் நடுங்கிவந்த அவ்வைக்கு அங்கவை, சங்கவை என்னும் பெண்கள் கொடுத்த நீலச் சிற்றாடையை வியந்து பாடியது.

பாரி பரித்த கலனும், பழையனூர்க்
காரி கொடுத்த களைக்கொட்டும் – சேரமான்

வாராய் என அழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்

பாரி என்னும் இடையன் தன்னைவிட்டுப் போகா வண்ணம் ஆடையைப் பறித்து மறித்ததும், பழையனூரில் வாழும் காரி என்னும் வேளாளன் தன் கொல்லையில் களை வெட்டும்போது அங்கு வந்திருந்த அவ்வையையும் வெட்டச் சொல்லிக் களைக்கோல் கொடுத்ததும், களை சேரமான் பெருமாள் நாயனார் கயிலாயத்திற்குப் போகும்போது 'வாராய்' என்று மெய்யன்புடன் அழைத்த அழைப்பும் ஆகிய இம் மூன்றும், அன்புடன் தந்த இந்த நீலச் சிற்றாடைக்கு நிகராகும்.

பறித்த – பிடுங்கிய; சிற்றாடை – சிறியஆடை.

மூவகை மக்கள்

சொல்லாம லேபெரியர்: சொல்லிச் சிறியர்செய்வர்;
சொல்லியும் செய்யார் கயவரே!– நல்ல
குலமாலை வேற்கண்ணாய்! கூறுவமை நாடில்
பலா, மாவைப் பாதிரியைப் பார்!

அறிவில் சிறந்த பெரியோர் சொல்லாமலே முகக் குறிப் பினால்உணர்ந்துநன்மைசெய்வர்;அறிவினில்சிறியவர்கள்பிறர் சொல்வதைக்கேட்டுச்செய்வார்கள்;அறிவற்றமூடர்கள்எவ்வளவு எடுத்துச்சொன்னபோதிலும்செய்யமாட்டார்கள்.பெருமைதங்கிய மலர்மாலையையுடையவேல்போன்றகூர்மையானகண்களை உடையவளே!பூவாதுகாய்க்கும்பலாமரத்தையும்,பூத்துக்காய்க்கும் மாமரத்தையும்,பூத்தும்பயன்தராதபாதிரிமரத்தையும்இம்மூவருக்கும் உவமையாகக் கொள்வாயாக!

வேளூர்ப் பூதன் விருந்தை வியந்து பாடியது.

வரகரிசிச் சோறும், வழுதுணங்காய் வாட்டும்,
முரமுரென வேபுளித்த மோரும், – திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டான்; ஈது
எல்லா உலகும் பெறும்,

வரகு அரிசியைக்கொண்டு சமைத்த சோறும், கத்தரிக் காய்ப்பொரியலும், முரமுரெனப் புளிப்புஏறியுள்ள மோரும், புல் வேளூரில் வாழும் பூதன் என்னும் பெயரை உடையவன், நிலைபெற்ற சிறந்த குணத்தோடு விருப்பமுடன் விருந்து அளித்தான். இந்த விருந்திற்கு ஈடாக எல்லா உலகங்களையும கொடுக்கத் தக்க சிறப்புடையது.

வழுதுணங்காய் – கத்தரிக்காய்; முரமுரென – நுரை உண்டாகுமாறு புளித்துள்ள; புரிந்து – விரும்பி.

கல்விக்கு எல்லை இல்லை.

கற்றதுகைம் மண்ணளவு; கல்லாது உலகளவு' என்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்;– மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம்; புலவீர்!
எறும்புந்தன் கையால்எண் சாண்

புலவர்களே! 'இதுவரை நாம் படித்துள்ளது கைப்பிடி மண்ணளவேயாகும். இன்னும் படிக்க வேண்டியவை பரப்பில் பெரியதாயகிய பூமியின் அளவாகும்' என்று நினைந்து கலைகளுக்குரிய கலை மடந்தை (சரசுவதி) இன்னும் படித்துக்கொண்டே இருக்கின்றாள். ஆதலால், மிகுதியாகப் படித்துவிட்டோம் என்ற செருக்குடன் வீண் வல்லமை பேசவேண்டாம். சிறு எறும்பும் அதன் கையினால் எட்டுச்சாணுடையதே ஆகும்.

மெத்த – மிகுதியாக; பந்தயம் – போட்டி: புலவீர் – புலவர்களே.

சிறந்த செயல்கள்.

மதியாதார் முற்றம் மதித்துஒருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்.
'உண்ணீர்! உண்ண ணீர்!' என்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்,

தம்மை மதித்துப் போற்றாதார் வாசலில் மறந்தும் ஒருதரம் போய் கால் வையாது இருத்தல் கோடி பொன் பெற்றதற்குச் சமமாகும். 'உண்ணுங்கள்! உண்ணுங்கள்!' என்று உபசாரம் புரியாதவரின் வீட்டில் சாப்பிடாது இருத்தல் கோடி பொன் பெறும். கோடிப் பொன்னை உதவியாகக் கொடுத்தேனும் பண்பட்ட நல்ல குடியில் பிறந்தாரோடு சேர்ந்து இருத்தல் கோடி பொன்பெறும். கோடானு கோடி பொருள் தந்தாலும் தன்னுடைய நாக்குப் பொய்யாது இருத்தல் கோடி பெறும்.

முற்றம் – வாசல்; நாக்கோடாமை – நாவானது உண்மையில் இருந்து மாறாமை (பொய் சொல்லாமை).

வாத, பித்த சிலேத்தும நாடிகளின் தன்மை.

வாதக்கோன் 'நாளை' யென்றான்; மற்றைக்கோன் 'பின்னை'
யென்றான்
ஏதக்கோன் 'யாதேனும் இல்லை'யென்றான்–ஓதக்கேள்!
வாதக்கோன் சொல்வதிலும் மற்றைக்கோன் சொல்
வதிலும்
ஏதக்கோன் சொல்லே இனிது.

வாதநாடியாகிய மன்னன் 'நாளைக்கென்று சொன்னான்; பித்தநாடியாகிய மற்றொரு மன்னன் 'பின்பு' என்று சொன்னான் துன்பத்தைத் தரும் சிலேத்தும நாடியாகிய மன்னன் 'யாதொன்றும் இல்லை' என்று சொன்னான். நான்

சொல்வதைக் கேட்பாயாக! வாத மன்னன் சொன்னதிலும், மற்றொரு மன்னன் சொன்னதிலும், ஏதமன்னன் சொல்லே இனியவை ஆகும்.

விளக்கம் :ஒருவனுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதற்கு 'நாளை' என்றும் 'பின்னை' என்றும் சொல்வதைக் காட்டிலும், 'இல்லை' என்று சொல்லிவிடுவதே மேன்மையாகும் என்பது கருத்து.

மேலும் இச்செய்யுள் வாதநாடி அடங்கினால் ஒரு நாளிலும் பித்தநாடி அடங்கினால் ஒரு நாழிகையிலும், சிலேத்தும நாடி அடங்கினால் ஒரு நிமிடத்திலும் உயிர் பிரிந்துவிடும் என்னும் சித்தர் மருத்துவக் கருத்தை அறிவுறுத்துகிறது.

பயனற்றவை.

மாடில்லான் வாழ்வு, மதியில்லான் வாணிப,நன்
நாடில்லான் செங்கோல் நடாத்துவதும் – கூடும்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு,
விருந்தில்லா வீடு விழல்.

செல்வம் இல்லாதவன் வாழ்வும், இயற்கை அறிவு இல்லாதவனுடைய வாணிகமும், நன்மை பயக்கத்தக்க நாடு இல்லாத அரசன் செங்கோல் ஓச்சுவதும், இசைந்த ஆசிரியன் இல்லாத கல்வியும்' நற்பண்புகள்கள் இல்லாத மனைவியும், விருந்தினரை ஓம்பாத குடும்பமும் வீணாகும்.

மாடு – செல்வம்; மதி– அறிவு; வித்தை – கல்வி; பெண்டு – மனைவி –விழல் – வீண்.

புகழ்வதற்கு உரிய இடங்கள்.

நேசனைக்கா ணாவிடத்தில் நெஞ்சார வேதுதித்தல்;
ஆசானை எவ்விடத்தும் அப்படியே துதித்தல்; வாச
மனையாளைப் பஞ்சணையில்; மைந்தர்தமை நெஞ்சில்;
வினையாளை வேலை முடிவில்

நண்பனைக் காணாத இடத்தில் மனமாரப் போற்றுக ஆசிரியரை எவ்விடத்தும் மனமாரப் போற்றுக ! மனைவியை மணமிக்க பஞ்சணை மெத்தையில் புகழ்க! மக்களை மனத்தில் புகழ்க! தொழிலாளியைத் தொழிலின் முடிவைக் கண்டு புகழ்க !

நேசன் – நண்பன்; ஆசான் – ஆசிரியர்; வினையாள் – தொழில் செய்வோன்– தொழிலாளி.

அறம் முதலிய உறுதிப் பொருள்கள்.

ஈதலறம் ; தீவினைவிட்டு ஈட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

ஈதலே அறமாகும் ; தீய செயலை விடுத்து நல்வினையால் தேடுதலே பொருளாகும்; எக்காலத்தும் கணவன் மனைவி இருவர் காதலுடன் மனம் ஒருமித்து, ஒருவருக்கொருவர் ஆதரவு காட்டி அன்பினால் கலத்தலே இன்பமாகும்; பரம் பொருளைச் சிந்தித்து, இம்மூன்றினையும் விட்டு ஒழித்தலே பேரின்பமாகிய மோட்ச நிலையாகும்.

ஈதல் – கொடுத்து உதவுதல்; எஞ்ஞான்றும் –எப்பொழுதும்

நல்வாழ்விற்கு உரியவர்களோடு நீங்கக் கூடியவை.

தாயோடு அறுசுவைபோம்; தந்தையோடு கல்விபோம்;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்:–ஆயவாழ்வு
உற்றார் உடன்போம்; உடன்பிறப்போடு தோள்வலிபோம்
பொற்றாலி யோடுஎவையும் போம்.

தாய் இறக்கும்பொழுதே அறுசுவை பொருள்களின் சுவை ஒருவனை விட்டு நீங்கிவிடும்; தந்தை போகும்போதே கல்வியும் போய்விடும். குழந்தையோடு தான் அடைந்துள்ள செல்வப் பெருமையும் நீங்கும்; சுற்றத்தாருடன் உண்டாகியுள்ள வாழ்க்கை நீங்கும்; உடன் பிறந்தாரோடு தோள்வலிமை போய்விடும்; மங்கல நாணுக்குரிய மனைவியுடன் எல்லா நலன்களும் நீங்கிவிடும்.

சேய் – குழந்தை; ஆய–ஆகிய; தோள்வலி – படைபலம்; பொற்றாலி பொன்னால் செய்யப்பட்ட தாலியினை அணிந்துள்ள மனைவி.

துரும்பு.

போந்த உதாரனுக்குப் பொன்துரும்பு; சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறு துரும்பு:–ஆய்ந்த
அறிவோர்க்கு நாரியரும் துரும்பாம்; இல்லறத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு.

இயல்பாகவே அருள் உள்ளம் படைத்த வள்ளல் பொருளினைத் துரும்பிற்குச் சமமாக மதிப்பான்; வெல்லுவதற்கு அரிய ஆற்றல் படைத்த வீரன் இறப்பினைச் சிறிய துரும்பாகக் கருதுவான்; நூல் ஆராய்ச்சியில்' வல்ல அறிஞர் பெண் ஆசையைப் பெரிதென்று மதிக்கமாட்டார்கள்; இல் வாழ்க்கையை வெறுத்துத் துறவிகளான பெரியோர்கள் அரசனைத் துரும்பிற்கு நிகராகக் கருதுவார்கள்.

உதாரன்; பெருங்குணமுடையவன், இங்கே வள்ளல்; சூரன் – வீரன்; காரியர் –பெண்கள்; வேந்தன் – அரசன்.

சிறந்த பண்புகள் இல்லா ஒருவன் தன்னைப் புகழ்ந்து பாடும்படி அவ்வையைக் கேட்டபோது பாடியது.

மூவர் கோவையும், மூவிளங் கோவையும்
பாடிய எந்தன் பனுவல் வாயால்.
'என்னையும் பாடு' என்றனை! 'எங்ஙனம்
பாடுதும் யாம்?' களிறுபடு செங்களம்
கண்ணில் காணீர்; வெளிறுபடு நல்யாழ்
விருப்பாய்க் கேளீர்;
இலவ வாச்சியர் இளமுலை புல்லீர்;
புலவர் வாய்ச்சொல் புலம்பலுக்கு இரங்கீர்;
ஊடீர்; உண்ணீர்; கோடீர்; கொள்ளீர்;
ஓவாக் கானத்து உயர்மரம் போலத்
தாவாக் கனியின் தோன்றி னீரே!

சிவன், திருமால், பிரமன் ஆகிய மும்மூர்த்திகளையும் முடியுடைய மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களையும் பாடிய நூல் இயற்றுவதற்குரிய என்னுடைய வாயினால், 'உன்னையும் பாடவேண்டும்' என்று வேண்டினை. யான் உம்மை எவ்வாறு சிறப்பித்துப் பாடுவது? யானைக் கூட்டங்கள் அம்புகள்பட்டு இறக்கும் போர்க்களத்தை உமது கண்ணினால் பார்த்திருக்கமாட்டீர் ! வெண்மையுற்ற நல்ல யாழின் இசையினை விருப்பமுடன் கேட்டீர் இல்லை; இனிய மொழி பேசும் மங்கையரது இளங் கொங்கைகளைத் தழுவினீர் இல்லை; பாவலர்களின் தமிழ் இசையாகிய புலம்பலுக்கு உள்ளம் குழைந்து உருகினீர் இல்லை! உங்களுக்கு ஊடலும் தெரியாது ; உண்ண உணவும் கிடையாது; பிறருக்குப் பொருளைக் கொடுத்து உதவி செய்வதும் இல்லை; அறத்தைச் செய்து, நன்மையை தேடிக்கொள்ளுவதும் இல்லை; மரங்கள் அடர்ந்துள்ள காட்டில் உயர்ந்து வளர்ந்துள்ள மரக்கொம்பில் பழுத்துள்ள எட்டாதபழம் பிறருக்குப் பயன்படாதவாறு போல எதற்கும் பயன் அற்றவர்களாகப் பிறந்திருக்கின்றீரே! நான் என் செய்வேன்?

விளக்கம் : மூவர் கோவையும் என்பதற்கு மும்மூர்த்தி களாகிய சிவன், திருமால், பிரமன் ஆகியோருக்கு மூலமாகிய 'பரம்பொருள் ' என்றும் கொள்ளலாம்.

பனுவல் – நூல்; களிறு – யானை; படு – இறக்கின்ற; வெளிறு – வெண்மையான; இவை வாய் – இனிய சொற்களையுடைய; ஊடல்– கணவன் மனைவியருக்கு இடையே உண்டாகும் சிறுபூசல்; ஓவா – குறைதல் இல்லாத, நிறைந்த; தாவா –எட்டாத.

சேர, சோழ, பாண்டிய நாடுகளின் சிறப்பு.

வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்; பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத்; தெண்ணீர் வயல் தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து.

மலைகள் அடர்ந்துள்ள சேரநாடு யானைகளை மிகுதியாக உடையது; மாட்சிமை மிக்க வளம்பொருந்திய சோழநாடு சோற்றுக் களஞ்சியமாகும்; பாண்டியரது அழகியநாடு முத்து விளையும் தென்னாடாகும்; தெளிந்த நீர்வளம் பொருந்திய வயல்களை உடைய தொண்டை மண்டலமாகிய நல்லநாடு கல்வியில்சிறந்து பண்பட்ட அறிஞர்களை உடையதாகும்.

வேழம் – யானை ; மேதக்க – புகழ்ச்சிக்குரிய, பூழியர்கோன் – பாண்டியன் (பூழி–பாண்டிநாட்டின் ஒரு பகுதிக்குப் பெயர்); சான்றோர் –அன்பு, நாண், –ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய பண்புகளை உடையவர்.

அவ்வையும் முருகனும்

அவ்வையார் தன்னைப் புகழ்ந்து பாடவேண்டும் என்று விரும்பிய முருகப்பெருமான், எருமை மேய்க்கின்ற பிள்ளைபோல் வடிவுகொண்டு நாவல்மரத்தில் ஏறி இருந்தார். அவ்வழியே வந்த அவ்வை அந்நாவல் மரத்தடியில் தங்கி களைப்பாறினார். மரத்தின் மீது இருந்த மாட்டுக்காரப் பையனைப் பார்த்து, பையா! நாகப் பழத்தைப் பறித்துக் கீழே போடு' என்று வேண்டினார். அந்தப் பையன் அவ்வையைப் பார்த்து 'பாட்டி சுடுகிற பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டார். அதைக் கேட்டு அவ்வை திகைப்பும் வியப்பும் அடைந்தார், 'சுடுகிற பழத்தைப் போடு' என்று சொன்னார். அவன் கனிந்து சார் ஒழுகுகின்ற ஒரு பழத்தைப் பறித்துப் போட்டான். அது மணலில் வீழ்ந்ததனால் பழத்தில் மணல் ஒட்டிக் கொண்டது. நீர்வேட்கையுடைய அவ்வை விரைவாக அதனை எடுத்து மணலை ஊதினார்.' அதைக் கண்டு முருகன் 'கிழவி பழம் சுடப் போகிறது'என்று எள்ளி நகையாடினார். அப்போது மாட்டுக்காரப்பையன் யார் என்பதை அவ்வை அறிந்து வணங்கினாள். முருகன் அவ்வையை நோக்கி 'உலகில் கொடியது எது? இனியது எது? பெரியது எது? அரியது எது?" என்று பல கேள்விகள் சேட்டார். அதற்கு விடையாகப் பின்வரும் பாடல்களை அவ்வையார் பாடினார் என்பது கதை.

கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாரி,
இருங்கதலித் தண்டுக்குத் நாணும்;– பெருங்கானில்
கார்எருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்றது
ஈரரிவும் துஞ்சாதுஎன் கண்,

கடினமான கருங்காலி மரக்கட்டையை வெட்டுவதில் தவறாத கோடாரி பெரிய வாழைத் தண்டினைப் பிளக்க முடியா ததைப் போல, பெரிய காட்டில் கரிய எருமைகளை மேய்க்கின்ற இளைஞன் சொல்லிய சொற்களுக்குப் 'புலவர்' எனும் புகழ்வாய்ந்த நான் மறுமொழி அறியாது தோல்வி அடைந்தேன், இதனால் என் கண்கள் இரண்டு நாட்களுக்கு நாணத்தால் உறக்கம் கொள்ளாது.

கருங்காலி – வைரம் பொருந்திய மரங்களுள் ஒருவைகை மரத்திற்கு பெயர்; இரு – பெரிய; கதலி – வாழை ; கார்–கரிய.

கொடியது எது?

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது! கொடிது! வறுமை கொடிது!
அதனினும் கொடிது! இளமையில் வறுமை;
அதனினும் கொடிது! ஆற்றொணாக் கொடுநோய்;
அதனினும் கொடிது! அன்பிலாப் பெண்டிர்;
அதனினும் கொடிது!
இன்புற அவர்கையில் உண்பதுதானே!

உலகில் கொடியது எது எனக் கேட்கும் நீண்டவேல் படையினை உடைய வேலனே! வறுமை மிகமிகக் கொடுமையானது; அதைவிட இளமைப் பருவத்தில் வறுமையால் வாடுவது மிகவும் கொடியது; அதைக் காட்டிலும் தீர்க்கமுடியாத நோய் மிகக்கொடியது; ஒருவன் அன்பு இல்லா மனைவியை உடையவனாக இருத்தல் அதனினும் கொடுமையாகும்; இன்பம் உண்டாகும் தன்மையில், அப்பெண்டிர் கையினால் உணவு கொள்வது அதைப்பார்க்கினும் மிகக் கொடிய தன்மையது ஆகும்.

வெவ்– கொடிய; ஆற்றஒனா – பொறுக்கமுடியாத.

இனியது எது?

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!
இனிது! இனிது! ஏகாந்தம் இனிது!
அதனினும் இனிது! ஆதியைத் தொழுதல்;
அதனினும் இனிது! அறவினர்ச் சேர்தல்;
அதனினும் இனிது! அறிவுள்ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே!

இனியவை எவை எனக் கேட்கும் ஒப்பற்ற நெடிய வேலினை உடையவனே! மனதை ஒருமுகப்படுத்தி தனித்து இருத்தல் மிகமிக இனிது; அதைக் காட்டிலும் ஆதியாகிய கடவுளைத் தொழுதல் இனிது; அறநெறியில் அறவோர்களோடு சேர்ந்து பழகுதல் அதனினும் இனிது: அதைப் பார்க்கினும் சான்றோர்களைக் கனவிலும் நனவிலும் காண்பது இணதாகும்.

ஒழுகும்

ஏகாந்தம் –தனித்து இருத்தல்: ஆதி –உலகிற்கு முதலாக விளங்கும்கடவுள் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பது வள்ளுவர் வாய்மொழி.

பெரியது எது?

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது!
புவனமோ நான்முகன் படைப்பு:
நான்முகன் கரியமால் உந்தி வந்தோன்;
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்;
அலைகடல் குறமுனி அங்கையில் அடக்கம்;
குறுமுனி யோகல சத்தில் பிறந்தோன்;
கலசமோ புவியில சிறுமண்;
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்;
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்;
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்;
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்;
தொண்டர் தம் பெருமை சாற்றவும் பெரிதே!

பெரியது எதுவெனக் கேட்கும் தீயினைப் போன்று ஒளிரும் வேலினை உடையோய்! உலகமானது மிகமிகப் பெரியது; உலகமோ பிரமனால் படைக்கப்பட்டது; பிரமனோ திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றியவன்; கார்மேக வண்ணனாகிய அத் திருமாலோ அலைகளை உடைய கடலில் பள்ளிகொண்டு உள்ளான்; அந்தக்கடல் அகத்திய முனிவரின் உள்ளங்கையில் அடங்கியதாகும் ; அந்த அகத்திய முனிவரோடத்தில் பிறந்தவர் ஆவார்; அக்குடமோ பூமியிலிருந்து எடுக்கப்பட்ட சிறிது அளவு மண்ணால் செய்யப்பட்டது; அந்தப் பூமியோ ஆதிசேடனாகிய பாம்பிற்கு ஒரு தலைச் சுமை; அந்தப் பாம்போ உமாதேவியார் சிறுவிரலில் அணிந்துள்ள மோதிரம்; அவ்வுமாதேவியாரோ சிவபெருமானது இடதுபாகத்தில் ஒடுங்கியவள் ஆகும்; இறைவனாகிய சிவபெருமானோ மெய்யன்பர்களாகிய தொண்டர்களின் இதயத் தாமரையில் அடங்குவர்; அத்தகைய ஒப்பற்ற தொண்டர் பெருமையைப் புகழ்ந்து கூறுவது மிக அருமையாகும்.

எரிதவழ் –நெகுப்பின் அழலைப்போன்று ஒளிரும்: புவனம்– உலகம்: நான்முகன்–பிரமன்;குறுமுனி–குறுகியவடிவுடையஅகத்தியர்;அங்கையில் உள்ளங்கையில்; கலசம் – குடம்: அரவு – பாம்பு: இங்கு ஆதிடேனாகிய பாம்பு.

அரியது எது?

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரி தரிது! மானிடர் ஆதல் அரிது !
மானிட ராயினும் கூன், குருடு செவிடு,
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது !
பேடு நீங்கிப் பிறந்த காலையும்,
ஞானமும், கல்வியும் நயத்தல் அரிது!
ஞானமும், கல்வியும் நயத்த காலையும்,
தானமும், தவமும் தான்செய்தல் அரிது!
தானமும், தவமும் தான்செய்வர் ஆயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே!

அருமையானது எதுவெனக் கேட்கும் நெடிய கூர்மையாகச் செய்யப்பட்ட வேற்படையை உடையவனே! அரிது அரிது மக்களாகப் பிறப்பது அரிது; மக்களாகப் பிறந்தாலும் கூன், குருடு, செவிடு, அலி நீங்கிப் பிறப்பது மிகவும் அரிதாகும்; இத்தகைய குற்றங்கள் நீங்கிப் பிறந்தபோதும் மெய்யறிவையும் கல்வியையும் விரும்புதல் அரிதாகும்; அம் மெய்அறிவையும், கல்வியையும் சிறப்பாக அடைந்த போதும், தானமும் தவமும் செய்வது அரிதாகும்; தானத்தையும், தவத்தையும் ஒருமனதாகச் செய்வார்களானால். அவர்களுக்குச் சுவர்க்கத்தின் வாயில் (கதவுகள்) என்றும் திறந்து இருக்கும்.

வரி – கூர்மை, வடி – வடிக்கப்பட்ட –செய்யப்பட்ட; பேடு – ஆண்தன்மை குறைந்து பெண்தன்மை மிகுந்தும் இருக்கும் அலி வானவர் நாடு – தேவர் உலகம், சுவர்க்கம்.

படைத்தவன் காப்பான்.

இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றுஎழுதி
விட்டசிவனும்செத்து விட்டானோ?– முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும் பாரம்அவ னுக்குஅன்னாய்!
நெஞ்சமே அஞ்சாதே நீ!

என்னைப் பெற்ற தாயே! முன்னைப் பிறவியில் செய்த வினையின் முறைப்படி எனது தலையில், இப்படித்தான் உயிர்வாழ வேண்டும் என்று எழுதி நியமனம் செய்து விட்டவன் ஆகிய சிவபெருமானும் செத்துவிட்டானோ? பெரும் துன்பத்தைத் தரக்கூடிய பஞ்சமே வந்தாலும், உயிர்களைக் காக்க வேண்டிய கடமை அவனுக்கு உரியது ஆகும். ஆதலால், நீங்கள் இனி மனதில் அச்சம்கொள்ள வேண்டாம்.

இட்டமுடன் – விருப்பமுடன்; முட்டமுட்ட – பொறுத்தற்கு அரிய பெரும்.

சிறந்தவை.

ஒன்றாகக் காண்பதே காட்சி:– புலன்ஐந்தும்
வென்றான் தன் வீரமே வீரம்;– ஒன்றானும்
சாகாமல் கற்பதே வித்தை; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.

மெய்,வாய்,கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து புலன்களின் வழியே உள்ளத்தைச் சென்று அலையவிடாது அடக்கி, அகத்தின் கண்ணே கண் ஆண்டவனைக் கண்டு வழிபடுவதே உண்மையானக் காட்சியாகும்; ஐந்து புலன்களின் அவாவினைக் கட்டுப்படுத்தி, அவற்றைத் தன் அடிமையாக்குவதே சிறந்த வீரமாகும்; உலகில் உள்ள எப்பொருள்களாலும் அழிக்கமுடியாத கல்வியைக் கற்பதே சிறந்த வித்தையாகும்; பிறரிடம் அடிமையாக இருந்து அவரிட்ட ஏவலைச் செய்து உண்டு வாழாமல், தானாகவே தன்முயற்சியினால் மெய்வருந்தி உழைத்து உண்ணும் உணவே சிறப்புடையது ஆகும்.

6. இரட்டையர்

பாமரராலும் பாவலராலும் ஒருங்கே பாராட்டப் பெற்றவர்கள் இரட்டையராவர். இவர்கள் சோழநாட்டில் ஆடுதுறைக்கு அருகில் உள்ள 'இலந்துறை' என்ற ஊரில், செங்குந்தர் மரபில் தோன்றினர் என்பது 'கச்சி உலாஇசைக்கும் புலவர் இரட்டையர்கள், வரகாம் பதியாம் இலந்துறையால் வழங்கும் சோழமண்டலமே ' எனவரும் சோழமண்டலச் சதகத்தால் அரியப்படுகிறது.

இவர்களுள் ஒருவர் முடவர்; மற்றொருவர் குருடர். இளஞ்சூரியர், முதுசூரியர் என்பது இவர்களுடைய பெயராகும். உறவு முறையில் அத்தை மகனாகவும் அம்மான் மகனாகவும் விளங்கினர். இவர்களுடைய உறுப்புக் குறைவால் உண்டான ஒற்றுமை உணர்ச்சியும், ஒருவர் உதவியின்றி ஒருவர் வாழமுடியாத நிலையும் நெருங்கிய உறவும் இவர்களை இணைந்தே வாழத் தூண்டியது எனலாம். மேலும் இவர்களுடைய உள்ளப் பண்பும், அறிவுத்திறனும் ஒற்றுமை உடையதாய் விளங்கினமையால் இவர்களுக்கு இரட்டையர் என்ற பெயர் வழங்கியது.

ஒருவர் ஒரு பாட்டின் முற்பகுதியைப் பாட மற்றொருவர் அதன் பிற்பகுதியைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். குருடர் தோளில் முடவர் அமர்ந்து வழிகாட்ட தமிழகத்தின் பெரும்பகுதியைக் காலால் நடந்து யாத்திரை செய்தனர். இவர்கள் பல வியக்கத்தக்க அருஞ்செயல்களைச் செய்துள்ளனர், என்பது செவிவழிச் செய்தியாகவும், இவர்கள் பாடியுள்ள சில தனிப் பாடல்களாலும்அறிகிறோம் இவர்கள் சங்ககாலப் புலவர்களைப்போல் தம்மை மதியாத செல்வர்களைச் சீறிச் சினந்து வெறுத்தனர்; நல்லபண்புகளை உடைய உயர்ந்தோரைப் போற்றினர். இவர்கள்சொற்சுவை

பொருட்சுவை, நகைச்சுவை எள்ளற் சுவை அமையப் பாட வல்லவர்கள் என்பதை இவர்கள் பாக்கள் காட்டுகின்றன.

இரட்டையர்கள் கலம்பகம் பாடுவதில் வல்லவர்கள் "கண்பாவு கலம்பகத்திற்கு இரட்டையர்கள்'என்ற ஆன்றோர் மொழி இதற்குச் சான்று பகர்கின்றது. இவர்கள் இயற்றிய நூல்கள் திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம் ஏகாம்பரநாதர் உலா முதலியனவாகும். வக்க பாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான் என்னும் கொங்கு நாட்டு மன்னனால் பாராட்டப் பெற்றவர்கள். அவனை இரட்டையர் புகழ்ந்து பாடியுள்ளனர். காளமேகப்புலவரை இரட்டையர் தம் பாடல்களில் போற்றிப் புகழ்ந்து உள்ளனர்.

தாம் பாடிய ஏகாம்பரநாதர் உலாவில் இரட்டையர்கள் திருமல்லிநாதன் உயர்சம்புபதி என்பவனைக் குறிப்பிட்டுள்ளனர். அவனுடைய காலம் கி. பி. 1413 முதல் 1465 முடிய என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர் இரட்டையர்களும் அவன் காலத்தில் வாழ்ந்ததால் இரட்டையர் காலம் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியாகும்.

திருவாங்கூரில் பசியினால் வருந்தியபோது அங்குக்கோயில் கொண்டுள்ள சிவபெருமானைப் பாடியது.

ஆங்கூர்ச் சிவனே! அல்லாளி அப்பா!
நாங்கள் பசித்திருக்கை நியாயமோ?–போங்காணும்'
கூறுசங்கு டோன்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்.

நிரம்பிய புகழ்ச்சிக்கு உரிய திருவாங்கூரில் வாழும் சிவபெருமானே! அல்லாளி அப்பா! நாங்கள் பசித்து இருப்பது நீதியாகுமோ? (என்று ஒருவர் சொல்ல, மற்றவர்) முழங்குகின்ற சங்கொலியும், டோல், முரசு முதலியவற்றைக் கொட்டுவதனால் எழும் பெரும் ஓசையைக் கண்டதே ஒழிய, சோறு படைத்ததைக் கண்ட மூளி எவரும் இல்லை என்று சொல்லுக.

விளக்கம் : திருவாங்கூர் கோவிலில் வீணாகச் சங்கநாதமும் முரச வாத்தியம் முதலியவையும் ஒலிக்கின்றதே அன்றி, கடவுளுக்குப் பூசை செய்யும் பார்ப்பனர் சிவபெருமானுக்குச் சோற்றைப் படைப்பது இல்லை என்பதைக் கண்டு அறிந்த முடவர் குருடருக்குக் கூறியதாகும்.

தேங்கு – நிரம்பியதனால் தேக்கம் கொண்டுள்ள; அல்லாணி அப்பா – திருவாங்கூர் சிவபெருமானுடைய பெயர். கரியநிறமுடைய உமாதேவியை இடப்பக்கத்தில் கொண்டுள்ள அப்பனே என்பது பொருள்; டோல் – ஒருவகைத் தோற்கருவி,

திருநெல்வேலியில் சிவபெருமானை வணங்கிய பொழுது பாடியது.

வேய்ஈன்ற முத்தர்தமை வெட்டினா னே இடையன்;
தாய்ஈன்ற மேனி தயங்கவே;– பேயாகேள்!
எத்தனைநாள் என்றே இடறுவான் பால்குடத்தை
அத்தனையும் வேண்டும் அவர்க்கு.

திருநெல்வேலியில் மூங்கில் பண்ணையின் இடையே உள்ள ஒற்றையடிப் பாதை வழியே ஓர் இடையன் பால் குடம் கொண்டு போகும்போது நாள்தோறும் ஓர் இடத்தில் இடறிப் பால்குடம் கொட்டி வந்தது. அதனால் சந்தேகம் கொண்ட இடையன் அவ்விடத்தில் இருந்த மூங்கிலை வெட்டி பார்த்தபோது சிவலிங்கம் ஒன்று இருந்ததைக் கண்டு வியந்து போற்றினான். அக்காரணத்தால் அப்பெருமானுக்கும் 'விண்டு முத்தர்' என்ற பெயர் வழங்கி வருகிறது. விண்டு மூங்கில். இதனால் சிவ பெருமானுக்குத் தாய் மூங்கில் என்பது வழக்கமாயிற்று.

இடையன் தாயின் பெற்ற உடலானது திகைக்கள் மூங்கில் பெற்றெடுத்த முத்தனாகிய சிவலிங்கத்தை வெட்டினான் (என்று ஒருவர் வருத்தத்தோடு சொல்ல, மற்றவர் பேயனே கேட்பாயாக! பால் குடத்தை எத்துணையோ நாட்கள் இடறிக்கொட்டிய அந்த முத்தருக்கு அவ்வளவும் தக்க தண்டனையேயாகும் என்றார்.

வேய் – மூங்கில், முத்தர்–முத்தியை அருளுபவர்

மலையும் மலைச் சாரலுமாகிய காட்டு வழியில் சென்று வருந்தியபோது பாடியது.

குன்றும் குழியும் குறுகி வழிநடப்பது –
என்று விடியும்எமக்கு? என்கோவே!– ஒன்றும்
கொடாதானைக் 'கோ' என்றும் 'கா' என்றும் கூறில்
இடாதோ நமக்குஇவ் இடி.

மலைகளையும் கிடங்குகளையும் உடைய குறுகிய வழியில்நடந்து செல்லுவதாகிய சிரமம்,நமக்கு எப்போது நீங்கும் (என்று ஒருவர் சொல்ல, மற்றவர்) எனது மேன்மை மிக்க தலைவனே! சிறிதும்கொடுத்து உதவாத லோபியை மன்னவன் என்றும், 'கற்பகத் தருவே ' என்றும் புகழ்ந்து பாடினால் இவ்வித இடிபோன்ற துன்பம் நமக்கு உண்டாகாதோ? என்றார்.

சிதம்பரத்தில் ஒரு மூடனைப் புகழ்ந்து பாடி அவன் பரிசு அளிக்காதபோது பாடியது.

மூடர்முனே பாடல் மொழிந்தால் அறிவாரோ
ஆடுஎடுத்த தென்புலியூ ரம்பலாவா! – ஆடகப்பொன்
செந்திருவைப் போல்அணங்கைச் சிங்காரித்து என்ன பயன்?
அந்தகனோ நாயகன் ஆனால்.

அழகியசிதம்பரத்தின்கண்ணேநடனம்ஆடும்சிற்சபையை உடையவனே! கணவன் கண் தெரியாத குருடனாக இருந்தால், ஆடகமெனப்படும் உயர்ந்தரகப் பொன்னை ஒத்த மேனியும், இலக்குமியைப்போன்ற வடிவழகும் உடைய பெண் மகளை அலங்கரிப்பதனால் என்ன பயன்? (என்று ஒருவர் சொல்ல மற்றவர்) அதுபோலக் கல்வியறிவு இல்லாத மூடனுக்கு முன்பு கவிபாடி பெருமை செய்தால் அதன் தன்மையை அவர் அறிய முடியுமோ?

ஆடு – ஆட்டம் ; தென்புலியூர்–அழகிய சிதம்பரம்; அம்பலம்–சிற்றம்பலம் ஆடகப் பொன் – தங்கத்தில் உயர்ந்தரகம்! தரு–இலக்குமி; அணங்கை–பெண்ணை; அந்தகன்–குருடன்.

இரட்டையரும் காளமேகப் புலவரும் பாடியது.

நாண்என்றால் நஞ்சிருக்கும்; நல்சாபம் கல்சாபம்
பாணந்தான் மண்தின்ற பாணமே!– தாணுவே
சீராரூர் மேவும் சிவனே நீ எப்படியோ
நேரா புரம்எரித்த நேர்.

இரட்டையர் திருவாரூர்க்குச் சென்று சிவதரிசனம் செய்து மண்டபத்தில் வந்து தங்கி இருந்தனர். அப்பொழுது இவருள் ஒருவர் ''நாண் என்றால்" என்று தொடங்கி "பாணந்தான்" என்னும் அளவும் பாடிவிட, மற்றொருவர்க்கு அந்த விட்ட இடத்தில் தொடங்கி அப்பாட்டை முடிக்க தோன்றாமையால், அதனை அந்த மண்டபச் சுவற்றில் எழுதிவைத்து, வெளி ஊர்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர். சில மாதங்களுக்குப் பிறகு திரும்பிவருகின்றபொழுது திருவாரூர்க்குச் சென்று மண்டபத்தில் தங்கினர். தாங்கள் எழுதிவிட்டுச் சென்ற பாட்டைப் படித்தபோது அப்பாட்டு முடிக்கப்பெற்று,அடியில் காளமேகன் என்று கையெழுத்து இடப்பட்டிருப்பதைக் கண்டு வியப்பு அடைந்தார்கள்.

நாண் என்று சொன்னால் நைந்துபோயிருக்கும்; நன்மையது ஆகிய வில் என்று சொன்னாலோ அது கல்வில்லாகும்; அம்பான் மண்ணைத் தின்ற அம்பாகும். இவ்வாறு இருக்க நிலையற்றவனே ! சிறப்புமிக்க திருவாரூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானே! நீங்கள் பகைவரது முப்புரத்தைச் சாம்பல் ஆகும்படி செய்தவிதம் எப்படியோ? நாங்கள் அறியோம்.

விளக்கம்: சிவபெருமான் முப்புரங்களை அழிப்பதற்கு உலகத்தைத் தேராகவும்சந்திரசூரியர்களைச்சக்கரங்களாகவும் கொண்ட தேரில் மேருமலையை வில்லாகவும், வாசுகி எனும் பாம்பினை நாணாகவும் சக்கரங்களாக வில்லாகவும், கண்ணன் அவதாரத்தில் மண்ணாகிய உலகை உண்ட திருமாலை

அம்பாகவும் கொண்டு சென்றார் என்பது கதை. இக் கதையைத் தழுவி இரட்டையர் சொல்நயம் தோன்றப் பாடியுள்ளனர்.

காளமேகப் புலவரைக் காணவேண்டும் என்று இரட்டையர் அவருடைய ஊருக்குச் சென்று அங்குள்ளாரை எங்குள்ளார் காளமேகம்? என்று கேட்டனர். அவர் 'இப்பொழுது சுடு காட்டில் வெந்துகொண்டு இருக்கிறார்' என்று சொன்னதைக் கேட்டு, மயானத்திற்குச் சென்று காளமேகத்தின் உடல் வேகிறதைக் கண்டு பாடியது.

ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ்காள மேகமே! பூசுரா!
விண்கொண்ட செந்தழலிலே வேகுதே ஐயையோ!
மண்தின்ற பாணம் என்ற வாய்.

ஆசுகவி பாடுகின்ற ஆற்றலால் எல்லா உலகங்களிலும் பரவிய புகழை உடைய காளமேகப் பெருமானே! வேதியர் குலத்தவனே! மண்தின்ற பாணம் என்று சொல்லி எங்க கவிதையைப் பாடி முடித்த உனது வாயானது வானளாவி எழுகின்ற செந்தீயில் வேகின்றதே! அந்தோ! அந்தோ இதென்ன பரிதாபம்

ஆசுகவி கவிவகை நான்கனுள் ஒன்று; கொடுத்த பொருளைப்பற்றி உடனே பாடும் ஆற்றல் பெற்றவர் ஆசுகவி என்பர்; பூசுரா–பூதேவனே, வேதினே, விண்–வானம் ; நாணம் – அம்பு

7. இராம கவிராயர்

இராம கவியாரின் வரலாற்றை அறிய முடியல்லை எனினும் அவருடைய பாடல்கள் அவர் வாழ்ந்த காலத்தையும், அவரை ஆதரித்துப் போற்றிய வள்ளலைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியில் தங்கள் ஆட்சியை நிறுவ முயன்றுகொண்டிருந்த காலத்தில் இருமொழி வல்லுநராக (துபாஷி) விளங்கியவர் ஆனந்தரங்கம் பிள்ளை என்பவர். அவர் சென்னையில் உள்ள பெரம்பூர் என்னும் பகுதியைச் சேர்ந்தவர். அவரை இராமகவிராயர் பல பாடல்களில் புகழ்ந்து போற்றியுள்ளார். ஆனந்தரங்கம் பிள்ளை அவர்கள் புதுச்சேரியில் டூப்ளே ஆண்ட காலத்தில் வாழ்ந்தவர் என்பது இவருடைய நாட்குறிப்பினால் தெரிகிறது. எனவே அவருடைய காலத்தில் வாழ்ந்த இராமகவியாரின் காலம் பதினெட்டாம் நூற்றாண்டாகும்.

இராம கவிராயர் திருவாய்ப் புராணம், சாரப்பிரபந்தம் முதலிய நூல்களை இயற்றியுள்ளதாக அறிஞர் கூறுவர்.

குடிப் பண்பு

தம்பியோ பெண்திருடி; தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடி மாயனாம்: அம்புவியில்
மூத்தபிள்ளை யாரோ முடிச்சவிழ்த்துக் கொண்டீரே!
கோத்திரத்தில் உள்ள குணம்

குறிப்பு: புலவர் குடும்பத்தாருடன் உச்சிப்பிள்ளை யாரைத் தரிசிக்க சென்றபோது, திருடன் முடிச்சு அவிழ்த்துக் கொண்டதைப்பற்றி பாடியது.

அழகிய நில உலகில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானது முதல் குழந்தையாகிய கணபதியே! உன்னுடைய தம்பியாகிய முருகன் வள்ளி அம்மையை களவில் கொண்டு போனார்.வஞ்சனையாக நடிப்பதில் வல்லவரான உன்னுடைய

அம்மான் திருமாலோ இடைச்சேரியில் வெண்ணெயைத் திருடிக் கொண்டு போனவராவர். நீங்கள் என்னுடைய முடிச்சை அவிழ்த்து, அதில் உள்ள பொருளை எடுத்துக் கொண்டீர்! இத்திருட்டுத் தொழில் உமது குடும்பத்தாருக்கு இயற்கையாக அமைந்த பண்பாகும்.

வம்பன் – வம்புகள் செய்பவன், வஞ்சனையாக நடந்து கொள்பவன்: மாயன்– திருமால்; கோத்திரம் – குடி; குடும்பம்.

சிவபெருமானைப் பற்றி வேடிக்கையாய்ப் பாடியது.

அக்ககாளை ஏறுவான்; அம்மானை கைப்பிடிப்பான்
சொக்காளைப் பக்கம் சொருகுவான்:– நக்கனவன்
ஆட்டை எடுப்பான்; ஆலம்பாலே உண்டிடுவான்
காட்டில் குடியிருப்பான் காண்.

திருவாணியான சிவபெருமான் திருமாலாகிய காளையை ஒரு காலத்தில் வாகனமாகக் கொண்டவன்; அழகிய மானை இடது கையில் உடையவன்; சொக்கநாயகியாகிய மீனாட்சியை இடப்பக்கத்தில் சேர்த்துக் கொண்டவன்; ஆடுதலாகிய திருநடனத்தை மேற்கொள்பவன் ; விஷமாகிய பாலைக்குடிப்பான். சுடுகாட்டில் குடி இருப்பான்.

விளக்கம்: அக்காளை – அந்தக் காளையை – அந்த எருதுவை; அம்மானை – அந்த அழகிய மானை; சொக்காளை– சொக்க நாயகியை– மீனாட்சியை; ஆட்டை – ஆட்டத்தை, ஆட்டினை: ஆலம்பால ஆலகால விஷம் பசுவின் (ஆவின்) பால்; காடு – சுடுகாடு, கடம்பவனமாகிய மதுரை என்னும் சொல் நயத்தைக் காண்க.

விடுகவி

ஆனெய்தனைப் பூனை அருந்தினதும் அல்லாமல்
பூனெய்தனை ஈயெடுத்துப் போனதுவும்–மானனைய,
கண்ணா தலையதனில் காய்காய்த்து அறுத்ததுவும்
நண்ணாய் அறிந்து சொல்.

ஆனையைப் பூனை உண்டதும் அல்லாமல், பூனையை ஈ எடுத்துப் போனதுவும், மான்விழிபோன்ற கண்களையுடைய

பெண்கள் தலையில் காய் காய்த்து அறுத்ததுவும் நன்றாக அறிந்து சொல்லுக.

விளக்கம் :பசுவின் நெய்யையும் தேனையும் ஈசாப்பிட்டது அல்லாமல் தேனில் மொய்த்ததுவும், மான்போன்ற கண்ணையுடைய கன்னியி (வாழைமரத்தி)ன் உச்சியில் காய் காய்த்து அதை வெட்டியதுவும் என்பது விடுகவியின் பொருளாகும்.

ஆனெய் – பசு நெய்; பூநெய் – தேன்; மானனைய கண்ணார்– மான்விழி மங்கையர்; கன்னி – வாழை; நன்றாய் என்பது 'நண்ணாய்' என்று எதுகை நோக்கித் திரிந்தது.

திருவொற்றியூர்ப் பெருமானைப் பாடியது

ஓர்ஒற்றி யூர்மனையா உள்ளோன், கரவுஎன்னும்
ஈர்ஒற்றி யூர்வல்லி ஈசனே!–வேரி
மகிழ்அமரும் தாயே! மலைப்பால்நீ உள்ளம்
மகிழமருந் தாயே வரும்.

ஒப்பற்ற திருவொற்றியூரைத் தனக்கு வீடாக உடையவனை, க், ர் என்னும் இரண்டு மெய், எழுத்தோடு 'இ' சேர்வதனால் உண்டாகும் கிரிவல்லி (மலைக்கொடி) யாகிய உமா தேவியின் கணவனாகிய பெருமானே! மணம் கமழ்கின்ற மகிழ மரத்தின் கீழ் தங்கிய அன்னையினும் அருள் உள்ளம் படைத்தவனே! நீ திருவுள்ளத்தில் மகிழ்ச்சியுற்றால் உமையம்மையின் பாலாகிய ஞானப்பால், பிறவிப் பிணியைப் போக்கும் மருந்தாகக் கிடைக்கும்.

வல்லி – கொடி; மகிழ் – மகிழ மரம்; மகிழ்ச்சி.

நிரல் நிறைப் பொருள் கோள் அணி

கொங்கைகளம் கண்சொல் குழல்இவைஇன்
[னாட்கென்று
செங்கமல வாவி திகழ்கூடல் –கங்கைகுலச்
சின்னத்தம் பிக்குத் தெரியவுரைப் பார் இலையே!
வல்லத்து அம்புஇக்கு மழை.

இப் பெண்ணிற்கு முலையும், கழுத்தும்,கண்ணும் மொழியும், கூந்தலும், முறையே சூதாடும் கருவியையும், (சொக்கட்டாங்காயையும்) சங்கையும், அம்பையும்,கரும்பையும், மேகத்தையும் ஒப்பன என்று செந்தாமரைப் பொய்கை விளங்குகின்ற மதுரை மாநகரில் வாழும் வேளாளர் குலத்தில் பிறந்த சின்னதம்பி என்னும் வள்ளலுக்குத் தெளிவாக எடுத்துத் தெரிவிப்பார் இல்லையே!

கொங்கை முலை; கமலம் –தாமரை; வாவி – பொய்கை; கூடல் – மதுரை பலன் –சூதாட்டம்: நத்து– நத்தை –சங்கு: இக்கு – கரும்பு: மழை – மேகம்.

8. இராமச்சந்திர கவிராயர்

தொண்டைநாட்டில் இராசநல்லூரில் பிறந்தவர் இராமச்சந்திர கவிராயர், பிற்காலத்தில் சென்னை மாநகரில் தங்கி வாழ்ந்தார் இவர் 'இராசு' (இராஜ) குலத்தைச் சேர்ந்தவர்; சொல்வன்மை வாய்ந்தவர்; கவிபாடுவதில் சிறந்து விளங்குபவர்.

ஆங்கில நாட்டிலிருந்து வந்து தமிழ்நாட்டில் மாவட்ட தண்டல் நாயகமாக (கலெக்டர்) பணியாற்றிய எல்லீசு துரைக்குத் தமிழ் ஆசிரியராக இருந்து தமிழ் இலக்கியங்களைக் கற்பித்தார்; கவிராயர் இறந்தபெழுது எல்லீசுதுரை புலவர் பெருமானைப் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளார்.

இராமச்சந்திர கவிராயர் சித்திரக் கவிகள் பாடுவதில் வல்லவர். எல்லோருக்கும் விளங்கக் கூடிய எளிய சொற்களாலே நகைச்சுவை ததும்பப் பாடும் ஆற்றல் பெற்றவர். இவர் சகுந்தலை விலாசம், தாருகா விலாசம், இரங்கோன் சண்டை நாடகம், இரணிய வாசகப்பா முதலிய நாடக நூல்களை இயற்றியுள்ளார். இவர் சென்ற நூற்றாண்டில் (பத்தொன்பதாம் நூற்றாண்டில்) வாழ்ந்தவராவர்.

ஈயாத லோபிகளை இகழ்ந்து முருகக்கடவுள் மீது பாடியது

வணக்கம்வரும் சிலநேரம் குமரகண்ட
    வலிப்புவரும் சிலநேரம், வலியச்செய்யக்
கணக்குவரும் சிலநேரம், வேட்டைநாய்போல்
    கடிக்கவரும் சிலநேரம், கயவர்க்கெல்லாம்
இணக்கம்வரும் படிதமிழைப் பாடிப்பாடி
    எத்தனைநாள் திரிந்துதிரிந்து இளைப்பேன் ஐயா!
குணக்கடலே! அருள்கடலே! அசுரரான
    குரைக்கடலை வென்றபரங் குன்றுளானே!

ஐயனே! குணக்கடலாக விளங்குகின்றவனே! அருள்கடலாகிய அண்ணலே! அசுரர்களாகிய ஒலிக்கும் கடலை வெற்றிகொண்டு திருப்பரங்குன்றில் எழுந்தருளி இருப்பவனே! சிலநேரத்தில் பணிதல் உண்டாகும்; சில நேரம் குமரகண்ட வலிப்பு வரும்; சில சிமயம் வலுவில் ஒரு கணக்கினைச் செய்வதுபோல முணுமுணுப்பு வரும்; சில நேரம் வேட்டை நாயானது குரைத்துக் கடிக்க வருவது போன்று குறும்புத்தனம் வரும். இவ்வித குணம்படைத்த கீழ் மக்களுக்கும் எல்லாம் மனம் இணங்கும்படித் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடிப்பாடி எவ்வளவு காலந்தான் சுற்றிச்சுற்றி அலைந்து திரிந்து அடியேன் வாடி மெலிவேன்.

குமரகண்ட வலிப்பு–உடல் முறுக்கு எடுத்து தாடை, கண், செவி, உதடு ஆகியவற்றைக் கோணச் செய்கின்ற ஒருவகை வலிப்பு நோயாகும். செல்வத்தை நம்பி மமதை கொண்டு மயங்கித்திரிகின்ற அறியாமைக்குணம் படைத்த மூடச் செயல்களுக்கு உவமையாகக் கூறியுள்ளார்.

திருப்பழனி வேலவர்மீது பாடியது.

வெண்ணெய்க் கட்டியும் சீனியும் ஊட்டலாம்;
விக்கிக்கொள்வதற்கு என்செய்யலாம்? ஒரு
பெண்ணைக்கட்டிக் கொடுத்திடலாம்; பிள்ளை
பெறுவதற்கு உடன்படு வார்களோ?
பண்ணைக் கட்டிய மென்மொழி யாளும் தம்
படுக்கை வீட்டில்வந் தாளே; அவள் தன்னைக்
கண்ணைக் கட்டி அணையாமல் ஏன்விட்டீர்!
கழனிசூழும் பழனியில் வேலரே!

குறிப்பு: பெற்றதாய் வருந்துதல் (நற்றாய் இரங்கல்) என்னும் அகப்பொருள்துறைக் கருத்தைத் தழுவிய பாடல்

நீர்வளம்மிக்க வயல்களையுடைய திருப்பழனியில் கோயில் கொண்டு எழுந்து அருளியுள்ள வேலாயுதக் கடவுளே! பால் கட்டியையும் சர்க்கரையையும் உண்ணச்செய்யலாம். அவை தொண்டையில் அடைத்துக் கொண்டு விக்குதலுக்கு

நாம் என்ன செய்யமுடியும்? ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்திடலாம்; குழந்தை பெறுவற்கு உடந்தையாய் இருக்க முடியுமோ? யாழ் இசையும் தோல்வி அடையுமாறு செய்கின்ற இனிய மொழிகளைப் பேசும் நங்கையும் உமது பள்ளி அறைக்குள் வந்தனளே! அவள் கண்களை மூடிக் கலந்து இன்புறாமல் ஏன் விட்டு விட்டீர்?

பண் –இசை: கட்டிய –தோல்வி அடையும்படி செய்த; அணையாமல்–கூடி இன்புறாமல்,

திருமயிலை வேங்கடசாமி என்னும் செல்வர்மீது பாடியது.

மூங்கிலிலே ஒளித்து இருந்தான் முக்கண்சாமி;
முதியகடல் போய்ப்படுத்தான் முகுந்தசாமி;
தாம்கமலம் பொகுட்டுஉறைத்தான் தலைநால்சாமி;
தடவரையில் உழன்று நின்றான் தகப்பன்சாமி,
வாங்கி உண்ண வழிகாத்தான் வயிற்றுச்சாமி;
வாணருக்கு இங்கு உதவுவர் ஆர் மற்றோர்சாமி
ஓங்கியசீர் மயிலையில்பொன் னப்பசாமி
உதவியவேங் கடசாமி உசிதவேளே!

மாண்புமிக்க புகழ்பொருந்திய திருமயிலையில் உள்ள பொன்னப்பசாமி என்பவன் பெற்றெடுத்த வேங்கடசாமி என்னும் பெருங்கொடை வள்ளலே! அழகிய மன்மதன் போன்ற வடிவழகனே!

மூன்று கண்களை உடைய சிவபெருமான், மூங்கில் புதரிலே மறைந்து இருந்தான்; திருமாலானவன் பழமையான பாற்கடலில் சென்று அறிதுயில் கொண்டான்; நான்கு தலைகளையுடைய பிரமன் தாமரைப் பொகுட்டிற்குள் வசித்தான்; சிவகுருநாதனாகிய முருகப் பெருமான் அகன்ற மலைகளில் எல்லாம் விளையாடிக் கொண்டு இருந்தான்; பெரிய வயிற்றை உடைய விநாயகக் கடவுள் எவரிடமும் வாங்கி உண்பதற்காக வழிகளை எல்லாம் காத்துக்கிடக்கிறான். இவ்விதத் தன்மையால், கவிபாடும் தமிழ்வாணருக்கு

இவ்வுலகில் வேறொரு கடவுளாக இருந்து, உன்னை அன்றி வேண்டியவற்றைத் தந்து உதவக்கூடியவர் வேறு எவர் இருக்கின்றார்கள்?

முகுந்தன் – திருமால்;கமலம் –தாமரை;பொகுட்டு – தாமரைக்கொட்டை: உழன்று – வருந்தி; வாணர்– புலவர்.

தன் குற்றத்திற்கு இரங்கிப் பாடியது.

கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்!
காடுஎறியு மறவனைநாடு ஆள்வாய்என்றேன்!
பொல்லாத ஒருவனைநன் நல்லாய் என்றேன்:
போர்முத்தை அறியானைப் புலியே என்றேன்;
மல்லாரும் புயா என்றேன் சும்பல்தோளை;
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்;
இல்லாது சொன்னேனுக்கு 'இல்லை' என்றான்;
யானும் எந்தன் குற்றத்தால் ஏகின்றேனே!

நான் படிப்பில்லாத ஒரு பாமரனைக் கல்விக் களஞ்சி வமே!" என்று புகழ்ந்துபாடினேன்! காட்டைவெட்டிச் சுட்டு எரிக்கின்ற மறவனை நாடாளும் மன்னனே!' எனப் புகழ்ந்தேன்; நான் பொல்லாத ஒருவனை 'நல் ஒழுக்கமுடைய அறவோனே!' எனப் புகழ் பாடினேன்; போர்த்தொழிலே இன்னது என்று தெரியாத ஒருவனை, போரில் பகைவர்மீது புலிபோல் பாய்பவரே! என்று சொன்னேன்; மெலிந்து வாடியுள்ள தோள்களை உடையவனை 'மல்போருக்கு ஏற்ற தோள்வலி உடையவனே!' எனப் புகழ்ந்தேன். நான் இரவலர்க்குக்கொடாத கையினை உடைய லோபியை வள்ளலே எனப் புகழ்ந்தேன். இவ்விதமாகப் பொருத்தம் அற்றவைகளைச் சொன்னவன் ஆகிய எனக்கு, ஒரு பொருளும் கிடையாது போ' என்று சொன்னான். நானும் யான் செய்த குற்றத்தை நினைந்து செல்லுகின்றேன்.

துன்பம் வரும்பொழுது அடுக்கடுக்காக வரும் எனப் பாடியது

ஆஈன,மழைபொழிய, இல்லம்வீழ,
அகத்தடியாள் மெய்நோவ, அடிமைசாக,
மாஈரம் போகுதென்று விதைகொண்டுஓட
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளச்
சாவோலை கொண்டுஒருவன் எதிரே செல்லத்
தள்ளஒண்ணா விருந்துவரச், சர்ப்பம்தீண்டக்,
கோவேந்தர் உழுதுண்ட கடமைகேட்கக்
குருக்கள்வந்து தட்சணைகள் 'கொடு' என்றாரே!

பசுவானது கன்றுபோட, பெரும் மழை பொழிய, வீடு இடிந்து விழ, வீட்டு வேலைக்காரி உடல் நோயினால் வருந்த, பண்ணையாள் இறந்து போக, மிகுதியாகவுள்ள ஈரம் காய்ந்து விடுமே என்று நெல்விதையைச் சுமந்து கொண்டு செல்ல, வழியிலே கடன்காரன் வந்து தடங்கல் செய்தான். இவை அல்லாமல் ஒருவன் சாவோலையைக் கொண்டு இழவு சொல்லி எதிரே செல்ல, அத்துடன் தள்ள முடியாத விருந்தாளியும் வந்து சேர, அவனைப் பாம்பு சுடிக்க, நிலத்திற்கு உரிய மன்னர் உழுது பயிர்செய்து உண்ட நிலப் பகுதிக்கு வரிப்பணம் கேட்க,புரோகிதர் வந்துகாணிக்கைகள் தரவேண்டும் என்று கேட்டார்.

நயம்: துன்பத்திலும் இன்பத்தைக் காணும் முறையில் நகைச்சுவை தோன்ற, புலவர் தனக்குற்ற துன்பத்தைக் கவிநயம் குன்றாமல் கூறியுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

ஆ– பசு; ஈன– கன்றுபோட; ஒண்ணா– முடியாத; சர்ப்பம் – பாம்பு: கோவேந்தம்–நாடாளும் மன்னர்; கடமை– வழக்கமாக வயலுக்காகச் செலுத்தும் வரி.

வறுமைத் துன்பத்தில் வாடி பிரமனை இகழ்ந்து பாடியது.

கல்லைத்தான், மண்ணைத்தான், காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான், பொன்னைத்தான் எனக்குத்தான்,
கொடுத்துத்தான் இரட்சித்தானா?
அல்லைத்தான், சொல்லித்தான்,ஆரைத்தான்,
நோவத்தான் ஐயோ எங்கும்.
பல்லைத்தான், திறக்கத்தான் பதுமத்தான்,
புவியில்தான், பண்ணினானே!

தாமரை மலரில் வாழுகின்ற நான்முகன், உலகில் கற்களையும் மண்ணையும் காய்ச்சி அருந்தும்படி கற்பித்து அனுப்பினானா? அவ்விதம் இல்லாவிடினும், எனக்குப் பொருளைக் கொடுத்தாயினும் காப்பாற்றினானா? துன்பத்தைக் கூறி யாரை நொந்துகொள்வேன்? அந்தோ! இன்னஇடம் என்று இல்லாது எவ்விடத்தும் போய்ப் பல்லைக் காட்டிக் கெஞ்சும்படி படைத்துவிட்டானே !

அல்லை – அல்லலை – துன்பத்தை; பதுமண் – பிரமன்.

தம்மைக் காட்டினும் சிவபெருமான் கவலைக் குரியவர் என்பதுபற்றிப் பாடியது.

வஞ்சகர் பால் நடந்து அலைந்த காலிற்புண்ணும்,
வாசல்தொறு முட்டுண்ட தலையிற்புண்ணும்.
செஞ்சொல்லை நினைத்து உருகு நெஞ்சிற்புண்ணும்,
தீரும்என்றே சங்கரன்பால் சேர்ந்தேன் அப்பா!
கொஞ்சம் அல்ல பிரம்பு அடியின் புண்ணும், வேடன்
கொடுங்கோலால் உதைத்தபுண்ணும் கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லால் அடித்தபுண்ணும்
பார்' என்றே காட்டிநின்றான் பரமன்தானே!

வஞ்சனை உள்ளம் உடையவரிடத்து பலமுறை சென்று வந்ததனால் எனது காலில் உண்டான புண்ணையும், வீட்டு

வாயிற்படிகள் தோறும் முட்டுப்பட்டதனால் எனது தலையில் ஏற்பட்ட காயத்தையும். கவி பாடுவதற்கு ஏற்ற சிறந்த சொற்களை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதலால் உண்டாகிய மனப் புண்ணையும் போக்குமாறு சிவபிரானிடம் சென்று வேண்டினேன். அதைக்கேட்ட அவர், என்னை நோக்கி, அப்பா மகனே ! உன்னைப்போல் நான் பட்டுள்ள துன்பங்கள் கொஞ்சம் அல்ல; பாண்டியனது பிரம்பு அடியினால் உண்டாகிய புண்ணும், வேடனாகிய கண்ணப்பன் தனது வளைந்த அடிகளால் மிதித்ததனால் உண்டாகிய புண்ணும், பாண்டவர் ஐந்துபேரில் ஒருவனாகிய அருச்சுனன் சினம் கொண்டு வில்லால் அடித்ததனால் உண்டாகிய காயத்தையும் பார்" என்று அந்தப் புண்களை என்னிடம் காட்டி நின்றான்.

வஞ்சகர் – கபடசிந்தனை உடையவர்' செஞ்சொல் – சிறந்த சொல்: சங்கரன் – சிவபெருமான்; பஞ்சவரில் –பாண்டவர் ஐவருள்.

சிவபெருமான் பிட்டுக்காக மண்சுமந்தபொழுது, அரி மர்த்தன பாண்டியனிடம் பிரம்படிபட்டார் என்பது கதை.

தமது பாக்குவெட்டி காணாமல் போனதுபற்றிப் பாடியது.

விறகு தரிக்கக், கறிநறுக்க,
வெண்சோற்று உப்புக்கு அடகுவைக்கப்,
பிறகு பிளவு கிடைத்தது என்றால்
நால் ஆறாகப் பிளந்து கொள்ளப்,
'பறகுபறகு' என் றேசொறியப்
பதமாயிருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப்போவது உண்டோ
எடுத்தீராயின் கொடுப்பீரே !

விறகுச் சுள்ளிகளைத் துண்டாக்கவும், காய்கறியை நறுக்கவும், வெண்மையான சோற்றுக்குப் பயன்படும் உப்பிற்காக அடகு வைக்கவும், பின்பு பாக்குப் பிளக்கும் நேரம் வருமாயின் பாக்கினை நாலு ஆறு துண்டுகள் ஆக்கிக்கொள்ளவும், உடம்பில் அரிப்பு உண்டானால் பறகு, பறகு என்று சொறிந்துகொள்ளவும், பயன்உடையதாக இருந்த

பாக்கு வெட்டி இறக்கைகள் முளைக்கப்பெற்று பறந்துபோய் விடுவ தும் உண்டோ? எடுத்து இருப்பீராயின் தந்துவிடுங்கள்.

தரிக்க – துண்டாக்க; பறகு – உடம்பைச் சொறிகின்றபொழுது உண்டாகின்ற ஒலி; பதமாய்– கூர்மையாய்,பயனுடைய தாய்

திருவேங்கடநாதன் என்னும் செல்வர்மீது பாடிய வினாவிடை.

'இரவல னேஉனக்கு இல்லாதது என்ன?'
'இதயம்' என்ன ;
"பர உணவு ஏது' 'சுவையற்றது' என்ன: 'சொல்
பான்மை என்ன?'
தரவுரை செய்திட என்றால் அதற்குஒன்றும்
சாற்றிலேன் யான்;
'வரதிரு வேங்கட னாதா' என் றேன், பொன்
வழங்கி னனே ;

இரவலனே உனக்கு வேண்டுவது யாது? உன்னுடைய மனக் கருத்து என்ன? மேலான உணவுப் பொருளுக்கு வேண்டுவது எது? சுவை இல்லாத பொருள் என சொல்லுவதற்குத் தன்மை எது? நான் கொடுத்து உதவும்படி சொல்வாயாக என்று கேட்டான். நான் ஒரு விடையும் கூறாது, 'தலைவனாகிய திருவேங்கடநாதா;' என்று சொன்னேன். அந்தச் சொல்லின் குறிப்பை உணர்ந்து எனக்குப் பொன்னையும் பொருளையும் பரிசாக அளித்தான்.

விளக்கம் :	வினா.	விடை.
(1)	உனக்கு இல்லாதது என்ன?	திரு – செல்வம்
(2)	இதயம் என்ன?	வேம் – வேகும் (வருந்தும்)
(3)	உணவு எது?	கடன் – கடன்பட்ட பொருள்.
(4)	சுவை அற்றது என்ன?	நா –நாக்கு
(5)	சொல் பான்மை என்ன?	தா – தருவாய்

திருவேங்கடநாதன் என்னும் சொல்லில் அடங்கியுள்ள எழுத்துக்களை விளக்கி உள்ளார். இத்தகைய பாடலைச் "சித்திரகவி' என்பர்.

இரவலன் – யாசகன்; சாற்றிலேன் – கூறவில்லை.

9. இராமசாமிக் கவிராயர்

பாண்டிய நாட்டில் இராமநாதபுரத்தில் வேளாளர் குலத் தில் பிறந்தவர். இவர் இளமையில் திருவாவடுதுறை ஆதீனத்தில் தமிழ் இலக்கியங்களையும், சித்தாந்த சாத்திரங்களையும், இலக்கணங்களையும் கருத்து ஊன்றிக் கற்றார். சைவ சமய நெறிப்படி வாழ்ந்தார்.

புதுக்கோட்டையை ஆண்டுவந்த தொண்டமான்களால் ஆதரிக்கப்பெற்றவர். கம்பர் அந்தாதி, முல்லை அந்தாதி, திருவிளையாடல் புராணத்தின் முதற்காண்டம் ஆகியவற்றிற்குச் சிறந்த உரை எழுதியுள்ளார். கற்பனை நயமும், கவிதைச் சுவையும் பொருந்திய பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். தன்னை ஆதரித்துப் போற்றிய மணலி சோலையப்ப முதலியார்மீது அகப்பொருள் துறைகளின் கருத்து அமையப் பாடியுள்ள பாடல்கள் புதுக்கோட்டை மன்னரான முத்துக்குமாரத் தொண்டைமானின் (விசயரகுநாத தொண்டைமான்) கவிப்புலமையைப் பாராட்டியுள்ளார். குறிப்பிடத்தக்கன.

இராமசாமிக் கவிராயர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்பர்.

மணலி சோலையப்ப முதலியார் மீது பாடியது.

தலைவி கூற்று.

மாலைதனைப் புனைந்தாலும், மலர் அணையில்
படுத்தாலு மருவார் பன்னீர்
ஏலமுறத் தெளித்தாலு, எவ்வன
வேனும்குளிர விலை; என் செய்வேன்?
கோலமுறு மணலியிலே, கிளைகளொடு
சுகம்படைத்துக் குலாவும் எங்கள்
சோலைதனைச் சேராமல், காமவிடாய்
தணியாதே தோகை மாரே !

மயில்போன்ற மென்மையான சாயலுடைய தோழியரே! பூமாலையை அணிந்தாலும், பூக்கள் பரப்பிய படுக்கையில் படுத்து இருந்தாலும், மணம் நிறைந்த ப(ன்)னிநீரைப் போதுமான அளவு நன்றாகத் தெளித்துக்கொண்டாலும் ஒரு சிறிதும் கூட உடம்பு குளிர்ச்சி அடையவில்லை. யான் யாது செய்வேன்? வனப்பு மிகுந்த மணலி என்னும் ஊரிலே, உறவினரொடு நலமுடன் நலமுடன் வாழ்கின்ற எங்கள் சோலையப்ப முதலியாரைத் தழுவாமல் என்னுடைய காம வேட்கை நீங்காது.

புனைதல் – அணிந்துகொள்ளுதல்; மரு – மணம்; ஆர்– நிறைந்த; ஏலமுற– நன்றாக; கோலம் –அழகு. வனப்பு; கிளை – உறவினர்.

சொல் நயம்.

முன்னொரு ஊரின் பேராம்; முதல் எழுத்து இல்லாவிட்டால்
நன்னகர் மன்னர்பேராம்; நடு எழுத்து இல்லாவிட்டால்
கன்னமா மிருகத் தின்பேர்; கடை எழுத் தில்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம், ஊரின்பேர் விளம்புவீரே!

முதலில் முழுதாகக் கூறினால் ஓர் ஊரின் பேராகவரும்; – அச்சொல்லின் முதல் எழுத்தை எடுத்துவிட்டால் எஞ்சியபகுதி மன்னரின் பெயராகும்; அச்சொல்லின் நடுஎழுத்தை எடுத்து விட்டால் எஞ்சிய பகுதி அருகம்புல் தின்னும் விலங்கின் பேராகும்; அச்சொல்லின் இறுதி எழுத்தை எடுத்துவிட்டால் எஞ்சியபகுதி உண்ணும்படியான தேனின் பெயராகும். புலவர்களே ! அது எந்த ஊர் என்று சொல்வீராக!

விளக்கம்:

ஊர்	–	மதுரை;
மன்னன் பெயர்	–	துரை; (மதுரை)
புல் உண்ணும் விலங்கு	–	மரை; (மதுரை) மான்
தேனின் பெயர்	–	மது; (மதுரை)

கன்னமா – அருகம் புல்லினை உண்ணும் விலங்காகிய மானை; உன்னிய உண்ணிய – உண்ணத்தக்க; எதுகைநோக்கித் திரிந்தது.

புதுக்கோட்டைத் தொண்டமானைப் புகழ்ந்து பாடியது.

"புதுவைமுத்துக் குமரதொண்டன் தமிழ்போலக்
கவிமதுரம் பொழியப் பாடும்
சதுரர்உண்டோ?" எனவிரிஞ்சன் வினவினான்;
சேடன்நான் தான்என்றான்;ஓர்
பதம்எனினும் தோன்றாமல் மால்கொண்டு
கடல்வீழ்ந்தான்; பதுமன் சீறி
மதமுறு நாவைப் பிளந்து, காதறுத்து
மண்சுமக்க வைத்திட்டானே!

"புதுக்கோட்டையில் உள்ள முத்துக்குமர தொண்டைமானுடைய தமிழ்ப் பாடலைப்போல, இனிமை ததும்பும்படி பாடல் இயற்றக்கூடிய திறமை சாலிகள் இருக்கிறார்களா?" என்று பிரமன் தேவர்களைக் கேட்டான். ஆதிசேடன் 'நான் அவ்வாறு பாடவல்லவன்' என்றான்; பாடல் சொல்லத் தொடங்கியபொழுது ஒரு சொல்லும் வாயில் வராமல் மயக்கம் (அல்லது திருமாலைச் சுமந்து) கொண்டு திருப்பாற்கடலில் கிடந்தான்; பிரமன் சீற்றம் கொண்டு செருக்குடைய சேடனது நாக்கினை இருபிளவு படும்படியாகச் செய்து, காதினை அறுத்து எறிந்து பூமியைத் தாங்கும்படி செய்தான்.

விளக்கம்: ஆதிசேடன் என்னும் பாம்பு பூமியைத் தலையில் சுமந்துகொண்டு இருக்கிறது என்பதும், பாற்கடலில் திருமாலினைத் தாங்கிக்கொண்டு இருக்கும் படுக்கையாக இருக்கிறது என்பதும் புராணக்கதை. பாம்பிற்கு நாக்கு பிளந்து இருப்பதும், காது இல்லாமல் இருப்பதும் இயற்கையே ஆகும். இவற்றிற்குக் காரணத்தைக் கற்பித்து நயம் தோன்ற பாடியுள்ள புலவரின் கற்பனைத் திறம் வியத்தற்குரியது.

கிளிவிடுதூது

மதுகரத்தை இகழ்ந்து, குயில் 'வடிவேலர்
தமை அழைத்து வருவேன்' என்றே
இதம்உரைத்துச் சென்றது; என்ன இன்னமும்கா
ணேன் ? அதனுக்கு இரக்கம் ஏது?
சதம் இதென வளர்த்து எடுத்த தாய்க்குஉதவாது
யார்க்குதவும் தத்தை யேநீ!
முதுமறைதேர் குமரர்தமை அழைத்துவா
மதப்பயலை முடுக்கத் தானே!

நான் தூதுவிடக் கருதியபோது குயில், வண்டைக்குறை கூறி, வடிவேலரை அழைத்துக்கொண்டு வருவதாக இனிமையான சொற்களைச் சொல்லிப் போனது என்னாயிற்று? இன்னும் அது வரவில்லையே! என்மீது அக்குயிலுக்கு இரக்கம் இல்லை! இதைத் தஞ்சம் என்று எண்ணி வளர்த்துப் பாராட்டிய அன்னைக்குப் பயன்படாமல் யாருக்குப் பயன் படப்போகிறது! கிளியே! நம்மை வருத்துகின்ற மன்மதனை ஓட்டுவதற்காப் பழமையான மறைகளை ஆராய்ந்து அறிகின்ற முருகப் பெருமானை அழைத்துவாராய்!

மதுகரம் – வண்டு; சதம்–பற்றுகோடாக; தத்தை – கிளி; மறை – வேதம் மதப்பயலை – மன்மதன் என்னும் சிறுவனை.

10. ஒப்பிலாமணிப் புலவர்

இவர் தொண்டைநாட்டிலே தோன்றியவர், சைவ சமயத்தவர். இளமையிலே கவிபாடும் வன்மை உடையவரால் விளங்கினார்.

இவர் காலத்துக் கூவம் என்னும் ஊரில் வாழ்ந்த நாராயணன் என்ற வள்ளலையும், செய்யூரில் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த நயினார் என்ற செல்வரையும் புகழ்ந்து பாடி உள்ளார். இவர்கள் இறந்தபொழுது, பிரிவாற்றாமையால் உள்ளம் கசிந்து உருகிப் புலவர் பாடியுள்ள பாடல்கள் கற்போர் உள்ளத்தைக் கனிவிப்பனவாகும்.

ஒப்பிலாமணிப் புலவர் சங்க இலக்கியத்தை நன்கு கற்றவர். தனக்கென வாழாப் பிறற்குரியாளன் ஆக விளங்கிய குமணனுடைய வரலாற்றைப் புறநானூறு முதலிய பழந்தமிழ் இலக்கியங்களைப் படித்து அறிந்துகொள்ள முடியாத பாமர மக்களும் எளிதில் படித்துப் பொருள்புரிந்து கொள்ளுமாறு, எளிய இனிய தமிழ் நடையில் அழகிய செய்யுள்களாக இயற்றித்தந்த பெருமை உடையவர்.

மக்கள் வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்களைப் பொறுத்து மனமகிழ்வுடன் விளங்கினால் வாழ்நாள் பெருகும் என்ற நோக்கம் உடையவர். நகைச்சுவை தோன்ற தான் அடைந்த துன்பத்தை வருணிப்பதில் வல்லவர்.

இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தார். இவர் தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னர் காலத்தில் வாழ்ந்தவரும், 'சிவரகசியத் 'தைத் தமிழில் மொழி பெயர்த்தவருமான ஒப்பிலா மணிப் புலவரின் வேறாவர்.

வள்ளல் குமணனைப் பெருந்தலை சாத்தனார் காட்டிலே கண்டபொழுது குமணன் கூறியது

அந்தநாள் வந்திலை! அருந்தமிழ் புலவோய்!
இந்தநாள் வந்துநீ நொந்துஎனை அடைந்தாய்;
தலைதனைக் கொடுபோய்த் தம்பிக்கைக்கொடுத்து அதன்
விலைதனைப் பெற்றுஉன் வறுமைநோய் களையே!

அருமையான தமிழ்ப்பாட்டு இசைக்கும் பாவலனே! நான் அருள்புரிந்த அந்தக்காலத்தில் வந்தாயில்லை; அரசு இழந்து காட்டில் திரிகின்ற இந்நாளில் வறுமைத் துன்பத்தால் பெரிதும் வருந்தி என்னைத்தேடி வந்தனை! இருந்தாலும் எனது தலையைக் கொண்டுபோய், என் தம்பியின் கையில் கொடுத்து, அதன் விலையாகிய ஆயிரம் பொன்னைப்பெற்று உன் வறுமைத் துன்பத்தைப் போக்கிக் கொள்வாயாக!

தலைவி மன்மதனை விளித்துக் கூறியது

வில்லை வளையாதே! மீசைமுறுக் கிச்சினந்து
முல்லைமலர் அம்பை என்மேல் மோதாதே!– நில்லடா!
வந்தார் அடா! முருகர்; வந்துகடப் பம்தாரைத்
தந்தார் அடாமன் மதா!

மன்மதனே! முருகப் பெருமான் என்மீது விருப்பம் கொண்டு வந்தார் அடா; அவர் அணிந்துள்ள கடப்ப மலர் மாலையை என்னிடம் கொடுத்தார் அடா; என்னுடைய மேனியைக் குறிவைத்து உன்னுடைய கரும்பாகிய வில்லை வளைக்காதே ! உன் மீசையை முறுக்கிக் காட்டாதே! முல்லை மலராகிய அம்பினை இனி என் மேல் விடாமல் நில் அடா!

அறிவாளர் செயல்கள்

மாதர்க்கு இதம்; கவி வாணர்க்குச் சால வணக்கம்; குரு
நாதர்க்கு நீதியோடு ஆச்சாரம்; நண்பின் நயந்தவர்க்குக்
கோதுஅற்ற வாசகம், பொய்க்குப்பொய், கோளுக்குக்
கோள்; அறிவி
லாதர்க்கு இரட்டி; அறிவுடை யோர்செய்யும் ஆண்மைகளே

மங்கையருக்கு இனியசொற்கள் உரைத்தல், புலவர் பெருமக்களுக்கு மிகவும் பணிவுகாட்டுதல், குருநாதருக்கு மெய்யன்புடன் வழிபாடு செய்தல், நட்பில் சிறந்தவர்களுடன் குற்றம் அற்ற தன்மையில் அன்புடன் பேசிப் பழகுதல் பொய்யனுக்குப் பொய்யனாதல். புறங் கூறுவோனுக்குப் புறங்கூறுவோனாதல், அறிவில்லாதவர்களிடத்து அவரைப் போன்று இரண்டு மடங்கு அறிவில்லா மூடன்போல் இருத்தல் அறிவுடையோர் செய்யக்கூடிய சிறந்த செயல்களாகும்.

இதம் – இனிமை ; சால –மிகுதி; ஆசாரம் ஒழுங்குமுறை, வழிபாடு; நண்பு – நட்பு; நயந்த –சிறந்த; கோது குற்றம்; வாசகம்–சொல்.

நாணிக் கண் புதைத்தல்.

நல்அம் புலி அணிந்தோன் நாளதனுக்கு எட்டாநாள்
வில்அம் புடன்கூடி விட்டாலும், – வல்லி
இடையாளே! முன்உலகும் ஏழ் அளந்தோன் மைந்தன்
குடையானது அன்றோ கொடிது

வல்லிக்கொடி போன்ற நுண்ணிய இடையை உடையவளே! நன்மையதாகிய மூன்றாம்பிறைச் சந்திரனைத் தரித்தவராகிய சிவபிரானது திரு நட்சத்திரத்திற்கு எட்டாவது நாளாகிய நட்சத்திரம் வில் அம்புடன் ஒன்றுபட்டு இருந்தாலும், பண்டைக் காலத்தில் ஏழு உலகங்களையும் அளந்தவனாகிய திருமாலின் மைந்தன் ஆகிய மன்மதனது குடையானது அல்லவோ கொடுமை உடையதாய் இருக்கிறது.

நயம்: தலைவி தனக்குக் காம வேட்கையைக் கொடுக்கிற சந்திரனைக் கண்டு நாணம் அடைந்து கைகளினால் தன் விழிகளைப் பொத்திக்கொள்வது 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் துறையைச் சார்ந்ததாகும்.

அம்புலி – சந்திரன்; சிவப்பிரானுக்குரியநட்சத்திரம் –திருவாதிரை; இதன் எட்டாம் ஹஸ்தம் கையென்பது பொருள்; வில் அம்பு – தலைவியின் புருவம், கண் ஆகிய இரண்டும் வில்லும் அம்புமாகும்; மைந்தன் மகன்–மன்மதனது குடை – சந்திரன், சந்திரனது கொடுமையைப் பொறுக்க முடியாது நாணம் அடைந்து கண்களையும் புருவத்தையும் கைகளால் மூடிக்கொண்டாள்.

கஞ்சி காமாட்சி அம்மன் மீது பாடியது.

கஞ்சி குடியாளே; கம்பன்சோறு உண்ணாளே;
வெஞ்சினங்கள் ஒன்றும் விரும்பாளே; – நெஞ்சதனில்
அஞ்சுதலை யாவருக்கு ஆறுதலை ஆவாளே;
கஞ்சமுகக் காமாட்சி காண்!

காஞ்சிமாநகரில் வாழ்கின்றவன், ஏகாம்பரனாகிய சிவபெருமானது சோற்றை உண்ணாதவள், கொடிய கோபத்தை அணுவளவும் விரும்பாதவள், மனதில் கவலை முதலியவற்றால் அச்சம் அடைவோர்க்கு மன அமைதியை அளிப்பவள், செந்தாமரை மலர் போன்ற திருமுகத்தை உடைய காமாட்சி அம்மையேயாகும்.

நயம்: செந்தாமரை மலர்போன்ற திருமுகத்தை உடைய காமாட்சி அம்மை கஞ்சியைக் குடிப்பதில்லை; கம்பஞ் சோற்றை உண்பதில்லை; கறிவகை ஒன்றனையும் விரும்புவதில்லை; நெஞ்சில் அஞ்சுதலை உடையவருக்கு ஆறுதலை உடையவளாவாள் என்பது பாட்டின் நேர் பொருள்.

கஞ்சி காமாட்சியை வழிபடுவோருக்கு எல்லா நலனும் பெருகும் என்பது கருத்து.

கஞ்சி குடிஆள்–காஞ்சியில் குடியிருப்பவள்; கம்பன்–ஏகாம்பர நாதன்; வெஞ்சினம் – வெம்சினம் கொடியகோபம் ; அஞ்சுதல்–அச்சம், ஆறுதலை –மனச்சாந்தியை; கஞ்சம்–தாமரை .

வேட்டி ஆற்றில் அடித்துக்கொண்டு போனபோது பாடியது

அப்பிலே தோய்த்துஇட்டு அடுத்தடுத்து நாம் அதனைத்
தப்பினால் நன்மையது தப்பாதோ? – இப்புவியில்
இக்கலிங்கம் போனால்ஏன்? ஏகலிங்கம் ஆம்மதுரைச்
சொக்கலிங்கம் தான் இருக்கச் சொல்.

நீரிலே துவைத்து மேலும் மேலும் நாம் அதனைத் தப்பினால், அதுவும் நம்மை விட்டுச் செல்லாதோ? இவ்வுலகில் ஒப்பற்ற லிங்க வடிவமாக விளங்கும் சிவபெருமான் மதுரை மாநகரில் சொக்கலிங்கமாக இருக்கும்போது இந்த ஆடை ஆற்றில் அடித்துக்கொண்டு போனால் உண்டாகும் இழப்பு என்ன என்று சொல்!

நயம்: ஆடையை மேன்மேலும் தப்பினால் அது கந்தையாகி நம்மைவிட்டுத் தவறிவிடும் என்பதை 'நம்மைத் தப்பும்' என்றார் புலவர்.

கலிங்கம் ஆடை: இக்கலிங்கம் – இந்த ஆடை; சொக்கலிங்கம் மதுரையில் உள்ள லிங்கம் – சொக்கநாதர்."

11. ஒட்டக் கூத்தர்

கூத்தர் என்பது இவருடைய இயற்பெயர் இவர் மலரி என்னும் ஊரில் பிறந்தவராவர். அவ்வூர் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திறு எறும்பி ஊரே (திருவரம்பூர்) என்பது அவ்வூரில் உள்ள கல்வெட்டுக்களால் தெரிகிறது. இவர் செங்குந்தர்குடியில் பிறந்தவர் என்பர். கூத்தர் தமிழ் மொழியில் சிறந்த புலவராய் விளங்கியதோடு வடமொழி நூல்களிலும் தேர்ச்சிபெற்று இருந்தார் சிறந்த சிவநேசச் செல்வராக வாழ்ந்தார். கலைமகளிடத்தும், திருஞானசம்பந்தரிடத்தும் பெரிதும் ஈடுபாடுடையவராய்த் திகழ்ந்தார்.

கலிங்கத்துப் பரணி கொண்ட முதலாம் குலோத்துங்க சோழனுடைய மகன் விக்கிரம சோழன் (1118–1133), அவன் மகன் குமார (இரண்டாம்) குலோத்துங்கன் (1133–1153) அவன் பேரன் இரண்டாம் இராசராச சோழன்(1150–1163) ஆகியோர் காலத்துச் சோழப் பேரரசின் அவைக்களப் புலவராகச் சீரும் சிறப்பும் பெற்று இருந்தார். குலோத்துங்கனுக்கும், இராசராசனுக்கும் ஆசிரியராகவும் விளங்கினார். இரண்டாம் இராசராசன் காலத்தில் புலவர் பெருமான் பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன் மீது 'உலா' ஒன்றும் 'கலிங்கப்பரணி'' என்ற நூலையும் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய கலிங்கப்பரணி இன்று கிடைக்கவில்லை. தன்மீது கூத்தர் பாடிய உலாவில் ஒரு கண்ணியை ஒட்டி ஒரு செய்யுள் செய்யுமாறு விக்கிரம சோழன் வேண்ட, அவ்வாறே கூத்தர் விரைந்து ஒட்டிப்பாடினார். அதன் காரணமாக ஒட்டக்கூத்தர் என்னும் பெயர் பெற்றார் என்பர். இப்பெயருக்கு வேறு காரணம் கூறுவாறும் உளர். இரண்டாம் குலோத்துங்கன் மீது ஓர் உலாவும், பிள்ளைத்தமிழ் ஒன்றும் பாடியுள்ளார். இவன்

'ஒட்டக்கூத்தரின் திருவடியைத் தன் தலையில் சூடியுள்ளதாக' ஒரு பாடல் பாடியுள்ளான். இரண்டாம் இராசராச சோழன்மீது ஒரு உலாவும் பாடியுள்ளார். தாம் இயற்றிய தக்கயாகப் பரணியில் இவனைப் பலவிடங்களில் புகழ்ந்து போற்றியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பூந்தோட்டம் ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள 'கூத்தனூர்' இரண்டாம் குலோத்துங்கனால் புலவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட ஊராகும். அவ்வூரின் ஆற்றங்கரையில் உள்ள கலைமகளை, 'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியவே' என்று தக்கயாகப் பரணியில் கூத்தர் வாழ்த்தியுள்ளார்.

மாணவர் பலருக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பிப்பதில் பேரார்வம் கொண்டு இருந்தார். இலக்கிய மரபிலிருந்து நெறி பிறழ்ந்து புலவர்கள் பாடல் இயற்றினால் அவர்களைக் கண்டிப்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இதனால் போலிப் புலவர்கள் கூத்தரை இழித்தும் பழித்தும் பேசினர். புலவர் பெருமானுடைய நூல்களைக் கூர்ந்து நோக்குவார்க்கு அவருடைய பண்பட்ட உள்ளமும் பரந்த நோக்கும், அகன்ற அறிவும் ஆழ்ந்த புலமையும் புலனாகாமல் போகாது. கலிங்கத்துப் பரணிபாடிப் பொன்றாப் புகழ் பெற்ற செயங்கொண்டாரைத் தமது பிள்ளைத் தமிழில் பாராட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது

கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன்,காளக்கவி என்பன கூத்தருடைய சிறப்புப் பெயர்களாகும். இவர் இயற்றிய வேறு நூல்கள் காங்கேயன் நாலாயிரக்கோவை, ஈட்டி எழுபது. அரும்பைத் தொள்ளாயிரம், முதலியனவாகும். ஈட்டி எழுபது சொல்லாலும் நடையாலும் கூத்தர் இயற்றியதாகத் தெரியவில்லை. மற்ற இரண்டு நூல்கள் முழுதும் கிடைக்கவில்லை.

"கோவை, உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்று அறிஞரால் பாராட்டப்பெற்ற புலவர் பெருந்தகை பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர்.

சோழ மன்னன் கூத்தருக்குப் பரிசு அளித்தபொழுது பாடியது.

பத்துக்கொண் டன திக்கும் பதறிப்போய்,உலையப்
பைம்பொனதா ரகைசிந்தப் பகிரண்டத் திடைநீள்
மத்துக்கொண் டுமதிக்கும் திரைஆழி நெடுமால்
வடிவாகிய புவிகைக்கொண்டு அருள்மானா பரணா !
முத்துப்பந் தரில் நிற்கும் குருளைக்கும்; சினவேல்
முருகற்கும், பொதியக்கோ முனிவற்கும், சடிலக்
கொத்தற்கும். பதுமக்கொந்து அயனுக்கும் அலதிக்
கூழைத்தண் தமிழுக்குஏன் கொடியும்கா ளமுமே?

பத்துத் திசைகளும் திடுக்கிட்டு வருந்தவும், அழகிய பொன்போன்று ஒளிரும் விண்மீன்கள் பலபலவென்று உதிரவும், பகிரண்ட வெளியின் நடுவில் வானுற உயர்ந்து தோன்றும் மந்திரமலையாகிய மத்தைக்கொண்டு, கடையப்பட்ட அலைகள் ஒலிக்கின்ற பாற்கடலையுடைய திருமாலினது செங்கண் நெடியோன் வடிவம் கொண்டு இந்நில உலகை உரிமையாகக் கைக்கொண்டு காப்பாற்றுகின்ற மானமாகிய அணிகலனை உடைய சோழமன்னனே! முத்துப் பந்தலை உடைய சிறுவனாகிய திருஞானசம்பந்தன் பாடிய பாடலுக்கும், வெற்றிவேலை உடைய முருகப் பெருமானின் பாடலுக்கும், பொதிய மலையில் உள்ள அகத்தியமுனிவன் பாடலுக்கும், சடைமுடியை உடைய சிவபெருமான் பாடிய பாடலுக்கும். தாமரை மலரில் வாழும் பிரமனது பாடலுக்கும், உரியனவே அன்றி குளிர்ந்த தமிழைப்பாடும் அடியேனுக்கு அரச சின்னங்களாகிய கொடியும் எக்காளமும் போன்ற சிறப்புக்கள் எல்லாம் எதற்கு?

தாரகை – நட்சத்திரம்; பகிர் அண்டம் – பூமியின் மேற்பகுதி; திரை ஆழி – அலைகளை உடைய கடல்; குருளை– குழந்தை ; பொதியக் கோமுனி – அகத்தியன்; சடிலம்–சடை பதுமக் கொந்து – தாமரைக் கொட்டை.

சோழனது சிறப்பு

கோரத்துக்கு ஒப்போ? கனவட்டம் அம்மானை!
கூறுவதும் காவிரிக்கு வைகையோ? அம்மானை!
ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ? அம்மானை!
ஆதித்தனுக்குநிகர் அம்புலியோ? அம்மானை!
வீரர்க்குள் வீரன்ஒரு மீனவனோ? அம்மானை!
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ? அம்மானை!
ஊருக்கு உறந்தைநகர் கொற்கையோ ? அம்மானை !
ஒக்குமோ சோணாட்டிற் பாண்டிநாடு? அம்மானை!

கூத்தர் சோழனுக்குப் பாண்டியனிடம் பெண்கேட்ட போது, 'சோழன் பெருமைஎன்ன?' என்று வினவிய பாண்டியனைப் பார்த்து சோழனது குதிரை, ஆறு. மாலை, குடி, கொடி முதலியவற்றிற்கு ஒப்பாகப் பாண்டியனிடத்து ஒன்றும் இல்லை என்று பாடியதாகக் கூறுவர்.

கனவட்டம் எனப்படும் பாண்டியன் குதிரை, சோழன் குதிரையாகிய கோரத்துக்குச் சமம் ஆகுமோ? காவிரி ஆற்றுக்கு வைகை ஆறு இணையாகுமோ? பாண்டியனுடைய வேப்பமாலை சோழனுடைய ஆத்திமாலைக்கு ஒப்பாகுமோ? சூரிய குலத்திற்குப் பாண்டியனது சந்திரகுலம் உவமையாகுமோ? வீரர்களுக்குள் மாபெரும் வீரனாக விளங்குபவன் பாண்டியனா? வெற்றியுடைய புலிக்கொடிக்கு மீன்கொடி நிகராகுமோ? பாண்டியன் நகரமாகிய கொற்கை சோழனது உறையூருக்குச் சமானமாகுமோ? பாண்டியநாடு சோழ நாட்டிற்கு ஒப்பாகுமோ?

கோரம் – சோழனது குதிரையின் பெயர்; கனவட்டம் –பாண்டியன் குதிரையின் பெயர்; ஆர் – ஆத்தி; ஆதித்தன் – சூரியன்; அம்புலி –சந்திரன்; மீனவன – மீனக்கொடியை உடைய பாண்டியன்; உறந்தை– உறையூர்.

சோழன் உலாவரும்போது ஒட்டக்கூத்தர் அவனைப் புகழ்ந்து இரண்டடிபாட, சோழன் இரண்டடி பாடியது.

ஆடும் கடைமணி நாஅசையாமல், அகிலம்எங்கும்
நீடும் குடையைத் தரித்தபிரான்; இந்த நீள்நிலத்தில்
பாடும் புலவர் புகழ்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன்என் றேஎன்னைச் சொல்லுவரே

அரண்மனை வாசலில் ஆடும் தன்மையதாகிய ஆராய்ச்சி மணியினது நாவோசை எழாதவண்ணம், உலகம் எங்கும் பெரிய வெண்கொற்றக் குடையைத் தரித்துச் செங்கோல் ஓச்சுகின்ற இறைவன். இப்பரந்த உலகில் பாடுவதற்கு உரியவராகிய புலவர் புகழ்ந்து ஒட்டக்கூத்தரது திருவடி தாமரைகளைத் திருமுடியில் புனைகின்ற குலோத்துங்க சோழன் என்று என்னை உலகத்தார் சொல்லுவார்கள்.'

ஆடும்–அசைகின்ற. கடை–வாயில்; அகிலம்–உலகம்; அம்புயம்–தாமரை

தலைவி நிலவைக் கண்டு வருந்தியதாகப் பாடியது.

என்று பெறுவேன்யான் ஈசன் திருமுடிமேல்
சென்றுவிளை யாடுகின்ற தீபமே! என்றும்
செருப்புக்குத் தோல்வாங்கும் சென்னி அகளங்கன்
பொருப்புக்குத் தோலாப் புயம்.

எக்காலத்தினும் போர்க்களத்தில் புகுந்து எதிரியினுடைய யானைப் படைகளை வெற்றியினால் கவர்ந்து கொள்ளுகிற, சோழனாகிய களங்கம் அற்றவனுடைய மலைக்கும் தோல்வியுறாத தோள்களை நான் எப்போது அடைவேன் என்பதைச் சிவபெருமானது அழகிய திருமுடியின்மீது விளையாடுகின்ற நிலாவே ! நீ சொல்வாயாக!

செருப்புக்குத் தோல்வாங்கும்– செருப்புக்குத் தோல் வாங்கும் – செருப்புக்கு – போர்க்களத்தில் புகுந்து: தோல் வாங்கும் – தோற்று ஓடுகின்ற: அகளங்கன்–களங்கம் அற்றவன்; தோலா – தோல்வி அடையாத; புயம் – தோள்; பொருப்பு–மலை

புலவன் ஒருவனை 'நீ யார்' என்று கூத்தர் கேட்க, அவன் பாட்டாக கூறிய விடை.

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந்து எதிர்த்தவன் யாரடா?"
"கூனை யும்குட மும்குண்டு சட்டியும்
பானை யும்வனை அங்குசப் பையல்யாண்"

மோனை முதலியவை நன்கு அமைந்த முத்தமிழ்க் கவிதைகளாகிய மும்மதங்களையும் பொழிகின்ற யானையைப் போன்ற எமது முன்பு வந்து நின்றவன் ஆகிய நீ யார் அடா? என்று ஒட்டக் கூத்தர் கேட்க, நான் சால் குடம், குண்டுசட்டி, பானை முதலிய மண் பாத்திரங்களைச் செய்கின்ற அழகிய குயவன் ஆவேன் என்று கூறினான்.

நயம்: மும்மதமும் பொழியும் யானை என்று ஒட்டக்கூத்தர் தம்மைச் சிறப்பித்துக் கூற, யானையை அடக்கும் அங்குசம் (அழகிய குயவன்) போன்றவன் நான் என்று குயவன் பதில் கூறியதாகவும் பொருள் கொள்ளலாம். இதனால் முத்தமிழில் வல்லவர் ஒட்டக்கூத்தர் என்பது தெரிகிறது.

மோனை செய்யும் உறுப்பு: முத்தமிழ்–இயல், இசை, நாடகம்; மும்மதம். யானையின் துதிக்கை, காது, குறி ஆகிய மூன்று இடங்களில் இருந்து ஒழுகும் மதநீர்; இங்கே இயல், இசை நாடகம் ஆகிய முத்துறையிலும் கவிதைகள் இயற்றும் கூத்தரின் ஆற்றலைக் குறிப்பன; கூனை –சால்.

கார்காலம் கண்டு மயங்கிய தலைவிக்குத் தோழி கூறியதாகக் கூத்தர் பாடியது.

நையும் படியே நாம். கொற்ற நம்கோன்
செஞ்சி வரைமீதே
ஐயம் பெறுநுண் இடைமடவாய்! அகிலின்
புகையே; 'முகில்' அன்று;
பெய்யும் துளியோ 'மழை' அன்று; பிரசத்
துளியே; பிழையாது
வையம் பெரினும் பொய்யுரைக்க மாட்டார்
தொண்டை நாட்டாரே!

நாம் நைந்து உருகும்படி செய்யும், வெற்றிபொருந்திய மன்னனுடைய செஞ்சி மலையின்மீது உண்டோ இல்லையோ என்னும் சந்தேகத்திற்குக் காரணமாகத் தோன்றும் நுண்ணிய இடையை உடைய பெண் அரசியே! இங்குத் தோன்றுவது அகில் புகையே அல்லாமல் கரிய மேகம் அன்று; இங்குச் சொரிகின்ற துளிகள் மழைத்துளிகள் அல்ல; தேனின் துளிகளே ஆகும். இது பொய்யாகாது. உலகம் முழுமையும் தங்களுக்குப் பரிசாகக் கிடைப்பது ஆயினும், அதற்காகத் தொண்டை மண்டலத்தில் வாழும் மக்கள் பொய் உரைக்க மாட்டார்கள். எனவே, இது கார்காலம் அன்று என்பதைத் தெளிந்து உனது மனக்கலக்கத்தை விட்டு ஒழிப்பாயாக.

கொற்றம் – வெற்றி; செஞ்சி – செஞ்சிக்கோட்டை என்னும் ஊர்; அகில்–சந்தனம் போன்ற நறுமணம் மிக்க ஒருவகை மரத்தின் பொடி புகைத்து மகளிர் தம் கூந்தலுக்கு நறுமணம் ஊட்டுவர்; பிரசம் – தேன்; வையம் – உலகம்.

12. கம்பர்

சோழப் பேரரசின் பயனாக தமிழகத்தில் காவியமும் ஓவியமும், கற்சிலையும் பொற்சிலையும், ஆடலும் பாடலும், அழகும் அறிவும் அன்பும் பெருக்கெடுத்து ஓடிய காலத்திலே வாழ்ந்தவர் கம்பர். இவர் உலகப் பெரும் கவிஞர்களிலே ஒருவர். இவர் இயற்றி அருளிய 'இராமாவதாரம். உலகப் பேரிலக்கியங்களுள் ஒன்றாகப் பொன்றாப் புகழுடன் பொலிவுறுகிறது.

இம் மாபெரும் காப்பியத்தைப் படைத்து உலகுக்கு அளித்த புலவர் பெருமானின் வரலாறு முழுவதும் நன்கு தெரியவில்லை. கம்பர் என்ற பெயர் இவருக்கு அமைந்ததைக் குறித்துப் பலர் பலவகையாகக் கூறுகின்றனர். சிறு பிள்ளையாக இருந்தபொழுது கம்பங் கொல்லையைக் காவல் புரிந்த காரணத்தால், 'கம்பர்' எனப்பெயர் பெற்றார் என்பர் சிலர். 'கம்பநாடு' என்ற நாட்டில் பிறந்தமையால் 'கம்பநாடன்' கம்பன் என்னும் பெயர் பெற்றார் என்பர் சிலர். வேறுசிலர். காளிகோயில் கம்பத்தின் அருகே இவர் கண்டு எடுக்கப்பட்டமையால் கம்பர் என்று அழைக்கப்பெற்றார் என்பர் மற்றும் சிலர். காஞ்சிபுரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள ஏகம்பனாகிய சிவபெருமானைக் கம்பன் என்று தேவாரம் பாடிய மூவர் குறிப்பிட்டுள்ளமையால், கச்சி ஏகம்பனது பெயரே இவருக்கு அமைந்தது என்பர் இன்னும் சிலர்.

கம்பர் சோழ மண்டலத்தில் உள்ள திருவழுந்தூரில் பிறந்தவர். அவர் தந்தையார் பெயர் ஆதித்தர் என்பர். பெரும் செல்வரும் வள்ளலுமாக அக்காலத்தில் வெண்ணெய் நல்லூரில் விளங்கிய சடையப்ப முதலியாரிடம் கம்பர் உணவு, உடை, உறையுள் முதலியன பெற்றுக் கல்வி கற்றுப் புலமை முற்றிச் சிறப்புற்றார். கம்பர் உவச்சர் குலத்தில் பிறந்தவர்

என்று சிலரும், அரசகுலத்தில் தோன்றியவர் என்று வேறு சிலரும் கூறுவர். திருமணம் செல்வக்கேசவராய முதலியார், இவர் வேளாளர் மரபினராய் இருக்கலாம் என்று சில சான்றுகள் காட்டிக் கூறியுள்ளார்.

கம்பருக்கு அம்பிகாபதி என்னும் அறிவுசான்ற மகன் ஒருவன் இருந்தான் என்பது யாவரும் அறிந்த உண்மை. தனது தந்தையைப்போலவே சிறந்த புலவனாக விளங்கினாள் என்பது அவருடைய பாடல்களாலும், அவன் இயற்றிய கோவை நூலாலும் அறியப்படுகிறது. கம்பர் நன்றி மறவாத நற்பண்பினர். அவர் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைக் கம்பராமாயணத்தில் பத்து இடங்களில் பாராட்டியுள்ளார்.

கல்வியில் பெரியவரான கம்பர் ' தமிழகத்தில் இதுகாறும் தோன்றிய கவிஞர்களுக்கு எல்லாம் முடிசூடா வேந்தனாக. 'கவிச்சக்கரவர்த்தியாக' விளங்குகிறார். 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' என்று புலவர்களால் போற்றப் பட்ட கம்பர் சிறந்த புலமையும், சந்த இன்பம் தோன்ற. கற்பனை நயம் விளங்க, ஒப்பற்ற உவமையின் மூலம் கருத்தை விளக்கிக் கவிபாடும் திறமையும் நன்கு கைவரப் பெற்றவர். இவர் பாடியனவாகச் சில தனிப் பாடல்கள் கிடைத்துள்ளன. அவை அல்லாமல் இவர் ஏர் எழுபது, சடகோபர் அந்தாதி சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

கம்பர் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (1178–1218) வாழ்ந்தவர் என்பது பெரும் பான்மையான ஆராய்ச்சியாளர் கருத்தாகும். ஆகவே, அவர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகலாம்.

கலைமகள் வாழ்த்து.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை:– தூய
உருப்பளிங்கு போல்வாள்; என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள்; இங்கு வாராது இடர்.

தூய்மையான வெண்மைபொருந்திய பளிங்கு போன்ற வடிவுடைய என் அன்னையாகிய கலைமகள், அழகு பொருந்திய அறுபத்து நான்கு கலைகளையும் மனதில் பதியுமாறு அறிவிப்பாள். அவள் என் உள்ளத்தின் உள்ளே நிலை பெற்று இருப்பதனால், இங்கு எனக்கு எத்தகைய துன்பமும் உண்டாகாது.

ஆய – அழகிய; ஏய – பொருந்த, பதிய; பளிங்கு – பளிங்குக் கல்; இடர்– துன்பம்.

படிக நிறமும், பவளச் செவ்வாயும்,
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும், – துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி.

வெண்மை பொருந்திய பளிங்குபோன்ற மேனியும், பவளம் போன்ற செவ்விதழ்களையுடைய வாயும், மணம் வீசுகின்ற மென்மையான தாமரை மலர் போன்ற 'கைகளையும், உடுக்கையைப் போன்று சிறுத்த இடையையும் உடைய கலைமகளை இரவும், பகலும் எந்நேரமும் வணங்கி வழிபட்டால் கல்லும் கவி பாடும்.

படிகம் – பளிங்குக்கல்; கடி – மணம்; கமழ் – வீசும். பூம் – மென்மையான ; துடி –உடுக்கை; இடை–இடுப்பு; அனவரதமும் – எந்நேரமும்.

இவ்விரண்டு பாடல்களும் கம்பர் இயற்றிய சரசுவதி அந்தாதியின் காப்புச் செய்யுட்கள் என்பர்.

திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாடியது.

மோட்டுஎருமை வாவிபுக்கு,முட்டுவரால் 'கன்று' என்று
வீட்டு அளவும் பால்சொரியும் வெண்ணெய்யே!–நாட்டில்
அடையா நெடுங்கதவும் 'அஞ்சல்' என்ற சொல்லும்
உடையான் சடையப்பன் ஊர்.

நாட்டில் எப்பொழுதும் அடைத்தல் இல்லாத பெரிய கதவையும், 'அடைக்கலம்' என்று வந்தவர்க்கு

'அஞ்சவேண்டாம்' என்ற இனிய சொல்லையும் உடையவன் ஆகிய சடையப்ப முதலியாருக்கு உரிய ஊர். உயர்ந்த எருமைக் கூட்டங்கள் குளங்களில் புகுந்தவுடன் தம்முலைகளில் வந்து முட்டுகின்ற வரால் மீன்களைத் தம்முடைய கன்றுகள் என்று நினைந்து, வீடுபோய்ச் சேரும் அளவும் பால் சுரந்து நிலத்தில் பெய்துகொண்டே செல்கின்ற திருவெண்ணெய் நல்லூரேயாகும்.

மோட்டு மேடான, உயர்ந்த; வாவி – குளம்; வரால் – விரால் மீன்

உழவின் சிறப்பு

மேழி பிடிக்கும்கை; வேல்வேந்தர் நோக்கும்கை;
ஆழி தரித்தே அருளும்கை;–சூழ்வினையை
நீக்கும்கை; என்றும் நிலைக்கும்கை; நீடூழி
காக்கும்கை; காராளர் கை.

வேளாளரின் கைகளானது, ஏர்பிடித்து உழவு செய்கின்ற கைகளாகும்; வேற்படையைக் கையிலே பிடித்துள்ள வேந்தர்களும் ஆர்வத்தோடு நோக்குகின்ற கைகளாகும்; கணையாழி தரித்து, வருபவர்க்கு எல்லாம் வரையாது வழங்கும் கைகளாகும்; பிற மக்களுக்கு வரக்கூடிய பசிப்பிணியாகிய வறுமை நோயைப் போக்கும் கைகளாகும்; என்றென்றும் அடைக்கலம் அளிக்கின்ற கைகளுமாகும்.

மேழி – கலப்பை – ஏர்; வேந்தர்– மன்னர்; ஆழி–மோதிரம்; சூழ்வினை – உண்டாகும் வறுமைத் துன்பம்; காராளர் – மேகத்தை ஆளுகிறவர்களாகிய வேளாளர்

ஆறைநகர் ஏகம்பவாணனைப் புகழ்ந்து பாடியது

பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம்
மார்பு அகலம் கண்டு மகிழ்வரே!– போர்புரிய
வல்லான் அகளங்கன், வாணன் திருநாமம்
'எல்லாம்' எழுதலாம் என்று.

பெரிய மன்னர்களது மனைவிமார்கள் தாம் பெற்றுள்ள பிள்ளைகளுடைய உரமான மார்பின் அகலத்தைப் பார்த்து

போரில் வல்லவனும் மாசு இல்லாதவனுமாகிய வாணன் என்பவனது திருப்பெயரையும், பட்டம், புகழ் முதலியவை களையும் வரையலாம் எனக்கருதி மகிழ்ச்சி அடைவார்கள்.

விளக்கம்: வாணன் பெருமையையும், போர்த்திறனையும் வெற்றிச் சிறப்பையும் பற்றி பேரரசர்களின் மனைவியர் தங்கள் பிள்ளைகளின் மார்பின் காரணமாகப் புகழ்வார்கள் என்பது கருத்து.

மதலை – பிள்ளை; அகளங்கன் –களங்கம் இல்லாதவன்; வாணன்– ஏகம்பவாணன்.

வாணன் யானையைப் பரிசாகத் தந்தபோது பாடியது.

உலைக்குரிய பண்டம் உவந்து இரக்கச் சென்றால்,
கொலைக்குரிய வேழம் கொடுத்தான்; தலைக்குரிய
வாணர்கோன் ஆறை மகதேவனுக்கு இந்தப்
பாணனோடு என்ன பகை?

உலையில் சேரத்தக்க பண்டமாகிய அரிசியை முன்னிட்டு இரக்கச் சென்றால், போரில் கொல்லும் தொழிலையுடைய யானையைத் தந்தான். தலைமைக்கு உரிய வாணன் என்னும் மன்னனாகிய ஆறை என்னும் நகரில் உள்ள மகதேவனுக்கு இந்தப் பாட்டிசைக்கும் பாவலனோடு ஏன் பகை – உண்டாயிற்று? கொண்டுபோய்க் காப்பதற்கு அரியதாகிய . இந்த யானையைப் பரிசாக எனக்குத் தந்தானே?

உவந்து – மகிழ்ந்து, இரக்க – ஏற்க; வேழம் – யானை; பாணன் – இசை வாணன், புலவன்.

வாணனது வெற்றிச் சிறப்பு.

வாணன் பெயரெழுதா மார்புண்டோ? மாகதர்கோன்
வாணன் புகழுரையா வாயுண்டோ?– வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ? உண்டோ
அடிதாங்கி நில்லா அரசு.

மாகதர்கோன் வாணன் பெயர் எழுதாத மார்பு உண்டோ? வாணன் புகழினைப் பேசாத வாய் இந்த உலகில் உண்டோ? இன்னும் அந்த வாணனுடைய வெற்றிக் கொடியைத் தாங்கி நில்லாத கொம்பு உண்டோ? மேலும் அவனது திருவடிகளுக்குத் தொண்டு செய்யாத அரசர்களும் –உளரோ? இல்லை.

மாகதர் – பாணர்.

பாணனை ஏகம்பவாணனிடத்து ஆற்றுப் படுத்துதல்.

"தேர் உருளைப்புரவி வாயணத்தொகுதி
திறைகொணர்ந்து வருமன்ன! நின்
தேசம் ஏது உனது நாமம்ஏது? புகல்!" செங்கை
யாழ்தடவு பாணகேள்!
வாரும்ஒத்தகுடி நீருநாமும், மக தேவன் ஆறை நகர் காவலன்
வாணபூபதி மகிழ்ந்தளிக்கவெகு வரிசை
பெற்றுவரு புலவன் யான்
நீரும்இப் பரிசுபெற்று மீளவரல் ஆகும்;ஏகும்
அவன் முன்றில்வாய்
நித்திலச்சிகர மாடமாளிகை நெருங்குகோபுர
மருங்கெலாம்
ஆருநிற்கும்; உயர் வேம்புநிற்கும்; வளர் பனையுநிற்கும்,
அதனருகிலே
அரசுநிற்கும்; அரசைச்சுமந்த சிலஅத்தி நிற்கும்
அடையாளமே

"தேர்களையும், பிடரி மயிரை உடைய குதிரைகளையும், யானைக் கூட்டங்களையும் திறைப் பொருளாகப் பெற்றுவரும் வேந்தனே என்று புலவனை நோக்கி, "உனது நாடு எது உனது பெயர் என்ன? கூறுவாயாக!" என்று ஒரு பாணன் கேட்டான். உடனே அந்தப் புலவன், செந்நிறமான கையினாலே யாழினைத் தடவுகின்ற பாணரே கேட்பீராக அருகில் வருக! நாம் இருவரும் ஒரே குடியாகிய கலைஞர் குலத்தைச் சேர்ந்தவர்களே; மகதேவன் எனப்படும் ஆற்றூர்ப் பகுதிக்குத் தலைவனாகிய

ஏகம்பவாணன் என்னும் மன்னன் மகிழ்ச்சியோடு அளித்த பரிசுப் பொருள்களைப் பெற்று வருகின்ற புலவன் நான். நீரும் இவ்வகையான வரிசைகளைப் பெற்றுத் திரும்பிவரலாம். அவனுடைய அரண்மனையின் முற்றத்திற்குப் போய்வருக! அவனுடைய முற்றத்திற்கு உரிய அடையாளம் யாதெனில், முத்தினால் ஆகிய முடிகளையுடைய மாடங்கள் பொருந்திய பெரியமாளிகைகள் இருக்கும். அம்மாளிகையில் நெருக்கமான கோபுரங்களின் பக்கங்களில் எல்லாம் ஆத்திமரம் நிற்கும், உயர்ந்த வேப்பமரங்கள் வளர்ந்து இருக்கும்; பெரிய பனைமரமும் நின்றுகொண்டிருக்கும்; அதன் அருகிலே அரச மரம் நிற்கும்; அந்த அரசமரத்தைச் சுமந்து சில அத்தி மரங்களும் அங்கே நிற்கும்" என்று கூறி, இருக்கும் இடத்திற்கு வழிகாட்டினான். ஏகம்பவாணன்.

நயம்: ஒரு புலவன் வாணனிடம் பரிசு பெற்றுக் கொண்டு யானைக் கூட்டம், குதிரைக் கூட்டம் முதலியவைகளுடன் வரும்போது, யாழ் இசையில் வல்லவனாகிய ஒரு பாணன். அவனை அரசன் என்று எண்ணி, பரிசில் கேட்டான். புலவன், "நான் உன்னைப் போன்ற ஒரு கலைஞனே ; இவை கொடை வள்ளலாகிய வாணன் எனக்கு அளித்துள்ள – பரிசுகள்; நீயும் அங்குச் சென்றால் இத்தகைய பரிசுக்களைப் பெறலாம் " என்று சொல்லி, வாணன் மாளிகையினைக் கண்டு அறிவதற்குரிய அடையாளங்களைக் கூறி வழி காட்டும் முறையில் கம்பர் வாணன் பெருமையைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

ஆத்திமரம் – ஆத்திமாலை அணிந்த சோழன்; வேம்பு – வேப்பமலர் மாலை பூண்ட பாண்டியன்; பனைமரம் – பனம்பூ மாலையை அணிந்த சேரன்; அரசு – பல சிற்றரசர்கள்; அரசைச் சுமத்த அத்தி அரசர்கள் ஏறிவந்த யானைகள்.

உருளை – சக்கரம்; புரவி – குதிரை; வாரணம் – யானை; திறை–கப்பம்: நாமம் – பெயர்; முன்றில் –இல்முன் – வீட்டின் வாசலில்; நித்திலம் – முத்து; ஆர் – ஆத்தி; அரசு – அரசர்; அத்தி – யானை .

சோழன் சால்வையைப் போர்த்துக்கொண்டு படுத்திருந்த கம்பரைத் தனது கணவன் எனக் கருதி, அவருடன் அரசன் மனைவி படுத்துக் கொண்டதை உணர்ந்து கம்பர் பாடியது.

தேரையார் செவ்விளநீர் உண்ணாப் பழிசுமப்பார்!
நாரியார் தாம்அறிவார் நாம்அவரை நத்தாமை;

கோரைவாய்ப் பொன்சொரியும் கொல்லிமலை நன் நாடா
ஊரைவாய் மூடவுலை மூடிதான் இலையே!

கோரைச் செடியின் அடிகளிலே ஆறானது பொன் மணலைப் பரப்புகின்ற கொல்லிமலையை உடைய வளமிக்க நாட்டின் தலைவனே! தேரைகள் சிறந்த இளநீர்க் காய்களின் நீரை அருந்தாமல் இருந்தும் அவற்றின் மீது குற்றம் சாட்டப்படும். அரசன் தேவியார் அருகிருந்தும் நாம் அவர் மீது விருப்பம் கொள்ளாமையை அவர்தாமே அறிவார். எனினும், ஊரில் உள்ளார் பேச்சைத் தடுப்பதற்கு உலையை மூடும் தட்டுபோன்ற தடைக்கருவி ஒன்றும் இல்லையே.

விளக்கம்: தேங்காய்க்கு உண்டாகும் ஒருவகை நோய்க்குத் 'தேரை' என்று பெயர். அந்நோய் வந்தால் தேங்காயின் உள்ளே உள்ளே நீர் வற்றி விடுவதோடு, தேங்காயும் அழுகிவிடும். இந்த உண்மையை அறியாத பாமரமக்கள் தேரை மோந்ததனால் தேங்காய் கெட்டுவிட்டது என்று ஒரு பாவமும் அறியாத 'தேரை' என்ற (தவளைபோன்ற) உயிர் இனத்தின்மீது பழிசுமத்துவர். அதைப்போல், அரசர் மனைவி என் அருகில் படுத்திருந்தும் அவர்கள்மீது தான் ஆசை கொள்ளாவிட்டாலும், ஊரில் உள்ளவர்கள் என் மீது பழி சுமத்துவார்கள்.

தேரை– ஓர் உயிரினம் ; நாரியர் – பெண்கள், இங்கே அரசன் மனைவி; நத்தாமை – நச்சாமை –விரும்பாமை.

தென்றலே ஏன் வந்தாய்?

கொற்கையான். மாறன், குலசே கரப்பெருமான்
'பொற்கையான்' ஆனகதை போதாதோ?– நற்கமல
மன்றலே வாரி மணிவா சலை அசைக்கத்
தென்றலே ஏன்வந்தாய்? செப்பு?

குறிப்பு: தானும் தன்மனைவியும் படுக்கை அறையில் இருக்கும்போது, காற்று கதவை மோதியதை அறியாது யாரோ கதவைத் தட்டுகிறார் என்று நினைத்துக் கம்பர் கதவைத் திறந்து பார்த்துவிட்டு யாரும் இல்லாததால், காற்று என்று அறிந்து அதை நோக்கிப் பாடியது.

கொற்கை நகரை ஆட்சிபுரிந்த பாண்டியன் குலசேகரப் பெருமான், பொற்கைப் பாண்டியன் ஆகிய வரலாறு போதாதோ தென்றல் காற்றே! நன்மையதாகிய தாமரை மலரின் மணத்தை அள்ளிக்கொண்டு அழகிய வாசல் கதவை அசைப்பதற்காக நீ ஏன் இங்கு வந்தாய்? சொல்வாயாக!

மன்றல் – மணம்; மணி –அழகிய.

சோழன் தன் மகன் அம்பிகாபதியைக் கொன்ற போது பாடியது.

மன்னவனு நீயோ? வளநாடும் உன்னதோ?
உன்னை அறிந் தோ தமிழை ஓதினேன்? என்னை
விரைந்து ஏற்றுக் கொள்ளாத வேந்து உண்டோ? சோழா
குரங்குஏற்றுக் கொள்ளாத கொம்பு.

இந்த உலகில் அரசன் நீ மட்டும் தானா இருக்கின்றாய்? வளம்பொருந்திய நாடும் உனக்குத்தானா இருக்கிறது? உன்னை முன்னிட்டுத்தானா தமிழை நான் பயின்றேன்– புலவனாகிய என்னை விரைந்து ஏற்றுக்கொண்டு ஆதரிக்காத அரசனும் உண்டோ? குரங்கிற்கு இணங்கக்கூடாத மரக்கொம்பு உண்டோ? (இல்லை)

சோழன் 'புலவர் இயல்பு இது' என்று கூறியது.

போற்றினும் போற்றுவர்; பொருள் கொடாவிடில்
தூற்றினும் தூற்றுவர்; சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர்; வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியர் ஆவரே!

பெருமித உள்ளம் படைத்த புலவர்கள் புகழ்ந்து போற்றினாலும் போற்றுவார்கள்; அவர்கள் விருப்பத்திற்கு இசைந்து பரிசு அளிக்காவிட்டால்,இகழ்ச்சியாகத் தூற்றினாலும் தூற்றுவர்; முன்பு சொன்ன சொற்களை மாற்றி அமைத்தாலும் அமைப்பர். அவர்கள் எமனைக் காட்டிலும் கொடியவர்கள்.

குறிப்பு:"வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்;மெய் கூறுவல்" என்பது பண்டைத் தமிழ்ப் புலவர் பண்பு.மேற் கண்ட கருத்து இதற்கு முரணாக உள்ளமை காலத்தின் கொடுமையேயாகும்.

வன்கணாளர் – பெருமித உள்ளமுடைய புலவர்கள்; கூற்றுவன் – எமன்.

சோழநாட்டு எல்லை.

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு,
குடதிசையில் கோட்டைக் கரையாம்;– வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டு எல்லையெனச் செப்பு,

சோழ நாட்டிற்கு எல்லையாகக் கிழக்குத் திசையில் கடலும், தெற்குத் திக்கில் நீர் நிரம்பிக் கரைகளைத் தாக்கு கின்ற வெள்ளாறும், மேற்குத் திசையில் கோட்டைக் கரையும், வடக்குத் திக்கில் ஏணாட்டின் வயல்களும் உள்ளன. இவற்றிற்கு இடைப்பட்ட இருபத்து நான்கு காததூரம் உள்ள நிலப் பரப்பே சோழநாடாகும் என்று சொல்வாயாக!

வெள்ளாறு–புதுக்கோட்டை நகருக்கு அருகில் ஓடும் ஆறு. இதனைத் தென் வெள்ளாறு எனலாம்; குடதிசை – மேற்குத் திசை; கோட்டைக்கரை குழித்தலைப் பகுதியாக இருக்கலாம். (திருச்சிமாவட்ட கெசட்டியர் ப.28); ஏணாதி– நடுநாடு (திருக்கோவலூர் வட்டம்); காதம் – பத்துமைல்கள்.

பாண்டிநாட்டு எல்லை

வெள்ளாறு அதுவடக்காம்; மேற்குப் பெருவழியாம்;
தெள்ளார் புனல்கன்னி தெற்காகும்;–உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத்து அறுகாதம்
பாண்டிநாட்டு எல்லைப் பதி.

பாண்டியநாட்டின் எல்லையாவது, வெள்ளாறு வடக்கு எல்லையாகும்; மேற்குத் திசையில் உள்ள பெருவழி (Highway) அத்திக்கில் உள்ள எல்லையாகும்; தெளிந்த நீரையுடைய குமரி ஆறு தெற்கு எல்லையாகும். மனமார ஆட்சிக்குரிய கடல் கிழக்கு எல்லையாகும். இந்நான்கு எல்லைகளுக்கு உள்ளடங்கிய ஐம்பத்தாறு காததூரம் உள்ள இடம் பாண்டிய நாடாகும்.

கன்னி ஆறு – மிகப் பழங்காலத்தில் தமிழகத்தின் தென் பகுதியில் குமரிக்கண்டம், என்னும் நிலப்பரப்பு இருந்தது; அங்கே "குமரிமலை" என்றொரு மலை இருந்தது; அம்மலையில் இருந்து பெருக்கெடுத்து ஓடிய ஆற்றிற்குக் 'குமரிஆறு என்று பெயர். அந்த ஆறு பாண்டிய நாட்டின் தென் எல்லையாகத் தலைச்சங்க காலத்தில் இருந்தது, கடல் கொந்தளிப்பால் அந்த நிலப் பகுதி கடலுள் மூழ்கி மறைந்தது, பிறகு இன்றைய குமரிமுனை பாண்டிய நாட்டின் தென் எல்லையாக இருந்து வருகிறது. கன்னி–குமரி.

சேரநாட்டு எல்லை

வடக்குத் திசைபழனி; வான்கீழ் தென்காசி;
குடக்குத் திசைகோழிக் கோடாம்;– கடற்கரையின்
ஓரமோ தெற்காகும்; உள்எண் பதின்காதம்
சேரனாட்டு எல்லையெனச் செப்பு

வடதிசையில் பழனியையும், பெருமை உடைய தென் காசியைக் கீழ்த்திசையிலும், மேற்குத் திசையில் கோழிக் கோட்டையும் (கள்ளிக்கோட்டை) தெற்கில் கடற்கரையையும் எல்லையாக உடையது சேரநாடு. அதன் பரப்பு எண்பது காததூரமாகும் என்று கூறுக!

தொண்டைநாட்டு எல்லை.

மேற்குப் பவளமலை; வேங்கட நேர்வடக்காம்;
ஆர்க்கும் உவரி அணிகிழக்கு;– பார்க்குள்உயர்
தெற்குப் பினாகினி திகழிருப துன்காதம்
நல்தொண்டை நாடெனவே நாட்டு.

மேற்குத் திசையில் பவளமலையும், நேரே வடதிசையில் திருவேங்கடமலையும், அழகிய கிழக்குத் திசையில் ஒலிக்கின்ற கடலையும், தென்திசையில் உலகில் சிறந்த பெண்ணை ஆற்றையும் எல்லையாக உடையது சிறந்த தொண்டைநாடு. அதன் அமைப்பு இருபது காத தூரம் என்று உறுதியாகச் சொல்லுக.

வேங்கடம் – திருப்பதி; ஆர்க்கும் – ஒலிக்கும்; உவரி – கடல்; பார் உலகு; பினாகினி– பெண்ணையாறு, தென்பெண்ணை,

13. கொட்டாம்பட்டிக் கருப்பையா பாவலர்

பாண்டியநாட்டில் கொட்டாம்பட்டி என்னும் ஊரில் கி.பி.1864–ஆம் ஆண்டில் பிறந்தார். குன்றக்குடியில் எழுந்து அருளியுள்ள முருகப் பெருமானிடத்துப் பெரிதும் ஈடுபாடு உடையவராக வாழ்ந்தார். அவருடைய கவித்திறனைக் கண்டு வியந்த தமிழ்ப் பெரியார்கள் அவருக்குப் 'பாவலர்' என்ற பட்டம் கொடுத்துப் பாராட்டினர். தமிழ்நாடு முழுவதும் சென்று பல தலங்களை வணங்கி அவற்றைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவர் பல சிறுகாப்பியங்கள் இயற்றியுள்ளார். பிற்காலத் தமிழிலக்கிய வகையைச்சார்ந்த அந்தாதி, கோவை,மாலை முதலியவற்றைப் பாடுவதில் வல்லவர் திருச்செந்தில் திரிபு அந்தாதி, ஓர் எழுத்து அந்தாதி, நாமகள் இரட்டை மணி மாலை, ஐந்திணைக் கோவை திருக்கோடாற்றுக் கலம்பகம், அழகர் பதிகம் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. இவர் 'விக்டோரியா மகாராணி சரிதம்' என்ற நூலை எழுதியுள்ளார். பழனியில் வாழ்ந்த குமாரபிள்ளை என்னும் வள்ளல் இவரை ஆதரித்துப் போற்றினார். அவருடைய அருள் உள்ளத்தையும் கொடைச் சிறப்பையும் பாராட்டிப் பாவலர் பல பாடல் பாடியுள்ளார்.

இவருடைய பாடல்கள் எளிய இனிய சொற்களால் பொருள் நயமும், சொல் நயமும் தோன்ற இயற்றப்பட்டுள்ளன. பாவலர் கருப்பையா அவர்கள் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராவர்.

குன்றக்குடி குமரன்.

குன்றாக் குடியாய்! குமரா! குகாவென்னைக்
குன்றாக் குடியாய் ஆட் கொண்டருள்வாய்!– அன்று வந்து
மன்றாடி னாற்கு வருகுருவே யானுநின்பான்
மன்றாடி னேன்கைவிடா மல்.

குன்றக்குடி என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ள முருகக் கடவுளே! குறைவற்ற குடும்ப வாழ்க்கை உடைய வனாக என்னை ஆக்கி அருள்வாய்! முன்னொரு காலத்தில் மகிழ்ச்சியோடு அம்பலத்தில் திருக்கூத்து ஆடிய சிவபெரு மானுக்குப் பிரணவத்தின் பொருளை எடுத்தியம்பிய குருவே! என்னை நீங்கள் கைவிடாமல் காப்பாற்றுமாறு தங்களை மன்றாடி வேண்டிக்கொள்ளுகிறேன்

பன்னிரண்டு பலகாரங்கள்.

தேங்குழல்அப் பம்தோசை யித்தியமா உடலில்
திகழ்வடையப் பழப்பணியா ரங்கள்எலா நீத்தே
ஓங்கியழு தலட்டுபல காரமுள அனைமார்க்கு
ஒடுங்கிப்பா யசநிகர்த்த உற்றார்க்கு மஞ்சி
வீங்கிபக்கோ டாமுலையில் பூந்தினவு கொண்டுன்
விரகத்தில் அதிரசமுற் றன்பிட்டு வந்தாள்
தாங்குதனின் கடன் செந்தில் வேலரசே அவணின்
றன்பாலா அடைதல்எழில் தருமுறுக்குத் தானே!

மணம் வீசும் கூந்தலும், அழகிய பந்துபோன்ற இரண்டு திரண்ட முலைகள் மாநிறமுடைய அவள் மார்பில் விளங்கவும். பழைய அணிகலன்கள், முத்துமாலைகள் எல்லாவற்றையும் நீக்கி, ஓங்கி அழுதலைவிட்டுப் பலவகையான அச்சம் கொண்ட மனமுடைய தாய்மாருக்கு அஞ்சி, பாய்கின்ற ஆட்டைப் போன்ற உறவினர்களுக்குப் பயப்பட்டு, விம்முகின்ற யானைக் கொம்புபோன்ற முனையுடைய கொங்கைகளின் மீது அழகுத் தேமல் படரப் பெற்று, உன்னுடைய மோகத்தில் அதிக இன்பத்தை உடையவளாய், அன்புடன் வந்து சேர்ந்தாள் செந்தில்வேல் என்னும் பெயருடைய வள்ளலே! அவளை ஆதரித்தல் உன்னுடைய கடமையாகும். அவள் உன்னைச் சேர்ந்து இன்புறுதல் அழகும் பெருமிதமும் தருவதாகும்.

நயம்: இப்பாட்டில் தேங்குழல், அப்பம், தோசை, வடை, பணியாரம், லட்டு, பாயசம், பக்கோடா, பூந்தி, அதிரசம், பிட்டு,

முறுக்கு முதலிய பன்னிரண்டு பலகாரங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. எனினும் அவை பலகாரங்களைக் குறிப்பிடாது வேறு பொருள் உணர்த்தி நிற்கின்றன.

தேங்குழல் – தேன்குழல் – நறுமணம் மிக்க கூந்தல்; அப்பந்து – அழகிய பந்து; தோசையித்தியம் – இரண்டு திரண்ட முலைகள்; திகழ்வடைய விளங்க; பணியாரம் – பணி – ஆபரணம் ; ஆரம் – முத்துமாலை; அழு தலட்டு – அழுதல் + அட்டு – அழுவதை நிறுத்தி; பாயசம் – பாய் + அசம் – பாய்கின்ற ஆடு; வீங்கி பக்கோடா – வீங்கு இபக்கோடு–விம்முகின்ற யானைக் கொம்பு போன்ற; பூந்தினவு. பூந்தினவு – அழகுத் தேமல்; அதிரசமுற்று – அதிக இன்பத்தை அடைந்து அன்பிட்டு – அன்புடையவளாய்; முறுக்கு – பெருமிதம்,பெருமை.

ஏழு மரங்கள்

செந்தில்வேல் வள்ளால்! நின்திண்புயத்தார் பற்றநித்தம்
வந்தில்வேண் டுஞ்சீர் வனப்புடைய வந்தமின்வேல்
ஆலமரம், கண்ணரசா மல்குலத்திக்,கோங்குமுலை
பாலைவேம் பென் றுண்ணாள் பார்.

செந்தில் வேலனாகிய வள்ளலே! உன்னுடைய வலிமையான தோளின் மேலுள்ள மாலையைக் கைக்கொள்வதற்காக நாள்தோறும் வீட்டுக்கு வந்து வேண்டுகிற சிறந்த அழகுடைய மின்னுகின்ற வேலும், விடமும், அரமும் போன்றுள்ள கண்ணையும், அரசிலை போன்ற அல்குலும், யானையைப் போன்று பருந்த கொங்கைகளும், கோங்கின் அரும்பு போன்ற முலைக்காம்பும் உடைய பெண், பாலினை வேப்பிலைபோன்ற கசப்புடையது என்று அருந்தாமல் வாடுகின்றாள். அவளைக் கடைக்கண்ணால் நோக்குவாயாக!

நயம்: இப்பாட்டில் வேலமரம், ஆலமரம், அரசமரம், அந்தி, கோங்கு, பாலை, வேம்பு ஆகிய ஏழு மரங்கள் கூறப்பட்டுள்ளன; ஆலமரம்– ஆவம்+அரம் – விடமும் அரமும்; அரசாம்– அரசிலைபொறை; அத்தி – யானை கோங்கு– கோங்கின் அரும்புபோன்ற முலைக்காம்பு; பாலை– பாலினை; வேம்பு –வேப்பிலை என்பன இவற்றிற்குரிய வேறு பொருளாகும்.

யாரிடம் சொல்வார்கள்?

கல்லாத மூடர்கள்பால் கவிஉரைக்கில்,
கற்பனைசொல் கனிவின் சாரம்
எல்லாநன்கு அறிவரால்? அறியாதார்க்கு
உரைத்தல்க மரினிலே பாலை
இல்லாமல் கவிழ்த்தது ஒக்கும்;
என்பதுநீ அறியாயா? இன்பாச்சொல்ல
வல்லார்உன் பால்அன்றி எவர்க்குரைப்பார்?
பழனிக்கு மாரவேளே!

பழனிக் குமார வள்ளலே! கல்வி அறிவு இல்லாத அறிவிலிகளிடம் பாட்டுப் பாடினால், பாட்டில் பொதிந்துள்ள கற்பனையின் சிறப்பு சொற்சுவை பொருள்சுவை ஆகியவற்றின் நயங்கள் எல்லாம் அவர்கள் அறிந்து போற்ற முடியுமா? நயம் தெரியாதவர்களிடம் பாடல் பாடுவது நிலப் பிளவினுள் நிலம் உரிஞ்சும்படி பாலைக்கொட்டுவது போலாகும் என்பது உனக்குத் தெரியாதா? இனிய பாட்டினைப்பாட வல்லவர்கள் உன்னிடத்தில்தங்கள் பாட்டைச் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வார்கள்?

கமர்–நிலப்பிளவு.

14. காளமேகம்

காளமேகப் புலவரின் இயற்பெயர் 'வரதர்' என்பர்.இவர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நந்திக்கிராமத்தில் வைணவ பிராமணர் குடியில் தோன்றியவராவர். நந்திக் கிராமம் இக்காலத்தில் நாதன் கோயில் என்று வழங்குகிறது. இவர் திருவரங்கம் பெரிய கோயிலில் மடைப்பள்ளித் தொழில் செய்து வந்தார். இவர் திருவானைக்கா கோயிலில் திருப்பணி செய்துவந்த மோகனாங்கி எனும் உருத்திரகணிகைமீது காதல் கொண்டதன் காரணமாகச் சைவராக மாறினார். அவள் விருப்பப்படி திருவானைக்கா கோயிலில் மடைப்பள்ளித் தொழில் செய்துகொண்டு இருந்தார். அவ்வமயம் ஒருநாள் நள்ளிரவில் தேவியின் திருவருளைப் பெற்றார் என்பர்.'

இவர் 'இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம் பாட்டாகாதோ' என்று மொழிந்தபடி கார்காலத்து மேகம் மழையைப் பொழிவது போல. எம்முறையில் எச்சொல்லை எப்புலவர் எவ்வாறு அமைத்துப் பாட வேண்டும் என்று கூறினாலும் உடனே அவ்வாறே எளிய சொற்களால் பொருள் இனிமை தோன்ற, நகைச்சுவை ததும்ப கவிமாரி பொழிந்ததனால், காளமேகம் (கரியமேகம்) என்ற பெயர் இவருக்குச் சிறப்புப் பெயராக அமைந்தது. இவர் முதன் முதல் பாடியது 'திருவானைக்கா உலா' என்பர். இவர் பாடிய தனிப்பாடல்கள் மிகப்பல. அவற்றுள் சில பாடல்கள்தான் எழுதிப் போற்றப்பட்டதாகத் தமிழறிஞர் கருதுகின்றார். அவரை ஆதரித்த தெய்வப் பெருமாள்மீது, இவர் 'சித்திர மடல்" ஒன்றும் பாடியதாகத் தெரிகிறது.

காளமேகம் ஆசுகவிபாடுவதில் வல்லவர். 'வசைபாடக் காளமேகம்' என்று காளமேகத்தைப் பண்டைத் தமிழ்ப் புலவோர் குறிப்பிட்டமையால், இவரை மிகக் கொடியவர் என்று சிலர்

கூறுவர். போலிப்புலவர்களையும், தமக்கு மிகுந்த சீற்றத்தை உண்டாக்கியவர்களையும் அஞ்சாது இழித்தும் பழித்தும் பாடியமையால் இப்பெயரைப் பெற்றார்.

காளமேகப் புலவர் திருமலைராயன் என்ற சிற்றாசனால் ஆதரிக்கப் பெற்றவராவர். "என்னை நிலைசெய் கல்யாணிச் சாளுவத் திருமலைராயன்" என்று அவனைப் புகழ்ந்து பாடியுள்ளார். விசயநகரப் பேரரசர்களின் பிரதிநிதியாகத் திருமலைராயன் கி.பி. 1453–முதல் கி.பி. 1468–வரை தமிழ் நாட்டை ஆண்டதாகக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். ஆகவே திருமலைராயனால் ஆதரிக்கப்பெற்ற காளமேகப்புலவர் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவராதல் வேண்டும்.

கலைமகள் வாழ்த்து.

வெள்ளைக் கலையுடுத்து; வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றுஇருப்பாள்;– வெள்ளை
அரியா சனத்தில் அரசரோடு என்னைச்
சரியா சனம்வைத்த தாய்

வெண்மையான ஆடையைத் தரித்துக்கொண்டு, வெண்ணிறமான நகைகளை அணிந்துகொண்டு வெண்தாமரை மலரின் மீது சிறப்பாகத் தங்கி இருப்பவளாகிய கலைமகள் குற்றம் அற்ற சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கும் அரசர்களோடு அடியேனைச் சமமாக வீற்று இருக்கக் கூடிய இருக்கையை அமைத்து அருளிய என்னுடைய தாயாவாள்.

கலை – ஆடை; பணி –நகைகள்; கமலம் – தாமரை; அரி – சிங்கம்.

'ஈ' ஏற 'மலை' குலுங்கப் பாடியது

வாரணங்கள் எட்டும். மகமேருவும், கடலும்
தாரணியும் எல்லாம் சலித்தனவால் நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தினால் அடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது.

ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணனை, இனிய பண்ணினைப் பாடும் வாயினை உடைய ஆயர் மகளிர், பருத்த மத்தினால் அடித்ததால் உண்டாகிய புண்ணில் ஈக்கள் நெருங்கித் தங்கியபோது, எட்டுத்திக்கு யானைகளும், பெரியதாகிய மேருமலையும், கடலும், பூவுலகும் ஆகிய எல்லாம் குலுங்கி நடுங்கின.

வாரணங்கள் – யானைகள்; தாரணி – பூமி, உலகம்; சலித்தன – குலுங்கி நடுங்கின; நாரணன் – திருமால், இங்கே கண்ணன்; பண் – பாட்டு, இசை, இராகம்; பரு–பருத்த

கடலின் நடுவில் செந்தூள் எழுந்ததாகப் பாடியது.

சுத்தப்பாற் கடலின் நடுவினில், தூளி
தோன்றிய அதிசயம்; அதுகேள்;
மத்தகக் கரியை உரித்தவன் மீது
மதன்பொருது அழிந்திடு மாற்றம்
வித்தகக் கமலை செவியுறக் கேட்டாள்!
விழுந்து, நொந்து, அயர்ந்து. அழுது ஏங்கிக்
கைத்தல மலரான் மார்புறம் புடைத்தாள்;
எழுந்தது கலவையின் செந்தூள்!

தூய தன்மை வாய்ந்த பாற்கடலின் நடுவில் செந்தூள் எழும்பிய அதிசயத்தைக் கேட்பாயாக! வலிய தலையினையுடைய யானையை உரித்தவன் ஆகிய சிவபெருமான்மீது, மன்மதன் மலர்க்கணை தொடுத்து எரிந்துபோன செய்தியை அறிவுமிக்க திருமகள் காதாரக் கேட்டாள்." கீழே விழுந்து வருந்தி இளைப்புற்று, அழுது பூப்போன்ற தனது கைகளினால், மார்பில் படும்படி ஓங்கி அடித்தாள். அவளது மார்பில் பூசிக் காய்ந்த சந்தனக் குழம்பின் செந்நிறமான துகள்கள் புழுதிபோல் கடலின்மீது கிளம்பின.

தூள் – துகள்; மத்தகம் – யானையின் தலை; மதன்– மன்மதன்; மாற்றம்– செய்தி; வித்தகம் – அறிவு; கமலை – இலக்குமி; கலவை – சந்தனக்குழம்பு.

ஆமணக்குக்கும் யானைக்கும் சிலேடை.

முத்து இருக்கும், கொம்பசைக்கும், மூரித்தண்டு
(ஏந்திவரும்
கொத்திருக்கும், நேரே குலைசாய்க்கும்,–எத்திசைக்கும்
தேமணக்கும் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்.

எந்தத் திசையினும் இனிய மணம் வீசும் சோலைகளை யுடைய திருமலைராயனுடைய மலையின் மீது, ஆமணக்கஞ்செடி முத்துப்போன்ற வித்துக்கள் பொருந்தியுள்ள கிளைகளை அலைத்துக் காட்டும்; அதன் வலிமையான கிளைகளாகிய கொம்புகள் தாங்கிவரும் பூங்கொத்துகள் விளங்கும்; அவைகள் காயோடு கூடிய குலைகளை நேராகத் தொங்கவிட்டுக் கொண்டு இருக்கும். பெரிய யானையானது முத்துக்கள் விளையக்கூடிய தந்தமாகிய கொம்புகளை அசைத்துக் கொண்டு நிற்கும்; வலிமையான இரும்பு உலக்கையைத் துதிக்கையில் தூக்கிக் கொண்டு வரும்; அதன் மத்தகத்தில் அங்குசத்தால் குத்திய வடுக்கள் இருக்கும்; அது அங்கே உள்ள வாழைக்குலைகளைக் கீழே விழும்படி சாய்க்கும், ஆதலால் ஆமணக்கஞ் செடி, பெருமையையுடைய யானையைப் போன்றதாம்.

மூரி– வலிமை; தண்டு– உலக்கை; தேமணக்கும்–இனிய மணம் வீசும்; மால்–பெருமை; குலை – கொத்து, நடுக்கம்,

வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை.

வாரிக் களத்து அடிக்கும்; வந்துபின்பு கோட்டைபுகும்;
போரில் சிறந்து பொலியாகும்;– சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

அழகு பொருந்திய சிவந்த வண்ண மேனியை உடைய திருமலைராயன் மலையின்மீது, வைக்கோலானது வயலில்

இருந்து எடுக்கப்பட்டு, நெற்களத்தில் அடிக்கப்படும்; பிறகு புரியாகத் திரிக்கப்பட்டு நெற்கோட்டையைச் சூழ்ந்து இருக்கும்; பெரிய குவியலாகக் குவிக்கப்பட்டு மலைபோல உயர்ந்த தோற்றத்துடன் விளங்கும். பெரிய யானையானது போர்க் களத்தில் எதிரியின் படைகளை நிலத்தில் தாக்கிக்கொல்லும் போர் முடிந்தபின் அரசனுடைய கோட்டைக்குள்ளே செல்லும்; போர் செய்வதில் மற்றப் படைகளைப் பார்க்கிலும் மேம்பட்டுப் பொலிவுறும். ஆகையினால் வைக்கோல்கூட யானைக்குச் சமமாகும்.

பாம்புக்கும் வாழைப் பழத்திற்கும் சிலேடை

நஞ்சிருக்கும்; தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்;
வெஞ்சினத்தில் பல்பட்டால் மீளாது;– விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைராயன்வரையில்
பாம்புஆகும் வாழைப் பழம்.

மிகுதியான பூக்களில் இருந்து தேன் வழிந்து ஓடும் இயல்பினது ஆகிய திருமலைராயன் மலையின்மீது பாம்பானது வாழைப் பழத்திற்கு ஒப்பாகும் – எவ்வாறெனில்.

பாம்பு

பாம்பு விஷத்தை உடையதாய் இருக்கும்; தோலை உரித்துக்கொள்ளும்; சிவபிரானது சடை முடியின் மீது இருக்கும். அது கொடிய கோபத்துடன் இருக்கும்பொழுது, யார் உடம்பின் மேலாவது அதன் பல்படுமானால் அதன் விஷம் திரும்பாது மரணத்தை விளைவிக்கும்.

வாழைப்பழம்

வாழைப்பழம் நைந்து கனிந்து இருக்கும்; மேல்தோல் உரித்து உண்ணப்படும்;பஞ்சாமிர்தமாகக்கலந்துசிவபெருமான் திருமுடியின்மீது அபிடேகப் பொருளாக வைக்கப்படும்;

மிகுந்த கோபம் உண்டாகி இருக்கும் பசிநேரத்தில் (அல்லது வெஞ்சினமாகச் சமைக்கப்பட்ட பிறகு) மனிதர்கள் பல்லில் அதுபடுமானால், அவர்கள் வயிற்றின் உள்ளே செல்லுமே அன்றி, வெளியே திரும்பி வராது.

நஞ்சு– விஷம்; விஞ்சு – மிகுதியான.

பாம்புக்கும் எலுமிச்சம் பழத்திற்கும் சிலேடை

பெரியவிட மேசேரும்; பித்தர் முடிஏறும்;
அரிஉண்ணும்; உப்புமே லாடும்–எரிகுணமாம்
தேம்பொழியும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பும்எலு மிச்சம் பழம்.

தேன் பாய்கின்ற மலர்ச் சோலைகளையுடைய திருமலைராயனுடைய மலையின்மீது, பாம்பானது உயிரைக் கொல்லக்கூடிய நஞ்சையுடையதாகும்; பித்தன் என்னும் பெயரையுடைய சிவபெருமான் திருமுடியின்மீது தங்கியிருக்கும்; காற்றை உணவாகப் புசிக்கும்;காற்றினாலே உடல்பருக்கும்; தலைதூக்கி ஆடும்; கோபக் குணம் உடையதாகும்.

எலுமிச்சம் பழமானது பெரியவர்கள் கையில்கொடுக்கப் படும்.அதன் சாறு பித்தர் (பைத்தியக்காரர்) கள் தலையின் மீது தேய்க்கப்படும்' ஊறுகாய்க்காக அது துண்டு துண்டாக அரியப்படும்; உப்பு அதன் சாறு புண்ணில் பட்டால் எரிச்சல் உண்டாகும். ஆதலால் பாம்பு எலுமிச்சம்பழத்தைப் போன்ற தாகும்.

பெரிய –இடம்–பெரியவிடம் ; விடம் – நஞ்சு; பித்தர் – சிவபெருமான். பைத்தியக்காரர்; அரி – காற்று; அரியப்படுதல்.

சந்திரனும் மலைக்கும் சிலேடை.

நிலவாய் விளங்குதலால்; நீள்வான் படிந்து
சிலபோது உலாவுதலால்; சென்று– தலைமேல்
உதித்து வரலால் உயர்மா மலையை
மதித்து நிகராக வழுத்து

மலை நிலத்தின்மீது தோன்றி உயர்ந்து விளங்குதலால் சந்திரன் நிலவு ஒளிகொடுப்பதால், மலையில் சில மேகக்கூட்டங்கள் தவழ்ந்து செல்லுதலால், அகன்ற வானத்தில் சில காலங்களில் சந்திரன் திரிவதால், நிலத்தின் தொடர்ச்சியாகப் பரவி மலை அழகாக விளங்குதலால், சந்திரன் நிலத்திற்கு மேலாகத் தோன்றி, நமது தலைக்கு மேல் வானத்தின் உச்சியில் வருதலால், உயர்ந்த பெரிய மலையைச் சந்திரனுக்குச் சமானமாகும் என்று கூறி வணங்கு!

மதி – சந்திரன்; வழுத்து –வணங்கு.

நாய்க்கும் தேங்காய்க்கும் சிலேடை.

ஓடும் இருக்கும்; அதன் உள்வாய் வெளுத்திருக்கும்!
நாடும்; குலைதனக்கு நாணாது;– சேடியே!
தீங்கானது இல்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயு நாயுமிணை செப்பு.

தோழியே! தீமையானது என்றும் இல்லாத திருமலை ராயன் மலையின்மீது தேங்காயானது ஓட்டோடு கூடிஇருக்கும்; இதன் உள்பக்கமானது வெண்மையான பருப்போடு கூடி இருக்கும்; எல்லாரும் விரும்பும் தேங்காய், குலையில் பாரம் மிகுதியாயினும் கோணாமல் இருக்கும்.

நாய் விரைவாக ஓடிச்செல்லும்; இளைத்தால் ஓர் இடத்தில் இருக்கும்; அதன் வாயின் உள்பக்கம் வெண்மையாய் இருக்கும்; இரைதேடி விரும்பிச் செல்லும்; மக்களிடத்தில் வாலைக்குழைத்துத் துள்ளி விளையாடும்; குறைப்பதற்கு

வெட்கப்படாது. ஆகவே தேங்காய் நாய்க்கு ஒப்பாகும் என்று சொல்லுக.

கூத்தியாருக்கும் குரங்குக்கும் சிலேடை

ஓட்டம் கடியதால்; உள்ளவரை மேவுதலால்
சேட்டை எவரிடத்தும் செய்தலால்;– நாட்டமுடன்
காத்திரத்தில் குட்டியுறக் கட்டுதலால்; தெட்டுதலால்
கூத்தியர்க்கு நேராம் குரங்கு.

கூத்தாடும் பெண்கள் உதட்டில் கடிபடுவதாலும், பொருள் உள்ளவரைப்போய் அடைவதாலும், எல்லாரிடத்திலும் வேடிக்கையாய் விளையாடுதலாலும் விருப்பத்துடன் காதலர், உடம்பில் தாக்கி உடல்பொருந்தும்படி தழுவுதலாலும், சூழ்ச்சி செய்வதாலும் – குரங்கானது விரைவான ஓட்டம் உடைமையாலும், இருக்கின்ற மலைமீது ஏறுதலாலும், எவரிடத்தும் குறும்பான செய்கை செய்வதாலும், தன் உடம்பில் தன் குட்டியானது விருப்பத்துடன் பொருந்தும்படி தழுவுதலாலும், தந்திரமாகப் பொருள்களைக் கவருவதாலும் ஆடல் மகளிருக்கு அது ஒப்பானதாகும்.

ஓட்டம் – உதடு, ஓடுவது ; உள்ளவரை உள்ளவர்– உள்ள வரை – இருக்கின்றமலை; சேட்டை – குறும்புச்செயல், வேடிக்கை விளையாட்டு; குட்டி – தாக்கி, குட்டி; தெட்டுதல் – சூழ்ச்சியாக, தந்திரமாக; கூத்தியர்–கூத்தாடும் பெண்கள்.

வானவில் –திருமால் – வெற்றிலை ஆகிய வற்றிற்குச் சிலேடை

நீரின் உளதால், நிறம்பச்சையால், திருமால்
பாரில் பகைதீர்க்கும் பான்மையால் – சாருமனுப்
பல்வினையை மாற்றுதலால் பாரீர்! பெருவான்
வில்விண்டு நேர்வெற்றிலை.

வானவில்

வானவில் நீரின் தன்மையை விளக்கி வானத்தில் தோன்றுதலாலும், பசுமை நிறம் உடைமையாலும், அழகை உடையதாகி, பூமியில் வெப்பமாகிய பகையைத் தீர்க்கும் தன்மையாலும், உலகைச் சார்ந்த பல தீங்குகளையும் நீக்கி வளப்பம் உடையதாகச் செய்வதாலும்,

திருமால்

திருமால் பெருவெள்ளமாகிய பாற்கடலின் நடுவில் பள்ளிகொண்டு இருத்தலாலும், பசுமையான மேனியை உடையதாலும், திருமகளுக்கு இருப்பிடமாதலாலும், உலகத்தில் உள்ள அசுரர்களை ஒழித்தலைப் பகைதீர்க்கும் தொழிலாக உடைமையாலும், தன்னைச் சரண் அடைந்த பக்தர்களின் தீவினைகளைப் போக்குவதாலும்,

வெற்றிலை

வெற்றிலை நீர்வளமான இடத்தில் பயிரிடப்படுவதாலும், பசுமையாயிருத்தலாலும், பயன்படுத்துவோர்க்கு அழகின் பெருமையைத் தருவதாலும், உலகில் பகைவர்களுக்கும் கொடுத்து மனதைச் சமாதானப்படுத்தச் செய்கின்ற குணத்தாலும், மனிதரின் பற்களைச் சார்ந்த நோய்களை நீக்குதலாலும் பெருமையுடைய வானவில்லும், திருமாலும், வெற்றிலையும் ஒன்றை ஒன்று ஒப்பனவாகும். உலகில் உள்ளவர்களே! இதனைப் பாருங்கள்!

வானவில் மழையின் அறிகுறியைக் காண்பித்து உலகைக் காக்கிறது; திருமால் கடலில் நடுவே பள்ளி கொண்டு உலகைக் காக்கும் தொழிலைச் செய்கிறார்; வெற்றிலை பயன்படுத்துவோர்க்கு உள்ளக் களிப்பை உண்டாக்கி நோயிலிருந்து காக்கிறது. காக்கும் தன்மையில் மூன்றும் ஒப்புமை உள்ளமையால் மூன்றிற்கும் சிலேடை கூறினார்.

நீர் – நீர், கடல்; பச்சை – பசுமை; திருமால் – அழகால்; இலக்குமியால்; விண்டு – விஷ்ணு – திருமால்.

கடுங்காற்றும் கடுநட்பும்.

நீரோ பிறவா நெறிகாட்டி யார்எமக்கு
நீரோ சமுசை நிலையிட்டீர்!–நீரோ இவ்
விங்களம்ஏன் செய்தீர்? விடுங்கடுங்காற்றும்மழை காட்
டுங்கடுநட் புப்பகைகாட்டும்

எனக்கு நீங்களோ பிறவாத வீட்டுநெறியைக் காட்டக் கூடியவர்கள்? எனக்கு நீங்களோ சோதனைக் கேள்வியை அமைத்து ஒழுங்குபடுத்தியவர்கள்? நீங்களா இந்த வேறு பாட்டைச் செய்தீர்கள்? வீசுகின்ற கடுமையான காற்றானது வருகின்ற மழைக்கு அறிகுறியாகும்; அளவுக்கு மிஞ்சிய நட்பு பகைக்கு முன் குறியாகும்.

பிறவா நெறி – வீடுபேறு அடையும் வழி; சமூசை – சோதனை; விங்களம் – வேறுபாடு

தைமாசி பங்குனி மாதமென்று பாடியது.

பாணர்க்குச் சொல்லுவதும், பைம்புனலை மூடுவதும்,
தாணு வுரித்ததுவும், சக்கரத்தோன் –ஊணதுவும்
எம்மானை ஏத்துவதும், ஈசனிடத் தும் சிரத்தும்
தைம்மாசி பங்குனிமா தம்

தையல்காரர்களுக்குச் சொல்லப்படுவது துணியைத் 'தை' என்பதே; பசுமையான நீரை மூடுவதும் பாசியாகிய – அழுக்கே: சிவபெருமான் உரித்துப் போர்த்திக்கொண்டது வேள்வியில் ஏவப்பட்ட யானையின் தோலே; திருமாலுக்கு உணவாவது பூமியே; எம்பெருமானை வழிபடுவது மனத்தில் தியானிப்பதே; இறைவன் இடப்பாகத்து இருப்பது உமை அம்மையே; அவர் தலைமீது இருப்பதும் கங்கையே ஆகும்.

விளக்கம்: தைமாசி பங்குனிமாதம்' என்பதைத் தை, பாசு, இபம், கு,உனி, மாது, அம் என்று பிரித்துப் பொருள்

கொள்ளவேண்டும். தை – துணியை; பாசு–பாசி; இபம்–யானை ; கு – பூமி; உனி – மனத்தில் தியானிப்பது; மாது – உமாதேவி; அம் –நீராகிய கங்கை என்பது அவற்றிற்குரிய பொருளாகும்.

பாணர் – தையல்காரர்; தாணு – சிவபெருமான்; சக்கரத்தோன் – திருமால்

'செருப்பு' என்றெடுத்து 'விளக்குமாறு என்று முடித்தது.

செருப்புக்கு வீரரைச் சென்றுழக்கும் வேலன்
பொருப்புக் குநாயகனைப் புல்ல – மருப்புக்குத்
தண்தேன் பொழிந்ததிருத் தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்கு மாறே.

போர்க்களத்தில் புகுந்து போர்வீரர்களைத் துன்புறுத்தும் வேல்படையை உடையவனாகிய மலைக்குத் தலைவனாக விளங்கும் முருகப்பெருமானைத் தழுவுவதற்கு உரிய வழியை, மணம் பொருந்திய குளிர்ந்த தேனினை மிகுதியாகச் சிந்திய அழகிய தாமரைப் பூவின்மேல் தங்கியிருக்கும் வண்டு தானே தெளிவாகக் காட்டும்.

செரு – போர்; புக்கு – புகுந்து; உழக்கும் – வருத்தும்; பொருப்பு – மலை; மரு – மணம்.

'கரி' என்று தொடங்கி 'உமி' என்று முடித்தது.

கரிக்காய் பொரித்தாள்; கன் னிக்காயைத் தீய்த்தாள்;
பரிக்காயைப் பச்சடியாப் பண்ணாள்; உருக்கம் உள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினாள் அத்தைமகள்
உப்புக்காண் சீசீ உமி.

ஒருவர், இவர் அத்தைமகள் சமைத்த கறி வகைகளில் உப்பு அதிகரித்து இருப்பதைக் குறித்துப்பாடுமாறு வேண்டிய பொழுது பாடியது என்பர்.

என்மீது விருப்பமுள்ள அத்தைமகள், அத்திக்காயைப் பொரியல் செய்தாள்; வாழைக்காயை வறுவல் செய்தாள்; மாங்காயைப் பச்சடி செய்து வைத்தாள்; அழகிய கொவ்வைக்

காயை நெய்யினால் துவட்டல் செய்தாள். எல்லாவற்றுள்ளும் உப்பு மிகுதியாகப் போடப்பட்டு உள்ளமையால், அருவருப்பாய் துப்பத்தக்கனவாகும். அவை

கரி – யானை; அத்தி – அத்திக்காய்; கன்னி – தெய்வமகள் – அரம்பை வாழை; பரி – குதிரை – மா மாங்காய்; அப்பைக்காய் – கொவ்வைக்காய்.

இவள் அவளாம்.

செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரியும்வாளே வீரவாள்;–மற்றையவாள்
போவாள், வருவாள்; புகுவாள்; புறப்படுவாள்;
ஆவாள்: இவள் அவளாற்.

பகைவர்களைத் தோற்கடித்த திருமலைராயன் கையில் உள்ள வெற்றியைத் தரும் வாள்தான் வீரத்தை உணர்த்தும் வாள் ஆகும்; பிற வாள்கள் எல்லால் போவாள், வருவாள். புகுவான், ஆவாள் முதலிய சொற்களின் விகுதி போலப் பயனுள்ள தொழிலைச் செய்யாத வெறும் சொல் அளவில் உள்ள கருவிகளாகும்; இப் பெண் அத்தன்மையவள் ஆவாள்.

செற்றலர் – பகைவர்.

'காளமேகம்' பெயர்க்காரணம்.

'இம்' என்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
'அம்' என்றால் ஆயிரம்பாட்டு ஆகாதோ?– சும்மா
இருந்தால் இருந்தேன்; எழுந்தேனே ஆயின்
பெருங்காள மேகம் பிள்ளாய்

பிள்ளையே! 'இம்' என்னும் ஓசையை ஒலிப்பதற்குள் எழுநூறு அல்லது எண்ணூறு பாட்டுக்களும், 'அம், மென்று சொல்லிய அளவில் ஆயிரம் பாடல்களும் பாடி – முடிந்துவிடும் அல்லவா? ஒன்றும் செய்யாமல் இருந்தால் இருப்பேன்; பாடக் கிளம்பிவிட்டேன் ஆனால், நீர் நிறைந்த பெரிய கருமேகத் (காளமேகத்) தைப் போலப் பாட்டு மழை பொழிவேன் ; என் பெயரும் காளமேகம் என்பதை அறிவாயாக!

கருட சேவை

பெருமாளும் நல்ல பெருமாள்; அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள்;– பெருமாள்
இருந்தஇடத்தில் சும்மா இராமையினால் ஐயோ!
பருந்துஎடுத்துப் போகிறதைப் பார்!

பெருமையில் சிறந்த திருமால் நல்லவராகும்; அவருடைய திருவிழாவும், கண்டு இன்புறுவதற்கு உரிய திருவிழாவே; பெருமாள் வீற்று இருக்கின்ற இடத்தில் சும்மா இராமல் அன்பருக்கு அருள் புரிவதினாலே அந்தோ! அவரைப் பருந்து என்னும் பறவை தூக்கிச் செல்லுகின்றதைப் பார்ப்பாயாக!

கருடவாகன சேவை பார்க்கத்தக்கது என்பது கருத்து.

கண்டது உண்டு! கேட்டது இல்லை!

பூநக்கி ஆறுகால்; புள்ளினத்துக்கு ஒன்பதுகால்;
ஆனைக்குக் கால்பதினேழு ஆனதே !– மானேகேள்!
முண்டகத் தின்மீது முழுநீலம் பூத்ததுஉண்டு;
கண்டது உண்டு; கேட்டதுஇல்லை காண்!

மான்போன்ற விழிகளையுடைய பெண்ணே கேட்பாயாக! பூவினுள் உள்ள தேனை நக்கி உண்ணுகின்ற வண்டுக்கு ஆறுகால்கள் உள்ளன; பறவை இனத்திற்கு இரண்டே கால்கள் உள்ளன; யானைக்கு நாலே கால்கள் உள்ளன; தாமரை மலர்போன்ற உனது முகத்தின்மீது நீலநிறமான குவளை மலர்போன்ற உனது கண்கள் விளங்குகின்றது உண்டு; இதை நான் கேள்வியினால் கேட்டது இல்லை; நேரில் பார்த்தே சொல்லுகிறேன்.

நயம்: பூநக்கி என்பது பூனைக்கு என்பதுபோல் ஒலித்தது. அதற்கு ஆறுகால் எப்படி எண்டு" என்ற ஐயத்தை விளைப்பது சொல் நயமாகும்.

ஒன்பது கால், பதினேழு கால் என்பனவற்றை முறையே ஒன்பதையும் பதினேழையும் கால் என்பதோடு பெருக்கினால்

இரண்டே கால், நாலே கால் என்ற சொற்றொடர்கள் அமையும்,

$\frac{1}{4} \times 9 = 2\frac{1}{4}$ = இரண்டேகால்

$\frac{1}{4} \times 17 = 4\frac{1}{4}$ = நாலேகால்

புள் – பறவை; மானே – மான்விழி மங்கையே; முண்டகம் – தாமரை; நீலம் – குவளை மலர்; பெண்களின் கருவிழிகளுக்குக் குவளை மலரை ஒப்புமையாகக் கூறுவது இலக்கிய மரபு.

விகடராமன் குதிரை

முன்னே கடிவாள மூன்றுபேர் தொட்டுஇழுக்கப்,
பின்னே இருந்து இரண்டு பேர்தள்ள;– எந்நேரம்
வேதம்போம வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி

எப்பொழுதும் வேதம் ஓதுகின்ற வாயினை உடையவனாகிய விகடம் செய்வதில் வல்ல இராமனுடைய குதிரையானது, அதற்கு முன்பக்கத்திலே இருந்து கடிவாளத்தைப் பிடித்து மூன்றுபேர் இழுக்கவும் பின்பக்கத்தில், இருந்து இருவர் பிடித்துத் தள்ளவும் செய்தால், ஒருமாதத்திற்குப் பத்து 'மைல்' தூரம் செல்லும்.

பதினாறு செல்வங்கள்.

துதி, வாணி,வீரம், விசயம், சந்தானம் துணிவு, தனம்,
அதிதானியம், சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு,
புதிதாம்பெருமை, அறம்குலம் நோயின்மை, பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே!

மதுரை மாநகரில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளே! புகழ் கல்வி, மனவுறுதியாகிய வீரம், வெற்றி, பிள்ளைப்பேறு, மனதைரியம், செல்வம், மிகுந்த தானியம் சிறந்த சுகம், நல்ல மங்கையரது அனுபவ இன்பம், அறிவு, அழகு, புதிதுபுதிதாக ஏற்படக்கூடிய சிறப்பு, தருமச்சிந்தையுடைய குடிபிறப்பு, நோயற்றவாழ்வு, நீண்டஆயுசு எனப்படும் பதினாறு

பெரும்செல்வங்களையும் கொடுத்து அருளுவாயாக.

நயம்: 'பதினாறு பேறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!'" என்று பெரியோர்கள் வாழ்த்துவது மரபு.

'பதினாறு பேறு என்பது பதினாறு பிள்ளைகளைப் பெறுதல்' என்பது தவறான கருத்தாகும். 'பேறு' என்பதற்குச் 'செல்வம்' என்பது பொருள். இங்கே மக்கள் வாழ்க்கையில் பெற வேண்டிய பதினாறு செல்வங்களையும் காளமேகம் அழகாகச் கூறியுள்ளார். இது பண்டைத் தமிழரின் உளப் பண்பாட்டிற்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும்.

துதி – புகழ்; வாணி – கல்வி; விசயம் – வெற்றி; சந்தானம் – பிள்ளைப் பேறு; தனம் – செல்வம்; சௌபாக்கியம் – சுகம்; போகம் –இன்பம்.

தியாகரின் நடனம்

ஆடும் தியாகரே! ஆட்டம் ஏன் தான்உமக்கு?
வீடும் சமுசாரம் மேலிட்டுக்–கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவர்இரண் டாச்சே.
இருக்கும்ஊர் ஒற்றி யாச்சே!

கூத்தாடும் தியாகராசப் பெருமானே! மனைவி மக்கள் முதலிய கூட்டம் அதிகப்பட்டு மிகுந்தும், செருக்குடன் ஒன்று சேர்ந்து விளையாட ஆண்மக்கள் இரண்டு பேர் இருந்தும், நீர் தங்கி இருக்கும் இடம் ஒத்திவைக்கப்பட்டு (அதாவது திருவொற்றியூர்) இருந்தும் உமக்கு மகிழ்ச்சியால் ஆடத்தக்க ஆனந்தத் தாண்டவம் எதற்கு ஐயா?

நயம்: தியாகரைக் குடும்பம் பெருத்தவராகவும், இருக்கும் (வீடு) தலமாகிய ஒற்றியூரை (கடன் காரணமாக) அடமானமாக வைத்துவிட்டு வறுமையில் வாடுபவராகும் கூறி உமக்கு இன்பக் கூத்தாட்டம் எதற்கு என்பதாகக் கருத்து.

ஒற்றி – ஈட்டு அடமானம்

வைத்தீசுரரை வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடியது.

வாதக்கா லா தமக்கு; மைத்துனர்க்கு நீரிழிவாம்;
போதப் பெருவயிறாம் பிள்ளை தனக்கு:– ஓதக்கேள்!
வந்தவினை தீர்க்க வகை அறியார்; வேளூரார்
எர்தவினை தீர்ப்பார் இவர்?

நான் சொல்வதைக் கேட்பாயாக! புள்ளிருக்கும் வேளூரில் கோயில்கொண்டுள்ள சிவபெருமானுக்கு வாதநோயினால் வளைந்த கால்கள் உள்ளன. அவருடைய மைத்துனராகிய திருமாலுக்கு நீரிழிவு நோயாகும்; அவருடைய மகனாகிய கணபதிக்குக் கப்பலைப் போன்ற பெருவயிறு உண்டாகும் பெரு நோய் ஆகும். இவ்விதமாக வந்துள்ள நோய்களைத் தீர்க்க வழிதெரியாது புள்ளிருக்கும் வேளூர் என்னும் தலத்திலே உள்ள வைத்தியராகிய இவர், தம்மை வந்து அடைந்தவர்க்கு எவ்விதமாகப் பழைய வினைகளைத் தீர்க்கப் போகிறார்?

சிவபெருமானது நடனம் ஆடுகின்ற கால்களையும், திருமால் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டு இருத்தலையும், விநாயகர் பெரிய வயிற்றை உடையவராய் இருத்தலையும், கற்பனையாக நோய் உடையோர் என்று விளக்கியுள்ளார்.

வாதக்கால்–நடனம் ஆடும் கால்; நீரிழிவு– பாற்கடலில் பள்ளி கொண்டு இருப்பது.

இதுவுமது

தீத்தான்உன் கண்ணிலே; தீத்தான்உன் கையிலே;
தீத்தானும் உந்தன் சிரிப்பிலே;– தீத்தான்உன்
மெய்யெலாம்; புள்ளிருக்கும் வேளூரா; உன்னை இந்தத்
தையலாள் எப்படிச் சேர்ந்தாள்?

பள் இருக்கும் வேளூரில் கோயில்கொண்டு அருளிய கடவுளே! உன் நெற்றிக் கண்ணில் இருப்பது தீயே; உன்னுடைய திருக்கைகளில் உள் இருப்பதும் நெருப்பே ; உனது புன்முறுவலில் தோன்றுவதும் அனலே; உன்னுடைய

திருமேனி முழுவதும் நெருப்பின் மயமே. இவ்வாறு இருக்க இந்தக் குளிர்ந்த மேனியை உடைய உமாதேவியார் உம்மை எப்படி விரும்பிவந்து அடைந்தாள்?

விளக்கம் : சிவபெருமான் நெற்றிக்கண்களில் தோன்றிய தீப்பொறி மன்மதனை எரித்தது; அவருடைய புன்முறுவலில் தோன்றிய தீப்பொறி முப்புரத்தை எரித்தது; அவருடைய கையிலே தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய தீயினைத் தாங்கி உள்ளார். இறைவனுடைய திருமேனி, ஆதியும் அந்தமும் இல்லாத அருள்பெரும் சோதியாகிய அனல் பிழம்பு என்பது கருத்து. இவ்வாறு உடல் முழுவதும் அனல் பிழம்பாய் விளங்கும் இறைவனை, குளிர்ச்சி மிக்க கருணையே வடிவமான தேவியார் எவ்விதம் இடப்பாகத்தில் சேர்ந்து விளங்குகிறார் என்பது காளமேகத்தின் ஐய வினாவாகும்.

தையலாள் – குளிர்ச்சி பொருந்திய அருள்வடிவமான தேவி,இங்குள்ள அம்மையின் பெயர். புள்ளிருக்கும் வேளூர்– சீர்காழிக்கு அண்மையில் உள்ள வைத்தீசுவரன் கோவில்.

கழுதையின் குரல்.

வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்து பாடினாள்;– நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான், 'கண்டேன் கண்டேன்'; என்று
பழுதைஎடுத்து ஓடிவந்தான் பார்.

புகழ்மிக்க நாகப்பட்டினத்தில் இருக்கும் அழகுபொருந்திய தாசி, வெறுக்கத்தகுந்த குரல் எடுத்துப் பாடினாள். அந்தக் குரலைக் கேட்டவுடன் நேற்றுக் காணாமல்போன கழுதையைத் தேடிக்கொண்டு இருந்த வண்ணான் ஒருவன். 'எனது கழுதையைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டே, அதை ஓட்டிக்கொண்டு போவதற்கு ஒரு வைக்கோல் புரியை எடுத்துக்கொண்டு ஓடிவந்தான்.

வாகு – அழகு: தேவடியாள்– தேவர் அடியாள், விலைமகள்; பாழ்த்த பயனற்ற, வெறுக்கத்தக்க; பழுதை – வைக்கோற் புரி,கயிறு.

பெண்கள் காரணமாக அழிந்தவர்கள்.

வாலி மடிந்ததுவும், வல்லரக்கர் பட்டதுவும்
கோலமுடி மன்னர் குறைந்ததுவும்–,சால
மதியுடைய நூற்றுஒருவர் மாண்டதுவும் ஐயோ!'
சதவிகரத் தால்வந்த தாழ்வு.

குரங்குகளின் மன்னனாகிய வாலி இறந்ததுவும். இராமாயணப் போரில் பல அரக்கர்கள் இறந்ததுவும் பெருமை பொருந்தியஅழகுமிக்கஅரசர்கள்இறந்துபோய்அவர்களுடைய எண்ணம் குறைவுபட்டதுவும், மிகுந்த அறிவுடைய துரியோதனனும் அவன் தம்பியரும் ஆகிய நூற்றொருவர் அழிந்ததுவும், பெண்ணை விவகாரத்தால் நேர்ந்த இழிவாகும்.

'ச'விகாரம் –சி; 'த 'விகாரம் தி.

நிரல் நிறைப் பொருள்கோள்.

கூற்றுவனை, வின்மதனை, அரக்கர் கோவைக்
கூன் நிலவைக் குஞ்சரத்தை, இஞ்சிமூன்றை,
ஏற்றுஉலகின் புறஉருவ மாளத் தோள்கள்
இறவெறிப்ப இமையப்பெண் வெருவ வேவக்,
கால்தொழிலால், நயனத்தால், விரலால், கற்றைக்
கதிர்முடியால் கரதலத்தால், கணையால் பின்னும்
ஊற்றழிய உதைத்து எரித்து நெரித்துச் சூடி .
உரித்தெரித்தான் அவன்என்னை உடையகோவே.

குறிப்பு: சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி நேரே பொருள் கொள்ளுவதற்கு நிரல்நிறைப் பொருள்கோள் என்று பெயர்.

யமனை எதிர்த்து உலகம் இன்புறும்படி தமது திருவடியினால் மார்க்கண்டேயருக்கு வந்த இடையூறு நீங்கும்படி உதைத்துத் தள்ளியவரும், கரும்பு வில்லினை

உடைய மன்மதனை அவன் உடம்பு அழியும்படி நெற்றிக் கண்ணினால் எரித்து அழித்தவரும், அரக்கருடைய தலைவனாகிய இராவணன் கயிலைமலையை எடுத்தபொழுது அவனது தோள்கள் ஒடியும்படி தமது கால் விரலால் அழுத்தி நசுக்கியவரும், பிறைச் சந்திரனை அவன் குறை நீங்கும்படி தனது தொகுதியான ஒளிவீசுகின்ற சடைமுடியில் அணிந்துள்ளவரும், யானையைப் பார்வதி அஞ்சும்படியாகத் தனது கைகளால் தோல் உரித்த வரும், திரிபுரத்தை நீராகும்படி எரித்தவரும் ஆகிய சிவபெருமான் என்னை அடிமையாக உடைய பெருமான் ஆவார் .

விளக்கம்: சிவபெருமான் கூற்றுவனை மார்க்கண்டயேருக்காக உதைத்ததையும், தனது யோகத்தைக் கலைத்த மன்மதனை எரித்ததையும், கயிலையைப் பெயர்த்த இராவணனைத் தனது கால்விரலை அழுத்தி நசுக்கியதையும், சந்திரனைச் சாபத்திலிருந்து காப்பதற்காகச் சடையில் அணிந்தமையும், தாருகாவன முனிவர்கள் ஏவிய கயமுகனாகிய யானையை உரித்து அதன் தோலினை ஆடையாக அணிந்ததையும், முப்புரங்களை எரித்ததையும் இப்பாடலில் புலவர் முறையாக விளக்கியுள்ளார்.

கூற்றுவன் – யமன்; மதன் – மன்மதன்; கோ – தலைவன்; கூன் – வளைந்த; இற – நசுங்க; இமையப்பெண் –தெய்வப்பெண்ணாகிய பார்வதி; நயனம் – கண்; கற்றை கத்தை; கதிர் – ஒளி; கரம் – கை; கணை – அம்பு.

தண்ணீர் மிகுந்த மோரைக் கொடுத்தபோது பாடியது.

'கார்' என்று பேர்படைத்தாய்.
ககனத்து உறும்போது;
'நீர்' என்று பேர்படைத்தாய்,
நெந்தரையில் வந்ததற்பின்;
வார்ஒன்று மென்முலையார்
ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
'மோர்' என்று பேர்படைத்தாய் ;
முப்பேரும் பெற்றாயே!

இடைச்சியின்கை மோரே! வானத்தில் இருக்கும்போது 'மேகம்' என்னும் பெயர் கொண்டு இருந்தாய்; பரந்த மண்ணுலகைச் சேர்ந்தவுடன் 'நீர்' என்னும் பெயர் பெற்று இருந்தாய்; கச்சு அணிந்துள்ள மென்மையாகிய கொங்கைகளை உடைய இடைச்சிமார் கையில் சேர்ந்த பிறகு, அவர் வாயினால், 'மோர்' என்பதாய்ச் சொல்லும்படியான பெயரை அடைந்தாய். இவ்வாறு கார்; நீர், மோர் என்ற மூன்று விதப் பெயர்களையும் ஏற்றுக்கொண்டாய்! இது என்ன புதுமை!

கார் – மேகம்; ககனம் – வானம் ; வார்– கச்சு.

மாவடுவைப் பற்றி பாடியது.

திங்கள் நுதலார் திருமணம்போ லேகீறிப்,
பொங்குகடல் உப்பைப் புகட்டியே – எங்களிட
ஆச்சாளுக்கு ஊறுகாய் ஆகாமல் ஆருக்காகக்
காய்ச்சாய் வடுமாங் காய்.

இளமாங்காயே! இளம் பிறைபோன்ற நெற்றியை உடைய மங்கையரது அழகிய உள்ளம்போலக் கீறப்பட்டு, கொத்தளிக்கின்ற கடலில் இருந்து எடுக்கப்படுகின்ற உப்பு செலுத்தப்பட்டு, என்னுடைய தாயாருக்கு தின்னக்கூடிய ஊறுகாய் ஆகாமல், வேறு யார்பொருட்டு நீ காய்த்து இருக்கிறாய்?

நுதல் – நெற்றி: திரு –அழகு; ஆச்சாள்–ஆத்தாள், தாய்,

திருவலஞ் சுழி விநாயகரைப் பாராட்டிப் பாடியது.

பறவாததும்பி, கருகாத வெண்கரி, பண்புரண்டே
இறவாத தந்தி, உருகாத மாதங்கம், இந்து நுதல்
நிறவாத சிந்துரம், பூசாக்களபம், நெடுஞ்சுனையில்
பிறவாத ஆம்பல், வலஞ்சுழிக் கேவரப் பெற்றனனே!

பறக்காத வண்டையும், கருமை நிறமில்லாத மதயானையையும், பண்முறை தவறாததற்குக் காரணமான கட்டமைந்த வீணைக் கம்பியையும், அனலில் உருக இயலாத

பெருமையுடைய தங்கத்தையும், மங்கையரது பிறைபோன்ற நெற்றியில் நிறப்பொலிவு இல்லாத செந்தூரத்தையும், உடலில் பூசிக்கொள்ள இயலாத கலவைச் சந்தனத்தையும், நீண்ட சுனை நீரில் தோன்றாத அல்லிமலரையும் திருவலஞ்சுழி என்னும் ஊரில் உள்ள திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமான் திருவடிவில் கண்டு வணங்கினேன்.

நயம்: யானை என்னும் பொருள்படும் தும்பி, கரி, தந்தி, மாநங்கம், சிந்துரம், களபம், ஆம்பல் என்னும் பல சொற்களால், சொல்நயமும் பொருள் நயமும் தோன்ற விநாயகப் பெருமானைப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண் – இசைக்குரிய எழுவகை இராகம்; இந்து – பிறைச்சந்திரன் ; நுதல் நெற்றி; சிந்துரம் திலகம் .

காத்தான் சத்திரத்தை வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடியது.

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்;– குத்தி
உலையில்இட ஊர்உறங்கும்; ஓர் அகப்பை அன்னம்
இலையில்இட வெள்ளி எழும்.

ஒலிக்கின்ற அலைகளை உடைய கடல்சூழ்ந்த நாகப்பட்டினத்தில் உள்ள, காத்தான் என்பவனது சத்திரத்தில் சூரியன் மேற்குத் திசையில் மறையும்பொழுது சமையலுக்காக அரிசி வரும்; உரலில் துவையக் குத்தி உலையில் போடும்போது ஊரில் உள்ள மக்கள் எல்லோரும் உறங்குவார்கள்; ஓர் அகப்பை சோறு இலையில் போடும்போது வானில் வெள்ளி தோன்றக்கூடிய விடியற்காலையாகிவிடும்.

இரவு சாப்பாட்டை இகழ்ச்சியாகவும், காலைச் சாப்பாட்டைப் புகழ்ச்சியாகவும் குறிப்பிடுகிறது.

கத்து – ஒலிக்கின்ற ; நாகை –நாகப்பட்டினம்; அன்னம் – சோறு வெள்ளி – சுக்கிரன்.

15. சத்திமுற்றப் புலவர்

சத்திமுற்றம் என்னும் ஊரினில் வாழ்ந்த ஒரு புலவர் 'சத்திமுற்றப் புலவர்' என்று ஊர்ப் பெயராலேயே சிறப்பித்துக் கூறப்படுபவராவர். இப் புலவரின் இயற்பெயர் தெரியவில்லை. சத்திமுற்றம் என்பது தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணத்திற்கு அருகே உள்ள ஊராகும். 'சத்தி முற்றம்' என்னும் பெயர். பிற்காலத்தில் 'சத்தி முத்தம்' எனத் திரிந்தது. இதனை இராசராசபுரம் என்றும் கல்வெட்டுக்கள் கூறும். 'குலோத்துங்க சோழவளநாட்டுத் திருச்சத்திமுற்றம்' என்பது கல்வெட்டுக்களில் காணப்படும் குறிப்பாகும். ஆகவே 'நாரைவிடு தூதி'னைப்பாடிய புலவருக்குச்சத்திமுற்றப் புலவர் என்று அமைந்த பெயர் ஊர்பற்றி வந்தது என்பதில் ஐயம் இல்லை.

வறுமையால் வாடி மெலிந்த புலவர் பாண்டியனைக்காண மதுரைமாநகருக்கு நெடுந்தொலைவு நடந்து சென்றார். அரண்மனைக் காவலர் புலவரை உள்ளே செல்ல வொட்டாமல் தடுத்தனர். எனவே அன்றிரவு பாழடைந்த சத்திரம் ஒன்றில் புலவர் தங்கி இருந்தார். பசியாலும் குளிராலும் நடுங்கியப் புலவர் வானத்தில் சென்ற நாரைகளைக் கண்டு, அவற்றைத் தன் மனைவியிடம் தனது துன்பத்தை சொல்லுமாறு தூது அனுப்பும் முறையில் ஒரு பாடலைப் பாடினார். அப்போது நகர்காண இரவில் வந்த பாண்டியன் இவர் பாடிக்கொண்டு இருந்த அச் செய்யுளைக் கேட்டு பனங்கிழங்கு உவமையால் மகிழ்ச்சி அடைந்து, அவரை மறுநாள் அரண்மனைக்கு வரவழைத்து, வறுமை நீங்குமாறு பரிசில் தந்து அனுப்பினான். தனது வறுமையைப்போக்கி வாழ்வு அளித்த வள்ளலைக் 'குடிதாங்கி' என்று சிறப்பித்துப் புகழ்ந்து பாடினார் புலவர் என்று ஒரு கதை வழங்குகிறது.

நாரைவிடு தூதில், நாரையின் அலகுக்குப் பிளந்தபனங் கிழங்கை உவமையாகக் கூறி இருக்கும் அழகு பாராட்டத் தக்கது. மேலும் அப் பாடலில் தனது வறுமைத் துன்பத்தைக் கற்பார் உள்ளங் கசிந்துருகுமாறு மெய்ம்மைநெறி பிறழாது பாடி உள்ளமை அவருடைய புலமைத் திறனையும், கவிபாடும் பான்மையையும் விளக்குவனவாக அமைந்துள்ளன.

நாரைவிடு தூது.

நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்து அன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியும் தென்திசைக் குமரி ஆடி
வடதிசைக்கு ஏகுவீராயின்,
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுள் தங்கி,
நனைசுவர்க் கூரைக் கனைகுரல் பல்லி
பாடுபார்த்து இருக்கும் எம்மனை வியைக்கண்டு,
'எங்கோன் மாறன் வழுதி கூடலில்,
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்' எனுமே!

<u>குறிப்பு:</u> ஒருநாள் இரவு பாண்டிய மன்னன் நகர்சோதனை செய்யும் பொருட்டு மதுரை நகரைச் சுற்றிவரும் போது, ஒரு பாழடைந்த சத்திரத்தில் படுத்து இருந்த புலவர் தமது துன்பத்தைக் குறித்துப் பாடியது என்பர்."

சிவந்தகாலையுடைய நாரைகளே ! முதிர்ந்த பனம்பழத்தில் இருந்து தோன்றிய கிழங்கினைப் பிளந்தது போன்ற தோற்றத் தினை உடைய பவளத்தினைப் போன்று சிவந்தும், கூர்மையும் உள்ள வாயை உடைய செம்மையான கால்களையுமுடைய நாரையே! நீயும் உனது மனைவியும் தெற்குத் திசையில் உள்ள கன்னியாகுமரியில் நீராடி, வடக்குத்திசைக்குச்

செல்வீராயின், எனது ஊராகிய சத்திமுற்றத்தில் உள்ள குளத்தில் தங்கி, மழையில் நனைகின்ற சுவற்றையுடைய கூரைவீட்டில் ஒரு வகையான ஓசைக்குரலுடைய பல்லியின் சொல்லை இன்னது என்று எதிர்பார்த்திருக்கும் எனது மனைவியைக் கண்டு, எமது தலைவனாகிய பாண்டியனுடைய மதுரையில் ஆடை இல்லாமல் வாடையினால் உண்டாகும் குளிரில் மிகமெலிவடைந்து, இரு கைகளினால் உடம்பினை மூடிக்கொண்டு,காலினாலே அரையின் மேல் பாகத்தைப் பொருத்திக்கொண்டு,பெட்டிக்குள் அடைக்கப்பட்ட பாம்புபோல மூச்சுவிடும் வறியவனைப் பார்த்ததாகச் சொல்லுங்கள்!

ஏகுவீர் – செல்வீர்; மாறன் வழுதி – பாண்டியன்; கூடல் – மதுரை; பேழை – பெட்டி.

பரிசு பெற்றபொழுது பாடியது.

வெறும்புற் கையும் அரிதாம்; கிள்ளை
சோரும்; என் வீட்டில்வரும்
எறும்புக்கும் ஆர்ப்பதம் இல்லை; முன்
நாள் என் இருங்கலியாம்
குறும்பைத் தவிர்த்த குடிதாங்கி
யைச்சென்று கூடியபின்,
தெறும்புற் கொல்யானை கவளங்கொள்
ளாமல் தெவிட்டியதே!

முற்காலத்தில் எனது வீட்டில் வெறும் சோறு கிடைப்பது கூட மிக அரிதாகும். வளர்க்கும் கிளியும் வயிற்றுக்கு இல்லா மல் பசியால் வாடும். எனது வீட்டை நாடி ஊர்ந்து வரும் சிறிய எறும்புகளுக்கும் தின்பதற்கு ஒன்றும் கிடைக்காது . எனது பெரிய வறுமைப்பிணியாகிய துன்பத்தை நீக்கிய குடிகளைக் காத்து ஓம்பும் மன்னனைப் போய் அடைந்த பிறகு அரிந்து கட்டிய புல்லை உணவாகக் கொள்கின்ற யானையானது மிகுந்த தீனி தின்று பசி நீங்கினமையால், திரண்ட சோற்று உண்டையை விழுங்காமல் கக்கிவிட்டது.

புற்கை – சோறு: கிள்ளை–கிளி; கலி–வறுமை, துன்பம்: இரும்– பெரிய குறும்பை – துன்பத்தை;

16. சவ்வாதுப் புலவர்

தமிழ் இலக்கியத்தை வளமிக்க கருவூலமாகச் செய்த புல்வர் பெருமக்கள் பல சமயத்தைச் சார்ந்தவர்களாவர் அவர்களுள் ஒருவர் சவ்வாதுப் புலவர். இவர் இசுலாம் சமயத்தைச்சேர்ந்தவர். பாண்டிய நாட்டில் இளையான்குடிக்கு அடுத்துள்ள எமனேசுவரத்தில் பிறந்தார். திருவாடுதுறை ஆதீனத் தலைவராகிய சோமசுந்தர தேசிகரிடம் கல்வி கற்றார். இளமையிலேயே கவிபாடும் திறமைபெற்று இருந்தார்.

இராமநாதபுரம் இரகுநாத சேதுபதியின் அவைக்களப் புலவராக இருந்தார். அவர்மீது பல பாடல்கள் பாடியுள்ளார். புதுவைநகர் ஆனந்தரங்கம்பிள்ளை என்ற வள்ளலையும் போற்றிப் பாடியுள்ளார். முகையதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ், மதீனத்து அந்தாதி முதலிய இசுலாமிய சமயத் தொடர்பான நூல்களும் இயற்றியுள்ளார். ஏக திருப்புகழ் எனும் நூலினைக் கருத்தம்பி மரைக்காயர் முன்னிலையில் இவர் அரங்கேற்றம் செய்ததாகக் கூறுவர்.பதினெட்டாம் நூற்றாண்டில் சவ்வாதுப் புலவர் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

இரகுநாத சேதுபதி

கிளையாளன் சேது பதிரகு நாயகன் கிஞ்சுகவாய்
இளையார் கல்வி இடத்து, நம் ஈசர் இடத்தும் என்றும்
வளையாத பொன்முடி சற்றே வளையு; மகுடமன்னர்
தளையா டியகையில் காளாஞ்சி ஏந்தும் சமயத்துமே!

சுற்றத்தாரைக் காப்பவனாகிய இரகுநாதச் சேதுபதி மன்னனது எப்போதும் யாருக்கும் வணங்காத அழகிய பொன்னால் செய்யப்பெற்ற கிரீடமானது, கிளியின் இனிய மொழிபேசும் மங்கையரைக் கூடி மகிழும்போதும், சிவபெருமான் திருமுன்பும், தன்னிடத்தே தோற்ற முடிமன்னர்

விலங்கு பூட்டப்பட்ட தங்கள் கைகளால் தம்பலப்படிகத்தை எடுத்து நீட்டும்போதும் சிறிது வணங்குதற்குரியதாகும்.

விளக்கம் : யாருக்கும் வணங்காத வணங்காமுடி மன்னராகிய சேதுபதியின் திருமுடி மங்கையரோடு கலந்து விளையாடும்போதும், சிவபெருமானை வணங்கும் போதும், விலங்கிடப்பட்ட பகையரசர் எச்சில் துப்பும் படிகத்தை எச்சில் துப்புவதற்குக் கொண்டு வரும் போதும் சிறிது வளைந்து நிற்கும் என்பது கருத்து.

கிளை – சுற்றம்; கிஞ்சுகம் –கிளி; இளையார்– இள மங்கையர்: கலவி – கூடல்: காளாஞ்சி – எச்சில் துப்பும் படிகம்'

ஆனந்தரங்கம் பிள்ளையின் கொடைச் சிறப்பு.

பானுகிர ணம்பார்க்கும் பங்கே ருக, நிலவு
தானும்வரப் பார்க்கும் சகோரங்கள்:– வான்அமரும்
மையைப்பார்க் கும்மயில்,கண் மாஇசை ஆனந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவோர் கண்.

தாமரை மலர்கள் கதிரவனுடைய கதிர்களைக் கண்டு மலரும்; சகோரப் பறவைகள் நிலவின் வருகையைக் கண்டு மகிழ்ந்து கூவும்; மயில்கள் வானத்தில் தவழும் மேகத்தைக் கண்டு மகிழ்ச்சியால் ஆடும்; புலவர்களுடைய கண்கள் பெரும் புகழை உடைய ஆனந்தரங்க வள்ளலினுடைய கைகளின் கொடையைக் கண்டு களிப்படையும்.

பானு – சூரியன்; பங்கேருகம்– தாமரை; சகோரம் – நிலவின் ஒளிக்கதிரை உணவாக உட்கொள்ளும் ஒரு பறவை; மை – மேகம் ; மாஇசை – பெரும்புகழ்.

இதுவும் அது.

பால் அயிலாள் ; பின்னங்கால் பஞ்சுஉளியென் றேசுளிப்பாள்
பாலையில்ஆள் பின்என் படுவளோ?–சோலையிலே
ஆடு மயில்பிரம்பூர் ஆனந்த ரங்கதுரை
நாடுதனில் என் இளம் மின்னாள்.

பூஞ்சோலைகளிலே அழகிய தோகைகளை விரித்து மயில்கள் ஆடுகின்ற பிரம்பூரில் வீற்று இருக்கும் ஆனந்தரங்கன் என்னும் தலைவருடைய நாட்டிலே, எனது இளமைப் பருவத்தினளாகிய மங்கை பால்குடிக்க மாட்டாள்; பின்னங்கால்களில்படும் செம்பஞ்சு, உளிபோல தன்னை வருத்துகிறது என்று முகம் சுளிப்பாள்; ' இவ்விதத் தன்மை வாய்ந்தவள், தனது காதலனோடு நீரும் நிழலும் இல்லாத பாலைவழியே செல்லும்போது என்ன துன்பப்படுவாளோ?

அயிலாள் – உண்ணாள்

17. சிவப்பிரகாச சுவாமிகள்

காஞ்சிமா நகரில், தொண்டை மண்டல வேளாளருக்குத் தீட்சா குருவாக இருந்த குமாரசாமி தேசிகருடைய அருந்தவப் புதல்வராய்ச் சிவப்பிரகாசர் தோன்றினார். இவருக்கு வேலையர் கருணைப்பிரகாசர் என்னும் தம்பியர் இருவரும், ஞானாம்பிகை என்னும் ஒரு தங்கையும் இருந்தனர். இவர்கள் கல்வி பயிலும் இளைஞர்களாய் இருக்கும்போதே, தந்தையார் காலமானார். பிறகு சிவப்பிரகாசர் தம்பியரோடு திருவண்ணாமலைக்குச் சென்று அங்குள்ள குருதேவர் மடத்தில் இருந்து தளராத ஊக்கத்துடன் கல்வி பயின்று வந்தார். அப்பொழுது ஒருநாள் திருவண்ணாமலையை வலம்வரும்போதே 'சோணசைலமாலை' என்னும் பெயருள்ள சிறந்ததொரு நூலைப்பாடி முடித்தார்.

சுவைமிக்க பாடல்களை இவ்வாறு விரைந்து இயற்றும் ஆற்றல் பெற்று இருந்தும், தமிழ்மொழியின் ஐந்து இலக்கணங்களையும் முறையாகக் கற்றல் வேண்டும் என்னும் ஆர்வம் மிக்கவராய் இருந்தார். தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலத் தம்பிரான் அவர்கள், இலக்கிய இலக்கணங்களில் சிறந்த புலமை வாய்ந்தவர் என்றும், அவர் திருநெல்வேலியிலே இருக்கிறார் என்றும் கேள்வியுற்று, திருநெல்வேலிக்குச் சென்று, தம்பிரான் அவர்களைக் கண்டு, தம் கருத்தைத் தெரிவித்தார். அவர், இவருடைய இலக்கிய அறிவை அறிந்துகொள்ளுவதற்கு "கு" என்று தொடங்கி ஊருடையான' என்பதை இடையில் அமைத்து "கு" என முடியுமாறு ஒரு வெண்பா பாடுக என்றனர். உடனே சிவப்பிரகாசர் அவ்வாறு பாடிக்காட்டினார்.

அப்பாடலின் பொருளைப் பாராட்டிய தம்பிரான் அவர்கள் இவருக்கும், தம்பியர் இருவருக்கும் ஐந்திலக்கணங்களையும்

மிகக்குறுகிய காலத்தில் கற்பித்தனர். ஐயம் திரிபு அறக் கற்று சிவப்பிரகாசர், தம் ஆசிரியர் ஆணையின்படி திருச்செந்தூர் சென்று, அங்கு செருக்குடன் வாழ்ந்த புலவர் ஒருவரைத் 'திருச்செந்தில் நிரோட்டக அந்தாதி,பாடி வென்று, அடிமைப்படுத்தி அழைத்து வந்து, தம்பிரான் அவர்களை வணங்கும்படி செய்தனர். சிவப்பிரகாசர் திருமணம் செய்து கொள்ளாது துறவியாக இருந்து சைவமும் தமிழும் தழைக்க தொண்டாற்றினார்.

கற்பனைக் கருவூலம் எனப் புலவர்களால் பாராட்டப்படும் சிவப்பிரகாசர் துறைமங்கலத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த அண்ணாமலை ரெட்டியார் என்பவரால் ஆதரிக்கப் பெற்றவராவர். அவ்வள்ளலின் ஊரில் பெரும்பாலும் தங்கி வாழ்ந்தமையால், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் எனப் போற்றப்பட்டார். சிவப்பிரகாசர் வீரசைவ மரபில் தோன்றியவர். நாயன்மார்கள் நால்வரிடத்துப் பேரன்பும் பேரார்வமும் உடையவராய் விளங்கினார். அவர்களை நால்வர் நான்மணி மாலை என்னும் நூல்வாயிலாகப் போற்றிப் பாராட்டியுள்ளார். இந்நூலினைப் பெரிய புராணத்தின் சாரம் என்பர் சைவ அன்பர்கள். மேலே குறிப்பிட்ட மூன்று நூல்கள் அல்லாமல் திருவெங்கைக் கோவை,திருவெங்கைக் கலம்பகம் திருவேங்கை உலா, பிரபுலிங்கலீலை, நன்னெறி முதலிய 32 நூல்களை இயற்றியுள்ளார். சீகாளத்திப் புராணத்தில் உள்ள கண்ணப்பர் சருக்கம், நக்கீரர் சருக்கம் என்னும் இரு சருக்கங்களும் இவர் இயற்றியவையாகும்.

சிவலிங்கதாரணம் செய்துகொள்ளும் வீர சைவ மரபில் தோன்றிய சிவப்பிரகாச சுவாமிகள், தமிழுக்கும் சைவத்திற்கும் செய்திருக்கும் தொண்டுகள் மிகச்சிறந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சிவப்பிரகாசர் வாழ்ந்த காலம் பதினேழாம் நூற்றாண்டாகும்.

மணமக்களை வாழ்த்திப் பாடியது.

'ஐய! நின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை
யார்?' என்ன உமைவினவவும்,
'அன்னது ஒரு மடமங்கை அன்று;வெண் திரைகொழித்து
அழகுஒழுகு தண்புனல்' எனத்,
'துய்யொளி ஆனனம் கரியவிழி காதுவாய்
தோயத்தில் உண்டோ?' எனச்,
'சொல்லரும் கமலமலர், காவிமலர், கொடிவள்ளை
தூயசெங் குமுதம்' என்னப்
'பொய்யென' நினைத்து நல் கொங்கையும் கூந்தலும்
புனலின் இடை உண்டோ?' எனப்,
'புற்புதம் சைவலம்அது எனவே மறுத்து
புகன்றிடுதி நங்காய்' எனத்
தையல் அவள் 'ஏன்'என்ன, நாணொடு வணங்கி, எந்
தன்பிழை பொறுத்திடு' என்றே
சங்கரன் உரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரிஉமைக் காக்கவே.

சிவபெருமானைப் பார்த்து 'ஐயா! உமது முடியின் மீது வாழ்கின்ற இளமங்கை யார்?' என்று பார்வதி கேட்கவும், அது ஓர் இளம் பெண் அல்ல; வெண்மை வடிவினதாகிய அலைகளை எறிந்து அழகு சொரிகின்ற குளிர்ச்சி பொருந்திய ஆறு' என்று சிவபெருமான் சொல்லவும், 'தூய ஒளி பொருந்திய முகமும், கருமையான கண்ணும், காதும், வாயும், ஆற்றிற்கு உண்டோ?' என்று கேட்க, 'அவ்விதம் தோன்றுவது சொல்லுவதற்கு அரிய முகம் போன்ற தாமரையும், கண்போன்ற குவளைப் பூவும், காது போன்ற வள்ளைக்கொடியும்,வாய்போன்ற தூய செவ்வல்லி மலருமே' என்று சொல்ல, அவ்வாறு சொல்லியது பொய்யான பதில் என்று பார்வதி நினைத்து,'சிறந்த முலைகளும், கூந்தலும் நீரினில்இருக்குமோ?என்றுவினவ,அவைநீரில்உண்டாகின்ற நீர்க்குமிழியும், நீர்ப்பாசியும் ஆகும் என்று சொன்னாலும் நீ அதனை மறுத்துக் கூறுவாய் பெண்ணே!' என்று இறைவன்

கூற, 'பெண்ணே' என்று தம்மை அழைப்பதாகக் கருதிய கங்கையானவள் ஏன்?' என்று கேட்க, உண்மை தெரிந்தது என்று சிவபெருமான் வெட்கத்தோடு தலை குனிந்து, என் குற்றத்தை மன்னிக்க வேண்டும்' என்று வேண்டிக்கொள்ள, அதனால் மனமகிழ்ச்சி அடைந்த, சிவசத்தியாகிய அம்பிகை உங்களைக் காப்பாற்றுவாளாக!

சென்னிமிசை – தலைமேலே; திரை– அலை; தண்புனல் – ஆறு; துய்ய – தூய்மையான; ஆனனம் – முகம் ; தோயம் – நீர்; கமலம் –தாமரை; காவி– குவளை; வள்ளே – வசலைக்கொடி: குமுதம்–அல்லி: புற்புதம் – நீர்க்குமிழி, சைவலம்–பாசி.

இதுவும் அது.

அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
'ஐய?என் செவியையமிகவும்
அறுமுகன் கிள்ளினான்' என்றே சிணுங்கிடவும்,
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே, 'அண்ணன்என் சென்னியில்
விளங்குகண்ண எண்ணினன்' என,
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து 'நீ அப்படியும்
விகடம்ஏன் செய்தாய்?' என
'மருவும்என் கைந்நீளம் முழம் அளந் தான்' என்ன,
மயிலவன் நகைத்துநிற்க,
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கி நின்
மைந்தரைப் பாராய்!'எனக்
கருது அரிய கடல்ஆடை உலகுபல அண்டம்
கருப்பமாய்ப் பெற்றகன்னி.
கணபதியை அருகு அழைத்து அகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக் காக்கவே !

சிவபெருமான் முன்பாக ஐந்து கைகளையுடைய கணபதி வந்து 'அப்பா! என்னுடைய காதுகளை ஆறுமுகனாகிய தம்பி மிகவும் நோகுமாறு கிள்ளினான்' என்று கூறி வருத்தப்படவும், சிவபெருமான் வேலவனைப் பார்த்து, 'ஏன் அப்படிச் செய்தாய்?'

என்று விரைவாகக் கேட்க, 'அண்ணன் எனது தலையில் உள்ள கண்களை எண்ணிப் பார்த்தான்' என்று முருகன் பதில் கூறவும், தேம்பி அழுகின்ற கணபதியைச் சிவபெருமான் பார்த்து 'நீ ஏன் அவ்வாறு வேடிக்கை செய்தாய்?' என்று கேட்க, 'என் முகத்தில் உள்ள துதிக்கையின் நீளத்தினை எத்தனை முழங்கள் இருக்கின்றன என்று தம்பி அளந்து பார்த்தான்' என்று உரைக்கவும்' முருகப் பெருமான் அதைக் கேட்டு நகைத்து நின்றார். மலையத்துவசன் மகளாகிய உமாதேவியைப் பார்த்து, 'உன் மைந்தரின் குறும்புச் செயல்களைப் பார்! என்று இறைவன் கூற, மனத்தால் அளவிட இயலாத கடலை உடையாக உடுத்தியுள்ள பூமியையும், வேறுபல கோள்களையும் கருத்தரியாது தோற்றுவித்து என்றும் இளமை எழிலோடு இருக்கின்ற அம்பிகை, கணபதியை அருகில் அழைத்து ஆறுதல் சொல்லி மனமகிழ்ச்சியடைந்தாள். அவள் மகிழ்ச்சியுடன் உம்மைக் காத்தருள்புரிவாளாக!'

அரன் – சிவபெருமான்; ஐங்கரன் – பிள்ளையார்: சென்னி – நெற்றி வெம்பிடும்–தேம்பி அழுகின்ற; விகடம் – வேடிக்கை: மருவும் – பொருந்திய மைந்தர் – ஆண்மக்கள்; அண்டம் – கோள்கள் பலவற்றைக் கொண்டது அண்டம்

'கு' வில் தொடங்கி 'கு'வில் முடிந்தது.

குடம் ஓடு வான்எயிறு கொண்டார்க்குக், கேழ்
முடக்கோடு முன்னம்அணி வார்க்கு, வடக்கு ஓடு
தேர்உடையான் தெவ்வுக்குத்,தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊருடைஆன் என்னும் உலகு.

மேற்குத் திசையை நோக்கி ஓடுகின்ற கதிரவனுடைய பற்களை உதிரும்படி செய்தவரும், பன்றியினது பிறை போன்ற வளைந்தகொம்பை முன்னொரு காலத்தில் அழகிய அணிகலனாக அணிந்து கொண்டவரும் வடதிசையை நோக்கி ஓடுகின்ற தென்றலாகிய தேரை உடைய மன்மதனது பகைவரும் ஆகிய சிவபெருமானுக்குத் தில்லை என்னும்

பதியே ஊராகும்; யானையின் உரித்த தோலே ஆடையாகும்; ஏறிச் செல்லும் வாகனம் எருதாகும் என்று பெரியோர் கூறுவர்

குறிப்பு: தக்கன் யாகத்தில் சூரியனது பல்லைச் சிவபெருமான் உடைத்தார் என்பதும், திருமால் கூர்மாவதாரம் எடுத்தபொழுது, அதனுடைய கொம்பினைச் சிவபெருமான் ஆபரணமாகச் சூடினார் என்பதும் பழங்கதையாகும்,

வான் எயிறு – வெண்மையான பல்: கேழல்– பன்றி: கோடு – கொம்பு; முன்னம் – முன்னொரு காலத்தில்; தெவ்வு – பகைவர்

பெண்களின் கொடுமை.

சேய்கொண்டு ஆ ரும்கமலச் செம்மல், உட னே அரவப்
பாய்கொண்டா னும்பணியும் பட்டீச் சுரத்தானே!
நோய்கொண்டா லும்கொளலாம், நூறுவயது ஆமளவும்
பேய்கொண்டா லும்கொளலாம். பெண்கொளலாகாதே.

செந்நிறம் பொருந்திய வடிவினையுடைய மலரில் வீற்றிருக்கும் பிரமதேவரோடும். பாம்பினைப் பள்ளியாகக்கொண்ட திருமாலும் வழிபடுகின்ற பட்டீச்சுரத்தில் இருக்கின்ற கடவுளே! நோய்வாய்ப்பட்டாலும் படலாம்; நூறு வயது முற்றும் வரை பேய்ப்பிடித்திருந்தாலும் திரியலாம்; மங்கையரை மணமாலை சூடிக் கவலை அடைதல் கூடாது.

சேய் – செந்நிறம்: கமலம் –தாமரை ; செம்மல் – தலைவன். அரவப் பாய் – பாம்பு அணை

புதுமை அன்று!

'நாணி' என்பதை'நாரி' என்றுஉரைத்திடு நசையால்,
வேணுவானது வளைந்துபோய் புகுந்தது என்றால்,
காணல்ஆவதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டால்
பூணுவார்மயல் காளையர் என்பதும் புதிதோ?

'நாணி' என்னும் நல்ல தமிழ்ச் சொல்லை உலகத்தார் 'நாரி' என்று திரித்து வழங்கவே. 'நாரி' என்பது பெண் என்று அறிந்து

பெரு விருப்பத்தோடு மூங்கிலானது வளைந்து கொடுத்தது என்றால், தங்கள் கண் முன்னாலே ஒப்பற்ற வடிவழகை உடைய உண்மையான 'நாரி'யாகிய பெண்ணைப் பார்த்தால் இளைஞர்கள் ஆசை கொள்வார்கள் என்பது புதுமையாகுமோ? (வியப்பு அடைவதற்கு ஒன்றும் இல்லை; இது உலக இயற்கை!)

நயம்: பெண்களுக்கு 'நாணி' எனவும், 'நாரி' எனவும் பெயர்கள் உள்ளமையை அறிந்த மூங்கிலானது 'நாரி' என்ற சொல்லைக் கேட்டவுடனே வளைந்துகொடுத்தது என்றால், உண்மையிலேயே இளைஞர்கள் நாரியாகிய பெண்ணழகி களைக் கண்ணால் கண்டால் ஏன் அவர்கள் மீது ஆசை கொள்ளமாட்டார்கள் என்பது ஆசிரியருடைய கேள்வி. ஓர் அறிவு உயிராகிய மூங்கில் 'பெண்' என்று சொன்னவுடனே வளைந்துகொடுக்கும்போது ஆறறிவு படைத்த இளம் காளைகள், கண்ணால் காண்பதற்குரிய பெண்களைக்கண்டு மயங்குவது இயற்கையேயாகும் என்பது கருத்து

நசை – விருப்பம்; வேணு – மூங்கில்; மையல் – மயக்கம், ஆசை.

18. சுந்தரக் கவிராயர்

சுந்தரக் கவிராயர் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர், திருவிரிஞ்சை முருகப் பெருமானிடத்துப் பேரன்புகொண்டவர். இவருடைய. வாழ்க்கை வரலாறு ஒன்றும் தெரியவில்லை.

கவிராயர் வறுமையின் கொடுமையால் வாடியவர்: உழவுத் தொழிலின் உயர்வை நன்கு உணர்ந்தவர். அகப் பொருள் அமைதி உடைய பாடல்களை இயற்றுவதில் வல்லவர். எட்டையபுரம் அருணாசலத்துரை, தையூர் முத்து முதலியார் முதலியோர் புலவரைப் போற்றி ஆதரித்தனர். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவராகலாம்.

வறுமையின் கொடுமை.

அன்னம் உணற்குஅரிதாம்; ஆமாறு மூன்றும் அரிதாம்:
பள்ளம் அரிதாம் பகலின்கண்;–துன் நிசியில்
நேயம் அரிதாகும்; நித்திரைக்குப் பாய் அரிதாம் ;
காயக்கு அரிதாம் கலை.

வறுமை ஒருவனை வந்து அடையுமானால் உண்பதற்குச் சோறு கிடைப்பது அரிதாகும்; அறுசுவை உணவும் பால் தயிர். நெய் மூன்றும் கிடைத்தற்கு அரிதாகும்; பகற்பொழுதில் வெற்றிலை கிடைப்பது அரிதாகும்; இருள் நிறைந்த நள்ளிரவில் அன்புடைய காதலி அருகில் இருப்பது அரிதாகும்; படுத்துத் தூங்குவதற்குப் பாய் கிடைப்பதும் அரிதாகும்; உடம்பினை மறைப்பதற்கு உரிய ஆடை கிடைப்பதும் அரிதாகும்.

அன்னம் – சோறு ;ஆமாறு மூன்று –ஆவினிடத்தில் இருந்து பெறப்படும் பால், தயிர், நெய் ஆகிய மூன்று; பள்ளம் – வெற்றிலைப்பாக்கு;துன்– நெருங்கிய; நேயம்– அன்புடைய காதலி; நித்திரை – தூக்கம்; சாயம் –உடல் ; கலை –ஆடை.

ஏர் ஓட்டும் காட்சி.

பத்துக்கால், மூன்றுதலை, பார்க்கும்கண் ஆறு,முகம்
இத்தரையில் ஆறு, வாய் ஈரிரண்டாம் – இத்தனையும்
ஓரிடத்தில் கண்டேன்; உகந்தேன்; களிகூர்ந்தேன்;
பாரிடத்தில் கண்டே பகர்!

இவ்வுலகில் பத்துக்காலும், மூன்று தலையும், பார்க்கும் கண் ஆறும், முகம் ஆறும், வாய்நான்கும் ஆகிய இத்தனையும் உடைய ஒன்றை ஓரிடத்திலேயே பார்த்தேன்; அதன் மீது விருப்பம் கொண்டேன்; மகிழ்ச்சி அடைந்தேன் இவ்வுலகில் இந்த அதிசயத்தைக் கண்டு என்னவென்று கூறுவாயாக!

நயம்: இரு காளைகளை ஏரில் (கலப்பையில்) பூட்டி ஓட்டும்பொழுது, இரண்டு காளைகளின் கால் எட்டும், ஓட்டும் மனிதன் கால் இரண்டும் ஆக பத்துக் கால்களும்; காளைகளின் முகம் இரண்டும்,மனிதன் தலை ஒன்றும் ஆக மூன்று தலையும் இரண்டு காளைகளின் முகத்தில் உள்ள கண்கள் நான்குடன் ஓட்டுபவன் முகத்தில் உள்ள கண்கள் இரண்டும் சேர்த்துக் கண்கள் ஆறு ஆவன காண்க!காளை,மனிதன் முகங்களோடு, கொழுமுகம் மூன்றும் சேர்த்து முகம் ஆறும்; காளைகள் மனிதன் ஆகியோரின் மூன்று வாய்களோடு நாழிவாய் ஒன்றும் சேர்த்து வாய் நான்காவதும் காண்க.

இப் பாடல் ஒரு விடுகவிபோன்று அமைந்து உழவுத் தொழிலினைச் சொல்லோவியமாக மனக் கண்முன் கொண்டு. வந்து நிறுத்துகிறது.

எல்லாருக்கும் பொது

ஆறு, குளம், தோப்பும், அணிநியமம், சத்திரமும்,
கூறுவழித் தாறுநிழல் கோட்டம்உடன்.–மாறுமன
வேசி,சபை, நீர்ப்பந்தல், வேந்தன் மடமயிலே!
காசினிக்கு ளேபொதுவாம் காண்.

இளைய மயில்போன்ற மென்மையான சாயலுடைய பெண்ணே! ஆறு, குளம், தோப்பு என்பனவும், அழகியவீதியும், சத்திரமும், பொதுவாக அமைக்கப்பட்ட பாதை. அதில் உள்ள மரங்களின் பழக்குலை, மரநிழல் என்பனவும், கோயிலும், மாறுகின்ற மனம் உடைய விலைமகளும், தண்ணீர்ப் பந்தலும், அரசர்களும் உலகத்திலே எல்லோருக்கும் உரிய பொதுப் பொருள்களாகும்.

பூட்டுவில் பொருள்கோள்.

ஆறுதலை சிவனுக்கு ஐந்துமுகம் ஐங்கரனுக்குக்,
கூறுங்கை ஐந்து குரவனுக்கு.–வீறுதோள்
எட்டாம்சே டற்கு இரட்டி ஆயிரம்நா இந்திரற்குக்
கட்டுஆ யிரங்கண் குகற்கு

குமரக் கடவுளுக்கு ஆறு தலைகள் உள்ளன; சிவனுக்கு ஐந்து முகங்கள் உள்ளன; யானைமுகக் கடவுளுக்குச் சிறப்பித்துக் கூறப்படுகின்ற துதிக்கையைச் சேர்த்துக் கைகள் ஐந்து உள்ளன! முருகனுக்கும் கணபதிக்கும் தந்தையாகிய சிவபெருமானுக்குத் தனிச் சிறப்புடைய தோள்கள் எட்டு உள்ளன: ஆதிசேடனுக்கு இரண்டாயிரம் நாக்குகள் உள்ளன; இந்திரனுக்கு உடம்பில் ஆயிரம் கண்கள் உள்ளன,

விளக்கம்: பூட்டின் ஒருபுறத்தில் உள்ள வில்லினை இன்னொரு புறத்தில் உள்ள தொலையில் பொருத்திப் பூட்டுவது போல, பாட்டின் இறுதியில் உள்ள எழுவாயை, முதலில் உள்ள பயனிலையோடு கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளுவது பூட்டுவில் பொருள்கோள் ஆகும். நான்காம் அடியின் இறுதியில் உள்ள 'குகற்கு' என்னும் சொல்லை, முதலடியில் உள்ள ''ஆறுதலை' என்பதனோடு சேர்த்துப் பொருள் கொள்ளுவதனால் இப் பாடல் பூட்டுவில் பொருள்கோளாகும்.

செல்வர் இயல்பு

ஈராறும், ஈரையும் இல்லைஎன்றேன்; ஆதலினால்
ஈராறு செல்லாது இருந்தீரோ?– ஈராறு
கட்டி அணைத்தேநீ காதலுடனே சேர்ந்தால்
வட்டியுடன் தானே வரும்.

பன்னிரண்டும் ஒன்றுமாகிய பதின்மூன்றாவது நட்சத்திரம் ஆகிய அத்தம் (அதாவது பொருள்) என்னிடத்தில் இல்லை என்று நான் சொன்னபடியால், பன்னிரண்டாவது நட்சத்திரமாகிய உத்திரம் (பதில்) உரையாவது இருந்தீரே! வருடத்தில் பன்னிரண்டாவது ஆகிய வெகுதானியத்தை (மிகுந்த நெல்லை) மூட்டை மூட்டையாகக் கட்டி அவற்றை ஆசையுடனே சேர்த்து வைத்தால், பொருள் வட்டியுடன் தானேவரும்.

ஈயாத கல்நெஞ்சர் பொருளைத் தேடிச் சேர்த்துவைப்பதால் அது அவர்களுடன் வரப்போவது இல்லை என்பதைப் புலவர் வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடியுள்ளார். நட்சத்திரங்களின் வரன்முறை எண்ணினைக்கொண்டு ஏதோ கணக்குப் போடுவது போன்று புலவர் சொற்களில் மாயவித்தைகள் செய்து காட்டுகிறார்.

ஆலத்தி எடுத்தல்

மரமது மரத்தில்ஏறி, மரம்அதைத் தோளில்வைத்து,
மரமது மரத்தைக்கண்டு, மரத்தினால் மரத்தைக்குத்தி,
மரமது வழியேசென்று வளமனைக் கேகும்போது
மரமது கண்ட மாதர் மரமுடன் மரம் எடுத்தார்.

அரசமரம் (அரசன்) மாவி (குதிரையி)ல் ஏறி வேல மரத்தினை (வேலினைத்)த் தோளில் வைத்துக்கொண்டு, வேங்கை (புலி)யைக் கண்டு, வேலினால் அப் புலியைக் குத்தி, வந்த வழியே திரும்பிப் போய் வளமான தன் அரண்மனையில்

புகும்போது அதைக்கண்ட பெண்கள் ஆல் அத்தி (ஆலத்தி) எடுத்தார்கள்.

நயம்: 'மரமது' நான்கு அடியிலும் 'அரசு' என்பதைக் குறித்து நின்றது. 'அரசு' என்பது அரசனைக் குறிப்பது போல மா, வேல், வேங்கை என்னும் மரத்தின் பெயர்கள் முறையே குதிரையையும்,வேல்படையையும்,புலியையும்குறிப்பனவாகும். 'மரமுடன் மரம்' என்றது ஆலும் அத்தியும் என்பனவாகும். அவை இரண்டும் சேர்ந்து 'ஆலத்தி' ஆயின,

'மரம்' எனும் சொல்லைக் கொண்டு பல்வகை மரங்களின் பெயர்களைக் குறித்து, அவை ஒவ்வொன்றிற்கும் உள்ள பொருளினைக் கொண்டு அரசன் வேட்டையாடித் திரும்பிய பொழுது அரண்மனையில் ஆலத்தி எடுத்ததை உய்த்து உணருமாறு செய்துள்ளார் புலவர். ஒரே சொல்லைக்கொண்டு கண்கட்டு வித்தை காட்டுகிறார். கற்பனைவளமோ, பொருளாழமோ இதில் இல்லை. இடைக்காலப் புலவர்களின் கவி உள்ளம் கருத்தில் கருத்தினைச் செலுத்தாது, வெறும் சொல் அடுக்கில்' சிக்கி சீர்அழிந்தது என்பதற்கு இப்பாடல் நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

19. சுப்பிரதீபக் கவிராயர்

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். திருமங்கலம் தாலூகாவில் கம்மாள குலத்தில் பிறந்தவர். வீரமாமுனிவர் என்னும் இத்தாலிய நாட்டுப் பாதிரியார் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்து அவருக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தவர் சுப்பிரதீபக் கவிராயர். தமிழில் முதன்முதல் வீரமாமுனிவரால் எழுதப்பட்ட 'சதுர அகராதியைத்' தொகுத்துக் கொடுத்தவர் சுப்பிரதீபக் கவிராயர் என்பர். இவர் சிற்றின்பக் கவிபாடுவதில் வல்லவர்.

இவர் சிறந்த கற்பனை வளமும், கவித்திறனும் உடையவராக விளங்கினார் என்பது இவருடைய நூல்களால் தெரிகிறது. இவர் இயற்றிய கூளப்ப நாயக்கன் காதல், விறலி விடு தூது என்னும் நூல்கள் சிறந்த தமிழ் நடையும் பொருட்சுவையும் உடையவை. பெண்களை வருணிப்பதிலே எல்லை மீறிவிடும் குறைபாட்டை இவருடைய நூல்களில் காணலாம்.

இவர் சிறப்பித்துப் பாடிய கூளப்ப நாயக்கன், 'பெரிய நாகேந்திரன்' என்னும் பெயரை உடையவன். இவன் மதுரை மாவட்டத்தில், நிலக்கோட்டை வட்டத்தில் நவபுரி (பெஞ்சை) எனப்படும் ஊரில் வாழ்ந்த சமீன்தார். இவன் சிறந்த வள்ளலாக விளங்கினான். இவனது அருள் உள்ளத்தையும், கொடைத் திறத்தையும், சுப்பிரதீபக் கவிராயர் வியந்து பாராட்டியுள்ளார்.

குன்னரங்கன் எனும் சிற்றரசரிடத்துக் கவிராயருக்குப் பெரும் செல்வாக்கு இருந்தது. இவரிடத்து அவன் பெரும் மதிப்பு வைத்து இருந்தான். குன்னரங்கன் இறந்தபொழுது புலவர் மனம் வருந்திப் பாடிய பாடல்கள் பல கிடைத்துள்ளன.

இவருடைய காலத்தில் வாழ்ந்த பலபட்டடைச் சொக்க நாதப் புலவருக்குப் பெரும் பகைவராய் இவர் இருந்தார்.

அவருடைய நூல்கள் அரங்கேற்றம் ஆகும் இடம் எல்லாம் சுப்பிரதீபக் கவிராயர் சென்று அந்நூல்களில் குற்றம் குறைகள் இருப்பதாகக்கூறி அரங்கேற்றம் நடைபெறா வண்ணம் தடுப்பதற்கு முயன்றார் என்பர். இதனால் இவ்விருவரிடையே 'புலமைக் காய்ச்சல்' இருந்து வந்தது என்பது தெரிகிறது.

திருவாரூர் தியாகேசர்.

ஒருமாடும் இல்லாமல் மைத்துனனார்
உலகமெலாம் உழுதே உண்டார்;
நரைமாடோ ஒன்றிருக்க உழுதுண்ண
மாட்டாமல் நஞ்சை உண்டீர்!
இருநாழி நெல்லிருக்க இரண்டுபிள்ளை
தானிருக்க இரந்தே உண்டீர்!
திருநாளும் உண்டாச்சே செங்கமலைப்
பதிவாழும் தியாக னாரே!

செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி நீங்காது இருக்கும் திருவாரூரில் வாழும் தியாகராசப் பெருமானே! உன்னுடைய மைத்துனன் ஆகிய திருமால் ஒரு மாட்டின் உதவியும் இல்லாமல், பன்றி அவதாரம் எடுத்துத் தனது கொம்பினாலே நிலத்தை உழுததோடு பூமியையும் விழுங்கினார். உமக்கு வெள்ளைக்காளை ஒன்று சொந்தமாக இருந்தும் உழுது உண்ணமாட்டாமல் நஞ்சை உண்டீர்! இரண்டு படி நெல் உமை அம்மையிடம் இருக்கவும், அவற்றை விதைப்பதற்குக் கணபதி, முருகன் என்ற இரண்டு பிள்ளைகள் இருக்கும்போது பிச்சை எடுத்துச் சாப்பிட்டீர்; இப்படிப்பட்ட உங்களுக்குத் திருவிழா நடப்பது உமது நல்வினைப் பயனே போலும்.

நரை – வெள்ளை; நாழி – படி; செங்கமலைப்பதி–திருவாரூர்.

குன்னரங்கன் இறந்தபொழுது பாடியது.

'தென் அரங்கன் அரங்கன்' என்பார், வாய்திறவான்;
கண்விழியான்; திரும்பிப் பாரான்;
என் அரங்கன்? தூங்கு அரங்கன், ஏழையர்பால்
கருணையுடன் இரங்கா ரங்கன்;
மன்னர் அரங்கன் தமிழ்ப்பெருமான்; மழவரங்கன்
அளித்தருளு மைந்தனான
குன்னரங்கா! எனக்கு இரங்காய்; கொண்டுவந்த
தமிழ்க்கிரங்கிக் குழைந்து எழாயே!

அழகிய திருவரங்கத்தில் உள்ள திருமாலை அவைக்குத் தலைவன் என்பார்கள். அவன் பேசுவது இல்லை; கண்ணைக் திறந்து பார்க்கவும் மாட்டான்; தான் பார்க்கும் திசையிலிருந்து திரும்பி வேறு திசையில் பார்க்கமாட்டான்; அவன் எத்தகைய அரங்கன் என்றால் துயில்கின்ற அரங்கன்; ஏழை எளியவர் களிடத்துத் தயவு வைத்து இரக்கம் காட்டாத அரங்கசாமி கவியரசர்களைத் தனது அவைக்களத்திலே உடைய தமிழ் பெருமகனாகிய குன்னரங்கனே! என்பால் இரக்கம் காட்டா விடினும், நான் இயற்றிக்கொண்டு வந்துள்ள தமிழ்ப்பாட்டிற்கு இரக்கமுற்று மனம் உருகி உயிர்த்து எழுவாயாக ;

தென் – அழகிய.

பூங்கொடி.

நடக்கில் அன்னமு மா; நிற்கில் வஞ்சியாம்;
கிடக்கில் ஓவியப் பாவை; கிடந்தவா
தடக்கை யான்சது ரான பண்டிதன்
மடத்து ளாள்; என் மனத்துறை வல்லியே!

செய்நன்றி அறிதலின் காரணமாக என் உள்ளத்தில் வாழ்கின்ற பூங்கொடி போல்வாள், கொடையால் விரிந்த கையையுடைய புலமைத்திறம் வாய்ந்த பண்டிதனது இல்லத்தில் இருக்கின்றவள் ஆவாள். அவள் நடந்து சென்றால் அன்னத்தின் நடைபோன்று இருக்கும்; நின்றால் வஞ்சிக்

கொடிபோன்று இருப்பாள் ; படுத்தால் ஓவியத்தில் தீட்டப் பெற்ற பதுமைபோல விளங்குவாள்.

வஞ்சி – வஞ்சிக்கொடிபோன்ற பெண் ஓவியம் – சித்திரம்; பாவை– பதுமை; வல்லி – கொடி.

ஏழிலே ஒன்று.

ஏழில் ஒருகிரியான்; எழிலே ஒன்று அணிவான்;
ஏழிலே ஒன்று ஈ' எனக்கேட்டான் – ஏழிலே
ஒன்று 'ஈ' என்றேன்; உண்பது 'ஒடு' என்றான் ; ஓடுஎன்றேன்
என்றும் அறிந்தவருக் கே!

மிக உயர்ந்த மலையாகிய கயிலைமலையை உடையவனும், ஏழு ஆறுகளிலே ஒன்றாகிய கங்கையை அணிந்தவனும் ஆகிய சிவபெருமான் 'ஏழு கிழமைகளில் ஒன்றாகிய செவ் (செவ்விதழ்களையுடைய) வாயை முத்தமிடக் கேட்டான். நான் 'ஏழு கிழமைகளில் ஒன்றாகிய வியாழனை (பொன்னைக்) கொடு' என்று கேட்டேன். 'என் இடத்தில் பொன்கிடையாது; நான் உணவு உண்பது ஓட்டிலே' என்றான். நான் 'எக்காலத்தும்' அறிவுடையோருக்கு ஓடுதான் கிடைக்கும்' என்றேன்.

நயம்: இப்பாடலில் எண்களின் திருவிளையாடல்களைக் காணுகிறோம். ஏழு, ஒன்று, ஈ என்னும் சொற்களைக் கொண்டு ஆசிரியர் தனது கருத்தினை எளிதில் யாரும் அறியா வண்ணம் மூடி மறைக்க முயலுகிறார். இது சொற்களை நயம் தோன்ற கையாளும் திறனைக் காட்டுகிறது.

கிரி – மலை; ஓடு – திரு ஓடு.

கரும்பும் வேம்பும்.

கச்சிருக்கும் போது கரும்பானேன்; கைக்குழந்தை
வச்சிருக்கும் போது மருந்தானேன்;– நச்சுஇருக்கும்
கண்ணார் கரும்பானார்; காணவும்நான் வேம்பானேன்
அண்ணா மலைஅர சுக்கு.

அண்ணாமலை அரசனுக்குக் கச்சு இறுக்கமாய்க் கொங்கை விம்மும்படி இருந்தபோது கரும்புபோல் இனியவள் ஆனேன். குழந்தை பெற்றுக் கையில் வைத்து இருக்கும்போது நோய்க்கு மருந்துபோல் பயன்பட்டேன்; விஷம் குடிகொண்டு இருக்கும் கண்களையுடைய விலைமகளிர் கரும்புபோல் ஆனார்கள். இப்போது பார்ப்பதற்குக் கூட நான் வேம்புபோலக் கசப்பவள் ஆனேன். என்செய்வேன்? இப் பாலனால் எனக்கு இந்தத் துன்பம் நேரிட்டது.

நச்சு – நஞ்சு, விடம்; கச்சு –பெண்கள் மார்பகத்தில் அணியும் உடை; வேம்பு – வேப்பம்பழம்.

20. சொக்கநாதப் புலவர்

இனிய தமிழ்க் கவிபாடுவதில் வல்லவர். தொண்டை நாட்டில் பிறந்தவர். இப்புலவர் வறுயையால் வாடியவர். நகைச்சுவை மிக்க கவிகள் இயற்றுவதில் ஆற்றல் மிக்கவர். இவருடைய வரலாற்றை அறியமுடியவில்லை.

இவர் கருப்பன், காளத்தி என்னும் வள்ளல்களை புகழ்ந்து பாடியுள்ளார். இவருடைய காலத்தை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. சிலர் 'எல்லப்பன் அம்மையப்பன் திருவேங்கட ராமன்' என்னும் செய்யுளை இவர் பாடினார் எனக்கொண்டு இவர் கிருட்டிண நாயக்கரின் (1653) அமைச்சராக இருந்த திருவேங்கடநாதையரின் காலத்தவர் என்பர்.

கருப்பனைப் புகழ்ந்து பாடியது.

சீர்கருத்த முகில்கரத்தான்; கஸ்தூரி
பூபன் அருள் சேயா! என்றும்
ஓர் கறுப்பும் இல்லாத தொண்டைவள
நாட்டிருக்கும் உசிதவேளே!
ஆர்கருப்பன் என்றுசொல்லி அழைத்தாலும்,
நாம்உன்னை அன்பினாலே
'பேர்கருப்பன்! நிறம்சிவப்பன்; கீர்த்தினாயில்
வெளுப்பன்' எனப் பேசுவோமே!

கார்மேகம் போன்று எதிர் உதவியை எதிர்பார்க்காமல் வரையாது வழங்கும் அழகுமிக்க கைகளையுடைய கஸ்தூரி பூபதி பெற்ற மகனே! எந்நாளிலும் எத்தகைய குறைவும் இல்லாத தொண்டைவள நாட்டில் வாழும் உயர்ந்த வேளாளர்த் தலைவனே! 'கருப்பன்' என்ற பெயரால் உன்னை யார் கூப்பிட்டாலும், நான் உன்மீது கொண்டுள்ள அன்பி னாலே பேர் அளவில் நீ கருப்பன்; நிறத்தினால் சிவப்பானவன்; புகழினால்

வெள்ளை (குற்றம் அற்ற தூய) நிறமுடையவள் என்று உம்மைப் போற்றுவேன்.

நயம்: உன் பெயர்தான் 'கருப்பன்' என்பதே ஒழிய உன்னுடைய நிறமோ சிவப்பு. அப்படியிருக்க உனக்குக் ககுப்பன் என்று பெயரிட்டது பொருந்தாது. ஆயினும் உன்னுடைய உள்ளம் குற்றம் அற்ற தூய வெள்ளைமனம் ஆகும். அதனால்தான் நீ இத்தகைய சிறந்த புகழ்பெற்று விளங்குகிறாய் என்பது புலவரின் கற்பனைத் திறனையும், செய்ந்நன்றி மறவா மனப் பான்மையினையும் காட்டுகிறது.

சீர் – அழகிய: முகில் – மேகம்; பூபன் – நிலக்கிழார்; சேயன் –மகன்: கறுப்பு – குறைவு, பஞ்சம்: உசித–உயர்ந்த; வேள் –வேளாளர் குடியினைச் சேர்ந்தவன்.

அம்பல வாணரைப் பாடியது.

செல்லாரும் பொழில்புடைசூல் புலியூர்அம்
பலவாண தேவா! உம்மைக்
கல்லாலும், வில்லாலும், செருப்பாலும்,
பிரம்பாலும் கடிந்துசாடும்
எல்லாரும் நல்லவர்என்று எண்ணி அருள்
ஈந்ததுஎன்ன? இகழ்ச்சிஓன்றும்
சொல்லாமல் மலரால்விட்டு எறிந்தவனைக்
காய்ந்தது என்ன? சொல்லுவீரே!

மேகக் கூட்டங்கள் தவழும் விண்ணைத் தீண்டித் தழுவும் உயர்ந்த பூஞ்சோலைகள் அருகில் சூழ்ந்திருக்கும் புலியூர் எனப்படும் சிதம்பரத்திலே நடனமாடும் அம்பலத்து அரசே! உன்மீது சினம்கொண்டு கல், வில், செருப்பு, பிரம்பு முதலியவற்றால் தாக்கிய எல்லோரையும் நல்லவர்கள் என்று மதித்து நீர் திருவருள் புரிந்தது என்ன காரணத்தினால் என்று கூறுக ! உம்மைப் பழித்து உரைக்காமல் உன்மேல் மலர் – அம்புகளைச் செலுத்திய மன்மதனைச் சினத்தினால் எரித்ததின் காரணத்தைச் சொல்லுங்கள்!

நயம்: சிவபெருமானை அர்ச்சுனன் வில்லால் அடித்தான்; சாக்கிய நாயனார் கல்லால் அடித்தார்; கண்ணப்பர் செருப்பால் உதைத்தார்; அரிமர்த்தன பாண்டியன் பிரம்பால் அடித்தான். அவ்வாறு கொடுமை செய்தவர்களுக்கு வீடு பேற்றைத் தந்து அருளிய இறைவன், தன்மீது மலர் அம்பினை எய்தி, தியானத்தைக் கலைத்துத் தேவியாரோடு கூடி இன்புறுமாறு நன்மை செய்த மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்து நீறு ஆக்கியது எக்காரணத்தால் என்பதைப் புலவர் அறிய விரும்புகிறார். நன்மை செய்தவருக்கு நன்மை செய்வதும், தீமை செய்தவருக்குத் தீமை செய்வதும் உலக இயற்கை. இறைவனது இயல்பு இதற்கு நேர்மாறாக இருப்பதைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்த புலவர் இறைவனையே அதற்கு விளக்கம் தருமாறு வேண்டுகிறார்.

செல்–மேகம்; ஆர் – நிறைந்த; பொழில் – சோலை; புடை–பக்கம் புலியூர் – சிதம்பரம்; அம்பல வாணன் – சபாபதி.

வறுமை வாழ்வு

இந்திரன் 'கலையாய்' என்மருங்கு இருந்தான்;
அக்கினி 'உதரம்'விட்டு அகலான்;
இயமன் எனைக்கருதான்; அரன்எனக் கருதி
நிருதிவந்து என்னைஎன் செய்வான்;
அந்தமாம் வருணன்இரு கண்விட்டு அகலான்;
அகத்தினில் மக்களும் யானும்
அநிலம தாகும் அமுதினைக் கொள்வோம்;
யார்எதிர் எமக்கு உளார்உலகில்?
சந்தம்இந்த வரிசையைப் பெற்றுத் தரித்திர
ராசனை வணங்கித்
தலைசெயும் எம்மை, நிலைசெய் சற்கீர்த்திச்.
சாளுவ கோப்பையன் உதவும்
மந்திர புயத்தான், திப்பைய ராயன்
மகிழ்வொடு விலையிலா அன்னோன்
வாக்கினால் குபேரன் ஆக்கினான், அவனே
மாசில்ஈ சான பூபதியே!

ஆயிரம் கண்ணையுடைய தேவேந்திரன் கிழிந்த ஆடை யாகி என்னிடம் இருந்தான்; நெருப்புத்தேவன் எப்பொழுதும் என்னுடைய வயிற்றை விட்டுப்போகமாட்டான்; எமன் என்னைச் சிவன் என்று கருதி என்னிடம் வரமாட்டான் நிருதியானவன் என்னிடம் வந்து என்ன செய்ய முடியும்? அழகிய வருணதேவன் எனது இரண்டு கண்களையும் விட்டுப் போகமாட்டான்; வீட்டில் எனது பிள்ளைகளும் நானும் காற்றாகிய உணவை உண்போம்; இவ்வுலகில் எங்களைப் போல் நாள்தோறும் இத்தகைய சிறப்புக்களைப் பெறுபவர் யார் இருக்கிறார்கள்? வறுமை என்னும் தலைவனை வழிபட்டு, அவனுக்குப் பணிந்து வாழும் எங்களை நிலை பெற்ற நல்ல புகழுடைய சாளுவ கோப்பையன் பெற்ற மந்தரமலைபோன்ற கைகளை உடைய திப்பையராயன் என்னும் வள்ளல் மகிழ்ச்சியுடனே தனது மதிப்பு வாய்ந்த கட்டளையினால் என்னை குபேரன் ஆக்கினான். அவனே குறைமற்ற ஈசான (வடகிழக்கு)த் திசைக்குரிய கடவுள் போன்றவன் ஆவான்.

நயம்: தன்னுடைய கிழிந்த கந்தைக்கு இந்திரனையும், வயிற்றுப் பசிக்கு அக்கினியையும், எலும்பு மாலைகள் மயமாக விளங்கும் சிவனைத் தனக்கும், உவமை கூறியுள்ளமை சொற்சுவை மிக்கவை ஆகும். வறுமையின் கொடுமையால் இரு கண்களிலும் நீர்வடிக்கும் துன்பத்திற்கு வருணன் கண்களை விட்டு நீங்கான் என்றும், வீட்டில் பிள்ளைகளும் உணவு உண்டு உயிர் வாழாது, காற்றைச் சுவாசித்து உயிர் வாழ்வதால் காற்றை உணவாகவும் உவமித்துள்ளார். இவ்வாறு அட்டதிக்குப் பாலகர்களும் தன்னிடத்தில் நிலைபெற்று இருக்கின்ற காரணத்தால் இதைவிடப் பெருவாழ்வு உலகில் ஒன்றும் இல்லை என்று தன்னையே பாராட்டிக்கொள்ளு கிறார் புலவர். இரு பொருள் தோற்றச் சொல்நயம் புலப்படுமாறு புலவர் வறுமை வாழ்வினை வருணித்துள்ளமை உள்ளத்தை உருகச் செய்கிறது.

கலை – ஆடை; உதரம் –வயிறு; அநிலம் – காற்று; அமுது– உணவு: சந்தம் – நாளும்; புயம்–தோள்.

நமக்குத் துணை யார்?

துயிலையி லே இடர் துன்னையி லேதெய்வர் சூழையிலே,
பயிலையி லே, இருள் பாதியி லேபசும் பால் அனத்தை
அயிலையி லே வயது ஆகையி லேநமக்கு யார் துணை தான்?
மயிலையி லே வளர் சிங்கார வேலர் மயிலையிலே.

மயிலையும், மிகுந்த கூர்மையுடைய அழகிய வேலையும் உடைய முருகரது திருமயிலை என்னும் ஊரிலே தூங்கும் பொழுதும், துன்பம் பல நம்மை நெருங்கி வரும்பொழுதும், பகைவர் பலர் நம்மைச் சூழ்ந்துகொள்ளும் போதும், நடு இரவிலே வழிநடக்கும்பொழுதும், பசும் பாலோடு கூடிய சோற்றினை நோய்வாய்ப்பட்ட காலத்து உண்ணும்பொழுதும், முதுமைப் பருவம் வரும்பொழுதும், அவரைத் தவிர நமக்கு எவர்தான் துணையாக இருக்கமுடியும்?

மயிலையிலேவளர் என்பதனை மயில் + அயிலே வளர் என்று கொள்ளவேண்டும்.

துயில் – தூக்கம்; துன் – நெருக்கம்: இடர் – துன்பம் ; தெவ்வர் – பகைவர் பயிலுதல் – பழகுதல், இங்கே நடத்தல்; அனத்தை – அன்னத்தைச் – சோற்றை அயிலையில் – உண்ணும் பொழுது; அயிலே – கூர்மையுடைய.

திருக்கழுக் குன்றம்

மாடேறு தாளு மதியேறு சென்னியு மாமலரோன்
ஓடேறு கையும், உடையார் தமக்கிடம் ஓங்கியநெல்
சூடேறு சங்கம் சொரிமுத்தை முட்டைஎன் றேகமலக்
காடேறும் அன்னம் சிறகால் அணைக்கும் கழுக்குன்றமே!

காளை வாகனத்தில் ஏறுகின்ற திருவடியும், பிறைச் சந்திரனை அணிந்துள்ள முடியும் பிரமனது தலை ஓட்டினை ஏந்திய திருக்கையும் உடைய சிவபெருமானுக்குத் தலமாவது நெல் போரின் மீது ஊர்வனவாகிய சங்குகள் சொரிகின்ற ஒளி பொருந்திய மணிகளாகிய முத்துக்களை தமது முட்டையென எண்ணி, தாமரைப்பூத் தொகுதியில் உலாவுகின்ற அன்னப்

பறவைகள் தமது அழகிய சிறகுகளினால் அணைத்துக் களிக்கின்ற திருக்கழுக் குன்றமேயாகும்.

தாள் – திருவடி ; சென்னி – முடி; மாமலரோன் – பிரமன்; சூடு – நெற்போர்; கமலம்– தாமரை.

தீங்கு செய்தவர் யார்?

பாரஇள நீர்சுமக்கப் பண்டே பொறாதஇடை,
ஆர வடம்சுமக்க ஆற்றுமோ?– நேரே
புடைக்கனத்த கொங்கையின்மேல் பூங்களபம் சாத்தி
இடைக்கனத்தம் வைத்தவரார்? இன்று

கனமான இளநீர்க் காய்போன்ற கொங்கைளைச் சுமப்பதற்கு முன்னமே வலிமையற்ற அவள் சிற்றிடையானது முத்து மாலையைத் தாங்க முடியுமோ? கொங்கைகள் ஒன்றுக் கொன்று நேராகப் பக்கம் பருத்து நெருங்கிய அவற்றின்மீது அழகிய சந்தனக்குழம்பைப் பூசி இப்போது இடைக்குக் கேடு செய்தவர் யார்?

பாரம் – சுமை ; பண்டே – முன்னமே; இடை – பெண்ணின் இடுப்பு: ஆரவடம்– முத்துமாலை; புடை – பக்கம்; கொங்கை – மார்பகம்; பூங்களபம் அழகி சந்தனக்குழம்பு: சாத்தி – பூசி

பெருங்காயம் தேடேன்.

வெங்காயம் சுக்கானால், வெந்தயத்தால் ஆவதென்ன?
இங்கார் சுமந்துஇருப்பார் இச்சரக்கை– மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டி யாரே!

திருவேரகத்தில் உள்ள செட்டியாகிய முருகப் பெரு மானே! வெவ்வினையால் எடுத்த இந்த உடலானது (வெம் காயம்) எனக்கு உண்டான வறுமைப் பிணியினால் சுக்குப் போன்று உலர்ந்துபோனால் வெம்மையான வினையினால் வரக்கூடிய துன்பம் என்ன? அது இவ்வித உடலை என்ன செய்ய முடியும்?

ஆதலினால் இந்தச் சாமானை யார் இங்கு சுமந்துகொண்டு இருக்க முடியும்? அழியாத சிறந்தவீட்டினைக் கொடுப்பீரானால் "இனி இந்தப் பெரிய உடலினை (பெரும் காயத்தை)த் தேடி நான் அலையமாட்டேன்.

நயம்: முருகப் பெருமானைச் செட்டியாராக உருவகம் செய்து, அவருடைய மளிகைக் கடையில் உள்ள வெங்காயம், சுக்கு, வெந்தயம் ஆகியவை தனக்குத் தேவை இல்லை என்றும், வயிற்றில் செரிக்காத பொருள்களை எல்லாம் சீரணிக்குமாறு செய்யும் சீரகம்தான் தனக்கு வேண்டும் என்றும், அது கிடைத்தால் பெருங்காயம் தேவை இல்லை என்றும் புலவர் நயம் தோன்றக் கூறுகிறார்.

மனிதன் உடலைப் பெற்றதனால் பல தீவினைகள் செய்து துன்பத்திற்கு ஆளாகிறான் ; மீண்டும் மீண்டும் வினைப் பயன் காரணமாகப் பிறவி எடுத்துக்கொண்டே இருக்கிறான். பிறவிக்குக் காரணமாக உள்ள வினையை அறுத்து வீடுபேறு தந்தருள்க; இந்த உடலால் பயன் ஒன்றும் இல்லை இதன் உட்பொருள். இவ்வாறு குறிப்புச் சொற்கள் கொண்டு அரிய கருத்துக்களை விளக்குவது பண்டைத் தமிழகத்துச் சித்தர் மரபாகும்.

வெங்காயம் –வெம் + காயம்; வெம்– கொடியவினை; காயம்– உடல்; வெந்தயத்தால் – வெந்து + அயத்தால்; வெந்து –கொடிய அயம் – வினை; சரக்கு – சாமான், இங்கே உடல் ; சீரகத்தை –சீர் + அகம் சிறந்த வீடுபேறு: பெருங்காயம் –பெரிய உடல்; ஏரகம்– திருவேரகம் – முருகனது ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை.

21. பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

தமிழகத்தில் பல சொக்கநாதப் புலவர்கள் இருந்திருக் கின்றனர். அவர்களை வேறுபடுத்தி அறிய, அவர்களுடைய பெயருக்கு முன்பு ஓர் அடைமொழி கொடுத்து வழங்குவது மரபு. இப்புலவரின் முன்னோர்கள் மதுரை மன்னரிடம் பல பட்டடை கணக்கு' என்னும் அலுவல் பார்த்து வந்தனர். பல பட்டடை என்பது பலவகைப் பண்டங்கள் உள்ள அறை இவர் தந்தை சொக்கலிங்கம்பிள்ளை என்பவராவர்.

இவர் மதுரைச் சொக்கநாதர், மீனாட்சி அம்மை ஆகியோரிடத்துப் பேரன்பு உடையவர். அவர்களைப் பல தனிப் பாடல்களால் வாழ்த்தியுள்ளார். அவை தமிழ்ச்சுவையும் மனத்தை உருக்கும் பக்திச் சுவையும் வாய்ந்தவை.சொக்க நாதர் இயற்றிய நூல்கள் மதுரை மும்மணிக்கோவை, மதுரை யம்பதி அந்தாதி,தேவை உலா, பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது, அழகர் கிள்ளைவிடு தூது முதலியவை. அக்காலத்தில் கன்னிவாடியில் சமீன்தாராகயிருந்த நரசிங்க நாயக்கர்மேல் 'வளமடல்' ஒன்றும் இயற்றி இருக்கிறார். இதனால், நரசிங்க நாயக்கர் புலவரை ஆதரித்தவர் எனத் தெரிகிறது.

மதுரை மும்மணிக் கோவை சொக்கநாதக் கடவுளைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றது. சொல்லணி பொரு ளணிகள் நிறைந்தது. தேவையுலா என்பது இராமேசுரவத்துக் கோயில் கொண்டுள்ள சிவபெருமான்மீது பாடப்பெற்றது. கிள்ளைவிடு தூது திருமாலிரும் சோலைமலையில் உள்ள அழகர் மீது பாடப்பெற்றது. இவருடைய சமரச நோக்கத்திற்கு இந்நூல் நல்லதொரு எடுத்துக்காட்டாகும். கிளியின் பெருமையையும், அழகர் சிறப்பும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. கிளியின் பல பெயர்களையும் எடுத்துப் பாராட்டியிருப்பது சிறப்பாக விளங்குகிறது.

இவர் காலத்தில் இராமநாதபுரத்தில் விசயரகுநாத சேதுபதி (1711 – 1725) வாழ்ந்தார். புலவருக்கும் சுப்பிர தீபக் கவிராயருக்கும் பகைமை இருந்ததாகத் தெரிகிறது. இவருடைய தனிப்பாடல்கள் படிப்போருடைய உள்ளத்தில் கருத்துக்களைத் தெளிவாகப் பதியும்படி செய்யும் ஆற்றல் வாய்ந்தவை. இவருடைய காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

திருக்குடந்தை சிவபெருமான் மீது பாடியது.

நின்று படியளக்கும் நீலக் கொடிகள் இரண்டு
என்றும்உள வாம்குடந்தை ஈச்சுரருக்கு, – ஒன்றுக்கு
உரைக்கும் அரை ஈந்தார்; ஒன்றதனுக்கு என்னோ
அரைக்கும் அரை ஈயார் அவர்.

திருக்குடந்தையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானிடத்து, நிலையாக எவ்வுயிருக்கும் உணவு முதலியவற்றை வினைக்குத் தக்கபடி அளந்து கொடுக்கின்ற நீல நிறமான கொடிகள் இரண்டு எப்போதும் உள்ளன. அக்கடவுளானவர் ஒரு கொடிக்குப் புகழப்படுகின்ற தமது திருமேனியில் பாதியை அளித்தார். மற்றொரு கொடிக்கு தனது திருமேனியில் எஞ்சிய அரை பாகத்தில் அரையாகிய காலை எக்காரணத்தினாலோ கொடுக்கவில்லை!

நயம்: நீல நிறத்தையுடைய உமாதேவிக்குத் தமது திருமேனியில் பாதிபாகத்தை அளித்து அருளிய சிவபெருமான் நீலவண்ணனாகிய திருமாலுக்குத் (அரையில் அரையாகிய கால்) தமது திருவடியைக் காண முடியாதபடி திருவிளையாடல் புரிந்தார் என்பது கருத்தாகும்.

திருமாலும் பிரமனும் சிவபெருமானின் அடிமுடியைக் காணப் பன்றியாகவும், அன்னமாகவும் வடிவெடுத்துச் சென்று தேடி அலைந்த கதையைக் கூறுகிறார் புலவர்.

திருமாலும் உமையும், அண்ணன் தங்கைகள் என்பதும், இருவரும் நீல (கறுப்பு) நிறம் உடையவர்கள் என்பதும் சமயநூல் வழக்கு. அவ்விருவரையும் இரண்டு கொடிகளாக உவமித்துள்ளார். உலகை அளந்தவர் திருமால்; மேலும் அவர் உலகிலுள்ள உயிர்களுக்குப் படி அளக்கின்றார். உமாதேவி இல்லறத்தில் முப்பத்திரண்டு அறங்களும் வழுவாமல் இருக்க உயிர்களைக் காத்தருள் புரிகின்றார்.

குடந்தை – கும்பகோணம் ; அரையின் அரை – கால்

தலைவி இரங்கல்.

ஊரைச் சுடுமோ? உலகம் தனைச்சுடுமோ!
ஆரைச் சுடுமோ? அறியேனே!–நேரே
பொருப்புவட்ட மானமுலைப் பூவையரே! இந்த
நெருப்புவட்ட மான நிலா.

உண்மையாக மலைபோன்று பருத்து உருண்டு திரண்ட கொங்கைகளை உடைய தோழியரே! நெருப்பு உருண்டையாக விளங்கும் இந்தச் சந்திரனது வெப்பம் பொருந்திய நிலவொளி ஊரைக் கொளுத்துமோ? இந்நில உலகைச் சுட்டு எரித்து அழிக்குமோ? வேறு யாரை எல்லாம் நீறு ஆக்குமோ என்பது எனக்குத் தெரியவில்லை.

நயம்: இரவு நேரத்தில் காதலனைப் பிரிந்து வருந்தும் தலைவி, வானில் தண்மதியம் நிலவொளி பரப்பி விளங்குவதால் காமவேட்கை பொறுக்க இயலாதவளாய்த் தலைவனை நினைந்து ஏங்குகிறாள். அந்நிலையில் நிலவொளி தனக்குத் தீயைப் போன்று கொடிய துன்பத்தைத் தருவதாகக் கருதி, அதனைத் தோழியரிடம் குறிப்பாகக் கூறுகிறாள்.

பூவை – நாகணவாய்ப் பறவை; இங்கே பெண்கள்.

நாணிக்கண் புதைத்தல்.

காலைஅர விந்தம் கழுநீர் உடன்கலந்தால்,
மாலைஅர விந்தம் மயக்காதோ?– பாலைப்
பழிக்கின்ற மென்மொழியீர்! பாண்டியனார் ஊரை
அழிக்கின்றது என்னோ அது.

பாலினும் இனிய மென்மையான சொற்களைப் பேசும் தோழியரே! விடியற்காலையில் தாமரை குவளை மலரோடு இன்ப மயக்கத்தைத் தராதோ? பாண்டிய மன்னனது நகரமாகிய மதுரையை அது என்னகாரணத்தினால் அழிக்கின்றதோ தெரியவில்லையே!

நயம்: தலைவி காதல் விளையாட்டைக் குறித்து நினைந்து நாணம் அடைகிறாள். தாமரை மலர்போன்ற தன் கைகளால் குவளை மலர்போன்ற தன் கண்களைப் பொத்திக் கொண்டு கொங்கைகளாகிய தாமரை மொட்டுக்களை விம்மிதமுடன் காட்டித் தோழியரிடம் தலைவனைக் கூடவேண்டும் என்னும் தனது வேட்கையைக் குறிப்பாகத் தலைவி உணர்த்துகிறாள். வெளிப்படையாகத் தலைவி தோழியரிடம் எனது காதலனோடு கூடி இன்புறவேண்டும் என்னும் வேட்கை உடையேன்' என்று கூறவொட்டாமல் பெண்களுக்கு இயல்பாக அமைந்த நாணம் தடுப்பதாலும், தோழியர் கேலி செய்வார்களே என்ற வெட்கத்தாலும் தன் கைகளால் கண்களை மூடிக்கொண்டு குறிப்பாகத் தனது ஆசையைப் புலப்படுத்துகிறாள்.

பாண்டியனார் ஊர் என்பது பொருட்சுவை மிக்குடையதாய் இலக்கிய இன்பம் தருவதாய் அமைந்து இருக்கிறது. தலைவனோடு தலைவி கூடி இன்புற விரும்புகிறாள். அக்'கூடலை அடைய ஒட்டாது நாணம் அழித்து விடுகிறது என்பது கருத்து. பாண்டியர் தலைநகரமாகிய மதுரைக்குக் 'கூடல்' என்பது பெயர். இங்குத் தலைவன் தலைவியர் 'கூடலை' உணர்த்துகிறது.

காலை அரவிந்தம் – மலர்ந்த தாமரை; இது தலைவியினுடைய கைகளுக்கு, உவமை; மாலை அரவிந்தம்– கூம்பிய மொட்டு வடிவமான தாமரை; இது தலைவியின் கொங்கைகளுக்கும் உவமை. கழுநீர்–குவளை மலர்; இது தலைவி யினுடைய கருவிழியுடைய கண்களுக்கு உவமை.

படிக்காசுப் புலவர் பாடலைப் புகழ்ந்து பாடியது.

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும், மூவுலகும் பரிமளிக்கும் ;
பரிந்து அவ் ஏட்டைத்
தொட்டாலும் கைம்மணக்கும்: சொன்னாலும்
வாய்மணக்கும்; துய்யசேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே!
பாட்டிலுறு நளினம்தானே!

தேன் ஒழுகும் பூங்காக்கள் நிறைந்துள்ள தென் களந்தை எனப்படும் பொன்விளைந்த களத்தூரில் உள்ள படிக்காசுப் புலவர் பாடிய செந்தமிழ்ப் பாட்டுக்கள் எழுதப்பட்ட சுவடியைப் பட்டினாலே மூடினாலும் அதன் மணம் உலகம் மூன்றிலும் பரவி மணம் கமழும்; அன்பால் அவ் ஏட்டைத் தொட்டாலும் தொட்ட கை வாசனை அளிக்கும்; நுண்மையதாகிய சேற்றில் அதனை நாற்றாக ஊன்றி நட்டாலும், பாட்டில் பொருந்திய நயம் தமிழ்ப் பயிராய்ச் செழித்து வளர்ந்து பயன் தரும்.

படிக்காசுப் புலவர் பாடிய பாடல்களின் கவித் திறனைக் கற்பனை வளத்தைப் பாராட்டுகிறார்.

மட்டு – தேன்; ஆரும் – ஒழுகும்; பரிமளித்தல் – மணம் கமழ்தல். பரிந்து – விரும்பி; நளினம் – நயம், இனிமை, அழகு.

பொற்கொல்லர் இயல்பு

ஒட்டாக ஒட்டியும், கால்பொன்னின்
மாப்பொன் உபாயமதாய்,
வெட்டாது இரான்;பணி செய்யாது இரான்;
செம்பொன் மேருவினைக்
கட்டாகக் கட்டி கடுகளவாய்
நிறை காட்டவல்ல
தட்டானுக்கு அஞ்சியல்லோ அணிந்தான்
சிவன் சர்ப்பத்தையே!

கால் வராகன் பொன்னில் ஒருமா அளவு, பொன்னாவது உரைக் கல்லில் ஒட்டும்படியாகத் தேய்த்தும், தந்திரமாகத் திருடாமலும் இருக்கமாட்டான்; நகைகளைச் செய்யாமலும் இருக்கமாட்டான்; செம்மை பொருந்திய பொன்மலையாகிய மேரு அளவினையுடைய பொன்னையும் இறுக்கி ஒடுக்கி, கடுகின் கனம் உடையதாய் நிறுத்திக் காட்டும் வல்லமை யுள்ள தட்டானுக்குப் பயந்து தான் சிவபெருமான் பொன்னால் ஆகிய அணிகள் வேண்டாம் என்று பாம்பினையே ஆபரணமாக அணிந்துகொண்டார்.

மா – 1/20 பங்கு; உபாயம் – தந்திரம்.

கலைப் பூங்கொடி.

கவியாகு மாதினைப் பெற்றோன் புலவன்;
கற்றோன் அனையாம்;
செவியாரக் கேட்டங்கு உணர்வான்
சகோதரன்; செந்தமிழ்க்கு
உதவியாய் அருமை அறிவான் பதி;
அவன்தான் இலையேல்,
புவியாகு மண்ணுக்குள் என்பலமாம்?
கலைப் பூங்கொடிக்கே!

பாட்டென்னும் பெண்ணுக்குப் பாவலன் தகப்பனாவான்; அந்தப் பாட்டினைப் படித்தவன் தாயாவான்; காதுகொடுத்து நன்றாக அப்பாட்டினைக் கேட்டு அதன் பொருளைத் தெரிந்த வன் உடன் பிறந்தவனாவான்; செந்தமிழ்ப் பாடல்களைப் பேணுபவனாய் அவற்றின் அருமையை உணருகின்றவன் அக்கவிதைப் பெண்ணின் கணவனாவான்; அவனும் இல்லையாயின் பூங்கொடிபோன்ற கவிதைக் குமரிக்கு இம்மண்ணுலகில் என்ன பயன் விளையும்?

அனையாம் – அன்னை, தாய்; அருமை – சிறப்பு; பதி – தலைவன், கணவன்; இலை – இல்லை; கலைப் பூங்கொடி – கவிதைக் கலையாகிய பூங்கொடி போன்ற பெண்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவது அறியேன்.

உன்பேரை; உணரேன்நின் சீரை; உனைக்கருதிக்
கரையேன்; எவ் வாறுகடப் பேன்?வினையைக் கடந்தகுண
வரையே! அருள்பெரு வாரிதியே! மதுரா புரிக்குத்
துரையே! அழகிய சொக்கே! தமிழ்தந்த சுந்தரமே!

உள்ளம், உரை, உடல் ஆகியவற்றைக் கடந்துநிற்கும் குணக்குன்றமே!பெரும் கருணைக் கடலே! மதுரைமா நகருக்கு தலைவனே! அழகிய சொக்கலிங்கப் பெருமானே! தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராகிய சோமசுந்தரப்பெருமானே! உன் திருப்பெயரை நான் சொல்லுவது இல்லை; உனது புகழை அறிவது இல்லை; உன்னை அன்புடன் நினைந்து உள்ளம் கனிந்து உருகமாட்டேன்; எவ்வாறு பிறவிக்குக் காரணமாக விளங்கும் வினைக் கடலை நீந்திக் கரையேறுவேன்?

வரை – மலை; வாரிதி – கடல்; துரை – தலைவன்.

மீனாட்சி அம்மையைப் புகழ்ந்து பாடியது.

கான்தெண்டன் இட்ட கனங்குழ
லாளைஎன் கண்மணியைத்,
தேன்தொண்டை வாய்ச்சியைத்,
தென்கூடல் வாழ்சிறு பெண்பிள்ளையை
யான்தெண்டன் இட்ட பொழுது
இயமன் எனக்கும் 'அடி
யேன்தெண்டள் இட்டவிண் ணப்பமென்று
ஓலை எழுதுவனே

கார் இருள் போன்று அடர்ந்துள்ள காடு நாணமுற்று வணங்கும் தன்மையினையுடைய பெருமை பொருந்திய அடர்த்தியான நீண்ட கூந்தலையுடைய அம்மையை, என் கண்ணின் கருமணி போன்ற அருமையானவளை, தேன்மொழி இசைந்த கனிவாயை உடையவளை, அழகிய மதுரைமா

நகரில் வாழ்கின்ற என்றும் கன்னிப்பருவமுள்ள குமரியை, நான் கண்டு வழிபட்டபொழுதே, அம்மையின் திருவருளைப் பெற்றேன். அதைக்கண்டு கூற்றவன் எனக்குக் கூட 'அடியேன் வணக்கமாய்ச் செய்யும் வேண்டுகோள்' என்று தொடங்கி ஓலையில் கடிதம் வரைந்து அனுப்புவான்.

மீனாட்சியின் திருவருளைப் பெற்ற அடியார்களுக்கு இறப்பதைப் பற்றிய அச்சம் உண்டாகாது என்பதை அருமையும் பெருமையும் அமையுமாறு புலவர் பாடியுள்ளார்.

கான் – காடு; தெண்டன் – வணக்கம்; குழல் – கூந்தல்; வாய்ச்சி – வாயினை உடையவள்; தென்கூடல் – அழகிய மதுரை; இயமன் – யமன்.

நற்றாய் இரங்கல்.

பாணியிலே புள்ளிமான்; பாகத்தே பச்சைமான்;
வேணிதனி லேஓர் வெள்ளைமான்;–காணுமலர்ச்
செம்மான் உலவும் திருமறைக் காட்டுஈசரே!
எம்மா னுக்குளங்கே இடம்?

அழகாகத் தோன்றும் தாமரைப்பூவில் வீற்று இருக்கும் திருமகள் தங்குகிற திருமறைக் காட்டில் எழுந்தருளியுள்ள இறைவனே! உம்முடைய கையில் புள்ளிகளையுடைய மான் இருக்கிறது; உம்முடைய இடப்பாகத்தில் பசுமை நிறமுடைய பார்வதி இருக்கிறாள்; உம்முடைய சடையிலே வெள்ளை நிறமான கங்கை இருக்கிறாள். என்னுடைய மகள் தங்குவதற்கு உம்முடைய திருமேனியில் இடம் எங்கு இருக்கிறது?

நயம்: திருமறைக் காட்டில் கோயில் கொண்டுள்ள மறைக் காடர்மீது காதல் கொண்ட மங்கை நல்லாளின் பெற்ற தாய், சிவபெருமான் தமது கையிலும், பக்கத்திலும், முடியிலும் மான்களை வைத்துக்கொண்டிருக்கிற நிலையில் தனது மான்விழி மங்கைக்கு இடம் இல்லையே என்று நினைந்து வருந்திக் கூறியதாக அகப்பொருள் நயம்தோன்ற இறைவனின் திருக்கோலத்தைப் புலவர் வருணித்துள்ளார்.

மான் என்பது பொதுச்சொல். அதற்குப் புள்ளிமான். பெண் என்பது பொருள். அது சிவபெருமான் கையிலே ஏந்தியுள்ள புள்ளிமானையும், இடப்பாகத்தில் விளங்கும் பச்சை நிறமாகிய பார்வதியையும், தலையிலே உள்ள வெள்ளை நிறமாகிய கங்கையையும் குறிக்கிறது.

பாணி – கை; பச்சை – கருமையைக் குறிக்கும்; வேணி – சடை செம்மான் – செந்நிற வடிவினளாகிய திருமகள்; திருமறைக்காடு – வேதாரண்யம் என்னும் சிவத்தலம்.

22. நமச்சிவாயப் புலவர் (கி.பி. 1707 –1761)

தொண்டை நாட்டில் தோன்றிய தமிழ்ப் புலவர்களுள் ஒருவராகிய இவர் சென்னைக்கு அடுத்துள்ள பல்லாவரம் என்று வழங்கும் பல்லவபுரத்தில் பிறந்தவர். இளமையிலேயே சிவ பெருமானிடத்துப் பேரன்பு உடையவராய் விளங்கினார். தக்க ஆசிரியரிடத்து இளமையில் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றுத் தேர்ந்தார்.

பாட்டிசைக்கும் பாவலனாய் விளங்கிய நமச்சிவாயப் புலவர் வடக்கே திருக்காளத்தி முதற்கொண்டு தெற்கே திருச்செந்தூர் வரையில் உள்ள சிவத்தலங்களை எல்லாம் நடந்து சென்று தரிசித்தார். தல யாத்திரையிலே ஈடுபட்ட புலவர் குறிப்பிட்ட நகரங்களில் சிறந்து விளங்கிய வள்ளல்களைக் கண்டு, அவர்கள் மனம் மகிழுமாறு தனது கவித்திறனைக் காட்டிப் பரிசுகள் பல பெற்றார். திருக்கோவிலூர் தாண்டவராயப் பிள்ளை புலவரைப் பேணிக்காத்த புரவலராக மட்டும் அமையாமல், அவருடைய சிறந்த நண்பராகவும் விளங்கினார். செல்லூரில் வாழ்ந்த பெருநிலக்கிழார் ஒருவர் புலவருக்கு மோதிரம் அணிந்து பாராட்டினார். காயல் பட்டினத்தில் இசுலாமிய சமயத்தைச் சார்ந்த தமிழ் விளங்கிய சீதக்காதி புலவரிடம் பேரன்பும் பெருமதிப்பும் உடையவராவார். அவர் இறந்த செய்தியைக் கேட்டு ஆற்றொணாத் துன்பத்திற்கு ஆளாகிய புலவர் பெருமான் 'சீமான் இறந்திட்டபோதே புலமையும் செத்ததுவே' என்று புலம்பினார். சீதக்காதியின் அருள் உள்ளத்தை நன்கறிந்தவரின் புகழ்மாலையாக அப்பாடல் விளங்குகிறது.

இராமநாதபுரம் சேதுபதி மன்னரையும், அவருடைய பிரதானி முத்து இருளப்ப பிள்ளையையும் பாடிப் பரிசுகள் பெற்றுள்ளமையால் அக்காலக் குறுநில மன்னருடைய

உள்ளங்களைக் கவரக்கூடிய நாநலம் வாய்க்கப் பெற்றவர் நமச்சிவாயப் புலவர் என்பது புலனாகின்றது.

டூப்ளே காலத்தில் புதுச்சேரியில் 'துபாஷியாக' இருந்த பிரம்பூர் ஆனந்தரங்கம் பிள்ளையின் நெருங்கிய நண்பராகப் புலவர் வாழ்ந்தார், அவருக்கு பாமாலை அணிவித்துப் பாராட்டியுள்ளார். நமச்சிவாயர் வாழ்ந்த காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

சோலைமலை அழகர்மீது பாடியது.

வெறி விலக்கு.

வண்டுறை சோலைமலைப் பரிகாரி வந்தால் இவளுக்கு
அண்டு படாத இக்காமச் சுரம்விடும்; ஆதலினால்
பண்டு பழகினர் போலிந்த வேளையில் பாயசத்தைக் கோதையரே
கொண்டு வந்தீர்இதில் தோசம் பிறந்திடும்

தாய்மாரே! இவளுக்கு வரக்கூடாத இந்தக் காமநோய், வண்டுகள் தங்கும் சோலைமலையில் உள்ள மருத்துவராகிய 'அழகர்' வந்தால் குணமாகிவிடும். ஆதலினால் முன்பு மருந்து கொடுத்துத் தெரிந்து பழகியவர்கள் போல் இந்நேரத்தில் பாயசத்தைக் கொண்டு வந்தீர்கள். இதனால் சன்னி உண்டாகும்.

நயம்: பாயசம் என்பதைப் பாய் + அசம் என்று பிரித்து வேறு பொருள் கொள்ளலாம். பாய்கின்ற ஆட்டைக்கொண்டுவந்தீர் பலியிடுவதற்கு அவ்வாறு பலியிட்டால் நமக்கு பாவம் அல்லவா வந்து சேரும், எனவே வேலன் வெறியாட்டுவேண்டாம். உன் மகளுக்கு வந்து இருக்கும் நோய் காதல் நோய்; அந்நோயினைப் போக்க வல்ல மருத்துவன் திருமாலிரும் சோலையில் உள்ள அழகரே ஆவார்" என்று தோழி (தலைவிக்கு வந்துள்ள நோயைத்) தாய்மாருக்குக் குறிப்பாக உணர்த்தி வெறியாட்டு வேண்டாம் என்று வற்புறுத்தியதாகக் கொள்ளுவது அகப்பொருள் துறையைச் சேர்ந்த நயமிக்க கருத்தாகும்.

பரியாரி – பரிகரிப்பவன் – குணப்படுத்துபவன்; அண்டு படாத – அண்டவிடாத – நெருங்கவிடாத; பண்டு – முன்பு; அசம்– ஆடு; கோதை –பெண்கள். இங்குத் தாய்மார்களைக குறிக்கிறது.

சீதக்காதியைச் சிறப்பித்துப் பாடியது.

தடக்கும்ப கிம்புரிக் கொம்பு அ சலம்பெரும் தந்திபட,
நடக்கும் துரங்கத் துரைசீதக் காதிநன் நாட்டில், நல்
வடக் குங்குமக் கொங்கை மின்னே! அவன்
(தெருவாயிலிலே
கிடக்கும் கவியும் பரராச ரத்தினகிரீடமுமே!

பரந்த கும்பம் போன்ற மலையும், தந்தப் பூணுமுடைய மலைபோன்ற பெரிய யானை சாகும்படி செல்லுகின்ற குதிரைகளையுடைய தலைவனாகிய சீதக்காதியின் சிறந்த நாட்டில் அழகான முத்துமாலை அணிந்த குங்குமக் குழம்பு பூசப்பெற்ற கொங்கைகளையுடைய மின்னல்கொடி போன்ற பெண்ணே! அவனுடைய வீட்டின் முற்றத்திலே அவனுக்குப் புலவர்களால் சூடப்பட்ட புகழ்மாலைகளாகிய கவிதைகளும், பகை அரசர்களது மணிமுடிகளும் பரந்து கிடைக்கும்.

சீதக்காதி என்னும் பெயர் 'சேக் அப்துல்காதர்' என்ற இசுலாமியப் பெயரின் திரிபாகும்.

கும்பம் – குடம் ; கிம்புரி – யானையின் கொம்பில் அணியப்படும் பூண்; அசலம் – மலை; தந்தி – யானை; தூங்கம் – குதிரை; வடம் – மாலை: பரராசர் – பகை அரசர்.

'சீதக்காதி இறந்தபொழுது பாடியது.

பூமாது இருந்தென்? புவிமாது இருந்தென்? பூதலத்தில்
நாமாது இருந்ததென்ன? நாம்இருந் தென்ன? நல்
[நாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடை மிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே!

இந்நில உலகில் தாமரைப்பூவில் தங்கும் இலக்குமி இருந்தும் யாதுபயன்? நிலமகள் இருந்தும் யாது பயன்? கலைமகள் இருந்தும் யாதுபயன்? நல்ல புலமை வாய்ந்த புலவர்களுக்கு மன்னனும், அழகுபொருந்திய பெருமை மிக்க சீதக்காதி என்னும் பேராளனுமான, வள்ளல் தன்மையில் சிறந்து விளங்கிய தலைவன் உயிர் நீத்த போதே புலவரின் கல்விச்சிறப்பும் ஒழிந்துபோயிற்று.

நயம்: சீதக்காதி எனும் கொடை வள்ளல் புலவர்களைப் போற்றி அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தான். அதன் பயனாகப் புலவர் கல்விகேள்விகளில் மேன்மேலும் சிறந்து விளங்கியதோடு, கவித்திறனும், கற்பனை வளமும், பொருளாழமும் பொருந்திய பாடல்கள் இயற்றும் புலமைத் திறனைப் பெரும் பேறாகப் போற்றி வளர்த்தனர். இன்று சீதக்காதி இறந்தமையால் புலவர்களைப் போற்றுவார் உலகில் இல்லை. அவர்கள் கல்வித்திறனை வியந்து பாராட்டிப்பரிசு அளிப்பார் உலகில் இல்லை, எதிர்காலத்தில் புலவனுக்கும் அவன் புலமைக்கும் வாழ்வு இல்லை. ஆகவே சீதக்காதியோடு புலமையும் செத்தது என்று புலவர் மனம் குழைந்து வருந்துகிறார்.

பூமாது – திருமகள்; புவிமாது – நிலமகள்; நாமாது – கலைமகள், பூதலம் – பூவுலகம் ; கோமான் – அரசன்; அமர் – பொருந்திய; மால் – பெருமை;

விழியின் அழகு.

மஞ்சும்அஞ் சும்கைப் பரராச
சேகர மன்னன்வெற் பில்
பஞ்சும்அஞ் சும்,பதப் பாவைநல்
லாய்! படை வேள்பகழி
அஞ்சும் அஞ்சும்; கயல் அஞ்சும்அஞ்
சும்; கடல் அஞ்சும் அஞ்சும்;
நஞ்சும்அஞ் சும்வெற்றி வேலோ
உனது நயனங்களே!

மேகமும் நாணும்படியான வரையாது வழங்கும் கையினனாகிய பரராச சேகரனாகிய மன்னனது மலையில் உள்ள மென்மைத் தன்மையில் பஞ்சும் பயப்படத்தக்க அடிகளை தங்கப்பதுமை போன்ற அழகியே! மன்மதனுடைய மலர்க்கணைகள் ஐந்தும் உன்னுடைய வேல்விழியின் நோக்கிற்குத் தோற்று ஓடிவிடும்; கயல் மீன்கள் பெரிதும் பயப்படும்; கடலும் மிகுதியாக அஞ்சும்; விடமும் கண்டு நடுங்கும்; உன்னுடைய விழிகளின் கூர்மை வெற்றியைத் தருகின்ற வேல் போன்றனவோ? யான் அறிகிலேன்.

நயம்: மங்கையர்க்கரசி ஒருத்தியின் பாதங்களின் மெல்லிய தன்மையை வியந்து, பஞ்சும் அஞ்சும் அவள் விழிகளை வியந்து, மன்மதனது மலர்க்கணைகளும், கருமையுடைய கடலும், கெண்டை மீனும், கொடிய நஞ்சும் கண்டு – நாணம் அடையுமாறு செய்கின்றதாகிய வெற்றிவேலோ எனப் புலவர் புகழ்ந்து போற்றியுள்ளார்.

அஞ்சு என்பது பலபொருள் ஒருசொல். அச்சம், நாணம் தோல்வி, ஐந்து, மிகுதி முதலிய பொருள் உடையதாகும். இச்சொல்லினைப் பல முறை கையாள்வதன் மூலம் புலவர் சொற்சுவையும், பொருட்சுவையும் கனிந்த கவிதையைப் படைத்துப் பெண்மையின் மென்மையைப் போற்றுகின்றார். மஞ்சு, பஞ்சு, அஞ்சு, நஞ்சு என்னும் சொற்களில் உள்ள எழுத்துக்களில் பெரும்பான்மை மெல்லினத்தைச் சார்ந்தனவாக உள்ளன. பெண்மையின் மென்மையைப் புலப்படுத்த, புலவர் மெல்லினத்தைத் தேர்ந்து எடுத்துச் சந்த இன்பம் தோன்ற சொல்லோவியமாக்கிக் காட்டும் கவித்திறன் கற்பார் உள்ளத்தைக்கவரும் தன்மையதாகும்.

மஞ்சு – மேகம்; வெற்பு – மலை; வேள் – மன்மதன்; பகழி – அம்பு: கயல் – சேல்கெண்டை மீன்; நஞ்சு – விஷம்; நயனம் – கண் .

ஆனந்தரங்கம் பிள்ளை

பாரார்சொல் லார்ஆர்? பறவைக் குலங்கள் தம்மில்
சீராரும் கிள்ளை முதல் செப்பலால் – ஓர் ஆ
யிரம்பையான் 'அந்தரங்கன் இன்பரங்கன்' என்பன்
பிரம்பை ஆனந்தரங்கன் பேர்!

ஓராயிரம் படங்களையுடைய ஆதிசேடனுக்குக் கல்வியினால் மிக நெருங்கிய நண்பன்; இன்பத்தை அளிக்கின்ற திருவரங்கப் பெருமானுடைய பக்தன், பிரம்பூரில் உள்ள ஆனந்தரங்கன். அவனுடைய பெயரினை பறவைக் கூட்டத்தில் பேசும் சிறப்பு வாய்ந்த கிளி முதலிய பறவைகள் 'ரங்கா ரங்கா' என்று சொல்லுகின்றதால் உலகத்தில் உள்ள மக்களில் அவன் பெயரைச் சொல்லாதவர்கள் யார் இருக்கிறார்கள்?

ஆனந்தரங்கன் என்னும் வள்ளல் ஆதிசேடன்மீது பள்ளி கொண்டு உள்ள திருவரங்கநாதனுடைய மெய்யன்பன் ஆவான் என்பதைத் தனது கற்பனைத் திறன் தோன்றப் புலவர் புகழ்ந்துள்ளார்.

பாரார்–உலகத்தார்; கிள்ளை – கிளி: ஓராயிரம்பை – ஆயிரம் படங்களையுடைய பாம்பு : அந்தரங்கன் – மெய்யன்பன்; இனப ரங்கன் – முத்தி இன்பத்தை அருளுகின்ற திருவரங்கன்.

23. படிக்காசுத் தம்பிரான் (கி.பி. 1686–1723)

இப்புலவர் பெருந்தகையின் இயற்பெயர் தெரியவில்லை. சிதம்பரத்திலே சிவகாமி அம்மையார் பஞ்சாக்கரப் படியில் வைத்த படிக்காசினைப் பெற்றமையால் 'படிக்காசுப் புலவர்' எனும் பெயர் பெற்றார் என்பர். தொண்டை மண்டலத்தில் உள்ள பொன்விளைந்த களத்தூரில் வேளாளர் குடியில் தோன்றியவர். இளமையில் கற்கவேண்டிய நூல்களை எல்லாம் நன்கு கற்றுணர்ந்த பின்பு, 'இலக்கண விளக்கம் எனும் அருந்தமிழ் இலக்கணத்தின் ஆசிரியரான வைத்திய நாத தேசிகரிடம் பழந்தமிழ் இலக்கியங்களையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் கற்க விரும்பினார். தேசிகர் வாழ்ந்த திருவாரூருக்குச் சென்று அவரிடம் பல நூல்களை அரிதின் முயன்று பயின்றார். கவிபாடும் புலமை பெற்றபின் ஆசிரியரிடம் விடைபெற்றுக் கொண்டு தம்மூரை அடைந்தார்.

இல்வாழ்க்கையில் ஈடுப்பட்ட புலவர் வறுமையால் வாடி நலிந்தார். தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்குப் பசு ஒன்று வேண்டும் என்று வல்லமா நகர் காளத்தி பூபதியைக் கண்டு கேட்டார். புலவரின் நிலையைக் கண்டு வருந்திய அவர் புலவருக்குப் பொன்னும், பொருளும், பசுவும் பரிசாகக் கொடுத்து அனுப்பினான். அக்காலத்திலம், மாவ(ம) ண்டூரில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய கறுப்பமுதலியார் தொண்டை மண்டலத்தின் பெருமைகளை எல்லாம் தொகுத்து ஒரு சதகம் பாடியருளுமாறு வேண்டினார். அவர் வேண்டு கோளுக்கிணங்கிப் படிக்காசுப் புலவர் 'தொண்டை மண்டல சதகத்தைப்' பாடி அரங்கேற்றம் செய்தார். அதைக் கேட்டு மகிழ்ந்த முதலியார், பெரும்பொருளைப் பரிசாக அளித்ததோடு, படிக்காசருடைய பல்லக்கையும் தாங்கி அவரைப் பெருமைப்படுத்தினார்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருக்கோயில்களைக் கண்டு வணங்குவதற்காகத் தென்திசை நோக்கிப் புறப்பட்டார். தில்லை அம்பலத்தில் பலநாட்கள் தங்கி இறைவன் திருக்கூத்தைக் கண்டு களித்தார். பின்பு இராமநாதபுரம் வரையிலுள்ள கோயில்களை வழிப்பட்டுக் கொண்டு சென்றபோது இராமநாதபுரத்து மன்னர் இரகுநாத சேதுபதியைச் சந்தித்தார். புலவருக்கு வரையாது வழங்கும் வள்ளலாக விளங்கிய சேதுபதியின் உள்ளத்தைக் கவர்ந்தார். பல நாட்கள் அங்கிருந்து, பின்பு காயல் பட்டினம் என்னும் ஊருக்குச் சென்றார். அங்குச் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த சீதக்காதி என்ற இசுலாமிய வள்ளலின் அறச்செயல்களையும், அறிவுத்திறனையும், பண்புநலனையும் பாராட்டிப் பாமாரி பொழிந்தார். அவரிடம் பரிசுகள் பல பெற்று, திருச்செந்தூர் சென்று முருகனை வணங்கித் திரும்புகையில் சோழ நாட்டில் உள்ள தண்டலை எனும் ஊரில் உள்ள சிவபெருமான் மீது தண்டலையார் சதகத்தைப் பாடினார். அந்நூல் பழமொழி விளக்கம் எனப் போற்றப்படுவதாகும்.

சீதக்காதியையக் காண்பதற்காகப் புலவர் மீண்டும் சென்றபோது, அவன் பூதவுடலை நீத்து புகழுடலை எய்தியதாக ஊரார் கூறினார். சீதக்காதியின் சமாதி அருகில் சென்று உள்ளம் கசிந்துருகப் பாடினார். அவர் சில பாடல்கள் பாடிய அளவில், சமாதியின் பக்கத்தில் ஒரு வெடிப்புண்டாயிற்று. அதனின்றும் ஒரு கை மேலே தோன்றி விரலில் இருந்த மோதிரத்தை புலவர் முன்னிலையில் நழுவ விட்டு, மீண்டும் உள்ளே சென்றது. அதைக் கண்டு புலவர் வியப்பும் திகைப்பும் அடைந்து, 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்று போற்றிப் புகழ்ந்தார் என்பது கதை.

பிற்காலத்தில் தருமபுர ஆதீனத்தில் துறவியாய்ச் சேர்ந்து 'தம்பிரான்' ஆனார். மடத்தின் தலைவர் புள்ளிருக்கும் வேளூரில்

உள்ள வைத்தீசுரன் கோயில் கட்டளைத் தம்பிரானாகப் படிக்காசுப் புலவரை அமர்த்தினார். அங்கே எழுந்தருளியுள்ள இறைவன்மீது புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம்' பாடினார். படிக்காசுப் புலவர் பாட்டின் பெருமையைப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், 'மட்டாரும் தென் களந்தைப் படிக்காசன் உரைத்த தமிழ்' எனும் பாடலில் பலவாறு சிறப்பித்துப் போற்றியுள்ளார்.

திருச்செந்தூர் முருகன்.

சின்னம் சிறுபிள்ளை; செங்கோட்டுப் பிள்ளை;
சிவந்த பிள்ளை;
பொன்நெல் மணிப்பிள்ளை: பூலோகம் எங்கும்
புகழும் பிள்ளை ;
சொல்நெஞ்சு உழல்கின்ற சூரனைக்கொன்ற
சொக்கேசர் புள்ளை
வண்ணக் கிளிப்பிள்ளை; செந்தில்குறத்திக்கு
மாப்பிள்ளையே!

இளமை மிக்க பருவத்தினனாக உள்ள சிறுபிள்ளை; திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் குமரன், செந்நிறமான முருகன் ; பொன்னினாலும் நவமணிகளாலும் அணி செய்யப்பெற்ற சிங்காரப் பிள்ளை; நில உலகில் மக்கள் அனைவரும் போற்றுகின்ற குமரக்கடவுள்; உள்ளமும் உரையும் தடுமாறுகின்ற சூரபத்மனை அழித்த சொக்கலிங்கப் பெருமானது மகன் : திருச்செந்திலில் இருக்கும் அழகிய பசுமை நிறமுடைய கிளியைப் போன்ற குறத்தியாகிய வள்ளி அம்மைக்கு மனவாளனாவான்.

செங்கோடு – திருச்செங்கோடு – சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லுக்கு அருகில் இருக்கும் முருகன் கோயில்; வண்ணம் –நிறம்.

இதுவும் அது.

கல்லடிக்கும் உளியிரண்டு காதடிக்குள்
அடிப்பதெனக், கவிதை கேட்டுப்
பல்லடிக்குக் கிடுகிடெனப் பறையடிக்கும்
நெஞ்சர்தமைப் பாடுவேனோ ?
வில்லடிக்கும். பிரம்படிக்கும் கல்லடிக்கும்,
விரும்பிநின்ற மெய்யன்ஈன்ற
செல்லடிக்கும் தடவரையில் சேறடிக்க
அலையடிக்கும் செந்திலானே!

விசயன் வில்லினால் அடித்ததையும், பிட்டுக்கு மண் சுமந்தபோது பாண்டியன் பிரம்பால் அடித்ததையும், சாக்கிய நாயனார் கல்லால் அடித்ததையும் அன்பின் காரணமாகப் பொறுத்திருந்த மெய்ப் பொருளாகிய சிவபெருமான் தந்தருளிய, மேகங்கள் முழங்கும் உயர்ந்த மலைகளின்மேல் சேறு படும்படியாக அலைமோதுகின்ற கடலை உடைய செந்திற் குமரனே! புலவர் பாடல்களைக் கேட்டு, கல் அடிக்கும் உளி இரண்டு காதுகளின் அடியில் அடிப்பதுபோல உணர்ந்து பல் கிடுகிடென நடுங்கிப் பாடினவர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமே என்று அஞ்சிக் கலங்கும் மனமுடைய கயவர்களை நான் பாடமாட்டேன்.

செல் – மேகம்.

சீதக்காதியைப் புகழ்ந்து பாடியது.

ஓர்தட்டிலேபொன்னும், ஓர்தட்டிலே நெல்லும்ஒக்கவிற்கும்
கார் தட்டியபஞ்ச காலத்திலே, தங்கள் காரியப்பேர்
ஆர்தட்டினும் தட்டுவாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட்டியதுரை மால்சீதக் காதிவ ரோதயனே!

பொன்னையும் நெல்லையும் தராசிலே நிறுத்துச் சமமாக விற்கின்ற, மழை பெய்யாது தவறிப்போன கறுப்புக்காலத்தில், தங்கள் தந்நலத்தையே நோக்கமாகக்கொண்ட எவர்

தடுத்தாலும், சோறிடும் தருமத்திற்குத் தடை உண்டாகாமால் 'நான் இருக்கின்றேன்; அஞ்சவேண்டாம்' என்று ஏழை எளியவர்கட்டு நெஞ்சைத் தட்டிக்காட்டி உறுதி கூறியுள்ள கார்மேகம் போன்ற கொடையாளனாகிய சீதக்காதி என்னும் அருளாளன் வரத்தினால் பிறந்தவனாவான்.

ஒக்க –ஒப்ப; கார் – மழை; வரோதயன் –வரத்தினால் தோன்றியவன்.

இதுவும் அது.

ஈயாத புல்லர் இருந்தென்ன? போயென்ன? எட்டிமரம்
காயாது இருந்தென்ன? காய்த்தும் பலனென்ன?
[கைவிரித்துப்
போயா சகம்என்று உரைப்போர்க்குச், செம்பொன்
[பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் வேள்சீதக் காதி ஒருவனுமே!

கொடுக்காத கீழ்மக்கள் உலகில் இருந்தாலும் இறந்தாலும் பயன் யாதும் இல்லை. எட்டிமரம் காயாது இருப்பதனால் யாருக்கும் குறை இல்லை; காய்த்துவிடுவதாலும் யாருக்கும் நன்மை இல்லை. தனது இரு கைகளையும் விரித்துச் சென்று 'பிச்சை' என்று சொல்லி ஏற்போருக்குச் செம்பொன்னைத் தன் கையிலிருந்து ஒவ்வொரு பிடியாக இடைவிடாது கொடுத்து உதவுபவன் குறுநில மன்னன் போல் சிறப்புற்று விளங்கும் சீதக்காதி என்னும் ஒப்பற்ற வள்ளலே ஆகும்.

புல்லர் கயவர்: யாசகம் – பிச்சை.

இதுவும் அது.

காய்ந்து சிவந்தது சூரியகாந்தி; கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்; தொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்; அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி இருகரமே!

சூரியகாந்தி எனும் மலர் வெயிலிற் காய்ந்து செந்நிறம் அடைந்தது; மின்னல் கொடிபோன்ற பெண்களுடைய நீண்ட கண் புணர்ச்சியின் மிகுதியால் செந்நிறம் கொண்டது. பாட்டிசைக்கும் பாவலரது மனம் பழமையான இலக்கியங்களை ஆராய்ச்சி செய்து கற்று செம்மை அடைந்தது. மேகம் போன்று வரையாது வழங்கும் வள்ளலாகிய சீதக்காதியின் கைகள் இரண்டும், நாள்தோறும் இரப்போர்க்குப் பொருளை வாரி வழங்குவதனால் சிவந்து போயிற்று.

கலவி –கூடல்; தொல் – பழைய: ஆய்ந்து – ஆராய்ந்து: அனுதினம் – நாள்தோறும்.

இதுவும் அது

தேட்டாளன் காயல்துரை சீதக்காதி சிறந்தவச்ர
நாட்டான்;புகழ்க்கம்பம் நாட்டிவைத்தான் தமிழ்நாவலரை
ஓட்டாண்டியாக்கி அவர்கள் தம்வாயில்ஒருபிடிமண்
போட்டான்; அவனும் ஒளித்தான் சமாதிக்குழிபுகுந்தே!

பொருளைத் தேடி ஈட்டுவதிலே வல்லவனான காயல் பட்டனத்திற்குத் தலைவனாகிய சீதக்காதி எனும் வள்ளல் மேன்மையுடைய வயிரம் பொருந்திய மனநாட்டத்தை உடையவன்; உலகில் நிலைத்து நிற்கும் புகழாகிய பெரிய தூணை நிலை நாட்டி வைத்தான்; தமிழ்ப்புலவர்களை ஓடு எடுத்து இரந்துண்ணும் பிச்சைக்காரர்களாக்கி அவர்களுடைய வாயில் ஒருபிடி மண்ணைப் போட்டான். ஏனெனில் அவனும் சமாதிக் குழியில் புகுந்து ஒளித்துக்கொண்டான்.

நயம் : தமிழ்ப் புலவர்களை ஓட்டாண்டியாகும்படி பரிதவிக்கவிட்டுக் கொடையாளன் ஆகிய சீதக்காதி என்னும் புரவலன் இறந்தான். இவன் இறந்த பின்பு பாவலர்க்குப் பரிசளிப்பார் எவரும் இல்லை என்பதைப் புலவர் அவலச்சுவையுடன் குழைத்துத் தந்துள்ளார்.

தோட்டாளன் – பொருள் ஈட்டுவதில் வல்லவன்: காயல் –இராமநாதபுர மாவட்டத்தில் கிழக்குக் கடற்கரையில் சிறப்புடன் விளங்கிய துறைமுகத்திற்குக் காயல் பட்டினம் என்று பெயர்.

முடியாத செயல்கள்

பொல்லாத மூர்க்கருக்கு எத்தனை
தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க் குண்டான குணம்வரு
மோ?நடுச் சாமத்திலே
சல்லாப் புடவை குளிர் தாங்கு
மோ? பெரும் சந்தையினில்
செல்லாப் பணம்செல்லு மோ? தில்லை
வாழும் சிதம்பரனே!

தில்லையில் திருக்கூத்தாடும் அம்பலவாணரே! நள்ளிரவில் மெல்லிய –உடையானது வாடைக் காற்றைத் தடுக்க முடியுமோ? பெரிய சந்தையின் நடுவில் செல்லாத காசினைச் செல்லவைக்க முடியுமோ? அறிவில்லாமல் தீமையாள செயல்களையே செய்யும் மூடருக்கு எவ்வளவுதான் அறிவுரை சொன்னாலும் நல்லவரிடம் இயற்கையாக அமைந்துள்ள நல்ல பண்புகள் ஏற்படுமா?

பொல்லாத – கொடிய; புத்தி – அறிவுரை; நடுச்சாமம் – நள்ளிரவில்; சல்லாப்புடவை –மெல்லிய ஆடை.

பரிசு பெற்றபோது பாடியது.

வழிமேல் விழிவைத்து, வாடாமல்
என்மனை யாளும் மற்றோர்
பழியாமல், பிள்ளையும் பால்என்று
அழாமல், பகீர்'எனும்சொல்
மொழியாமல் என்னை வரவிட்ட
பாவி முசித்துச்சதை
கழியாமல், ஆ அளித் தாய்வல்ல
மாநகர்க் காளத்தியே!

வல்லமா நகரில் வாழும் காளத்தி வள்ளலே! நான் திரும்பி வருகிற வழியிலே பார்த்துக்கொண்டு என் மனைவி மனத் தளர்ச்சி அடையாமலும், பிறரைப் பழிச்சொல் சொல்லாமலும்,

குழந்தை பால் கேட்டுக் கதறி அழாமலும் இருக்க என்னை இங்கே அனுப்பிய எனது மனைவி, மனம் திடுக்கிடும்படியான சொற்களைக் கூறாமல் அவள் 'வருந்தி உடம்பு மெலிந்து வருந்தாமலும் கறவைப் பசுவைத் தந்தாய்.

முசித்து – வருந்தி.

சனியான தமிழ்

அடகெடுவாய்! பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம்; அறிவில்லாமல்
திடமுளமோ கனமாடக், கழைக்கூத்தாடச்,
செப்பிடுவித் தைகள் ஆடத் தெரிந்தோம் இல்லைத்;
தடமூலைவே சையராகப் பிறந்தோம் இல்லை;
சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோம் இல்லை;
என்ன சென்மம் எடுத்துஉலகில் இரக்கின்றோமே;

நெஞ்சமே ! நீ கெட்டு விடுவாய்! பிழைப்பதற்குப் பல வகைப்பட்ட தொழில்களும் இருக்கும்போது அவற்றின் தன்மையை அறியாமல், கல்வியே மற்றவைகளைக் காட்டிலும் மேன்மையுள்ளதென்று படித்துவிட்டோம்; திறமையுடையதாகிய எல்லாரையும் மயங்குமாறு வித்தைகளைச் செய்யவும், வானுற உயர்ந்த மூங்கில் கம்பத்தின்மீது நின்று கூத்தாடவும்,கண்கட்டி வித்தைகள் புரியவும், கற்றோம் இல்லை; பருத்த கொங்கைகளை உடைய விலை மகளிராகப் பிறந்தோம் இல்லை; சனிபோன்று துன்பம் செய்கின்ற தமிழ்க் கல்வியைக் கைவிட்டு, அழகிய பெண்களுடன் வாழ்ந்து, அவர்களுக்காகத் தூதாய்ச் செல்லும் தொழில் செய்து உயிர் வாழ்ந்தோம் இல்லை. (இத்தகைய தொழில்களைக்கற்காது) இவ்வகையான பிறவியை எடுத்து உலகில் பலரிடத்தில்போய், பிச்சை எடுத்து வருந்துகிறோம். இத்தகைய வாழ்க்கை இரங்கத்தக்கது.

புலவர் ஈயாத உலோபிகள் பலரைப் பாடியும் பரிசு பெறாதபோது. உண்மைக்கல்வியைப் பேணாது. ஆடல் பாடல் களிலும், செப்பிடு வித்தைகளிலும் கருத்தைச் செலுத்தும் உலக இயல்பை நினைந்து வருந்திப் பாடியதாகும். வெறும் கல்வி பயன் தராததைக் கண்ட புலவர் தொழிற் கல்வி கற்காமல் போய்விட்டோமே என்று வருந்துகிறார்.

மோகனம் ஆட – அறிவை மயக்கும் ஆடல் பாடல்; கழைக் கூத்து – மூங்கிலின் உச்சியில் நின்று ஆடும் கூத்து; செப்பிடு வித்தை –கண்கட்டி வித்தை; தடம் – பருத்த, பரந்த

சீதக்காதி இறந்தமை குறித்துப் பாடியது.

'விண்ணுக்கும் மண்ணுக்கும் பேராய்விளங்கும் தேவேந்
[த்தரனெனும்
கண்ணுக்கினிய துரைசீதக் காதி, கமலநிகர்
தண்ணுக் கிசைந்த வதனசந்த் ரோதய சாமி இந்த
மண்ணுக்குளே ஒளித் தான் புலவோர் முகம்வாடியதே!

சீதக்காதி வள்ளல் நிலவுலகிலும் வான் உலகிலும் புகழ்பெற்று விளங்கும் தேவேந்திரன் என்று சொல்லுமாறு கண்ணுக்கு இனிய அழகான தோற்றமுடைய தலைவர்; தாமரை மலரை ஒத்த, குளிர்ச்சி பொருந்திய முகத்தில் நிலவொளி வீசும் தேவனாகிய அவர் இந்த மண்ணிற்குள்ளே மறைந்தார். தங்களை ஆதரிப்போர் இல்லாமையால் புலவர்களுடைய முகங்கள் கவலையினால் வாடிப்போயின.

பேர் – புகழ்;கமலநிகர் – தாமரை ஒத்த; வதனம் –முகம்

போலிப் புலவர்கள்.

குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை!
குறும்பி அளவாய்க்கதைக் குடைந்து தோண்டி
எட்டினமட்டும் அறுப்பதற்கோ வில்லி இல்லை;
இரண்டொன்றாய் முடிந்து தலை இறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவிஓட்டக் கூத்தன்இல்லை;
விளையாட்டாய்க் கவிதைகளை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு;
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே!

வினாவிற்கு ஏற்ற விடை சொல்லாதவரைத் தலையில் குட்டுவதற்குப் பிள்ளைப் பாண்டியன் என்பவன் இப்போது உலகில் இல்லை; குற்றமுள்ள புலவர்களின் காதை அதிலுள்ள குறும்பிவரை குடைந்து கிண்டி கைக்கு எட்டிய வரை வெட்டு வதற்கு வில்லிப்புத்தூரார் இல்லை; போலிப்புலவர்கள் இருவர் தலையை ஒன்றாய் முடித்து குனியும்படி செய்து கழுத்தை வெட்டுவதற்கு புலவன் ஒட்டக்கூத்தன் இல்லை; வேடிக்கை யாய்ப் பாடல்களை விரைவாகப் பிழையோடு பாடி ஏமாற்று வதற்கோ பல தலைவர்கள் இருக்கிறார்கள். ஆதலின் நாடெங் கும் தக்க கல்வி அறிவு இல்லாதவர்கன் தாங்கள் கவிஞர்கள் எனப் பிதற்றிக்கொண்டு சுற்றலாம்.

இக்காலத்தில் முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ச்சியுறாதவர் எல்லாம் தங்கள் மனம் போன போக்கில் இலக்கிய மரபினை அறியாது. பிழைகள் மலிந்த பாடல்கள் பாடிப் பெரும்புலவர்கள் தாங்கள் என்று பறை சாற்றிக் கொள்ளுகின்றனர். அவர்களுடைய புலமையின் ஆழத்தை அறியாது, தந்நலத்தின் காரணமாகச் சில செல்வர்கள், அரசியல் கட்சிகள் இக்காலத்தில் அவர்களைப் போற்றிப் புகழ்கின்றனவே ஒழிய, அவர்களுடைய பிழைகளைச் சுட்டிக் காட்டிக் 'குற்றத்தைக் குற்றம்' என்று எடுத்துரைப்பது இல்லை. இதனால் பேனா பிடித்தவர் எல்லாம் எழுத்தாளராகித் தமிழைக் கொலை செய்கின்றனர். போலிப் புலவர்கள் நாட்டில் பலர் தோன்றி மொழியைக் கெடுத்து விடுகின்றனர். இதே நிலை இப்புலவருடைய காலத்திலும் இருந்தது. அதைக் கண்டிப்பதற்கு முதுபெரும் புலவர்கள் யாரும் இல்லையே என்று வருந்துகிறார்.

தெட்டுதல் – ஏமாற்றுதல்.

24. புகழேந்தி

புலவர் பெருமக்களுள் 'புகழேந்தி' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்குபவர், தொண்டை மண்டலத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பொன் விளைந்த களத்தூரில் வேளாளர் குடியில் பிறந்தவராவர். இவர் தாய் தந்தையரைப் பற்றிய வரலாறு தெரியவில்லை. இவர் வைணவ சமயத்தினர்; திருமாலிடத்துப் பெரும் ஈடுபாடு உடையவர்.

இவர் இளமையிலேயே பழந்தமிழ் இலக்கியங்களையும், பாரத வெண்பா, முத்தொள்ளாயிரம், திருவாய்மொழி முதலிய நூல்களையும் தெளிவாகக் கற்று, சொல் நயமும், பொருள் நயமும் தோன்ற இனிய ஓசையோடு சிறந்த வெண்பாக்கள் இயற்றுவதில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளக்கினார். இவருடைய கவித்திறனைக் கண்டு வியந்த புலவர்கள் வெண்பாவில் புகழேந்தி' என்று அவரைப் பாராட்டினர்.

புகழேந்தியார் தாம் இயற்றிய 'நளவெண்பா' என்னும் சிறந்த தமிழ் நூலில் மள்ளுவ நாட்டுத் தலைவனாகிய 'சந்திரன் சுவர்க்கி' என்ற வள்ளலைப் பல இடங்களில் புகழ்ந்து பாடியுள்ளார். அவ்வள்ளல் புலவரிடத்துப் பேரன்புடையவனாய், அவரை ஆதரித்துப் போற்றி இருக்கவேண்டும். புகழேந்தி புலவர் இலங்கைக்குச் சென்று அங்கு அரசாண்ட ஆரிய சேகரனைப் பாடி யானையும், பொன்னும் மணியும் பரிசாகப் பெற்றுத் திரும்பி வந்தார். அந்த ஆரிய சேகரன் முதல் மாறவர்மன் குலசேகர பாண்டிய (கி.பி. 1268–1311)னுடைய படைத் தலைவனாவான். அவன் பாண்டியனுடைய பிரதிநிதியாகப் பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட இலங்கையின் வடபகுதியை ஆண்டு வந்தான். எனவே புகழேந்தியார் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவராவர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும்.

புகழேந்திக்கும் ஒட்டக்கூத்தருக்கும் பெரும் பகை இருந்து வந்ததாகக் கூறப்படும் கதைகள் வரலாற்று உண்மைகள் அல்ல; வெறும் கற்பனைக் கதைகளேயாகும். புகழேந்தியார் ஒட்டக்கூத்தருக்குச் சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்டவர் என்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

புகழேந்தியார் இயற்றியருளிய கற்பனைவளமும் கவி நயமும் வாய்ந்த 'நளவெண்பா' எனும் நூல், வெண்பா யாப்பில் அமைந்துள்ள தமிழ்க் காப்பியங்களுள் தலை சிறந்த நூலாகும். இவர் தொண்டை நாட்டில் செஞ்சியில் வாழ்ந்த ஒரு தலைவன் மீது 'செஞ்சிக் கலம்பகம்' என்ற நூலைப்பாடியுள்ளதாகத் தொண்டை மண்டல சதகம் கூறுகிறது.அக் கலம்பகம் இன்று கிடைக்கப்பெறவில்லை. இவர்பாடியனவாக இக்காலத்தில் கூறப்படும் அல்லியரசாணிமாலை, புலந்திரன் களவுமாலை, என்பன நாடோடிப் பாடல்கள் போன்று புலமையின் அறிகுறி ஒன்றும் இல்லாத வெள்ளைப் பாடல் களாக உள்ளன.'பாட்டால் உயர்ந்த புகழேந்தி ' 'பாடியவை அல்ல அவை என்பது அல்லி அரசாணிமாலையின் ஒரு பாடலைப் படித்தாலே நன்குணரலாம்.

பாண்டியன் பெருமை

திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ? அம்மானை!
சிவன் முடியில் ஏறுவதும் செங்கதிரோ? அம்மானை!
ஒருமுனிவன் நேரியிலே உரை தெளிந்தது? அம்மானை!
ஒப்பரிய திருவிளையாட்டுறந்தையிலோ அம்மானை!
கரையெதிர் ஏடேறியது காவிரியோ? அம்மானை!
கடிப்பகைக்குத் தாதகி அம் கண்ணியோ? அம்மானை!
பரவைபணிந்ததுவும் சோழன் பதந்தனிலோ? அம்மானை! "
பாண்டியனார் பராக்கிரமம் பகரெளிதோ? அம்மானை!

திருமகள் கணவனாகிய திருமால் எடுத்த அவதாரம் மச்சாவதாரமா? சிறிய புலியவதாரமா? சிவபெருமானுடைய திருமுடியில் அணிந்துள்ளது பிறைச்சந்திரனா? சிவந்த சூரியனா? ஒப்பற்ற அகத்திய முனிவர் தமிழ் மொழியில்

தெளிந்த அறிவினைப்பெற்றது பொதியமலையிலா அல்லது நேரிமலையிலா? சிவபெருமான் ஒப்பற்ற திருவிளையாடல் புரிந்ததுமதுரையிலா அல்லது உறையூரிலா? திருஞானசம்பந்தர் விடுத்த ஏடு ஆற்றின் போக்கை எதிர்த்துச் சென்று கரையேறியது வைகையிலா அல்லது காவிரியிலா? பேய் முதலியவற்றின் எதிர்ப்பை நீக்கிக் காவல் செய்வதற்குப் பயன்படுவது வேம்பா அல்லது அழகிய ஆத்தி மாலையா? கடல் பொங்கிவந்து அடிபணிந்தது உக்கிர குமார பாண்டியன் திருவடியிலா அல்லது சோழனது அடியிலா? ஆகவே பாண்டிய மன்னர்களுடைய வீரச் செயல்களை எடுத்து இயம்புவது எளிய செயலாகுமோ?

விளக்கம் : சோழனைக் காட்டிலும் பாண்டியனது பெருமையே மிகச் சிறந்தது என்பது புகழேந்தியார் கருத்து. அதனால் தான் சோழனுடைய புலிச்சின்னம், சூரியகுலம், நேரிமலை உறையூர், காவிரியாறு, ஆத்திமாலை, ஆகியவற்றிற்கு இல்லாத சீரும் சிறப்பும் பாண்டியனுடைய குலத்திற்கும், சின்னத்திற்கும் மலை, நகர்,ஆறு, மாலை ஆகியவற்றிற்கு உண்டு என்பதைக் கேள்வி கேட்டு விளக்கம் தருகிறார்.

ஒட்டக்கூத்தர் பாடியுள்ள 'கோரத்துக்கு ஒப்போ கன வட்டம்' என்னும் பாடலோடு இதனை ஒப்புநோக்குக.

பாண்டியன் யானை.

தென்னவன், தென்னர் பெருமான் திறன் மதுரை
மன்னவன், கோக்களிற்றின் வல்லிக்கும்–பொன்னிநாடு
ஆலிக்கும், வேந்தாம் அபயகுல மகளிர்
தாலிக்கும் ஒன்றே தளை.

பாண்டியன் தென்னாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு இறைவன்: மதுரை மாநகரில் வாழும் ஆற்றல் மிக்க அரசன். அவனது பட்டத்து யானையின் விலங்கிற்கும் காவிரி பாயும் நாட்டில் மகிழ்ச்சியுடன் அரசாட்சி செய்யும் அரசானாகிய

சோழனுடைய கற்புடையப் பெண்களின் தாலிக்கும் முடிச்சு ஒன்றேயாகும்.

நயம்: பாண்டியனது யானை கட்டு அவிழ்க்கப்பட்டால், அது பகையரசன் நாடாகிய சோழ நாட்டை நோக்கிச் சென்று சோழநாட்டு மன்னனையும் மக்களையும் தாக்குமாதலின், சோழனுடைய கற்புடைய மங்கையர் தங்கள் மாங்கல்யத்தை இழக்க நேரிடும். இதனைப் பாண்டியனது யானையைக் கட்டியுள்ள தளை அவிழ்க்கப்பட்டால், சோழனது குலமகளின் மங்கலநாணின் முடிச்சு அவிழ்ந்து விடும் என்று புலவர் குறிப்பிடுகிறார்.

தென்னவன் – பாண்டியன்: வல்லி–தளை, விலங்கு; பொன்னி – காவிரி; ஆலிக்கும் – அரசாட்சி செய்யும்; அபயன்– சோழன்; தளை – முடிச்சு.

சோழ மாதேவியின் ஊடலைத் தணிக்கப் பாடியது.

இழையொன்று இரண்டு வகிர்செய்த
நுண்ணிடை ஏந்துவள்ளைக்
குழையொன்று இரண்டு விழி அணங்கே!
கொண்ட கோபந்தணி;
மழையொன்று இரண்டு கை, மான
ஆபரணன் நின் வாயில் வந்தால்
பிழையொன்று இரண்டு பொறாரோ?
குடியில் பிறந்தவரே!

நூலிழை ஒன்றை இரண்டு கூறு செய்தால், அதன் ஒரு கூறுபோல் மிகச்சிறிய அளவினையுடைய இடையை உடையவளே! காதுகளில் அணிந்துள்ள ஒளி திகழும் குழைகளைச் சென்று பொருத்தும் தன்மை வாய்ந்த நீண்ட இரண்டு கண்களையுடைய பெண்ணரசியே! நீ கொண்டுள்ள சினத்தை ஆற்றிக்கொள்வாயாக! கைம்மாறு கருதாத கார்மேகம் போன்ற கொடைத்தன்மை வாய்ந்த, இருகைகளினாலும் வாரி வழங்குகின்ற பெருந்தன்மையை அணியாகப் பூண்டுள்ள மன்னன் உன் வாசலுக்கு வந்தால் உயர்ந்த பண்புமிக்க குடியில் பிறந்த உன்னைப் போன்ற பெண்கள் ஒன்று அல்லது

இரண்டு குற்றங்களைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்களா? (பொறுத்துக் கொள்வார்கள்)

நயம்: நுண்ணிய சிற்றிடையும், காதளவு ஓடி அழகு படைத்த கண்களையுமுடைய பெண் அணங்கே! பண்பாடு மிக்க குடியில் பிறந்துள்ளவளாகிய நீ. சோழ மன்னன் செய்த தவறைப் பொறுத்து ஆதரிக்க வேண்டும் என்று புகழேந்தியார் நயமொழிகளால் சோழ மாதேவியின் ஊடலைத் தணிக்க முயலுகிறார்.

'மழை ஒன்று இரண்டு கை' என்பது மேகம் ஒரு மடங்கு கொடை வழங்குமானால், சோழன் அதைப் போன்று இரு மடங்காக இரண்டு கைகளாலும் வாரி வழங்குவான் என்றும், 'வள்ளைக் குழையொன்று இரண்டுவிழி' என்பது வள்ளைக் கொடிபோன்று காதின் அளவிற்கு நீண்ட கண்கள் என்றும் பொருள்படும். காதளவு ஓடிய நீண்ட கண்களையுடைய பெண்கள் சிறந்த பெண்மை இலக்கணம் யாவும் அமையப் பெற்ற பெண்ணரசிகள் என்பது உடலுறுப்பு இலக்கண நூல் வல்லார் கருத்தாகும்.

25. பொய்யா மொழிப் புலவர்

பயன் தருவதில் தவறாத (பொய்யாத) சொற்களைக் கூறுவதில் வல்லவர் என்று பொருள்படும் 'பொய்யா மொழி' என்பது புலவருக்கு வழங்கிய காரணச் சிறப்புப் பெயராகும். அவருடைய இயற்பெயர் என்ன என்பது தெரியவில்லை. அவருடைய வரலாறு தெளிவாகத் தெரியாததனால் வரையறுத்துக் கூற இயலவில்லை. அவரைப் பற்றிய கதைகள் பல செவிவழிச் செய்தியாகத் தமிழகத்தில் உலவி வருகின்றன. அவற்றுள் இரண்டு இங்குக் குறிப்பிடத்தக்கன.

பொய்யாமொழிப் புலவர் தொண்டைநாட்டுச் செங்காட்டங் (செங்காட்டூர்க்) கோட்டத்தில் உள்ள துறையூரிலே பிறந்தார். அவ்வூருக்கு அருகில், இருந்த வைரவ புரத்தில் வாழ்ந்த கணக்காயரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். அவ்வாசிரியரிடம் கல்வி பயிலுங்காலத்து ஆசிரியருடைய கம்பங்கொல்லையைக் காக்கச் சென்றார். அங்கு இருந்த காளி கோயிலில் இருந்த மரநிழலில் படுத்து உறங்கினார். அந்நிலையில் காளிங்கராயன் என்பவனது குதிரை கொல்லையில் இறங்கி மேய்ந்து கொண்டிருந்தது. திடீரென்று உறக்கத்தினின்று விழித்த பொய்யாமொழி திடுக்கிட்டார். குதிரையை ஓட்டினார். அது கொல்லையிலிருந்து வெளியேறவில்லை "உடனே காளியினை நினைந்து அருள் புரியுமாறு வேண்டி வணங்கினார். உடனே அம்மையின் அருள்பெற்று கவிபாடும் திறம் பெற்றார். "வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே!'' என்று புலவர் பாடியவுடனே குதிரை செத்து விட்டது. உடனே ஆசிரியருக்குச் செய்தி தெரிந்து ஓடோடி வந்தார்; நடந்ததைக் கண்டு நடுக்கமுற்றார். அதைக் கண்ட புலவர் தான் பாடிய பாடலின் இறுதி அடியை மாற்றி, 'குதிரை மீளக்கொண்டு வா' என்று பாடினார். உடனே குதிரை உயிர் பெற்று எழுந்தது. ஆசிரியர் பெருமான் பெரு

மகிழ்ச்சியுற்றுத் தன் மாணவனைப் "பொதியில் அகத்தியனாய்ப் பொய்யாமொழியாய், சிதைவில் புலவர் சிறப்பாய்" என்று பாராட்டிப் புகழ்ந்தார் என்பது ஒரு கதை. இது புலவருக்குப் 'பொய்யாமொழி' என்று பெயர் வந்ததற்குரிய காரணத்தைக் கற்பிப்பதாக அமைந்திருக்கிறது.

பொய்யாமொழிப் புலவர் பாண்டிய நாட்டில் தஞ்சாக்கூர் என்னும் ஊரில் வாழ்ந்த தஞ்சைவாணன் மீது ஒரு கோவை நூல் பாடியுள்ளார். அதற்குத் தஞ்சைவாணன் கோவை என்பது பெயர். அகப்பொருள் துறைகளை விளக்கும் சிறந்த பாடல்களாகச் சொல்நயமும், பொருள் நயமும், கற்பனை வளமும் உடையனவாக விளங்குகின்றன. நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் இலக்கணத்திற்குச் சிறந்ததொரு இலக்கியமாய்த் திகழ்கிறது. தஞ்சைவாணன் முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி.1268–1311) காலத்தில் படைத்தலைவனாக இருந்தான் என்பது கல்வெட்டுக் களால் தெரிகிறது. ஆகவே பொய்யாமொழிப் புலவர் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராதல் வேண்டும்.

பொற்றாமரைக் குளத்தில் மூழ்கிக் கிடந்த சங்கப்பலகை மேல் எழுமாறு பாடியது.

பூவேந்தர் முன்போல் புரப்பார் இலை; எனினும்,
பாவேந்தர் உண்டென்னும் பான்மையால்– கோவேந்தன்
மாறன் அறிய மதுராபுரித் தமிழோர்
வீறு அணையே சற்றே மித!

உலகத்தில் உள்ள அரசர்களுள் முன்போலத் தமிழைப் பேணுபவர்கள் இல்லை. ஆயினும், புலவர்கள் பலர் உலகில் இருக்கிறார்கள் என்னும் காரணத்தால், மன்னர் மன்னனாகிய பாண்டியன் காணும்படி மதுரைமா நகரில் இருந்த தமிழ்ச் சங்கத்தாருடைய மாண்புமிக்க சங்கப் பலகையே சிறிது நேரம் நீரின்மேல் மிதப்பாயாக!

பூவேந்தர் – உலகை ஆளும் அரசர்; புரப்பார் – போற்றுவார்; இலை – இல்லை; பாவேந்தர்– புலவர்; பான்மை – தன்மை; மாறன் – பாண்டியன்; வீறு– மாண்பு, சிறப்பு.

சங்கப் புலவர் சிலைகளை நோக்கிப் பாடியது.

உங்களிலே யான்ஒருவன் ஒவ்வேனோ? ஒவ்வுவனோ?
திங்கள் குலன் அறியச் செப்புங்கள் – சங்கத்தீர்!
பாடுகிற முத்தமிழ்க்குஎன் பைந்தமிழும் ஒக்குமோ?
ஏடெழுதார் ஏழ்எழுவீர் இன்று.

இதழ் விரிந்த மலர்மாலைகள் அணிந்த நாற்பதொன் பதின்மர் ஆகிய கடைச் சங்ககாலப் புலவர்களே! நீங்கள் பாடிய இயல், இசை, நாடகத் தமிழ்ப் பாடல்களுக்கு எனது பசுந்தமிழ்ப் பாடல்களும் ஒப்பாகுமோ? உங்களுள் யான் ஒருவன் என்று சொல்லத்தகுதி உடையவனோ? அல்லனோ? என்று சந்திரகுலத்தவனாகிய பாண்டியன் அறியுமாறு சொல்லுங்கள்.

ஒவ்வுதல் – ஒத்திருத்தல்; திங்கள் – சந்திரன்; முத்தமிழ் – இயல், இசை, நாடகம் எனப்பட்ட மூவகைத் தமிழ்; பைந்தமிழ் – பசுமையான தமிழ்; ஏடு எழுதார் – இதழ் விரிந்த மலர் மாலை; ஏழேழு 49.

முட்டையைப் பாடியது

பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே
என்பேதை செல்லற்கு இயைந்தனளே!– மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேன் முள்தைக்கும் காடு.

மின்னலைப்போன்ற ஒளிமிக்க வேலாயுதம் ஏந்திய முட்டை என்பவனுக்குப் பகையான (எதிரிகள் செல்லுகின்ற மிகுதியான வேலமரத்து முட்கள் காலில் குத்துகின்ற காட்டில், கள்ளிச் செடிகளினின்று பொன்னைப் போன்ற நிறமுடைய தீப்பொறிகள் பறந்து செல்லுகின்ற பாலை வழியில், என்னுடைய மகள் காதலனோடு செல்வதற்கு மனம் இசைந்தனளே !

நற்றய் இரங்கல் என்னும் அகப்பொருள் துறையைச் சார்ந்தது.
கானல் – பாலைநிலம்; தெவ்வர் – பகைவர்.

முருகக்கடவுள் புலவரைப் பாடியது.

விழிந்த துளி அந்தரத்தே வேம்என்று, வீழின்
எழுந்து சுடர்சுடும் என்றேங்கிச்–செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தில், பெய்வளையும் சென்றனளே!
பொய்யா மொழிப்பகைஞர் போல்

வளமான மேகம் தம்மிடத்தில் இருந்து கீழே விழும் மழைத்துளியானது வானிலேயே வெப்பம் அடையும் என்றும். துளிகள் கீழே விழுந்தால், கீழே உள்ள அனலானது மேலே சென்று சுட்டுவிடும் என்று ஏக்கமடைந்து, மழை பெய்யாத காட்டிலே பொய்யாமொழிப் புலவருடைய எதிரிகள் போல, வளையல் அணிந்த கைகளையுடைய என் மகளும் காதலனோடு சென்றாள்.

நயம்: பாலை நிலமாகிய பொட்டல்காட்டில் மழைத் துளி விழுந்தால், அந்தத் துளி வெம்பி அனலை மேலே கொண்டுவரும் தன்மை உடையது என்று மேகங்கள் ஏக்க முற்று அக்காட்டில் மழை பெய்யாது போய் விடுவது பொய்யா மொழிப் பகைவரைப் போன்று காணப்படுகிறது என்பது கருத்து.

வேம் – வேகும்; கொண்டல் – மேகம்: பெய் வளை – வளையல் அணிந்துள்ள பெண்; பகைஞர் – பகைவர்.

சீனக்கன் இறந்தபோது பாடியது.

வாழி சோழ! என்வாய் மொழிகேண்மோ!
ஊழி நிலவுஎரி மாளிகை யின்வயில்
கட்டிளம் கணவன் கவின்பெறு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடன்மின்எனக் கிடந்துஅ ருகெனைச்
சொல்லிய நண்பன் தனிச்செல் பவனோ
நானும் ஏகுவன் நல்துணை அவற்கே!

நீடூழி வாழுகின்ற சோழ மன்னனே! என்னுடைய உண்மையான சொற்களை கேட்பாயாக! முறையாக நிலவொளி வீசுகின்ற மாளிகையின் மேலிடத்தே, தன்னை மணம் புரிந்த இளமையும் எழிலும் மிக்க கணவன் அழகிய படுக்கையில் படுத்து இருப்பதாக நினைந்து, மனைவி நெடு நேரம் அவன் அருகில் படுத்து உறங்கவும், அங்கு படுத்து இருந்த என்னைத் தனக்கு இடம் கொடுத்துப்படுத்து இருக்கவென்று கூறிய எனது ஆருயிர் நண்பனாகிய சீனக்கன் தனியே இறக்கலாமா? அவனுக்குச் சிறந்த துணையாக நானும் இறந்து போவேன்.

26. மதுரகவிராயர்

மதுரகவி தொண்டை மண்டலத்தில் அகரம்பேடு என்னும் ஊரில் பிறந்தவராவார். இவருடைய வரலாறுபற்றி ஒன்றும் தெரியவில்லை. இவர் தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும், கவிபாடும் திறனும் பெற்று இருந்தார்; அகப் பொருள் துறைக் கருத்துக்களைக் கற்பனை நயம் அமையப் பாடுவதில் வல்லவர்.

பிற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தோன்றிய சிற்றிலக்கியவகைகள் பல. அவற்றுள் ஒன்று நொண்டி நாடகம். இளமையில் அஞ்சா தெஞ்சம் படைத்த முரடன் ஒருவன் நாட்டில் பல இடங்களில் திருடியும், கொள்ளையிட்டும் தீ வைத்தும் கொடும் செயல் செய்து வருகிறான். ஒருநாள் திருடச்சென்ற இடத்தில் அகப்பட்டுக் கொள்கிறான். அவர்கள் இவனுடைய கால் ஒன்றை வெட்டிவிடுகிறார்கள். நொண்டி யாகிவிட்ட திருடன் தான் செய்த கொடிய செயல்களை நினைத்து வருந்தி, இறைவனிடம் முறையிடுகிறான்; தன்னை மன்னித்தருளுமாறு மன்றாடுகிறான் என்பதைக் கூறுவதே நொண்டி நாடகமாகும். தமிழில் இன்று கிடைத்துள்ள நொண்டி நாடகங்கள் இரண்டு. ஒன்று சீதக்காதி நொண்டி நாடகம். இன்னொன்று மதுரகவிராயர் இயற்றியுள்ள திருக்கச்சூர் நொண்டி ஆகும். செங்கற்பட்டிற்கு அருகில் உள்ள திருக்கச்சூரில் கோவில் கொண்டுள்ள சிவபெருமானிடம் நொண்டி முறையிட்டு மன்னிப்பு வேண்டுவதாகப் புலவர் பாடி உள்ளமையால், திருக்கச்சூர் நொண்டி நாடகம் எனப் பெயர்பெற்றது.

மதுரகவிராயர் தம் பெயருக்கு ஏற்ப சிந்தைக்கு இனிய, செவிக்கு இனிய பாடல்கள் பல பாடியுள்ளார். அவர் துரைரங்கன், பிரம்பூர் ஆனந்தரங்கம் பிள்ளை, காளத்தி

முதலியார், கலசை வேதாசலம் முதலிய வள்ளல்களைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். ஆனந்தரங்கம் பிள்ளையின் காலத்தில் மதுரகவிராயர் வாழ்ந்தமையால், பதினெட்டாம் நூற்றாண்டினராவார்.

ஒரு புலவர் ஈற்றடி கொடுக்கப் பாடியது.

அந்திவெடி முல்லை அரும்பெடுத்து நான்வந்தேன்,
விந்தையதா நாயகர்க்கு மெல்லியலே!– சுந்தரஞ்சேர்
செண்டுகட்ட வேண்டும் திருவிளக்கி லேதிரியைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

மென்மைத் தன்மையுடைய தோழியே! கதிரவன் மறையும் மாலை நேரத்தில் மலரும் முல்லை மொட்டுக்களை நான் கொய்துகொண்டு வந்தேன். காதலர்க்கு அவர் வியக்கும் வண்ணம் மிக்க அழகு விளங்கும் படியாக மலர்ச்செண்டு கட்ட வேண்டும். ஆதலின் திரியினையிட்டு எண்ணெய் ஊற்றித் திருவிளக்கு ஏற்றுவாயாக!

குறிப்பு:– மதுரகவிராயரின் கவித்திறனைச் சோதிக்க விரும்பிய புலவர் ஒருவர் 'கொண்டுவந்து போட்டுக் கொளுத்து' என்னும் கடைசி அடியைக் கொடுத்துப் பாடல் இயற்றுமாறு கூறினார். கவிராயர் அவ்வடியை ஈற்றடியாகக் கொண்டு 'வெண்பா' ஒன்றைப் பாடினார் என்பது கதை.

அந்தி – சாயங்காலம்; வெடி – மலரும்: விந்தை – வியப்பு: சுந்தரம் – அழகு

தலைவி இரங்கல்

சித்திரமா மண்டபங்கள், தென்றல்வரு சாளரங்கள்,
பத்தி யுலாவும் பளிக்கறைகள், – இத்தனைவிட்டு
இக்குச் சிலையா ன் இருப்பிடமென்று ஆர்சொன்னார்
இக்குச் சிலையானுக்கு இன்று.

ஓவியங்கள் எழுதப்பெற்று உயர்ந்த மண்டபங்களும், தென்றல் காற்று வந்து வீசுவதற்குரிய பலகணிகளும், உல்லாச நடைகொண்டு உலாவுவதற்கு ஏற்ற பளிங்கினால் கட்டப்பட்ட அறைகளும் ஆகிய இவற்றை எல்லாம் விட்டு, இந்தக் குடிசையை நான் குடியிருக்கின்ற இடமென்று கரும்பை வில்லாகவுடைய மன்மதனுக்கு யார் சொன்னார்கள்?

ஒரு பெண் காமனால் உண்டாகும் நோயினை ஆற்றாளாய் வருந்திக் கூறியதாகப் பாடியுள்ளார். குடிசையில் வாழும் பெண்ணாக இருந்தாலும் அவளுக்கும் காதல் உண்டாவது இயற்கை என்பது கருத்து.

சாளரம் – சன்னல்; பத்தி– வரிசை; குச்சில் – குடிசை: இக்குச்சிலை கருப்புவில்,

துரைரங்கன் என்னும் வள்ளலைப் பாடியது.

துங்கவரை மார்பா! துரைரங்க பூபதியே!
இங்கோர் புதுமை இயம்பக்கேள்!– பங்கயக்கை
ஆயிழைக்கு நான்குநுதல்; ஐந்துகுழை; ஆறுமுலை
மாயவிழி ஏழா மதி.

பெருமை பொருந்திய மலைபோன்று திண்ணிய பரந்த மார்புடைய துரைரங்கன் என்னும் நிலக்கிழாரே! இங்கு வியப்பிற்குரிய செய்தி ஒன்று கூறுகிறேன். கேட்பாயாக! மெல்லிய தாமரை மலரை ஒத்த கைகளையுடைய, தெரிந்தெடுத்த அணிகலன்களை அணிந்துள்ள மங்கைக்கு (கன்னிக்கு) நெற்றி நான்கு, செவி ஐந்து, கொங்கைகள் ஆறு, கருமையுள்ள கண்கள் ஏழு ஆகும். இதை நீ உணர்வாயாக!

நயம்: கன்னி ஒருத்திக்கு, இராசிகள் பன்னிரண்டனுள் நான்காவதாக உள்ள வில் (தனுசு) லை நிகர்த்த புருவமும், ஐந்தாவது இடத்தில் உள்ள மகர மீனைப்போன்ற குழையும், ஆறாம் இடத்திலுள்ள கும்பம் போன்ற கொங்கைகளும், ஏழாம் இடத்தில் உள்ள கெண்டைமீன் போன்ற கருமையும் பெருமையும் வாய்ந்த கண்களும் உள்ளன என்பது கருத்து. இதைப் புலவர் ராசிகளில் நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய இடங்களைக் குறிப்பிட்டு அந்தந்த ராசிகளில் உள்ள வில்,

மகரம், கும்பம், மீனம் முதலியவற்றை முறையே பெண்ணின் புருவம், காதில் அணிந்துள்ள குழை, குடம் போன்ற கொங்கை கயல் விழி முதலியவற்றிற்கு உவமையாகக் கூறியுள்ளமை அவருடைய கவித்திறனைப் புலப்படுத்துவதாகும்.

துங்கம் – பெருமை; பூபதி – நிலத்தலைவன்; பங்கயம் – தாமரை; நுதல்– நெற்றி; குழை – காதணி ; மாய – கரிய, பெரிய

தன்னை விட்டு பிரிந்து செல்ல விரைந்த புலவரை 'ஏன் பறக்கிறாய்' என்று ஆனந்தரங்கம் பிள்ளை கேட்டதற்கு, விடையாகப் பாடியது.

கொக்குப் பறக்கும், புறாப் பறக்கும்
குருவிப் பறக்கும் குயில் பறக்கும்
நக்குப் பொறுக்கிகளும் பறப்பார்; நானேன்
பறப்பேன்? நராதிபனே!
திக்குவிசயம் செலுத்தியுயர் செங்கோல்
நடாத்தும் அரங்கா! நின்
பக்கமிருக்க, ஒருநாளும் பறவேன்!
பறவேன்! பறவேன்!

தலைவனே கொக்கு,புறா,குருவி.குயில் முதலிய பறவைகளே பறக்கும் தன்மையுடையன; மனிதர்களுள் இழிந்த பொருளைக் கவர்ந்து செல்லக் கருதும் மக்கள் விரும்பியது கிடைத்தவுடன் ஓடிப்போவார்கள்; நான் எதனால் ஓடிப்போக வேண்டும்? ஒவ்வொரு திசையிலும் 'வெற்றியோடு அதிகாரம் செலுத்தி உயர்ந்த நீதியைக் கையாளும் ஆனந்தரங்க வள்ளலே! உன்னுடைய அன்பு என்பால் இருக்க ஒரு பொழுதும் நான் ஓடிப்போகமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

ஆனந்தரங்கம் பிள்ளை காட்டும் அன்பின் சிறப்பை வியந்து போற்றுகிறார் புலவர்.

ஒரு மங்கையைக் கண்டு காதலித்து பாடியது.

மூவொன்பது என்பதில்ஓர் நாளில்லை; மொய்வனத்தில்
தாவும் தனிமிருகந் தானில்லை;– நேரே
வளையா நடையில்லை; வார்இறுக விம்மும்
முலையாளை யான் முயங்குவதற்கு,

கச்சுக்குள் அடங்காமல் மேல் எழுகின்ற பொலிவு பெற்ற கொங்கைகளையுடைய மங்கையை நான் சேர்வதற்கு, இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றாகிய உத்தரம் (அதா) வது அவளுடைய மறுமொழி) இல்லை. என்னிடம் அடர்ந்த காட்டில் தாவிச்செல்லும் இணையற்ற விலங்காகிய வேங்கை (பொன்) இல்லை; நேராக வளையாது நடந்து செல்லும் அன்னமும் (அதாவது சோறு) இல்லை.

நயம்: நான் காதலித்த மங்கை என்னை விரும்புதற்குரிய பொன்னும், உண்ணுவதற்குரிய சோறும் என்னிடம் இல்லாமையால், மறுமொழி ஒன்றும் கூறாது மௌனமாக இருக்கிறாள் என்பது புலவருடைய கருத்து. அதைச் சொல் நயம் தோன்ற பொன் எனும் பொருள்படும். காட்டில் தாவி ஓடும் 'வேங்கையும்' 'உண்ணும் சோறு' என்னும் பொருள் படும் நடை அழகில் சிறந்த 'அன்னத்தையும்' தான் பெற்றில்லாத காரணத்தால் அவளிடம் இருந்து பதில் வரவில்லை என்பதை இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றாகிய 'உத்தரம்' 'கிடைக்கவில்லை என்று ஒரு பொருளைக் குறிக்கும் வேறு சொற்களைக்கொண்டு விளக்கியுள்ளார்.

மொய் – அடர்ந்த; வார் இறுக–இழுத்துக் கட்டப்பட்ட கச்சு இறுகுமாறு முயங்குதல் – கூடுதல்.

27. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு சைவ வேளாள குலத்தவரான சிதம்பரம் பிள்ளைக்கும் அன்னத்தாச்சி அம்மைக்கும் தோன்றிய முதல் மகனாவார். அவர் எண்ணெய்க் கிராமம் என்ற ஊரில் பிறந்ததாகக் கூறுவர். அவருடைய தகப்பனார் தமிழ்ப் பயிற்சி மிக்குடைய புலவராய்த் திகழ்ந்தார். திரு. பிள்ளை அவர்கள் இளமைப் பருவத்திலேயே தமது தந்தையாரிடம் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ் முதலிய சிற்றிலக்கியங்களையும், நிகண்டுகளையும் முறையாகப் பாடம் கேட்டுத் தமிழறிவைப் பெற்றார். அவருடைய பதினைந்தாம் வயதிலேயே தந்தையாராகிய சிதம்பரம் பிள்ளை இறைவன் திருவடி நிழலை அடைந்தார். பின்னர் அவ்வூரில் வாழ வழி அறியாத மீனாட்சிசுந்தரனார் திரிசிரபுரத்தை (திருச்சியை) அடைந்தார். அங்கும் தொடர்ந்து தமிழ் நூல்களைக் கற்றுவந்தார். படித்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களிடம் மாணவனாக இருந்து கற்பதிலே வல்லவராக விளங்கினார். வாழ்நாள் முழுவதும் கற்பதிலே கருத்தைச் செலுத்தினார்.

சுப்பிரமணிய தேசிகருடைய முயற்சியால் மீனாட்சி சுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை ஆதீனப் புலவராக அமர்ந்தார். அங்குள்ள தம்பிரான்களுக்குச் சங்கச்சான்றோர் இலக்கியங்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும், பிற்காலத் தமிழ் இலக்கியங்களையும், கற்பிக்கும் அரும்பணியில் ஈடுபட்டார். அக்காலத்தில் ஆதீனத் தலைவராக இருந்த அம்பலவாண தேசிகர் மீது அரிய கலம்பகம் ஒன்று இயற்றி அரங்கேற்றம் செய்தார். அவரிடத்தில் பல சமயத்தைச் சார்ந்தவர்கள் மாணவர்களாக இருந்து தமிழைக்

கற்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் டாக்டர் உ.வே.சாமி நாதையராவர். பிள்ளை அவர்கள் கவிபாடுவதில் வல்லவர். ஒரு நாளைக்கு முந்நூறு பாடல்கள் இயற்றுவது அவருக்கு எளிய செயலாக இருந்ததாம். திருவாவடுதுறை ஆதீனத்தார் அவருக்கு 'மகா வித்துவான்" என்னும் சிறந்த பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டினர்.

பிள்ளையவர்கள் பேரும் புகழும் பெற்று சிறப்புடன் வாழ்ந்து தமது அறுபத்தோராவது அகவையில் இயற்கை எய்தினார். மகாவித்துவான் அவர்கள் இயற்றியருளிய நூல்கள் எண்பதாகும். அவற்றை புராணம், அந்தாதி, பதிகம், மாலை, கலம்பகம், கோவை, உலா, தூது, குறவஞ்சி, லீலை, கப்பற்பாட்டு, ஊசல், லாலி, வாழ்த்து முதலியனவாகப் பிரித்துக் கூறலாம். அவருடைய நூல்களிலே மிகச் சிறந்தவை சேக்கிழார் பிள்ளைத் தமிழ், சீகாழிக் கோவை அகிலாண்டநாயகி மாலை, திருக்குடந்தைப் புராணம், திருநாகைக் காரேணப் புராணம், திருஞான சம்பந்தர் பதிற்றுப்பத்து அந்தாதி ஆகியனவாகும். அவர் சூதசங்கிதை என்ற வடமொழி நூலினைத் தமிழில் மூவாயிரம் பாடல்களில் மொழிபெயர்த்துள்ளார். இவரைப் போலத் தமிழ்மொழியில் பல்லாயிரக்கணக்கான பாடல்கள் இயற்றிய வேறொரு புலவர் இருந்ததில்லை என்பது தமிழறிஞர் கருத்து.

இவருடைய நெருங்கிய நண்பர்கள் ஆறுமுக நாவலர். வேதநாயகம் பிள்ளை முதலியோராவர். மகா வித்துவானாக விளங்கிய பிள்ளை அவர்கள் ஆன்று அ வி ந்து அடங்கிய கொள்கைச் சான்றோராகத் திகழ்ந்து தமிழுக்கு அருந் தொண்டாற்றினார். இவர் தல புராணம் பாடாத சிவன் கோயில்களே தமிழ்நாட்டில் இல்லை என்று புலவர் பெரு மக்கள் உயர்வு நவிற்சியாக கூறுவது உண்டு.

திருவாவடுதுறை மகா சந்நிதானம் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர்மீது பாடியது.

திருமணியை நிறத்தமைந்த நீன்மணி மெய்ம்
மால், பிரமன் தேடிக்காணா
அருமணி, என்னையும் பொருளாய் ஆண்ட
சிந்தாமணி அன்பர் அகத்தேமேய
ஒருமணி, அம்பலவாண சிரோமணி, கண்
மணி, அடிமை உவந்தார் கண்ணுள்
கருமணி வண் துறைசையில் சுப்பிரமணிய
குருமணியைக் கருத்துள் வைப்பாம்.

திருமகளாகிய செம்மணியைத் தனது மார்பில் அழகுற அணிந்து உள்ள நீலநிற வண்ணனாகிய திருமாலும் பிரமனும் அரிதின முயன்று தேடியும் அடியும் முடியும் காண முடியாத ஒப்பற்ற சிவமணியும், சிறியேனை மதித்து ஆட்கொண்ட சிந்தாமணி போன்றவனும், அடியார்கள் உள்ளத்தே தங்கிய ஒப்பற்ற மணியும், அம்பலவாண தேசிகருக்கு கண்மணி போல் உதவினவரும், தனக்கு அடியாராக இருக்க விரும்பினவர்களுடைய கண்ணில் கருமணி போன்ற வருமாகிய வளமான திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் சுப்பிரமணியமாகிய குருமணியைச் சிந்தையில் வைத்துப் போற்றுவோம்.

திருமணி – திருமகள்; அருமணி – சிவபெருமான்; சிந்தாமணி – விரும்பி யதைக் கொடுக்கவல்ல தெய்வமணி; சிரோமணி – தலைமணி; துறைசை திருவாவடுதுறை.

இதுவும் அது.

மின்னிய மதியு, மன்னிய நதியு,
மிளிமர்லைப் பதியையும், கரந்த
முன்னவ வேண்டும் ஒருவரம்; யாரு
மொழியுநின் திருப்புகழ் கேட்க
என்னிரு செவிகள் போதுமோ? போதா!
இன்னநூறு ஆயிர கோடி
துன்னவே அருளில் ஒருவிதம் அமையும்
சுப்பிரமணிய சற் குருவே!

சுப்பிரமணிய நல் குருவே! நிலைபெற்ற கங்கையையும் ஒளி திகழ் கைலைமலைப்பதியையும் மறைத்து இங்கு எழுந்தருளியுள்ள முதல்வனே! யான் தங்களிடம் ஒரு வரம் கேட்கிறேன். மக்கள் எல்லாரும் புகழ்ந்து பேசுகின்ற உன்னுடைய சிறந்த புகழைப் பற்றிக் கேட்பதற்கு என்னுடைய இரண்டு காதுகளும் போதியன வாகா! எனவே, இன்னும் நூறாயிரம் கோடி காதுகள் பொருந்தும்படியாக அருள் புரிவாயானால், அவை ஒருவிதம் போதியனவாக அமையலாம்.

மன்னிய – நிலைபெற்ற; முன்னவ– முதல்வ; நூறாயிரம் –இலட்சம் துன்ன – பொருந்த.

வேதநாயகம் பிள்ளை மீது பாடியது.

நாட்டுக்கு நல்லகுளத்தூர் வேதநாயக !
நன்னாமமாலே
வீட்டுக்கு வாயிலெனும் காளிக்கோர் கோவைஎனை
விளம்பச் செய்தே,
ஏட்டுக்கும் அடங்காத துதிகவிபல் சொற்றனை!
நின்இயல் பாட்டுள்ஓர்
பாட்டுக்கு நான்செய்தது ஒன்றோ?பல் செய்தாலும்
பற்றாது அன்றே!

நாட்டிலே சிறந்த நன்மையையுடைய குளத்தூரில் வாழும் வேதநாயகம் என்ற நல்ல திருப்பெயரை உடைய பெரியோனே! மோட்சத்திற்கு வாசல் எனச் சொல்லத்தக்க சீர்காழிப்பதியின் மீது ஒரு கோவை நூல் பாடும்படி என்னைத் தூண்டி, நூலில் அடங்காத பெருமையை உடைய புகழ் மிக்க பாடல்களைப் பாடினீர்! இனிய பாட்டு இலக்கணம் நன்கு அமைத்த உமது பாடல்களில் ஒரு கவிக்கு நான் பாடிய ஒரு பாட்டோ ஈடாகும்? பல பாடல்கள் நான் பாடினாலும் அவை ஒப்பாகமாட்டா!

உலகில் வேறு எந்த மொழிகளிலும் காணமுடியாத ஒருவகை இலக்கியம் நமது தமிழ்மொழியில் இருக்கிறது. அது தமிழ் மக்கள் குழந்தை வளர்ப்பில், எவ்வளவு கண்ணும்

கருத்துமாக இருந்தார்கள் என்பதை அறிவிக்கும் வகையில் அமைந்து இருக்கிறது. அதனைப் "பிள்ளைத் தமிழ்' என்று தமிழ்ச்சான்றோர் போற்றுவர். தாம் வழிபடும் தெய்வத்தையோ, பெரியோரையோ பிள்ளையாகப் பாவித்துத் தம் அன்புடமை தோன்றுமாறு புகழ்ந்து பாடுவது பிள்ளைத்தமிழ் எனப்படும். அது ஆண்பால் பிள்ளைத் தமிழ். பெண்பால் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். திருத் தொண்டர் புராணத்தை இயற்றி அருளிய சேக்கிழாரைப் பிள்ளையாகப் பாவித்து மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' என்னும் சிற்றிலக்கியத்தைப் படைத்துள்ளார். அவற்றுள் தாலப் பருவத்தில் உள்ள பாடல் ஒன்று பலராலும் பாராட்டப்படுவதாகும். குழந்தையின் எட்டாவது மாதத்தில், அதனைத் தொட்டிலில் இட்டு, தாய்மார் நாவினை அசைத்துப் (தாலு – நாக்கு – ஆட்டு – அசைத்துப்) பாடும் இன்னிசைக்குத் தாலாட்டு என்று பெயர். தாலாட்டிற்குரிய பருவத்தைத் 'தாலப்பருவம்' என்பது பிள்ளைத் தமிழ் மரபு.

தாலாட்டு

பக்திச் சுவைநனி சொட்டச், சொட்டப் பாடிய கவிவலவ!
பயனில தாகும் சிந்தாமணிவழி படர்தல் எனப்போதித்து
உத்திச் சுமையொரு தோள்வைத்து, இடுபுலுயர்த்தோன்
மனம் அடியார்
உறுசெயல் நாடப் புரிமதிவலவ! ஓலா அருகந்தர்திற
முத்தித் திறம் அல, என்றளவு இலர்பான் முற்றிச் சிவமடைய
முயல்செயல் வலவ! வயற்கண் மடைச்செறி முத்தமனைத்தினையும்
தத்திப் புனல்பபய் குன்றைத் திருமுனி தாலோ! தாலே
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல் தாலோ தாலேலோ

பக்திச் சுவை கனிந்து மிகுதியாக ஒழுகுமாறு பாட்டிசைத்த பாவலரே! சீவகசிந்தாமணி காட்டும் நெறியில் ஒழுகுவதனால் யாதொரு பயனும் உண்டாகாது என்பதைத் தெளிவாக எடுத்துரைத்து, ஆதிசேடன் எனும் பாம்பு தன் படத்தினால் சுமக்கப்படும் பாரமாகிய உலகைத் தனது ஒரு

தோளில் வைத்துப் புலிக்கொடியை நாடு முழுவதும் வானுற ஓங்கிப் பறக்குமாறு உயர்த்திய அநபாய சோழன் மனம், சிவன் அடியார்களின் செயற்கரும் செயல்களில் ஈடுபடுமாறு செய்வதில் வெற்றிகண்ட பெருந்தகையே! சமணசமயம் இம்மை, மறுமை, வீடுபேறு, ஆகிய மூன்றினையும் தந்தருளும் செந்நெறி அன்று என்பதை எடுத்தியம்பி, எண்ணிறந்த மக்கள் இறைவனிடம் கொண்ட அன்பு முதிர்ந்து சிவபெருமானுடைய திருவடி நிழலை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தால், அரிதின் முயன்று திருத்தொண்டர் வரலாற்றைப் பாடியருளிய வல்லவனே! வயல்களில் உள்ள மடைகளில் எல்லாம் செறிந்துள்ள முத்துக்களைத் தாவிப் பாய்ந்து ஓடும் நீர் நிறைந்த குன்றத்தூரில் தோன்றிய சீரும் சிறப்பும் வாய்ந்த முனிவரே! தாலோ தாலேலோ! உலகில் சைவப் பயிர் செழித்து வளரப் பக்தி மழை பொழியும் கார்மேகமே! தாலோ! தாலேலோ!

நயம்: தமிழில் பலவகை இலக்கியங்கள் இருக்கின்றன. சங்க இலக்கியங்கள், பக்திப் பாடல்கள், காப்பியங்கள், தொன்னூற்று ஆறுவகைப்பட்ட சிற்றிலக்கியங்கள் என்று அவற்றைப் பாகுபடுத்திக் கூறலாம். சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் சைவசமயத் தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் காப்பியமாகும். காப்பியப் பண்புகள் யாவும் அமைந்து சிறப்புற்று விளங்கும் அந்நூலுள், வேறு எக்காப்பியங்களிலும் காணமுடியாத பக்திச்சுவை ததும்புவதை ஓதி உணர்ந்த மகாவித்துவான், சேக்கிழாரைப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ!' என்று போற்றுவது மிகவும் பொருத்தமுடையதாகும். தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி போன்ற அருளாளர்கள் அருளிய பாடல்களில் இறை அன்பின் நறுமணம் கமழ்வதில் வியப்பு ஒன்றும் இல்லை. அவை யாவும் பக்திப் பாடல்கள் என்பதை யாவரும் அறிவர். ஆனால், அடியார்கள் வரலாற்றை 'அடிப்படையாகக்கொண்ட காப்பியத்தில் எங்குத்தொட்டாலும், பார்த்தாலும், படித்தாலும், பக்கநின்று கேட்டாலும் 'பக்திச் சுவை' சொட்டுமாறு

பாடிய சேக்கிழார் உள்ளம், இறை அன்பின் ஊற்றாக இருந்திருக்க வேண்டும் என்பதை உள்ளத்தின் உணர்வு கொண்டு உணரவல்லார் யாவரும் நன்கறிவர். இத்தகைய பெறற்கரும் சிறப்பினைப் பெற்ற சேக்கிழாரைப் புலவர் பாராட்டுவதற்காகவே பிள்ளைத் தமிழ் நூல் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வழிபடர் –வழியில் செல்லுதல்; உத்தி – பாம்பின் படம்; புல் உயர்த்தோன்– புலியாகக்கொண்ட அநபாய சோழன்; ஓலா – ஒல்லா இயலாது; அருகந்தர்– சமணர்; முயல் – முயற்சி; பக்திச் சுவை – இறைவனிடம் கொண்ட அன்பின் சுவை.

28. கடிகை முத்துப் புலவர்

பாண்டிய நாட்டில் எட்டையாபுரத்தில் பிறந்தவர் கடிகை என்பது குடிப்பெயர். அரசனிடம் மங்கலக்கவிபாடி வாழும் புலவர் குடிக்குக் 'கடிகை' என்பது பட்டப்பெயராகும். இதனைக் 'கடிகையர் மங்கலக் கவிபாடினார்' என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளமையால் அறிகிறோம். இன்னொரு சாரார், பழங்காலத்தில் ஊராட்சி மன்றமாக விளங்கிய ஊர்ப்பெரும் சபைக்கு,'கடிகை' என்ற பெயர் இருந்தமை கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது, ஆதலின் கடிகையர் என்னும் சொல் ஊராட்சி மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவரை முதன் முதலில் குறிப்பிட்டதாகலாம்; பிற்காலத்தில் ஊராட்சி மன்றத்து உறுப்பினர்கள் தோன்றிய குடிக்கு உரிய பெயராக வழங்கி இருக்கலாம் என்பர். இவற்றுள் முதலில் கூறிய கருத்தே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

முத்து என்பது புலவரின் இயற்பெயர். இவர் இளமையிலேயே முத்தமிழிலும் வல்ல கலைஞராய்த் திகழ்ந்தார். எட்டையபுரத்துக் குறுநில மன்னரின் அவைக்களப் புலவராக அமர்ந்து பேரும் புகழும் பெற்றார். அப்போது அரசராக இருந்த வேங்கடேசுவர எட்டப்பரைப் புகழ்ந்து பல தனிப் பாடல்கள் பாடியுள்ளார். அவர் மீது 'சமுத்திரவிலாசம், காமரச மஞ்சரி' என்னும் இரண்டு சிற்றிலக்கியங்களையும் இயற்றியுள்ளார். ஊற்றுமலை சமீன்தார் மருதப்பதேவர் மேல் 'மதன வித்தாரமாலை' என்னும் நூலும், சிவகிரிச மீன் தாரான வரகுணவன்யர் மீது 'திக்குவிசயம்' என்னும் நூலும் பாடிப் பலவகைப் பரிசுகள் பெற்றிருக்கிறார். இவை அல்லாமல் திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள மருதவாணர்மீது ஓர் அந்தாதியும் பாடியுள்ளார். இவரது 'சமுத்திர விலாசம்' இலக்கியச்சுவை மிகுந்த ஒரு சிறுகாப்பியமாகும்.

பல மாணாக்கர்களுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங் களைக் கற்பித்து வந்தார். இசுலாமியப்புலவர்களிலே சிறந்து விளங்கிய உமறுப் புலவர் இவருடைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடிகை முத்துப் புலவர் நயம்படப் பேசு வதிலும், எழுதுவதிலும் வல்லவர் என்பது அவருடைய பாடல்களால் அறியப்படுகிறது. இவர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவராவார்.

தலைவி மதனைப் பழித்தல்.

கலக்கடமா னத்தொனியை முழக்க, மனம்
அலைந்து அடையார் கால்சாய்ந்துஓடப்,
பெலக்கடமா நகக்களிற்றை நடத்தும்வெங்க
டேசுரஎட்டன் பிணையல் ஈந்தான்;
சிலக்கடமா மரக்குயிலை ஒடுக்கு; கடல்
தொனிஅடக்கு! தென்றல்தேரை
விலக்கடமா மதப்பயலே! தலைக்கடைவா
சலைக்கடக்க வெருட்டுவனே!

பகைவரின் படைக்கு மனக்கலக்கம் உண்டாகுமாறு முரசு அறைந்து, அவர்கள் மனம் நடுங்கித் தலைகீழாக ஓடும்படி வலிமை வாய்ந்த மதம் பொழிகின்ற மலை போன்ற யானைமீது ஏறி, அதனை நடத்துகின்ற வெங்கடேச எட்டனாகிய மன்னன் தனது மார்பில் அணிந்து இருந்த மலர்மாலையை எனக்கு அளித்தான். எனவே அழகுமிக்க மன்மதப் பயலே! சிறிய சோலையில் உள்ள மாமரத்தில் அமர்ந்து கூவுகின்ற குயிலைச் கூவாது அடங்கும்படி செய்! கடலின் ஓயாத ஓசையை அடக்கு! இளம் தென்றலாகிய தேரை இங்கே ஓட்டிவராமல் இருப்பாயாக! என்னுடைய வீட்டின் தெருவாசலை விட்டு அப்பால் செல்லும்படியாக உன்னைத் துரத்திவிடுவேன் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

தலைவி தனது தலைவனைப் புகழ்ந்தும். தன்னைத் துன்புறுத்தும் மன்மதனை இகழ்ந்தும் கூறியதை விளக்குகிறது.

டமானம் – டமாரம் – முரசு! அடையார் – பகைவர்; பெலம் – பலம் வலிமை ; கடம் மா நகம் – மும்மதங்களையுடைய பெரிய மலைபோன்ற; பிணையல்– மாலை; சில – சிறிய; கடம் – சோலை; வெருட்டு– துரத்து,

தலைவி சந்திரனைப் பழித்தல்.

இத்தரம் ஏசத்துணிவார்என்சகிமார்;
வஞ்சகிமார் என்றால் வேள் அம்
புத்தாம் ஏவத்தனமே புண்படுமே! என்
புகல்வேன்? புலவோர்க்கோ, போ
தத்தர மேகத்துக்கிணையாய்த் தழைத்தவெங்
கடேசுரஎட்டன் தழுவினாலே
உத்தரம் ஏதுஇத்தனையும் உன்னாலேவிளைந்தது
அன்றோ? ஒருநிலாவே!

ஒப்பற்ற நிலாவே! என்னுடைய தோழியர் இவ்வாறு குறைகூறத் துணிகின்றார்கள். இவர்கள் வஞ்சனை மனம் படைத்தோர் என்று அவர்களைக் கடிந்து உரைக்கலாம் என்று நினைத்தால் அவ்வாறு செய்யவும் முடியவில்லை. ஏனென்றால் மன்மதன் அம்புகளைப் புதிது புதிதாக என் மீது செலுத்து வதனால் எனது கொங்கைகள் புண்ணாகி வருந்துமே. அப்போது அதற்கு நான் அவர்களிடத்து யாது சொல்லு வேன்? புலவர்களுக்கே விரும்பியது எல்லாம் கொடுக்கும் கைம்மாறு கருதாத மேகத்தைப்போன்று வளம் படைத்து விளங்கும் வெங்கடேசுரஎட்டன் ஆகிய மன்னவன் என்னை அணைத்துக்கொண்டால் மறுமொழி கூற வேண்டியது ஒன்றும் இல்லை. இவ்வளவு துன்பமும் முழுமதியாகிய உன்னால் அல்லவா உண்டாயிற்று.

ஏசுதல் – குறை – கூறுதல்: சகிமார்–தோழியர்; தனம் –கொங்கை; புகலுதல் – சொல்லுதல்; போதத் தரும் – எல்லா வற்றையும் தரும்: உத்தரம்– மறுமொழி; பதில்.

தலைவி குயிலொடு கூறல்.

பொரவிசையம் செலுத்துவெங்கடேசுரஎட்டன்
இந்திரன்மேல் புதுமால் கொண்டேன்;
கரவிசை அங்கசமாரன் கருப்பவில்லை
வளைத்துவலக் கையால் எய்யும்
சரவிசை அங்கத்தில்வந்து தைத்துருவி
அப்புறம்போம்; சகிக்கமாட்டேன்;
இரவிசையம் புகுந்தொளித்தான் இளங்குயில்காள்
நீரும்எனக்கு இரங்கு வீரே!

பகைவருடன் போரிடும்போது வெற்றியால் புகழ்பெறும் வெங்கடேசுர எட்டப்பன் எனும் செல்வன்மீது, புதிதாகிய காதல் மயக்கமுற்றேன்; கைவேகம் உடைய மன்மதன் கரும்பாகிய வில்லை வளைத்து வலது கையினால் ஏவுகின்ற மலரம்புகள் எனது உடம்பில் தைத்து ஊடுருவி பின்பக்கம் போகும் துன்பத்தை என்னால் பொறுத்துச் கொள்ள முடியவில்லை; கதிரவன் மேற்கு மலையிடத்துச் சென்று மறைந்தான்; இனிய இசையோடு கூவுகின்ற சிறு குயில்களே! நீங்கள் என்னிடத்து இரக்கம் காட்டுவீர்களாக!

குறிப்பு: புதிதாகக் காதல் கொண்ட தலைவி, காம வேட்கை மிகுதியினால் குயில்களிடம் தனது துன்பத்தை முறையிட்டாள் என்பது கருத்து.

பொர – போரிட ; விசையம் – வெற்றி; இந்திரன் – இந்திரனைப்போன்ற செல்வம் உடையவன்; மால் – காதல், மயக்கம்; அங்கச மாரன் – உடல் இல்லாத மன்மதன்; சரம் – அம்பு, இரவி – சூரியன்; சையம் – மலை

வண்டுவிடு தூது.

பொருந்தமர் அங்கசரத்துக்கு அல்லமால்,
அம்புலிக்கும் புறம்போ? வென்ன,
இருந்தமர் ரஞ்சிதமொழியாள், இப்பாடுபடல்
முறையோ? எம தூதாள்நி
கரும்தமரும் எனை அளியே! என்னளியே!
ஆய்ச்சியர்தம் கலையையவாரி
குருந்தமரம் குழைத்துஏறும் திருமலை
வேலப்பனிடம் கூறுவாயே!

என்னுடைய வண்டே! என்னை எதிர்த்துப் போர்புரியும் காமன் கணைக்கு அன்றி, சந்திரனுக்கும் வேறானவளோ என்று சொல்லத்தக்க முறையில் இரண்டிற்கும் இணையாக இனிய மொழிகளைப் பேசும் காதல் கொள்கின்ற மகளிர் இவ்வாறு துன்பப்படுதல் முறைமையாமோ? எமதூதர்களைப்போன்ற உறவினர்களும் எத்தகைய அன்புடையவர்களாக இருக்கின்றார்கள்; இடைச்சியருடைய ஆடைகளைக் கவர்ந்து கொண்டு குருந்தமரத்தின் கிளைகளைச் சாய்த்துப் பிடித்து இழுத்து, அதன் மேல்ஏறிய கண்ணனைப் போன்ற திருமலை வேலப்பன் என்னும் வள்ளலிடம் சென்று எந்நிலையைத் தெரிவிப்பாயாக!

குறிப்பு: காதல் வேட்கைமிக்க தலைவி வண்டு இனங்களைத் தனது இன்பவேதனையைத் தலைவனிடம் எடுத்துரைக்குமாறு தூது அனுப்புவது 'வண்டுவிடு தூது' என்னும் அகப் பொருள் துறையைச் சேர்ந்ததாகும். கண்ணன் கோபியரின் சேலையைத் திருடிய கதை கூறப்பட்டிருக்கிறது,

அமர் – போர்; அங்கசரம் – காமன்கணை; அம்புலி – சந்திரன்; ரஞ்சிதம் – இனிய; தமர் – உறவினர்; அளி – இரக்கம், அன்பு; அளி – வண்டிற்குரிய பெயர்; குருந்த மரம் –காட்டு எலுமிச்சமரம்.

நற்றாய் இரங்கல்

கொங்கைகும்ப கோணமா, கூந்தலுமோ கூடலா,
தங்கும்விழி அம்பாச முத்திரமா, – பைங்கனக
மேருவெங்க டேசுரஎட்ட மேந்திரா! இவள்சசிபுல்
தார்உடையாள் ஊர்இடைய தாம்.

பசுமையான பொன்மலையாகிய மேருவைப் போன்ற வெங்கடேசுர எட்டம இந்திரா! இவள் இந்திராணி போன்றவள்; இவளுடைய இடை பனம்பூமாலை அணிந்துள்ள சேரனது தலைநகராகிய வஞ்சியாம்; இவளுடைய கொங்கைகள் கும்பகோணமாகும்; கூந்தலோ, கூடல் நகரமாகும்; முகத்தில்

"பொருந்தியுள்ள கண்கள் அம்பா(?) சமுத்திரமா? என்று ஐயுறுமாறு காணப்படுகின்றன.

நயம்: புலவர் தலைவியினுடைய இடை, கொங்கை கூந்தல், கண் முதலியவற்றிற்கு முறையே சேரன் வஞ்சியையும், கும்பகோணத்தையும், கூடல் நகரையும், அம்பா சமுத்திரத்தையும் உவமையாகக் கூறியுள்ளார். பொதுவாக இவை நான்கும் ஊர்ப் பெயர்களாக இருப்பினும், அவை ஒவ்வொன்றும் வேறு பொருள்களைக் குறிப்பனவாகும்.

தலைவியினுடைய இடை வஞ்சிக் கொடியைப்போன்று சிறுத்துள்ளதாம்; கொங்கைகள் குடம்போன்று உருண்டு திரண்டு இருக்கிறதாம்; கூந்தல் மிகுந்த இருள்போன்று கருமையாகக் காணப்படுகிறதாம், விழிகள் இரண்டும் அம்பு போல் கூர்மையாக இருக்கிறதா அல்லது கடல்போல் கருமையாக இருக்கிறதா என்று ஐயுறுமாறு அமைந்து இருப்பதாகப் புலவர் சொல் நயமும், தமது புலமைத் திறனும் புலனாகுமாறு பாடியுள்ளமை பாராட்டத்தக்கதாகும். தலைவி இந்திரன் போன்ற எட்டப்பருக்கு ஏற்ற இந்திராணியாவாள் என்பது கருத்து.

கும்பம் – குடம்; கூடல் என்பதனைக் கூடு+அல் என்று பிரித்தால் மிகுதியான இருட்டு என்று பொருள்தரும்; கனகம் – பொன்; சசி – இந்திராணி; புல்தார்– பனம்பூ மாலை; இடை –இடுப்பு.

பனம்பூமாலை அணிந்த சேரனது தலைநகரம் வஞ்சிமாநகர். பனைமரம் 'புல்" இனத்தைச் சேர்ந்தது என்பது பண்டைத் தமிழரின் கருத்தாகும்.

29. பாடுவார் முத்தப்பச் செட்டியார்

செல்வம் யாவும் செழித்தோங்கும் செட்டிமார் நாட்டைச் சார்ந்த கீழச்சேவற்பட்டியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் அழகப்பச் செட்டியாருக்கும், இலக்குமி ஆச்சிக்கும் கி. பி. 1760ல் மகவாய்த் தோன்றியவர் முத்தப்பச் செட்டியார். இவர் இளையாற்றங்குடி முதலிய ஏழு நகரத்தார் கோயில்களில் ஒன்றான நேமம் கோயிலைச் சேர்ந்தவர். குன்றக்குடி முருகப்பெருமானிடத்து நீங்காத அன்பும் பக்தியும் பூண்டவர்.

முத்தப்பச் செட்டியார் இளமையிலே கணக்காயர் ஒருவரிடம் தமிழ் நெடுங் கணக்கைப் பயின்று பின்னர் நிகண்டு இலக்கணம் முதலிய கருவி நூல்களையும், நைடதம், பாரதம், இராமாயணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் முதலிய இலக்கியங்களையும், திருக்குறள் முதலிய நீதி நூல் களையும் நன்கு கற்றுணர்ந்தார். கவிபாடும் வல்லமையும் பெற்றுத் திகழ்ந்தார். அதனால் அவர் பாடுவார் முத்தப்பச் செட்டியார் எனப் பெயர் பெறலானார். இவர் திருமுக விலாசம், செட்டிமார் வரலாறு, செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத்தமிழ், பதிற்றுப் பத்தந்தாதி, கலித்துறையந்தாதி. நேமக்கலம்பகம், செயங்கொண்ட சோழீசர் ஊசற்றிருநாமம் என்ற வேறுபல நூல்களும் எழுதியுள்ளார்.

இவர் பல சந்தர்ப்பங்களில் பாடிய தனிப்பாடல்கள் சிறப்புமிக்கன.

புலவர் வறுமையால் வாடியபொழுது பாடியது.

"ஏடும்புண் ணாகி எழுத்தாணி யுந்தேய்ந்து
பாடு மனமும் பரதவித்தே – ஏடெழுதிச்
சுண்டுவி ரலுங்காய்த்துத் தொண்டைகம்மல் பாடியதால்
கண்டதல்லா லோர்பலனுங் கண்டிலேன்

ஒருசமயம் நகரத்தார் தாங்கள் என்றும் செல்வத் துடன் திகழவேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்கப் பாடியது.

"காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேல்வணிகர்– வீடுகட்கு
அன்றைக்கு வந்தஎங்கள் அம்மா! இலக்குமி ! நீ
என்றைக்கும் நீங்கா(து) இரு"

ஊனைநகர் பாரதியார் என்பவர், நேமம் செயங் கொண்டசோழீசர் என்ன செயங்கொண்டார் என்று வினவியபொழுது பதலிறுத்துப் பாடியது.

என்னசெயங் கொண்டார் இவரென்றால்? முப்புரத்தைச்
சொன்னமய மாச்சமைத்த சோழீசர்– பின்னுஞ்
சிரித்துச் செயங்கொண்டார்; சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டாரே.

30. வரதுங்க பாண்டியன்

பாண்டிய பேரரசர் கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முதற்பகுதி வரையில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். அந்நூற்றாண்டில் இசுலாமியப் (மாலிக்காபூரின்) படையெடுப்பாலும், விசய நகரப் பேரரசின் தளபதி கம்பண உடையாரின் போர்களாலும் பாண்டியர்குடி சிதறுண்டு போயிற்று; பாண்டியரின் பழம்பெருமை சிதைவுற்றது. அக்காலத்தில் பாண்டியர் குடியைச் சேர்ந்த ஓர் இளவரசர் திருநெல்வேலிப் பகுதியைத் தன் வசப்படுத்தித் தென்காசியில் இருந்து அதனை ஆண்டு வந்தார். அக்குடியில் தோன்றியவர்களே அதிவீரராம பாண்டியர், வரதுங்க பாண்டியர் முதலியோராவர். இவர்களிருவரும் பெரியப்பன் சிற்றப்பன் பிள்ளைகளாவர்.

சங்ககாலப்பாண்டிய வேந்தர்கள் காவலராகவும் பாவலராகவும் விளங்கியதைப் போன்று இவர்களும் நாநலம் படைத்த நாவலர்களாகத் திகழ்ந்தனர். வரதுங்கராமனின் தந்தையார் பெயர் பராக்கிரம பாண்டியன் என்பதாகும். இவருடைய இயற்பெயர் அபிராம 'சுந்தரசேரன்' என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது. இவர் வேப்பத்தூர் ஈசான முனிவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும், கற்றுத் தேர்ந்தார். சிறந்த போர் வீரராகவும் விளங்கினார். இவர் அரசுக் கட்டில் ஏறிய பொழுது வீரபாண்டியன் வரதுங்கராமன் என்னும் பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டார்."

வரதுங்கராமன் பாவலர்களையும், கலைஞர்களையும் போற்றியதோடு, அவர்களுக்குப் பல ஊர்களை நன்கொடையாக அளித்துள்ளார். இவரது அவையில் (தென்) காசிக் கலியன் கவிராயன் என்பவர் அவைக்களப் புலவராக வீற்றிருந்தார்.

இவருடைய மனைவியும் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்ற புலவராக இருந்தார். இவர் அதிவீரராமன் இயற்றிய நைடதத்தில் 'சென்று தேய்ந்து இறுதல்' என்னும் குற்றம் இருப்பதைச் சுட்டிக் காட்டியதாகக் கூறுவர். கணவன் போருக்குச் சென்று இருந்தபொழுது இவ்வரசி பாடியுள்ள பாடல்கள் அகப்பொருள் நலம் திகழும் முல்லைத்திணைப் பாடல்களாகச் சிறப்புடன் காணப்படுகின்றன. கணவர் மரணப் படுக்கையில் இருந்தபோது அவருக்கு ஆறுதல் கூறும் முறையில் பாடிய பாடல் பக்திச்சுவை மிக்கதாகும்.

வரதுங்கராமன் பிரமோத்தரகாண்டம், திருக் கருவைப் பதிற்றுப் பத்து அந்தாதி, திருக்கருவை வெண்பா அந்தாதி திருக்கருவை கலித்துறை அந்தாதி முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் வடமொழியில் உள்ள 'கொக்கோக' நூலைத் தமிழில் மொழி பெயர்த்திருப்பதாகத் தெரிகிறது. இவருடைய காலம் பதினாறாம் நூற்றாண்டாகும்.

பாண்டியர் மரணப்படுக்கையில் இருந்தபொழுது பாடியது.

அஞ்சலென்ற கரதலமும், கணபண சங்கணமும்
அரைக்கிசைந்த புலி உடையும், அம்புலிச்செஞ்சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும், கனைகழலும், சிலம்பும்
கருணைபொழி திருமுகமும் கண்களொரு மூன்றும்
நஞ்சையுண்ட மணிமிடறும் முந்நூலு மார்பும்,
நலந்திகழ்வெண்ணீற்றுஒளியும் மறிமானும் மழுவும்,
பஞ்சடிச்சிற் றிடையும் உமையாள் ஒப்பனைபா கமுமாய்ப்
பால்வண்ணர் உளத்திருக்கப் பயமுண்டோ எனக்கே!

'அஞ்சாதே!' என்று காட்டும் அடைக்கலம் அருளும் திருக்கையும், தொகுதியான படங்களையுடைய பாம்புக் காப்பும், அரையினிடத்தில் இழுத்துக் கட்டியுள்ள புலித் தோல் ஆடையும், பிறைச்சந்திரனை அணிந்த செந்நிறமான சடையும், தாமரைப் பூப்போன்ற திருவடிகளும், ஒலிக்கின்ற வீரக் கண்டையும் சிலம்பும், திருவருள் புரிந்தருளும் அழகிய

திருமுகமும், மூன்று கண்களும், ஆலகாலவிடத்தை அருந்திய நீல நிறக் கழுத்தும்.முப்புரிநூலும், வலிமை மிக்க மார்பும். நன்மை தரக்கூடிய வெண்மையான திருநீற்றின் பொலிவும், மான்கன்றும், மழுப்படையும், பஞ்சினும் மெல்லிய பாதங்களையும் நுண்ணிய இடையையும் உடைய உமாதேவியார் அலங்கரித்துள்ள இடபாகத்தை உடையவரான பால்வண்ணமுடைய சிவபெருமான் எனது நெஞ்சகத்தில் வீற்றிருக்கும்போது எனக்கு இறப்பதைப் பற்றி அச்சம் தோன்றுமா?

பாண்டியர் மரணப்படுக்கையில் துன்புற்றபோது, அவர் மனைவி, அவரை நோக்கிப் 'பயப்படுகிறிரோ?' என்று கேட்டபோது, வரதுங்கராயர் 'அச்சமில்லை' என்று 'அஞ்சல்' எனத் தொடங்கும் இப்பாடலை பாடியதாகச் சொல்லுவர்.

விளக்கம் : சிவசக்தியாக விளங்கும் சிவபெருமானை இடையறாது மனத்தகத்தே சிந்திப்போர்க்கு மரணபயம் கிடையாது என்பதைப் பாண்டிய மன்னர் தனது மனைவிக்குக் கூறுகிறார்.

கணம் – தொகுதி; பணம் – படம்; அரை – இடுப்பு; அம்புலி – சந்திரன்; கஞ்சமலர் – தாமரை; கனை–ஒலிக்கும்; கழல்–வீரக்கழல்: சிலம்பு – பெண்கள் காலில் அணியும் நூபுரம் எனப்படும் சதங்கை; மணி–நீலம்; மறி – மான் கன்று; வண்ணம் –நிறம்.

பாண்டியரின் மனைவி பாடியது.

யாக்கையெனும் புழுக்குரம்பை அனைந்து அணையாப்
[பொருளை,
அருளொளியைப் பராபரத்துக்கு அப்புறமாம் அறிவை,
நீக்கமற மயிர்முனைக்கும் இடம்அறஎங் கெங்கும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவில்எழும் சுடரைப்,
பாக்கியங்கள் செய்துஅனந்தம் தவக்குறைகண்முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியில் அடைப்பாம்.

உடலாகிய புழு நிறம்பிய சிறுகுடிலை, ஆதரவாகச் சேர்ந்தும் அதில் சிக்கி ஈடுபடாத ஒப்பற்ற மெய்ப் பொருளை, திருவருள் பிரகாசத்தை, மேலும் கீழுமான எல்லாப்பொருளை யும் கடந்து நிற்கும் பேரறிவை, ஒழிவில்லாமலும், மயிர் முனை கூட நாட்டுவதற்கு இடமில்லாமலும், எல்லாவிடங்களிலும் முழுமையாக நிறைந்துள்ள முழு முதற்பொருளை, நினைத்த உடன் உள்ளத்தில் தோன்றும் ஒளி வடிவான வரை, பல அறச்செயல்களைச் செய்து எல்லை இல்லாத நல்வினைப் பேறுகளை நிறைவேற்றும், அன்பு கனிந்த பழைய தொண்டர்களுக்கு வேண்டிய பொருளை வேண்டியவாறு அளிக்கின்ற பசுமையான பூங்கொத்துக்களையுடைய கற்பக மரத்தைப் போன்ற தெய்வத்தைச் சொல்லாலும், உள்ளத்தின் நினைவு வகைகளாலும், அளவிட்டு அறிய முடியாத ஒப்பற்ற பரம்பொருளைக் குற்றமற்ற களங்கம் இல்லாதப் பரவெளியை, மனமாகிய தனி இடத்தில் அடங்கும்படி செய்வோம்.

யாக்கை – உடம்பு ; குரம்பை–குடில்; பராபரம்–மேலும் கீழுமாய் விளங்கும்; துணர்– பூங்கொத்து

31. அந்தகக்கவி வீரராகவ முதலியார்

சான்றோர் பலரைப் பெற்றெடுத்துப் புகழ்கொண்ட தொண்டை நாட்டில், பாலாற்றங்கரையில் உள்ள புதூரில் வாழ்ந்த வடுகநாத முதலியாரின் தவப்புதல்வராய் நமது அந்தகக் கவி தோன்றினார்.பிறக்கும்பொழுதே கண் பார்வை இழந்தவராகவும், பிற்காலத்தில் சிறந்த கவிஞராகவும் விளங்கினமையால், அவரை மக்கள் 'அந்தக. (குருட்டு) க் கவி' என்று பெயரிட்டு வழங்கினர். புலவர் பெருமானின் இயற்பெயர் 'வீரராகவன்' என்பதாகும். இளம் பருவத்திலேயே அவருடைய 'அகக்கண்' பேராற்றல் வாய்ந்ததாய் இருந்தமையால், 'புறக்கண்' இல்லாத குறை ஒருவாறு நீங்கிற்று. அவருடைய தந்தை, தன் மகனுக்குக் கல்விப் பயிற்சி தருவதற்காகப் புதூரில் இருந்து குடும்பத்தோடு பொன்விளைந்த களத்தூருக்கு (பொற் களந்தை) வந்து குடியேறினார். அவ்வூரில் கேள்வியினாலேயே வீரராகவர் பள்ளிக் கல்வியைப் பயின்று முழுதும் அறிந்தார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்பதற்காகக் காஞ்சி மாநகரில் உள்ள புலவர் பெருமக்களிடம் சென்றார். ஏடு வாசிப்பவன் ஒருவனை வீரராகவனின் தந்தை உடன் அனுப்பிவைத்தார். அங்கிருந்த புலவர் பெருமக்களிடத்து பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் பலவற்றையும் வாய்மொழி வாயிலாக கேட்டுத் 'தன்' நெஞ்சத்தையே ஏடாக (நூலாக)க் கொண்டு ஐயம் திரிபறக் கற்றார். 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்றும், கற்றிலனாயி னும் கேட்க' என்றும், 'கற்றலில் கேட்டலே நன்று' என்றும் கூறிய வள்ளுவர் வாய்மொழிக்குச் சிறந்ததொரு இலக்கியமாக வீரராகவர் விளங்கினார். சில ஆண்டுகளில் கவிபாடும் திறமை கைவரப் பெற்றார். இவருடைய புலமைத் திறத்தைக் கண்டு வியந்த கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார்,

"இங்கொருவன் பல்கலைமான் எய்திடப்போய்க் கவியினால் இசை பெற்றானே" என்று பாராட்டியுள்ளார். வீர ராகவர், "ஏடு ஆயிரங்கோடி எழுதாது தன் மனத்தே எழுதிப் படித்த விரகன்" என்று தன்னைப்பற்றிக் கூறுவதனால் அவர் எவ்வாறு அரிதின் முயன்று நூல்களைக் கற்று கவிஞரானார் என்பது புலனாகின்றது. ஒரே சமயத்தில் பல வகையான செயல்களைச் சிறிதும் மறவாது செய்யப்படும். 'அவதானத்திலும்' வல்லவராக விளங்கினார். சிவபெருமானிடம் பெரும் ஈடுபாடு உடையவராக வாழ்ந்தார்.

திருமணம் செய்துகொண்டு இல்லறத்தில் ஈடுபட்ட புலவர், தனது மாணவனோடு சோழ நாடு, பாண்டிய நாடு, ஈழ நாடு முதலிய இடங்களுக்கு எல்லாம் சென்று தனது கவித்திறத்தால் பல வள்ளல்களின் உள்ளத்தைக் கவர்ந்தார் இலங்கையில் ஆண்டுகொண்டிருந்த பரராச சேகர மன்னன் அவைக்களத்தில் பல ஆண்டுகள் தங்கி இருந்து யானை, பொற்பந்தம், ஓர் ஊரும் பரிசாகப் பெற்றுத் தாய் நாடு திரும்பினார். கயத்தாற்றில் இருந்த அரசனைப் புகழ்ந்து உலா ஒன்று பாடிப் பரிசில் பெற்றார். திருவாரூர் தியாகேசர் மீது ஓர் உலாவும் பாடி அரங்கேற்றம் செய்தார்.

வீரராகவர் சீட்டுக்கவி பாடுவதிலே வல்லவர்; நகைச் சுவை ததும்பப் பாட்டு இயற்றுவதில் புகழ் மிக்கவர். இவர் இயற்றியுள்ள வேறு நூல்கள் சந்திரவாணன் கோவை. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்ற மாலை முதலியனவாகும். இவர் இயற்றியுள்ள சீட்டுக் கவிகளும், தனிப் பாடல்களும் பல. அவையாவும் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்தனவாகும். இவர் வாழ்ந்த காலம் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

இராமன் என்னும் வள்ளல் யானையைப் பரிசு கொடுத்தபோது பாடியது.

இம்பர் வான்எல்லை இராமனையே பாடி
'என்கொணர்ந்தாய் பாணாநீ?' என்றாள்பாணி;
வம்பதாம் களபம்'என்றேன்; 'பூசும்'என்றாள்:
'மாதங்கம்' என்றேன்; 'யாம் வாழ்ந்தேம்'என்றாள்;
'பம்புசீர் வேழம்'என்றேன்; தின்னும்'என்றாள்;
'பகடு' என்றேன்; 'உழும்'என்றாள் பழனந்தன்னைக்;
'கம்பமா' என்றேன்; நற்களியாம்'என்றாள்;
'கைம்மா'என் றேன்சும்மா கலங்கினாளே;

பாணன் மனைவியாகிய பாடினி,'பாணரே' இந்நில உலகையும். வானுலகையும் தனது புகழுக்கு எல்லையாக உடைய இராமன் என்னும் வள்ளலைப் பாடி, நீ என்ன பரிசு கொண்டுவந்தாய்' என்று என்னை வினவினாள். அதற்கு விடையாக நான் யானை என்று குறிப்பிடக் கருதி 'புதிதாகிய களபம் என்று சொன்னேன்; அவள் சந்தனம் என்று எண்ணிக்கொண்டு 'உடலில் பூசிக்கொள்ளுங்கள்' என்று மொழிந்தாள். யானையைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகிய 'மாதங்கம்' என்றும் சொன்னேன்; அவள் அதை மிகுந்த பொன் என்று கருதி 'நாம் வறுமையில் இருந்து தப்பிப் பிழைத்து மகிழ்ச்சியாக வாழ்வோம், எனப் புகன்றாள், எழுச்சியில் சிறந்த 'வேழம்' என்று சொன்னேன்; அதைக் கரும்பென நினைத்துத் 'தின்னுங்கள்' என்று சொன்னாள். 'பகடு' என்று கூறினேன்; அதைக் கொண்டு *வயலை உழவு செய்யுங்கள்' என்று கூறினாள். 'கம்பமா' என்று கூறினேன்; அவள் 'கம்புமாவு' எனக் கருதி நல்ல களியாகச் செய்யலாம்' என்று நவின்றாள். 'கைம்மா' என்று சொன்னேன்; அவள் ஒன்றும் பேசாது திகைத்து நின்றாள்.

நயம்: நான் பெற்ற பரிசாகிய யானைக்குரிய வேறு பெயர்களையேமனைவியிடம்வேடிக்கையாகக்கூறியபொழுது அவளும் அதை வேறு பொருள்களாக விடை பகர்ந்தாள்; முடிவில் 'கைம்மா' என்பதைக் கேட்டு வியப்பும் திகைப்பும் அடைந்து, யானையைக் கட்டித் தீனிபோடுவது யார்? நமக்குச் சோறு கிடைப்பதே அரிதாக இருக்கிறதே' என்று நினைத்து வருந்தி வாய்திறந்து பேசா மடந்தையானாள் என்பதன் மூலம் புலவர் தன்னுடைய தகுதிக்கு ஏற்ற அதே நேரத்தில் வைத்துக் காப்பாற்ற முடியாத யானையைப் பரிசாகக் கொடுத்த இராமன் கொடைத்திறத்தைச் சொல்லழகு தோன்றப் பாராட்டுகிறார்.

யானைக்குரிய வேறு பெயர்கள் களபம், மாதங்கம் வேழம், கம்பமா, கைம்மா முதலியனவாகும். இச்சொற்கள் ஒவ்வொன்றுக்கும் வேறு பொருளும் உண்டு. களபம் –சந்தனம்; மாதங்கம் – பொன்; வேழம் – கரும்பு; பகடு – எருமை; கம்பமா – கம்பமாவு.

கைம்மா – கட்டுத்தறியில் கட்டப்படும் விலங்கு.

தோகையின் தோற்றம்.

வண்டோ விழி? நுதல் வான்பிறையோ?
அல்குல் மான்குளம்போ?
செண்டோ முலை? நித் திலமோநகை?
இடை சேர்துடி; கற்
கண்டோ மொழி?குழல் காரோ?
முகம் கமலம்; பவளத்
துண்டோ இதழ்? சுன்னித் தண்டோதொடை?
இந்தத் தோகையற்கே!

இந்த மயில் போன்ற சாயலையுடைய மங்கையின் கருவிழிகள் வண்டோ? நெற்றி, வானில் தோன்றும் பிறைச் சந்திரனோ? அல்குல் மான்குளம்போ? கொங்கைகள் மலர்ச் செண்டுகளோ? பற்கள் முத்துக்களோ? இடை பொருத்தமான உடுக்கையோ? சொற்கள் கற்கண்டு போன்றனவோ?

கூந்தல் கரிய மேகமோ? முகம் தாமரையோ? இதழ்கள் பவளத் துணுக்குகளோ? தொடை வாழைத்தண்டோ? என்பதை அறியாது என் மனம் மயங்குகிறதே!

குறிப்பு: எழில்மிக்க மங்கை ஒருத்தியைக் கண்ட தலைவன் அவளுடைய அழகை வியந்து போற்றும் நிலையைப் புலவர் இலக்கிய இன்பம் பொங்கிவழியுமாறு பாடியுள்ளார்

நுதல் – நெற்றி; வான் – வானம்; அல்குல் –பெண்களின் மறைவிடம்; செண்டு – பூப்பந்து ; நித்திலம் – முத்து ; கார்– மேகம்; கமலம் – தாமரை; கன்னி – வாழை.

மங்கையின் உடல் கரும்போ?

மாலே நிகராகும் சந்திர வாணன் வரையிடத்தே,
பால்ஏரிப் பாய்ச், செந்தேன்மாரிபெய்யநல்பாகுகற்கண்
டாலே எருவிட, முப்பழச் சாற்றின் அமுதவயல்
மேலே முளைத்த கரும்போ? இம்மங்கைக்குமெய்எங்குமே

திருமாலுக்கு ஒப்பான சந்திரவாணனது மலையிடத்தில் பாலாகிய ஏரிநீர் பாயவும், செம்மையாகிய தேன்மழை பெய்யவும், நல்ல கருப்பஞ்சாறு, கற்கண்டு முதலியவற்றை உரமாகப் போடவும், மா, பலா, வாழை என்னும் முப்பழத்தினால் ஆகிய அமிழ்தம் விளையும் வயலில் மேலாகத்தோன்றிய கரும்புதானோ இந்த மங்கையின் உடம்பு முழுவதும் என்று என் உள்ளம் ஐயுறுகின்றதே!

நயம்: தலைவன் முதன் முதல் தலைவியைக் கூடி இன்புற்றான். தலைவி தந்த இன்பத்தில் மயங்கிய தலைவன், அவளுடைய உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் உற்று நோக்குகின்றான். அவை ஒவ்வொன்றும் தனக்குத் தந்த இன்பத்தை எண்ணிப் பார்க்கிறான். அவ்வுறுப்புக்களை உடைய அழகிய மேனியை மீண்டும் காணுகின்றான். அவனுடைய உள்ளத்தில் இன்பவெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வருகிறது. மெய்மறந்த நிலையில் அவளுடைய நலன்களை

எல்லாம் தான் உணர்ந்தவாறு எடுத்துக் கூறிக் காதல் மொழி பேசுகிறான். உலகில் உள்ள பொருள்களில் கரும்பு ஒன்றுதான் முழுவதும் இனிப்புடையது என்று அவன் இதற்கு முன்பு அறிந்திருந்தான். ஆனால் இப்பொழுது தலைவியின் உடல் முழுவதும் தித்திக்கும் செங்கரும்பாக இருப்பதை உணர்ந்து வியப்படைகிறான்.

நாகதேவன் இட்ட உணவைக்குறித்துப் பாடியது

வாயிலொன்று கல்லுமொன்று நெல்லுமான அன்னமும்,
வாடலாக ஆறுமா தம் வைத்திருந்த கத்தரிக்
காயிலிட்ட கறியும்உப்பி, லாதகஞ்சு அன்னமும்,
காம்புஒடிந்த ஓர் அகப்பை கைப்பிடித்த வண்ணமும்,
தூயதாகத் துலக்கலின்றி அழுக்கடைந்த பாத்திரம்
தூக்கியுள் ளசுத்தநீர் துறுத்தவந்த நேர்த்தியும்,
ஓயலின்றி ஈக்கள்வீழ்ந்து மொலுமொலென்ற சட்டியும்,
உடன்கொணர்ந்த நாகதேவன் ஊண்மறப்பதில்லையே?

வாயிலே ஒரு கல்லும் ஒரு நெல்லுமாகச் சமைத்த சோறும். வாடிப்போகும்படி ஆறுமாதம் காயப் போட்டிருந்த கத்தரிக்காயைக் கொண்டு செய்த பொரியலும், உப்புப் போடாத கஞ்சிநீரும், காம்பு இல்லாத அகப்பையினால் சோறு படைத்த விதமும், சுத்தமாக விளக்காமல் மாசடைந்த பாத்திரத்தில் கொண்டுவந்த தண்ணீர் அழுக்கோடு கலந்து வந்துள்ள அழகும், ஓயாமல் ஈக்கள் வந்து மொய்த்து ஒலி செய்கின்ற மண்பாத்திரமும் ஆகிய இவற்றோடு கூடப் பரிமாறிய நாகதேவனுடைய சாப்பாட்டை நான் என்றும் மறக்க முடியாது.

அன்னம் – சோறு; வண்ணம் – விதம்:தூறு – அழுக்கு; நேர்த்தி –அழகு.

வறுமை இவர்களை விட்டுப் பிரியாது.

கவிகற்றவர்க்கும், கணிகற்றவர்க்கும், கம்மாளருக்கும்,
ஓவிகற்றவர்க்கும், உபாத்திகளுக்கும், உயர்ந்தமட்டும்
குவிவைக்கும் ஒட்டர்க்கும், கூத்தாடிகட்கும், குருக்களுக்கும்
இவரெட்டுப்பேர்கட்கும் நீங்காத்தரித்திரம் என்றைக்குமே!

பாட்டிசைக்கும் பாவலர்க்கும். சோதிடம் கணிக்கத் தெரிந்தவர்களுக்கும், உலோக வேலை செய்யும் தொழிலாளருக்கும், ஓவியம் தீட்டும் ஓவியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், உயரமான அளவு சுவர் வைக்கின்ற தொழிலையுடைய ஒட்டர்களுக்கும், கூத்தாடும் நடிகர்களுக்கும், புரோகிதர்களுக்கும் வறுமை எப்போதும் நீங்காது.

கவி – பாட்டு; கணி – சோதிடம்; கம்மாளர் – தட்டார்; ஓவியம் சித்திரம்.

தானன் என்பவன் தனக்கு யானையைம் பரிசாகக் கொடுத்தபோது பாடியது.

'இல்'லெனும்சொல் அறியாத சீகையில்வாழ்
தானனைப்போ 'யாழ்பாணன் யான்'
பல்லைவிரித்து இரந்தக்கால் வெண்சோறும்
பழந்தூசும் பாலியாமல்
கொல்லநினைந் தேதனது நால்வாயைப்
பரிசெ'ன்று கொடுத்தான்; பார்க்குள்
தொல்லையெனது ஒருவாய்க்கு நால்வாய்க்கும்
இரையெங்கே துரப்புவனே !

இரப்பவர்க்கு 'இல்லை' என்னும் சொல்லையே சொல்லி அறியாத சீகைப் பதியில் வாழ்கின்ற தானன் என்பவனைப் பாணனாகிய யான்போய், வாயைத் திறந்து பல் எல்லாம் தெரியக்காட்டி எனக்கு வேண்டியதை விருப்பத்துடன் கேட்டேன். அவன் தூய வெண்மையான சோற்றையும், பழைய துணியையும் தராமல், என்னைக் கொல்ல நினைந்து நால்வாயாகிய தனது யானையை எனக்குப் பரிசாகக் கொடுத் தான். உலகத்தில் பசியினால் துன்புறுகிற எனது ஒரு வாயோடு இன்னும் நான்கு வாய்களுக்கு உணவு எங்கிருந்து தேடிக் கொடுப்பேன்?

நயம்: ஒரு வாயினால் எனக்குப் பரிசு தருமாறு வேண் டியதற்கு நால்வாயை (யானையை) த் தந்தான். இந்த ஐந்து வாய்க்கு "எங்கு? எப்படி?" உணவினைத் தேடி அளிப்பேன்

என்பது, ஒரு வாய்கொண்டு இரக்க, நால்வாயாகிய யானையைப் பரிசாகத் தந்தான் என்னும் பெரும் புகழை எடுத்து உரைப்பதாகும்.

நால்வாய் என்னும் சொல், நான்கு வாய்கள் என்றும், தொங்குகின்ற வாயையுடைய யானை என்றும் பொருள்படும். புலவர் 'நால்வாய்' என்னும் சொல்லின் நயம்தோன்ற பாடியுள்ளார்.

தூசு – துணி; பாலியாமல் – கொடுக்காமல்; துரப்புதல் – தேடுதல்

தாய் மகனிடத்து உலக இயல்பு கூறும் துறை.

முன்னாள் இருவர்க்கும் யாக்கை
ஒன்றாக முயங்கினமால்;
பின்னாள் பிரியன் பிரியைஎன்று
ஆயினம்; பேசலும்
இன்னாள் கொழுநன் மனைவிஎன்று
ஆயினம்; இன்னமும்ஓர்
சின்னாளில் எப்படி யோஇய!
நீ இன்று செப்புகவே!

மகனே! முதன்முதலில் சந்தித்தபோது எல்லாம், உன் தந்தையும் யானும் இருவருக்கும் ஓர் உடம்பு என்று சொல்லும்படியாகக் கூடி வாழ்ந்தோம்; சில நாட்கள் கழிந்தபிறகு காதலன் காதலி என்று பேசும்படியாக இருந்தோம்; நாம் பேசுகின்ற, இக்காலத்தில் கணவன் மனைவி என்று கூறக் கூடிய நிலையை அடைந்தோம்; இன்னும் சில நாட்கள் கழிந்தால் நாங்கள் என்னநிலை அடைவோமென்று நீ இப்போது சொல்வாயாக!

விளக்கம் : உலக இயற்கைக்கு ஏற்ப கணவன் மனைவி ஆகிய இருவரிடையே தங்கள் பருவத்திற்கு உகந்த மனநிலை அமையவேண்டும் எண்பது ஆசிரியர் கருத்து.

யாக்கை – உடல் ; முயங்குதல்; கூடுதல் கொழுநன் – கணவன் .

என்ன பாவம் இது?

பணியாரம் தோசை யிலக்கொங்கை
தோய்ந்திடப் பார்ப்பார், பல்லி
பணியாரம் தோசையிலாச் செந்துவாய்ப்
பிறப்பார்கள் என்னோ
பணியாரம் தோசைமுன் னோனுக்கு இட்டு
ஏத்திப் பழனிச்செவ்வேள்
பணியார் அந்தோசைவ ராகார் அன்னோர்க்
கென்ன பாவமிதே!

அப்பம், தோசை என்பனவற்றை பிள்ளையாருக்குப் படைத்து வழிபட்டு, பழனியில் எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானை வணங்க மாட்டாதவர்கள் சைவ சமயத்தவராக ஒழுகமாட்டார்கள். நகைகள் அணிந்த இரண்டு குன்றுகளை ஒத்த கொங்கைகளை அணைந்து இன்பம் நுகர்ந்திட விரும்பு புவோர் பல்லி, பாம்பு மிகுதியான அந்துப் பூச்சி முதலிய அரவம் காட்டா த சிறு உயிரினங்களாகப் பிறப்பார்கள். ஐயோ! அவர்களுக்கு இது என்ன தீவினைப்பயன்!

பணியாரம் – அப்பம்;

முதல் 'பணியாரம் தோசை' என்பதனைப் பணி + ஆர் + அம் + தோ + சையிலம் என்றும், இரண்டாம் பணியாரம் தோசை' என்பதனைப் பணி + ஆர் + அந்து + ஓசை என்றும், நான்காம் 'பணியாரம் தோசை' என்பதனைப் பணியார்+ அந்தோ + சைவர் என்றும், மூன்றாம் அடியில் 'பணியாரம் +' தோசை' என்றும் பிரித்துப் பொருள்கொள்ள வேண்டும். இடைக்காலப் புலவர்கள் சொல் நுட்பத்தினையே சிறந்தது என்று கருதி, அதன் மூலம் பல நயம் தோன்றுமாறு பாடும் மனப்பான்மையுடையவர்கள் என்பதற்கு இப்பாடல் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

சையிலம் – மலை, செந்து – ஐந்து – உயிரினம்

கட்டுச் சோற்றைப் பறிகொடுத்தபோது பாடியது.

சீராடை அற்ற வைரவன் வாகனம், சேரவந்து
பாராரும் நான்முகன் வாகனம் தன்னை முன் பற்றிக் கௌவி,
நாராயணன் உயர் வாகனம் ஆயிற்று; நம்மைமுகம்
பாரான்; மை வாகனன் வந்தே வயிற்றில் பற்றினனே!

ஒழுங்கான ஆடை இல்லாமல் கோவணத்தைக் கட்டியுள்ள வைரவரின் ஊர்தியாகிய நாய், அருகில் வந்து நிலத்தில் இருந்த பிரமன் ஊர்தியாகிய அன்னத்தை நாம் எடுக்குமுன் எடுத்து வாயில் வைத்துக்கொண்டு, திருமாலின் பறக்கும் ஊர்தி யாகிய கருடன் போல ஓடிவிட்டது. நம்மிடத்து இரக்கம் காட்ட ஆட்டை வாகனமாக உடைய தீக்கடவுள் (அக்கினி) நமது வயிற்றினை இடமாகப் படித்துக் கொண்டு தங்கிவிட்டான்.

சீர் – ஒழுங்கான ; பாராரும்– நிலத்தில் இருந்தமை–ஆடு.

அகளங்கன் என்பவனைப் புகழ்ந்து பாடியது.

வடவைக் கனலைப் பிழிந்து கொண்டு
மற்றும் ஒருகால் வடித்தெடுத்து,
வாடைத் துருத்தி வைத்துஊதி,
மறுகக் காய்ச்சிக், குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைபாடிப்
பரிசுபெறாமல் திரும்பிவரும்
புலவர் மனம்போல் சுடுநெருப்பைப்
புழுகுஎன்று இரைத்தால் பொருப்பாளோ?
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நஞ்சுக்குழல் என்று அஞ்சியஞ்சி,
அஞ்சொல் கிளிகள் பஞ்சரம் விட்டு
அகலாநிற்கும் அகளங்கா!
திடமுக் கடவா ரணம் உகைத்த
தேவதேவ தேவசிங்கமே!
திக்கு விஜயம் செலுத்திவரு
செங்கோல் நடாத்தும் எம்கோனே!

அகளங்கனே! ஆற்றல்மிக்க மும்மதம் பொழியும் யானையை ஏறிச் செலுத்திய தெய்வம் போன்றவனே! தேவர்களின் சிங்கம் போன்றவனே! எட்டுத் திக்குகளிலும் வெற்றிக்கொடி நாட்டி வருகின்ற அறநெறி பிறழாது ஆளும் எங்கள் தலைவனே! காட்டு வாழையின் பசுமையான குருத்தை நச்சுக்குழல் என்று நினைந்து மிகுந்த அச்சம் கொண்டு அழகிய மொழிபேசும் கிளிகள் கூட்டைவிட்டு வெளியில் வராது இருக்கின்ற நாட்டின் தலைவனே! கடலில் உள்ள வடவைத் தீயைப் பிழிந்து சாறெடுத்து, அதனை மீண்டும் ஒரு முறை வடித்து எடுத்து, வடக்கே இருந்துவரும் வாடையாகிய குளிர் காற்று அருகில் காற்றுப்பையை வைத்து ஊதி சுண்டும் படிக் காய்ச்சிக் குழம்பு வடிவம் ஆகும்படி செய்து, உலகில் மூடர்களைப் புகழ்ந்து பாடி, அவரிடம் பரிசு பெறாது வெறுங்கையுடன் திரும்பிவருகின்ற புலவருடைய உள்ளம்போலச் சுடக்கூடிய நெருப்பை புனுகு என்று சொல்லித் தலைவிமேல் தெளித்தால், அதனை அவள் தாங்க முடியுமோ?

வட வைக்கனல் – ஊழித்தீ; துருத்தி– காற்றுப்பை; மறுக – சுண்ட புடவி – புவி – உலகு; புழுகு –புனுகு – புனுகுப்பூனையில் இருந்து எடுக்கப்படும் நறுமணப் பொருள்; அடவி – காடு; கதலி– வாழை: நச்சுக் குழல்– பாம்பு: பஞ்சரம் – கூடு; வாரணம் – யானை; உகைத்த– செலுத்திய

பொய் உரைப்பதன் பயன்.

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாம்
அவருக்குப் பொய்யாகாத
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறைபோல்
தவம்குறையும், மிடிஉண்டாகும்;
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்,
வறுமைபிணி தொலையாஎன்றும்,
உய்ய அருள் தேசிகர்க்குப் பொய்யுரைத்தால்
நரகமது உண்மைதானே!

பொய்யே பேசுபவரிடம் பொய்யையே பேசினால், அந்தப் பொய் சொன்னவருக்குச் செயலில் வெற்றி கிடைக்கும் பொய்யை விரும்பாத வாய்மையே பேசுகின்றவரிடம் பொய்

சொன்னால் மதியின்கலை தேய்வதைப்போல செய்த நல்வினை குறைந்து போகும்; வறுமை உண்டாகும். பெற்றெடுத்த தாய் தந்தையர்களிடம் பொய் பேசினால் வறுமையும், நோயும் எக்காலமும் நம்மைவிட்டு நீங்காது. பிறவிப்பிணி நீங்கும்படி அருள் செய்கின்ற குருதேவரிடத்துப் பொய் கூறினால், அது கொடிய துன்பத்தைக் கொடுக்கும் என்பது உலகம் அறிந்த உண்மையாகும்.

மிடி– வறுமை; துய்ய – தூய்மையான, பெற்றெடுத்த; தொலையா –நீங்கா: உய்ய –வீடுபேறு அடைய.

சீட்டுக்கவி

கொங்கு நாட்டை ஆண்ட செழியதரையன் என்னும் வள்ளலுக்கு, குதிரை ஒன்றைத் தனக்கு அனுப்பிவைக்குமாறு எழுதிய கடிதம். ஓலைச் சுருளில் புலவர்கள் கவி எழுதி அதையே கடிதமாகக் கொடுத்து அனுப்புவது வழக்கம். இதைச் 'சீட்டுக் கவி' என்பர்.

ஏடாயி ரம்கோடி எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்தவிரகன்;
எதுசொலினும் அதுவே எனச்சொலும்
கவிவீர ராகவன்விடுவிக்கும் ஓலை;
சேடாதி பன்சிரம் அசைக்கும் கலாகரன்,
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் செயித்த தாகம் தீர்ந்த
செழியன்எதிர் கொண்டு காண்க!
பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,
பத்திகோ ணாதகோணம்,
பறவாத கொக்கு, அனல் பண்ணாத கோடை, வெம்
படையாய்த் தொடாதகுந்தம்,
சூடாத பாடலம், பூவாத மாத்தொடை,
தொடுத்துமுடி யா தசடிலம்,
சொன்னசொல் சொல்லாத கிள்ளை 'ஒன்று' எங்கும்
துதிக்கவர விடவேணுமே!

கணக்கற்ற நூல்களைக் கையினால் சுவடியில் எழுதாது, தன் மனதிலேயே எழுதி அவற்றைத் தெளிவாகக் கற்ற திறமை உடையவனும், யார் எந்த நூலை எடுத்துப் படித்துக் காட்டினாலும், அதை ஒரு முறை கேட்டவுடன், அப்படியே அதைத் திருப்பிக்கூறும் நினைவாற்றல் உடையவனும் ஆகிய கவி வீரராகவன் எழுதி அனுப்பும் திருமுகம். ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடனும் கேட்டு இன்புற்று மெய்மறந்து தலை அசைக்குமாறு செய்யும் கலைக்கு இருப்பிடமானவனும், கங்கர் குலத்தில் தோன்றிய தலைவனும், தெற்கில் உள்ள பாலைக்காடு முதல் சேலம் வரை உள்ள நாட்டினை வென்று தனது மண் ஆசையை நிறைவேற்றிக் கொண்டவனும் ஆகிய செழியதரையன் இத்திருமுகத்தைப் பெற்றுப் பிரித்துக் காண்க! பாட்டு இசைக்காத கந்தருவம், வீசமுடியாத கந்துகம் (பந்து). கூர்மை மழுங்காத கோணம் (வாள்படை), பறக்காத கொக்கு, அனல் வீசாத கோடை (வேனில் காலம்). கொடிய படைக்கலம் போன்று பிடியாத குந்தம் (சூலம்), அணியாத பாடலம் (பாதிரிப்பு), பூவாத மா (மரம்), மலர்மாலை அணியாத சடிலம் (சடை), சொல்லியதைத் திருப்பிச் சொல்லாத கிள்ளை (கிளி) ஒன்றைக் காண்போர் எல்லாம் புகழுமாறு அனுப்பி வைக்கவேண்டுகிறேன்.

நயம்: கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை குந்தம், பாடலம், சடிலம், கிள்ளை என்னும் சொற்கள் எல்லாம் குதிரைக்குரிய பெயர்களாகும். ஆயினும் ஒவ்வொரு சொல்லும் இசை, பந்து, வாள், கொக்கு, வேனிற்காலம், சூலம், பாதிரிப்பூ, மா மரம், சடை, கிளி என்னும் பொருள்களையும் குறிப்பனவாகும். குதிரை என்னும் பொருளிலேபுலவர் பாடாத இசை, எறியாத பந்து, பறக்காத கொக்கு என்று ஒவ்வொன்றிற்கும் இயற்கையில் அமைந்துள்ள பண்புகள் இல்லாத நிலையினை உணர்த்த அடைகொடுத்துச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பாடாத கந்தருவம் என்பது, பாடாத என்னும் அடையினால் 'இசை' என்னும் பொருள் நீங்கி, குதிரை என்னும் பொருளை வெளிப்படையாக

உணர்த்துகிறது. இவ்வாறே பிறசொற்றொடர்களும் குதிரையைக் குறிப்பனவாக அமைந்துள்ளமை புலவருடைய புலமைத் திறத்தைப் புலப்படுத்துகிறது.

ஏடு – புத்தகம் ; ஆயிரம் கோடி – அளவற்ற என்பதனைக் குறிப்பதாகும்; விரகன் –திறமை உடையவன்; சேடன்– ஆதி சேடன்; கலாகரன் –கலைக்கு இருப்பிடமானவன்; பாலை –பாலக்காடு; பத்தி – வரிசை, கூர்மை; கோணாத மாறாத, மழுங்காத ; தொடாத – எறியாத; குந்தம் – சூலம்; தொடை – மாலை ; வேணும்– வேண்டும்.

கவிஞர் இயற்கை எய்தியபோது அவர் மாணவர் பாடிய இரங்கற்பா

இன்னம் கலைமகள் கைம்மீதில்
புத்தகம் ஏந்தி, அந்தப்
பொன்னம் பலம்தனில் புக்கிருந்தாள்
என்ன புண்ணியமோ?
கன்னன் களந்தைக் கவிவீர
ராகவன் கச்சியிலே
தன்நெஞ்சம் ஏடெனக் கற்றான்
ஒருமுத் தமிழையுமே!

கலைமகள் இன்னும் தனது கையில் ஏடு வைத்துக் கொண்டு அந்த அழகிய திருச்சபையில் சென்று தங்குவதால் என்ன பயன்? ஏதோ ஒரு நல்வினைப் பயனாய்க் கர்ணனைப் போன்ற வள்ளல் தன்மையுடைய பொன் விளைந்த களத்தூரில் தோன்றிய கவியரசனாகிய வீரராகவன், காஞ்சிமா நகரிலே ஒப்பற்ற இயல் இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் தனது மனதையே புத்தகமாகக் கொண்டு கற்றுத் தேர்ச்சியுற்று சிறந்த புலவர் ஆனார்.

கலைமகள் – சரசுவதி; பொன்னம்பலம் – திருச்சபை – சிதம்பரம்; கச்சி– காஞ்புரத்தின் பழைய பெயர்.

32. வேதநாயகம் பிள்ளை (1826–1889)

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள குளத்தூரில் சவரி முத்துப்பிள்ளை, ஆரோக்கிய மரியம்மை ஆகியோருக்குப் பிள்ளையாகத் தோன்றினார். பதினோறாவது வயதுவரையில் குளத்தூரிலேயே தமிழ்க் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றார். பிறகு ஆங்கிலக் கல்வி பெறுவதற்காகத் திருச்சிராப்பள்ளியில் வழக்குமன்ற மொழிபெயர்ப்பாளராக இருந்த தியாகப் பிள்ளையிடம் மாணவராகப் போய்ச்சேர்ந்தார். சில ஆண்டுகளில் அம்மொழியில் நல்லபயிற்சியும் பெற்றார். தமிழில் உள்ளதை ஆங்கிலத்திலும், ஆங்கிலத்தில் உள்ளதைத் தமிழிலும் மொழிபெயர்ப்பதில் சிறந்து விளங்கினார்.

படிப்பினை முடித்துக்கொண்டு, திருச்சிராப்பள்ளி வழக்கு மன்றத்தின் ஆவணக்களரி காப்பாளராக வேலையில் அமர்ந்தார். பிறகு அதே மன்றத்தில் மொழிபெயர்ப்பாளர் வேலையை ஏற்றுச் செம்மையாகச் செய்து வந்தார். பகல் முழுவதும் அலுவலக வேலைகளைப் பார்ப்பதும், இரவில் நூல் ஆராய்ச்சி செய்தல், பிறருக்குப் பாடம் சொல்லுதல் முதலிய அரும் பணிகளை ஆற்றிவந்தார் வேதநாயகம் பிள்ளை வழக்கு மன்ற முனிசீபாகப் பதவி ஏற்று சீர்காழி, மாயூரம் முதலிய இடங்களில் நெடு நாட்கள் பணியாற்றி வந்தார். பல ஆண்டுகள் தொடர்ந்து மாயூரத்தில் வேலையில் இருந்தமையாலும், ஓய்வு பெற்ற பின் அவ்வூர் நகராட்சி மன்றத் தலைவராய்த் தொண்டாற்றினமையாலும் 'மாயூரம் வேதநாயகம் பிள்ளை' என்று பேசப்பட்டார்.

தமிழ் நூல்களைக் கற்பதில் பேரார்வம் கொண்ட பெரியாருக்கு உற்ற நண்பராக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வாய்க்கப்பெற்றார். கவிபாடும் திறமையுடைய

வேதநாயகம் பிள்ளை ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் பாடல்கள் இயற்றி, அவற்றை மீனாட்சிசுந்தரனாரிடம் காட்டித் திருத்திக் கொள்ளுவார். இவர் சீர்காழியில் முனிசீபாக இருந்தபொழுது மகாவித்துவானை வரவழைத்து, 'சீர்காழிக்கோவை' என்னும் நூலினைப் பாடுமாறு செய்தார். அந்நூலினைத் தனது தலைமையில் சீர்காழி கோயிலில் அரங்கேற்றம் செய்தார். மேலும் அந்நூலுக்குச் சாற்றுக் கவிகளாகப் பல பாடல்கள் இயற்றித் தந்து, புலவர்பெருமானைப் போற்றிப் புகழ்ந்து, பரிசுகள் தந்து பாராட்டினார். வேதநாயகத்தின் பண்பட்ட நட்புள்ளத்தைக்கண்டு வியந்த மீனாட்சி சுந்தரனார் அவர்மீது 'குளத்தூர்க்கோவை'எனும் நூல் இயற்றித் தனது மாணவனும் புரவலனுமான வேதநாயகத்தைப் பாராட்டினார்.

வேதநாயகம்பிள்ளை கத்தோலிக்க கிறித்துவ சமயத்தினராய் இருந்தாலும், சிறந்த பொதுநோக்குடையவர். அவர் இயற்றிய சர்வசமய சமரசக்கீர்த்தனை, காளிப்பாட்டு, பெரிய பாளையத்து அம்மன் பதிகம் முதலியன சான்றாக உள்ளன. பெண்கள் கல்வி கற்கவேண்டும் என்பதைப் பற்றியும், பெண்களின் வாழ்க்கை நெறியைப் பற்றியும் 'பெண்மதி மாலை' எனும் பாடல்களும் உரைநடையும் அமைந்த நூலின் மூலம் நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூறியுள்ளார். தமிழில் முதன் முதல் வழக்குமன்ற விதிகளை மொழி பெயர்த்துச் 'சித்தாந்த சங்கிரகம்' எனும் நூலாக 1862ல் வெளியிட்டார்.

தமிழகத்தின் முதல் 'நாவல்' (புதினம்) ஆசிரியராகத் தமிழ் 'நாவல்களி'ன் தந்தையாக வேதநாயகம்பிள்ளை விளங்குகிறார். அவர் 1876–ஆம் ஆண்டில், 'பிரதாப முதலியார் சரித்திரம்' எனும் நகைச்சுவைமிக்க 'நாவலை' வெளியிட்டார். அந்நூல் இன்றுவரை தமிழ் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் பேராற்றல் உடையதாக இருந்து வருகிறது. அந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சுகுணசுந்தரி சரித்திரம் என்ற ஒரு கதையையும் எழுதி உள்ளார்.

வேதநாயகம்பிள்ளை பண்ணோடு பாடுவதில் வல்லவர். இசைக்கு ஏற்ற பல தமிழ்ப் பாடல்களை இயற்றித் தமிழ் இசை இயக்கத்துக்கு வித்திட்டார். அவருடைய இசைப் பாடல்கள் வேதநாயகம்பிள்ளை கீர்த்தனை' என்று இசை வாணர்களால் போற்றப்படுகிறது. அவருடைய தனிப்பாடல்கள் பல அழகும் நகைச்சுவையும் வாய்ந்தவையாகும். அவர் இயற்றிய வேறு நூல்கள் திருவருள் மாலை, தேவமாதா அந்தாதி, நீதிநூல், பொம்மைக் கலியாணம் முதலியனவாகும்.

இளைஞராய் இருந்தபொழுது அவருக்கு இருமல் நோய் உண்டாயிற்று. அந்நோய் முற்றியதோடு, வேறுநோய்களும் சேர்ந்து வேதநாயகம் பிள்ளையினை அறுபத்து மூன்றாவது வயதில் வான் உலகிற்கு அழைத்துச் சென்றன.

முகமன் கூறுவதைக் கண்டித்து பாடியது.

'அருங்கிரியே! கற்பகமே! காளையே!
அனந்தனே! அரியே'! என்ன
ஒருங்குநமை யேபுகழ்ந்து பொருள்கேட்ட
ஒருவனை, யாம் உற்றுநோக்கி,
இருங்கல்லே! மரமே! மாடே! பாம்பே! மிருகமே!'
என்றோம்; காய்ந்தான்;
மருங்கவன் வார்த்தையைத் திருப்பிநான் சொன்னால்,
அவனுக்குஏன் வருத்தம்அம்மா?

"அருமையான மலைபோன்றவனே! கற்பகமரம் போன்று கொடை வள்ளலே! காளைபோன்ற ஆற்றல் உடையவனே! ஆதிசேடன் போன்ற அறிவை உடையவனே!' என்று முழுவதும் நம்மையே புகழ்ந்து பணம் வேண்டும் என்றுகேட்ட ஒரு புலவனைப் பார்த்து 'கருங்கல்லே! மரமே! மாடே! பாம்பே! மிருகமே!' என்று கூறினேன் அவன் கோபித்துக் கொண்டான். அவன் சொன்ன சொற்களை அவனுக்குச் சாற்றிக்கூறினால், அவனுக்கு வருத்தம் வருவதற்குக் காரணம் என்ன?

குறிப்பு: முகமன் கூறும்பொழுது உயர்வுபற்றி மரியாதையாகக் கூறும் சொற்களில் உயர்வு குறிக்கும்

அடைமொழிகளை எடுத்துவிட்டால், அவை இழிவான பொருளைத் தரும் என்பது கருத்து

அம்மா – வியப்பு இடைச்சொல்; கிரி – மலை; கற்பகம் – தெய்வலோகத்தில் உள்ளமரம் என்பர்; இரு – கரிய.

இதுவும் அது.

'இந்திரன்நீ! சந்திரன்நீ!' என்னல், பிறன்மனையை
தந்திரமாக் கூடும் சழக்கன்நீ!– வந்தகுரு
பத்தினியைச் சேர்ந்தபடு பாவிநீ! என்பதாம்.
துத்தியமோ நிந்தையோ சொல்!

'நீ இந்திரனைப் போன்றவன்; சந்திரனைப் போன்றவன்' என்று சொல்லுதல், கௌதமர் மனைவியாகிய அகலிகையை இந்திரன் வஞ்சித்துக் கற்பு அழித்தது போல பிறர் மனைவியைக் கற்பு அழிக்கும் ஒழுக்கம் அற்றவன் நீ என்றும், சந்திரன் தனது குருவாகிய பிரகஸ்பதியின் மனைவியாகிய தாராவை மயக்கி அவளோடு கூடி இன்புற்றதைப் போன்று, நீ உனது குருவின் மனைவியைக் கற்பு அழித்துக் குருத்துரோகம் செய்தவன் என்றும் பொருள்படும் படியாகக் கொண்டால் அது புகழ்வதாகுமா? இகழ்வதாகுமா? நீயே சொல்லுவாயாக!

இந்திரனைப் போன்ற செல்வன் நீ! சந்திரனைப் போன்ற தண் ஒளியை உடையவன் நீ' என்று பொருள் கொண்டால் அது புகழ்ச்சி உரையாகும்.

துத்தியம் – துதியம் – புகழ்ச்சி

மேகத்தின் இயல்பு.

'செய்வேன்' எனச்சொல்லிச் செய்யாஉலோபரைப்போல்,
'பொய்வேன்' எனக்காட்டிப் பேர் முகிலே மைவானில்
ஓடுவாய்; நிற்பாய்; உருமுவாய்; மின்னுவாய்
நீடுவாய்; பின்பெய்யாய் நீ!

பெரியமேகமே! கொடுப்பேன் என்று சொல்லிக் கொடுக்காத லோபிகளைப் போன்று, மழை பெய்வதைப் போலத் தோற்றம்

செய்து, இருண்டவானில் செல்லுவாய்; நிற்பாய்; இடிமுழக்கம் செய்வாய்; மின்னலை வீசுவாய்; இவ்வாறு நெடுநேரம் வானில் இருப்பாய், கடைசியாக மழையைப் பெய்யாது போவாய்.

இதுவும் அது.

வேண்டுங்கால் நீபெய்யாய்; வேண்டாதபோது பெய்வாய்,
தாண்டுநீ செய்வதுஎல்லாம் தப்புக்களே! – நீண்டுலவும்.
வட்டமுகி லேஉனக்கு 'மாசு' எனப்பேர் தந்தோர்க்குப்
பட்டமது கட்டுவேன் பார்!

நெடுந் தொலைவு உலவுகின்ற வட்டவடிவமான மேகமே! வானிலே தாவிச் செல்லுகின்ற நீ வேண்டும் காலத்திலே பெய்யமாட்டாய்; வேண்டாத காலத்திலே பெய்வாய்; செய்வது எல்லாம் தப்புகளே; உனக்கு 'மாசு' எனப் பெயர் தந்தவர்களுக்கு முடிசூட்டிப் பாராட்டப் போகிறேன். அதைக் காண்பாயாக!

மாசு– கரியமேகம்.

தொழில்களுக்கு அடிப்படை.

மின்தொழில் சூரியன்தன் தொழில்;
தாங்குதல் மிக்கபுவி
யின்தொழில்; தீக்குச்சுடும் தொழில்;
காற்றுக்கு இயங்குந்தொழில்;
உன்தொழில் பெய்தல்மழையே! உனை
யுண்டு உயிர்உய்குவது
என்தொழில்; உன்தொழில்நீ மறந்தால்
புவிக்கு என்தொழிலே?

பிரகாசமாக ஒளிவீசுவது சூரியனுடைய தொழிலாகும் பொருள்களைத் தாங்குதல் சிறந்த பூமியின் தொழிலாகும். நெருப்புக்குச் சுடுவது தொழில்; காற்றுக்கு அசைவது தொழில் மேகமே உன்னுடைய தொழில் மழையைப் பொழிவதாகும் அந்த நீரை உண்டு பிழைப்பது என்னுடைய வேலையாகும். உனது தொழிலை நீ செய்ய மறந்தால் இவ்வுலகில் உள்ளவர் களுக்கு என்ன வேலை இருக்கிறது?

வேனிற்கால வெப்ப மிகுதியைப் பாடியது.

சூரியா! நின்பரிகள் சோம்பல்மேற் கொண்டனவோ?
ஆரியத்தேர் அச்சாணி அற்றதோ?–'ஓர் இமையில்
செல்' என்றால் செல்லாமல், தீமாரி பெய்துநின்றாய்;
'நில்' என்றுயார் சொன்னார் நினை!

கதிரவனே! உன்னுடைய குதிரைகள் சோம்பேறிகளாகி விட்டனவோ? உன்னுடைய உயர்ந்த தேரின் அச்சாணி முறிந்து போய் விட்டதோ? 'ஓர் இமைப் பொழுதில் போய் விடு!' என்று சொன்னால் போகாமல், நெருப்பு மழையைப் பெய்தாய்! உன்னை நிற்கும்படி யார்சொன்னார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்!

பரி – குதிரைகள்: ஆரிய –உயர்ந்த.

இதுவும் அது.

வேலைக்குள் மூழ்கினும், மேகத்துள் சேரினும்
விண்ணின் மண்ணின்
மூலைக்கு மூலை ஒளியினுங், கார் இருள்
மொய்க்குங் குளிர்ச்
சோலைக்குள் மேவினும், கோடைப் பரிதி
தொடர்ந்து சுடு,
மாலைக்கு அனங்கன் சுடுமென்று பொய்
சொல்வர் வம்பர்களே!

கடலினுள் மூழ்கிக்கிடந்தாலும், மேகமண்டலத்தில் போய் இருந்தாலும், வானிலோ, பூமியிலோ, மூலை முடுக்குகளிலோ போய் மறைந்து இருந்தாலும், கரிய இருள்நிறைந்த குளிர்ந்த சோலைக்குள் போய்ச் சேர்ந்தாலும், கோடைகாலத்துச் சூரியன் பின்தொடர்ந்து வந்து வெப்பம் தரும். மாலைக் காலத்தில் மன்மதன் வெப்பம் உண்டாக்குவான் என்று வம்பர்கள் பொய் சொல்லுவார்கள்.

வேலை– கடல்: மொய்க்கும் – நிறைந்து இருக்கும்; பரிதி –சூரியன். அனங்கன் – மன்மதன்

வேலையில் இருந்து ஓய்வுபெற்றபோது பாடியது.

துறைநீங் கினஉத்தி யோகத்தைக்
கைவிட்ட தன்மையினால்
சிறைநீங் கினம்; பல தீயர்க்குள்
ளாகிச் சிறுமையுறும்
குறைநீங் கினம்; துட்டர் கூட்டமும்
நீங்கினம்; கூடும் துன்பப்
பொறைநீங் கினம்; கறைநீங் கினமகிழ்
பூண்நெஞ்சமே!

மனமே! நிலத்தில் இட்டதைப்போல் ஓர் இடத்தில் ஒட்டிக்கொண்டு இருப்பதாகிய உத்தியோகத்தை விட்டு நீங்கினமையால், கட்டுப்பாடுடைய சிறைச்சாலையிலிருந்து நீங்கினோம்; பொல்லாதவர் பலருக்குக் கீழ்ப்பட்டிருந்து இழிவடையும் நிலைமையை நீக்கினோம்; குறும்பர்களுடைய தொடர்பும் தொலைந்தது; வந்து சேரும் துன்பங்களின் சுமையும் ஒழிந்தது; நம்முடைய குற்றமும் நீங்கப்பெற்றோம்; எனவே மகிழ்ச்சி அடைவாயாக!

பொறை – சுமை – குற்றம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய சீர்காழிக்கோவையைச்சிறப்பித்துப்பாடியது

தண்தமிழ்முன் னீர்பெருகி, மீனாட்சிசுந்தரப்
பேர்த்தருமக் கொண்டல்,
தொண்டர்கள்சூழ் சிவபுரத்தில் பொழிகோவை
எனும் அமுத தூயவாரி
மண் தலமும் விண்தலமும் கரைபுரண்டு
திரைசுருண்டு வருதல்நோக்கி,
அண்டர்தொழும் புகல்இறை தோணியுற்றான்
அஃதின்றேல் அமிழுவானே!

குளிர்ச்சி பொருந்திய தமிழ்க் கடலிலே நீரைக் குடித்து, மீனாட்சிசுந்தரம் என்னும் அறவடிவமான மேகமானது அடியார்கள் நிறைந்த சீர்காழியில் பெய்த கோவையாகிய அமிழ்தத்தின் வெள்ளமானது, மண்ணிலும் விண்ணிலும் பெருக்கெடுத்துக் கரைகளைத் தாக்கி அலைவீசி வருவதைப் பார்த்து, தேவர்கள் வணங்குகின்ற சீர்காழியில் புகழுடன் விளங்கும் இறைவன் தோணியின்மேல் வீற்றிருந்தான். அத்தோணி இல்லாமல் போனால் அவன் அந்த அமிழ்த வெள்ளத்தில் மூழ்கி விடுவான்.

முன்னீர் – கடல்; கொண்டல் – மேகம்; கோவை – சீர்காழிக் கோவை; வாரி– கடல்; மண்தலம் – மண்ணுலகு; விண்தலம் – வானுலகு; திரை – அலை; அண்ட– தேவர். சீர்காழிக்குத் திருத்தோணிபுரம் என்பது பழம் பெயர்.

மனைவி இறந்தபொழுது பாடியது.

மாதரின்றி வாழின் மதன்பகையா; நாமணம்செய்
காதலியர் மீது பகை காலனாம்;– பூதலத்தில்
கள்ளமின் னாரைக்கூடில் கத்தன்பெரும் பகையாம்
உள்ளமே வேறென் செய்வோம்.

பெண்களோடு கூடாமல் வாழ்ந்தால் மன்மதனுடைய பகைமை உண்டாகிறது. நாம் திருமணம் செய்துகொண்ட மனைவிமீது எமன் பகைமை கொள்ளுகின்றான்; உலகத்தில் பொதுமகளிரைக்கூடினால் கடவுளுடைய பெரிய வெறுப்பு ஏற்படும். மனமே வேறு என்ன செய்யலாம்?

காலன் – எமன்; கள்ளமின்னார் – பொதுமகளிர்; கத்தன் – கர்த்தன் – கடவுள்.

நீயாவி நானுடல்; நீபோனாய்; நான் இருந்தேன்;
மாயாமல் வெற்றுடம்பு வாழுமோ? – தூயாளே
நானோநா னல்லவோ? நாட்டினான் வேறொருவன்
தானோஈ தென்னநவம் சாற்று.

தூய்மை பொருந்தியவளே! நீ உயிர்; நான் உடம்பு. நீ இறந்துபோனாய்; நான் உயிரோடு இருக்கின்றேன். உயிர் இல்லாத உடம்பு அழியாமல் பிழைத்து இருக்குமா?

நான், நான் அல்லவோ? உலகத்தில் நான் மற்றொருவனோ? இது என்ன புதுமை? என்று கூறுவாயாக!

முதலியார் வாங்கி வந்த காளை

இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த
காளை, தினம் இருபோர் தின்னும்;
சட்டமுடன் கொள்ளுண்ணும்; புல்லுண்ணும்
அதைப்பண்டி தன்னில் பூட்டக்,
கிட்டவரின் முட்டவரும்; தொட்டவர்மே
லேகழியும்; கீழேவிழும்
எட்டு ஆள்கள் தூக்கிடினும், தடிகொண்டு
தாக்கிடனும் எழுந்திராதே!

விருப்பத்தோடு முதலியார் அவர்கள் வாங்கிவந்த எருது நாள்தோறும் இரண்டு போர் அளவினதாகிய வைக்கோலைத் தின்னும்; நன்றாகக் கொள்ளையும் புல்லையும் தின்னும்; அதை வண்டியில் கட்டுவதற்கு அவிழ்த்துக் கொண்டு போக அதன் அருகில் சென்றால், தன் கொம்புகளால் குத்துவதற்குத் தலையை அசைத்துக் கொண்டுவரும்; அதைத்தொட்டு இழுப்பவர்கள் மேலே சாணிபோடும்; அந்த இடத்தைவிட்டு நகராமல் இருப்பதற்காகக் கீழே படுத்துக்கொள்ளும். அதை எட்டு ஆள்கள் வந்து பிடித்துத் தூக்கினாலும், கம்பினால் நன்றாக அடித்தாலும் படுத்த இடத்தைவிட்டு எழுந்திருக்காது.'

குறிப்பு: வேதநாயகம் பிள்ளை தன்னுடைய வண்டிக்கு ஏற்ற நல்ல காளை மாடு ஒன்றை வாங்கி வருமாறு தமது நண்பர் முதலியாரிடம் கூறினாராம். முதலியாரும் நல்ல எருதாகத் தேர்ந்தெடுத்து ஆர்வத்தோடு வாங்கி வந்து பிள்ளை அவர்களின் மாட்டுத் தொழுவத்தில் கட்டினாராம். அது இருந்த இடத்திலேயே வயிறு நிறைய தின்பதைத் தவிர, வேறு எந்த வேலையும் செய்வதற்கு உதவாது முரண்டுவதைக் கண்ட

பிள்ளை நகைச்சுவை தோன்ற தன்னுடைய காளை மாட்டின் குணத்தைப் போற்றி பாடியுள்ளார்.

துறவோர் சடையைப் பழித்தல்.

பெண்ணைச் சடையில் வைத்தவன்போல
பெண்கள் பலரை ஒழிப்பதற்கோ?
பிறர்கண் டாலும் ஆண் பெண்எனும்
பேதம் தெரியாது இருப்பதற்கோ?
பண்ணைப் பழிக்கும் மொழியரோடு
பாய்போல் விரித்துப் படுப்பதற்கோ?
மண்ணைத்தழுவ நடக்கு மின்னார்
மலர்க்கால் தூசி தட்டுதற்கோ?
மாயத் துறவு பூண்டதன்றி,
மயிரும் துறவோம் என்றுகொலோ?
விண்ணைத் தழுவப் பழிச்சுமைபோல்
மிகவே சடையை நீர்வளர்க்கும்
விதமென் சொல்லீர் பண்டார
வேடம் பூண்ட மேலோரே!

பண்டாரவேடம்பூண்டபெரியோர்களே!கங்கையைச்சடையில் வைத்தகடவுள்போல்சடையில்பெண்ணைவைத்துமறைப்பதற்கோ? மற்றவர்கள்பார்த்தால்ஆண்பெண்என்னும்வேறுபாடுதெரியாது இருப்பதற்கோ? இசையை வென்ற இனிய சொல்லையுடைய பெண்களோடுசடையைப்பாய்போல்விரித்துப்படுப்பதற்கோ?எமனது பாசக்கயிறு போலப் பிறரைச் சுற்றி இழுத்து அவரிடத்து உள்ள பொருளைக் கொள்ளை கொள்ளுவதற்கோ? பூமியில் நடக்கும் மின்னைப்போன்ற நுட்பமான இடையை உடைய பெண்களின் பூப்போன்றஅடிகளில்படிந்துள்ளபுழுதியைத்தட்டித்துடைப்பதற்கோ? பொய்யாகத்துறவு.கொண்டதுஅல்லாமல்உண்மையாகத்துறவி ஆகாமையால்மயிரைவிட்டுவிடமாட்டோம்என்றுகாட்டுவதற்கோ? வானத்தைஅளாவும்படியாகப்பழிச்சுமையைத்தலையில்தாங்கிக் கொள்வதைப் போலச் சடாபாரத்தை வளர்க்கின்ற காரணம் என்னவென்று கூறுவீர்!

பேதம்– வேறுபாடு; பண் – இசை ; விண் – வானம்

33. பல்சுவைப் பகுதி

தந்தையர் ஐவர்.

பிறப்பித்தோன்,வித்தைதனைப் பேணிக்கொடுத்தோன்,
சிறப்பின்உப தேசம் செய்தோன் – அறப்பெரிய
பஞ்சத்தில் அன்னம் பகர்ந்தோன், பயந்தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென எண்.

ஒருவன் தன்னைப் பெற்றெடுத்த தகப்பனையும், தனக்கு விருப்பத்தோடு கல்விகற்பித்த ஆசிரியரையும்,வீடு பேற்றிற்குரிய மெய்ப்பொருளை அறிவித்ததவநெறியாளராகிய அறவோரையும், கொடிய பெரும் பஞ்சம் உண்டாகிய காலத்து மக்களுக்கு உணவளித்துக் காப்பாற்றிய அருள் மிக்க வள்ளலையும், தனக்கு உண்டானஅச்சத்தைநீக்கினவனையும்தனக்குரியதந்தையராகக் கருதவேண்டும்.

வித்தை–கல்வி;பேணி–விரும்பி;அன்னம்–சோறு;எஞ்சாத–நீங்குதல்இல்லாத.

தாயர் ஐவர்.

தன்னை அளித்தாள்; தமையன் மனை; குருவின்
பன்னி; அரசன் பயில்தேவி;– தன்மனைவியைப்
பெற்றாள் இவரையே பேசில் எவருக்கும்
நற்றாயர் என்றே நவில்.

உலகில் உள்ள எல்லாருக்கும் தன்னைப் பெற்றெடுத்த அன்னை, அண்ணன் மனைவியாகிய அண்ணி, ஆசிரியரின் கற்புடையமனைவி,அரசனதுபட்டத்து அரசி,தன்மனைவியின் தாயாகியமாமிஆகியோர்நல்லதாய்மார்கள்ஆவார்கள்என்றுகூறுக.

பன்னி–கற்புக்கரசி(பத்தினி);பயில்–பட்டத்துக்குரியவள்;நற்றாயர்–நல்ல தாய்மார்.

மனை விளக்கு.

மனைக்கு விளக்கு மடவாள்; மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்– மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதில் புகழ்சால் உணர்வு

இல்லறத்திற்கு ஒளிதரும் விளக்கினைப் போன்றவள் மனைவி; பெண்களுக்குப் பெருமையைத் தருபவர் பண்பு மிக்க பிள்ளைகள்; மனதுக்கு இனிய அன்புமிக்க பிள்ளைகளுக்கு உயர்வு தருவது கல்வி; கல்விக்குச் சிறப்புத்தருவது புகழ்மிகுந்த நல் அறிவாகும்.

தகை – பண்பு; சால் – மிகுந்த; உணர்வு – நல் அறிவு.

மனைவியின் மாண்பு.

அன்னை தயையும், அடியாள் பணியு, மலர்ப்
பொன்னின் அழகும், புவிப்பொறையும் – வன்னமுறும்
வேசி துயிலும், விறல்மந் திரிமதியும்
பேசில் இவை உடையாள் பெண்.

தனது கணவனைப் பரிவுடன் பேணுவதில் அன்னையைப் போன்ற அருள் உள்ளமும், கணவனுடைய கட்டளையைக் கேட்பதில் அடிமைபோன்ற தாழ்மையும், தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைப்போன்ற பேரழகும், பூமாதேவியைப் போன்ற பொறுமையும், நயமாகப் பேசுவதில் வல்ல விலைமகள்போல இன்பந்தந்து தூங்கும் இயல்பும், ஆற்றல் மிக்க அமைச்சருக்குரிய அறிவும், வாய்க்கப்பெற்றவளைச் சிறந்த மனைவி என்று கூறலாம்.

அடியாள் – அடிமை; மலர்ப்பொன் – இலக்குமி; வன்னம் – வண்ணம்; விறல்– ஆற்றல், வெற்றி; மதி– அறிவு.

கல்வி முறை.

எழுதரிது முன்னம்; எழுதியபின் அத்தைப்
பழுதறவா சிப்பரிது; பண்பா– முழுதும் அதைக்
கற்பரிது ; நற்பயனைக் காண்பரிது; கண்டக்கால்
நிற்பரிது தான் அந் நிலை!

நாள்தோறும் கற்பதை முதலில் எழுதுவது அருமையாகும், எழுதிய பிறகு எழுதியதைப் பிழை இல்லாமல் படிப்பது நல்ல முறையாகும்; எழுதியதை முழுவதும் மனப் பாடம் செய்வது அரிய செயலாகும்: எழுதிய சொல்லிற்கு உரிய பொருள் யாதென அறிதல் அதனினும் அருமையான செயலாகும்; அதன் பொருளை அறிந்தபின் அந்நூல் கூறும் கருத்துக்களைக் கடைப்பிடித்து ஒழுகுதல் அதனினும் அரிய செயலாகும்.

அத்தை –அதை

மக்களுக்குக் கல்வி புகட்டாமையால் வரும் தீங்கு.

மாலினால் இருவரு மருவி, மாசிலாப்
பாலனைப் பயந்தபின், படிப்பி யாது,உயர்
தாலமேல் செல்வமா வளர்த்தல் தங்கட்குஓர்
காலனை வளர்க்கின்ற காட்சி போலுமால்!

காம மயக்கத்தினால் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கூடி குற்றமற்ற பிள்ளையைப் பெற்ற பிறகு, அப்பிள்ளைக்குக் கல்வி கற்பிக்காது, பெருமையுடைய உலகில் செல்வமாகப் பிள்ளையை மனம் போனபடி போகவிட்டு வளர்ப்பது, தங்களுக்கு மானக்கேட்டையும், துன்பத்தையும் தரக்கூடிய எமன் போன்ற கொடிய ஒருவனை விரும்பி வளர்ப்பதைப் போன்றதாகும்.

மால்– மயக்கம்; மருவி – கூடி.: காலன் – எமன். மாசு – குற்றம்; தாலம் – உலகம்;

விருந்து ஓம்பும் முறை.

விருந்தின னாக ஒருவன்வந்து எதிரின்
வியத்த: நன் மொழிஇனிது உரைத்தல்;
திருந்துற நோக்கல்; 'வருக' என உரைத்தல்;
எழுதல்; முன் மகிழ்வன செப்பல்;
பொருந்துமற்று அவன் தன் அருகுற இருத்தல்,
'போம்' எனில் பின்செல்வ தாதல்;
பரிந்துநன் முகமன் வழங்கல்; இவ் வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே!

ஒருவர் விருந்தினராக நம் எதிரில் வருவாரானால், அவரைக் கண்டது குறித்துப் புது மகிழ்ச்சி காட்டவேண்டும்; உபசாரமாக நல்ல இனிய சொற்களைப் பேசவேண்டும்; அன்புகனிந்த முகத்தோடு அவரைப் பார்க்கவேண்டும்; வீட்டிற்கு வந்தால் 'வாருங்கள்' என்று வரவேற்கவேண்டும்; இருக்கையில் இருந்தால் எழுந்து வரவேற்கவேண்டும்; மகிழ்ச்சிதரக்கூடிய சொற்களைச் சொல்லவேண்டும்; விருந்தினருக்குத் தகுந்த முறையில் இருக்கவேண்டிய நெருக்கத்தில் இருக்க வேண்டும்; விருந்தினர் 'போய்வருகிறேன்' என்று சொன்னால், அவர் பின்னே சிறிது தொலைவு செல்லவேண்டும்; அன்புடன் வெற்றிலைப்பாக்கு, சிற்றுண்டி முதலியன கொடுத்து உபசாரம் செய்யவேண்டும். இவ்வொன்பது வகையான செயல்களும் விருந்தினரைப் போற்றுவதற்குரிய நல்ல முறைகளாகும்.

எதிரின் – எதிரில் வந்தால் திருந்துற – மகிழ்ச்சியடைய.

பெண் கொடுப்பதற்குத் தகுதி அற்றவர்.

முத்தியில் விருப்பம் உடையவன்; மிடியன்;
மூர்க்கன்; சேண் தேயத்தில் உள்ளோன்;
புத்தியில் வயிரம் பொருந்திய சூரன்;
புதல்விதன் வயதின்மும் மடங்கு
தத்திய வயது ளோன்இனார் தமக்குத்
தரணியில் ஒருவரும் உள்ளம்
நத்திநன் மகளைத் தரத்தகாது என்றாக்
கணிதநூல் நவின்றிடு மன்னோ!

வீடுபேற்றை அடைவதிலே விருப்பம் உடையவன், வறியவன், பிடிவாதகுணமுள்ள மூடன், நெடுந்தொலைவில் உள்ள நாடுகளில் இருப்பவன், பிறர் செய்த தீமையை மறவாது நினைவில் வைத்துக்கொண்டு தீமை செய்யக் கருதும் வைர உள்ளம் படைத்த வீரன், மணமகளைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக வயதுடையவன் ஆகிய இத்தகையோருக்கு, உலகில் யாரும் மனம் இசைந்து நல்ல பெண்ணைக் கொடுக்கக்கூடாது என்று சோதிட நூல் கூறும்.

மிடி – வறுமை; வயிரம்– பழிவாங்கும் மனம்; தத்திய– அதிகமான; தரணி – உலகு; நத்தி – விரும்பி; கணிதநூல் – நாள் கோள்நிலைகளைக் கணக்கிடும் சோதிட நூல்: மன்னோ – அசை.

பெண்ணை மணப்பதற்குத் தகுதியுடையவர்.

புரைதபு குணனும், சீலமும், வனப்பும்.
பூரண ஆயுளும்,துப்பும்,
கரையில்விற் பனமும், பாலனம் புரியும்
கருத்தரும், குறைவிலாது ஆக
விரவுசெல் வமுமாம் எண்வகை யுடைய
ஆடவர் விருப்புறு வண்ணம்
பரலிநின்று அவர்க்கு மகள் கொடை உதவல்
பருணிதர் கடமைய தாமால்.

குற்றமற்ற நற்பண்பும், சிறந்த ஒழுக்கமும், அழகும், நூலோரால் கூறப்பட்ட முழு வாழ்நாளும், ஆற்றலும், அளவு இல்லாத கல்வி அறிவும், தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தாரைக் காப்பாற்றும் நோக்கமும், நேர்மையான வழியில் சேர்த்த அரிய செல்வமும் ஆகிய எட்டுவகையான சிறப்புக்களையுடைய ஆண்மக்கள் விரும்புகிற முறையில் அவர்களைப் போற்றித் தனது மகளைப் பரிசாகத் தந்து திருமணம் செய்து வைத்தல் அறிவுடையோர் கடமையாகும்.

புரை – குற்றம் ; தபு– நீங்கிய; சீலம் –ஒழுக்கம்; வனப்பு – அழகு: துப்பு –ஆற்றல்; விற்பனம் – கல்வி; விரவு – சேர்ந்த; பருணிதர்–அறிவுடையோர்.

பிள்ளைப் பேற்றின் துன்பம்

மதலையைப் பெறுநாள் துன்பம்;
வளர்த்திடு நாளும் துன்பம்;
விதலைநோய் அடையில் துன்பம்;
வியன்பரு வத்தும் துன்பம்;
கதமுறு காலர்வந்து கைப்பற்றில்
கணக்கில் துன்பம்;
இதமுறல் எந்நாள் சேயால்?
என்றைக்கும் துன்பமானால்!

குழந்தையைப் பெறும் காலத்தில் தாய்க்கும், அவள் நலத்தில் அக்கறை கொண்ட உறவினர்க்கும் துன்பம் உண்டாகின்றது; குழந்தை பிறந்தபின் அதைக் கண்ணும் கருத்துமாக நோயாலும், பிறராலும் இன்னலுறாதபடி வளர்த்திடும் காலத்திலும் துன்பம் ஏற்படுகிறது; அச்சத்தைத் தரக்கூடிய நோய் பிள்ளைக்கு வந்துவிட்டால் அப்போதும் துன்பமே; குழந்தை வளர்ந்து தக்கவயது வந்த போதும், அதன் நல்வாழ்வைப்பற்றிக் கவலைப்படக் கூடிய துன்பம் நேர்கின்றது; சினம் கொண்ட எமதூதர் வந்து குழந்தையின் உயிரைக் கைப்பற்றிக்கொண்டு போனாலும், அதனால் அளவு கடந்த மன வருத்தம் உண்டாகிறது; குழந்தையால் இன்பம் அடைதல் எந்நாளிலும் கிடையாது; எந்த நாளிலும் துன்பம் உண்டாவதனால், பிள்ளையைப் பெறுவதால் நன்மை அடைவது எந்நாளோ?

மதலை – குழந்தை ; விதலை –அச்சம் தரும்; வியன் – வளர்ந்த; கதம் கோபம் ; இதம் –இன்பும்; சேயால் – குழந்தையால்.

எல்லார்க்கும் கவலை ஒரே தன்மையது.

பாலுக்குச் 'சர்க்கரை இல்லை'என் பார்க்கும்,
பருக்கை அற்ற
கூழுக்குப் போட'உப்பு இல்லை'என் பார்க்கும்,முள்
குத்தித் தைத்த
காலுக்குத் 'தோல்செருப்பு இல்லை'என் பார்க்கும்,
கனக தண்டி
மேலுக்குப் 'பஞ்சணை இல்லை' என் பார்க்கும்
விசனம் ஒன்றே!

பாலையே உணவாகக் கொள்ளுவோர் அதற்கு இனிமையைத் தரும் 'சர்க்கரை கிடையாது' என்று வருந்துகிறவர்களுக்கும், சோற்றுக்குப் பருக்கையே இல்லாத நீத்துப் போன கஞ்சிக்குச் சேர்த்துக்கொள்ளுவதற்கு உப்பு இல்லை என்று வருந்துகின்றவர்களுக்கும் காலில் முள் குத்தியதனால் பாதங்களில் போடுவதற்கு தோலினால் செய்யப்பட்ட செருப்பு கிடைக்காமல் வருந்துகின்றவர்களுக்கும், பொன் கட்டில்மேல் போடுவதற்குப் பஞ்சு மெத்தை இல்லையே என்று வருந்துகின்றவர்களுக்கும் கவலை ஒரே தன்மையதாகும்.

கனகதண்டி – பொன்கட்டில்.

வேண்டாம் என்று தள்ளக்கூடாதவை.

செந்தமிழ், அடைகாய், நீறு, சிவிகை, பொன்
ஆரம், ஆடை,
சுந்தர மான தோகை, துலங்கும்இவ்
வகைகள் ஏழும்
வந்தபோது இருகைஏந்தி வாங்க இலக்
குமியும் சேர்வாள்!
அந்தநா ளாகா என்றால் அவனைவிட்டு
அகலுவாளே!

செந்தமிழ் நூல், வெற்றிலைப்பாக்கு, திருநீறு, பல்லக்கு, பொன்மாலை, உடை, அழகிய மங்கை ஆகிய இந்த ஏழுவகைப் பொருள்களும் ஒருவன் முயலாமல் அவனுக்குக் கிடைக்கும்போது இரண்டு கைகளையும் நீட்டிப் பெற்றுக் கொண்டால், திருமகள் அவனிடம் சென்று சேர்வாள்.

இப் பொருள் கிடைத்த நாளில் அவற்றை வேண்டாம் என்று கூறினால் திருமகள் அவனிடம் இருந்து நீங்கிவிடுவாள்.

அடைகாய் – வெற்றிலைப்பாக்கு; சிவிகை – பல்லக்கு; ஆரம் – மாலை ; தோகை . பெண்.

பகைக்கத் தகாதவர்கள்.

மன்னவன், கணக்கன், பார்ப்பான்
வலுவுள்ளோன், மந்திரவாதி
பொன்னுள வன், குருக்கள், புலவன், பண்
டிதன், அமைச்சன்,
அன்னம்செய்து இடுவோன், எங்கும்
அடங்காத துட்டன் ஆம்இப்
பன்னிரு பேரோடு என்றும்
பகைகன விலும் கூடாதே!

ஒருவன் அரசன், ஊர்க் கணக்கன், முனிவன், திறமை உள்ளவன், மந்திரவாதி, செல்வன், குரு, புலவன், மருத்துவன், மந்திரி, சமையல்காரன், எவராலும் அடக்கமுடியாத தீயோன் என்ற இந்தப் பன்னிரண்டு பேர்களோடு கனவிலும் கூடப் பகைமை கொள்ளக்கூடாது.

நோய்க்குக் காரணம்

தன்னைத்தான் பேணாததாலும் சரீரத்தின் தண்டிப்பாம்,
பின்னுற்ற விசாரத்தாலும், பின்சல மலத்தினாலும்
அன்னத்தை ஒறுப்பதாலும், அரைஉடல் முழுகலாலும்,
தன்மத்தை இகழ்வதாலும் சரீரத்தில் நோய்தோன்றும்.

ஒருவன் தன்னுடைய உடம்பைத் தக்க உணவு முதலிய வற்றால் (காப்பாற்றாவிட்டாலும், உடம்பை மிகுந்த வேலை முதலியவற்றால் துன்புறுத்தலாலும், அவற்றிற்குப் பின் ஏற்பட்ட கவலையாலும். மலசலங்கள் சரியாகக் கழியாமல் உடம்பில் தங்குவதனாலும், உணவைக் குறித்த நேரத்தில் உண்ணாமல் போவதாலும், பாதி உடம்பை மாத்திரம் முழுகுவதாலும், அறச்செயலைப் போற்றிச் செய்யாமையாலும் உடம்பிலே நோய் உண்டாகும்.

சரீரம் – உடல்; விசாரம் – துன்பம்; தன்மம் – தருமம்.

சினத்தின் தீமை.

மூங்கிலில் பிறந்த முழங்குதீ மூங்கின்
முதலற முருக்குமா போலத்,
தாங்கரும் சினத்தீ தன்னுளே பிறந்து
தன்னுறு கிளையெலாம் சாய்க்கும்;
ஆங்கதன் வெம்மை அறிந்தவர் கமையால்
அதனையுள் ளடக்கவும் அடங்காது
ஓங்கிய கோபத் தீயினை ஒக்கும்
உட்பகை உலகில்வேறு உண்டோ?

மூங்கில் ஒன்றோடு ஒன்று உராய்வதனால் தோன்றி ஓசையோடு விளக்கமாய் எரியும் தீயானது அந்த மூங்கில் களையே வேர் அறும்படியாக முற்றிலும் அழித்து விடுதல் போன்று பொறுக்கமுடியாத கோபத் தீயானது ஒருவனுடைய உள்ளத்திலே தோன்றி அவனை அழிப்பதோடு, அவனுடைய நெருங்கிய உறவினரை எல்லாம் அழிக்கும். அத்தகைய கோபத்தின் கொடுமையை உணர்ந்தவர்கள், அமைதியாய் அதினை மனத்தினுள்ளே அடக்க முயன்றாலும் அது எளிதில் அடங்கமாட்டாது. மேலும் பொங்கி எழுகின்ற சினமாகிய நெருப்பைப்போல ஒருவனுக்கு அகத்தே உள்ள பகைவன் வேறுயாரும் இல்லை.

முதல் –வேர்; கிளை – உறவினர்; சுமையால் – அமைதி

நகைப்பிற்கு உரியன

நாண்இலான் சால்பும், நடைஇலான் நல்நோன்பும்,
ஊண் இலான் செய்யும் உதாரதையும். – ஏண்இலான்
சேவகமும், செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை.

மானக்கேட்டிற்கு காரணமான தீச்செயல்களைச் செய்வதற்கும் அஞ்சாதவனுடைய உயர்வும், ஒழுக்கம் இல்லாதவனுடைய நல்ல நோன்பும், உண்ணவும் உணவு

இல்லாதவன் செய்யும் தாராளச் செயலும், ஆற்றல் இல்லாத வனுடைய வீரச்செயலும், செந்தமிழைக் கற்றுத் தெளிவு பெறாதவன் பாட்டிசைத்தலும் ஆராய்ந்து பார்க்கப்படுமானால் வாயிலும், மனதிலும் சிரிப்பு உண்டாவதற்குக் காரணமாக அமையும்.,

சால்பு – உயர்வு; நடை – ஒழுக்கம்; நோன்பு – விரதம்; ஊண் – உணவு ஏண் – ஆற்றல்: சேவகம் – வீரச்செயல்.

பொருளின் சிறப்பு.

பொருள் இல்லார்க்கு இன்பம் இல்லை;
புண்ணியம் இல்லை; என்றும்
மருவுறு கீர்த்தி இல்லை; மாந்தருள்
பெருமை இல்லை;
கருதிய கருமம் இல்லை; கதிபெறு
வழியும் இல்லை ;
பெருநிலத் திடை நடக்கும் பிணம்
எனப்படுவர் அன்றே

உலகிலே பொருள் இல்லாதவருக்கு எத்தகைய இன்பமும் இல்லை; நன்மை உண்டாவதும் இல்லை; என்றும் பொருந்தக் கூடிய புகழ் ஏற்படாது, மக்களுக்கு நடுவே மதிப்பு இல்லை; நினைத்த செயலை முடிப்பது இயலாது: நல்ல கதியை அடைவதற்கு உரிய வழியும் அமையாது; பெரிய நிலவுலகில் நடைப்பிணமாக வறியவர் கருதப்படுவர்.

மருவுறு – பொருந்திய; கருமம் – செயல்

ஈயாதான் செல்வம்.

முழவொலி முந்நீர் முழுதுடன் ஆண்டார்
விழவூரில் கூத்தேபோல் வீழ்ந்துஅவிதல் கண்டும்
இழவென்று ஒருபொருள் ஈயாதான் செல்வம்
அழகொடு கண்ணின் இழவு.

மத்தளத்தின் ஓசையுடைய கடல் சூழ்ந்த உலகம் முழுவதையும் ஆட்சிசெய்த அரசர்கள், திருவிழா நடைபெற்ற நகரத்தில் ஆடப்பட்ட கூத்தானது முடிவு பெற்றதைப்போன்று செல்வம் இழந்து இறப்பதைப் பார்த்து இருந்தும், ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுத்தால், அதனால் நமக்கு நட்டம் என்று கருதி அறம் செய்யாதவனுடைய செல்வமானது, அழகு இருக்கும் பொழுது கண்பார்வையை இழந்ததைப் போன்றதாகும்.

முழவு – மத்தளம் ; முந்நீர் – கடல்; விழவு – திருவிழா; அவிதல் – சாதல்; இழவு – இழப்பு.

ஆராய்ச்சியில் நடுவு நிலைமை.

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருள்கண்
ஆய்தல் அறிவுடையோர் கண்ணதே;– காய்வதன்கண்
உற்ற குணம்தோன்றாது ஆகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

விருப்பையும் வெறுப்பையும் நீக்கி, ஒரு பொருளினை ஆராய்ச்சி செய்தல் சிறந்த அறிவுடைய அறிஞர்களிடத்துக் காணப்படும் பண்பாகும், ஒரு பொருளடத்து வெறுப்புக். கொள்வதனால் அதனிடத்துப் பொருந்தியுள்ள நல்லியல்பு நமக்குப் புலன் ஆகாது. அதைப்போன்றே ஒரு பொருளை ஆராயும்பொழுது அதனிடத்து விருப்பம் கொள்வதனால் அதனுடைய குற்றங்குறைகள் நமக்குப் புலனாகாமல் மறைத்து போகும்.

காய்தல் – வெறுத்தல்; உவத்தல் –விரும்புதல்; கண்ணதே – இடத்தே உற்ற– பொருந்திய.

பொய்யின் கதை.

ஆயத்துறையில் பிறந்துவந்து, அந்தணர் பால்குடித்து,
மாயக்கண்வேசை இடத்தேவளர்ந்து, வண்ணான் ஒருநாள்
எயப்புலவர் இடத்துஎட்டு நாள் செட்டி ஏனென்றுபின்
போய் அக்கசாலை புகுந்தனன் காண் அந்தப் பொய்ம்மகளே

'பொய்' எனப்படும் பெண் சூதாடும் களத்தில் பிறந்து பார்ப்பாரிடத்துப் போய்ப் பால்குடித்து, காண்போரை மயக்கும் கண்களை உடைய விலைமகளிரிடம் வளர்ச்சியுற்று, வண்ணான் இடத்தில் ஒருநாள் தங்கி, புலவர்களிடத்து எட்டு நாள் தங்கி, வாணிகம் செய்வோரை 'ஏன்' என்று வினாவிக் கொண்டு அவரைத் தொடர்ந்து போய்த் தட்டார் பொன் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வாழ்கின்றாள்.

நயம்: 'பொய்'யின் தோற்றம் முதற்கொண்டு நிலையாக வாழ்வதற்குரிய இடத்தை அடைந்தவரை அதன் கதையைப் "புலவர் சுவையோடு கற்பனை நயத்தைக் குழைத்து உலக இயல்பினை எடுத்துரைக்கும் திறம் பாராட்டுதற்குரியது. பொய் முதன்முதல் தோன்றியது சூதாடும் களம் என்பது இன்றைக்கும் நாம் காணக்கூடிய ஒன்றாகும் சீட்டாட்டம் ஆடுகின்றவர் தங்களுக்கு 'வெற்றி' உண்டாக வேண்டும் என்பதற்காகப் பொய்யுரைப்பது சர்வ சாதாரணம். பார்ப்பார் (புரோகிதர்) தங்களுடைய வசதிக்கு ஏற்ப இந்தநாள் நன்றாக இருக்கிறது, அந்தநாள் நன்றாக இல்லை என்று கூறுவது நாடு அறிந்த உண்மை. பொது மகளிர் பொருளை விரும்பும். நோக்கத்தை உள்ளத்தில் மறைத்து மேலுக்குத் தன்னோடு பழகும் ஆடவரிடம் பேரன்புடையவராகக்கூறி நடிப்பர் வண்ணான் 'நாளைக்குத் துணியைக் கொண்டுவந்து கொடுப்ப தாகக் கூறி பல நாட்கள் 'நாளைக்கு நாளைக்கு' என்று சொல்லி ஏமாற்றுவதில் வல்லவன். புலவர் ஒரு வாரத்திற்குள் நூலினைப் பாடி முடித்துத் விடுவதாகக் கூறுவது மரபு. ஆனால் அவர்கள் ஒன்பது வாரம் ஆனாலும் முடித்துத் தரமாட்டார்கள். வாணிகர்கள் 'பொய்' பேசுவதையே ஒரு கலையாக வளர்த்து வருபவராவர். தட்டார் எக்காலத்தும் யாரிடத்தும் 'பொடி வைக்காது நகை செய்ததாகச்' சொல்லுவதற்குத் தயங்கமாட்டார்கள். அதே நகையை சில மாதம் கழித்து அவர்களிடத்தில் கொண்டு வந்து கொடுத்து நகை செய்யுமாறு சொன்னால் என்னங்க; இது மட்டப்பொன்னுங்க'என்று கூசாமல் பொய் சொல்லுவார்கள்

மற்றவர்கள் எல்லாம் ஏதோ சில சமயங்களில் சிலரிடத்துப் பொய் சொல்லுவார்கள். தட்டான் தன் வாழ்நாள் முழுவதும் எல்லாரிடத்தும் 'பொய்' சொல்லியே பிழைக்கின்ற காரணத்தால் பொய்யாகிய மாது தட்டாரைத் திருமணம் செய்து கொண்டு அவர்களை விட்டுப் பிரியாமல் வாழ்ந்து வருகிறாள் என்று புலவர் நுட்பமாக நயம் தோன்ற குறிப்பிட்டுள்ளார்.

ஆயம்–சூதாடும் களம்; அக்கசாலை – பொற்கொல்லர் வேலை செய்யும் இடம்

கைத்தடியின் பயன்.

முனி அதட்டு, முள் தூக்கு, முன்னீர் அளக்கும்,
கனிஉதிர்க்கும், கவ்வுநாய் காக்கும், – தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயந்தீர்க்கும். பாம்புஅடிக்கும்
கைத்தலத்தில் தண்டிருந்தக் கால்.

கையில் ஒரு கைக்தடி இருக்குமானால் பேயைப் பயமுறுத்தும்; முள் கிடந்தால் அதை எடுத்துத் தூரப்போடும்; எதிரே இருக்கின்ற தண்ணீரின் ஆழத்தை அளந்துகாட்டும்; மரத்தில் உள்ள பழத்தைத் தட்டி கீழேஉதிரச் செய்யும்; கடிக்க வருகிற நாயை ஓட்டி நம்மைக் காக்கும்; தனியே வழிச் செல்லும் காலத்தில் பாதுகாப்பான துணையாகும்; அச்சத்தை நீக்கும்: பாம்பினை அடிக்க உதவும்.

முனி – பேய், பிசாசு முதலியன.

குடையின் பயன்.

பகலோன் தெறுங்கிரணம், பாய் பறவை எச்சம்
மிகமேல் உறாது அகற்றும்; விண்ணின்–முகில் அதனால்–
பெய்யுமழை யைத்தடுக்கும்; பேரழகு மாம்ஒருவர்
கையில் குடையிருந்தக் கால்.

ஒருவனுடைய கையில் குடை இருக்குமானால் அது. நம்மைத் துன்புறுத்தும் சூரியனுடைய கதிர் வானில் பறந்து செல்லுகின்ற பறவைகளின் எச்சமென்னும் இவற்றை

அதிகமாக நம்முடைய உடம்பில் விழாதபடி விலக்கும்; வானத்தில் மேகத்தினால் பொழியப்படும் மழை நீரைத் தடுக்கும்; மிகுந்த அழகையும் தரும்.

பகலோன் – சூரியன்; தெறும்– துன்புறுத்தும்; பாய் – பறக்கும்; எச்சம் பறவை மலம் ; முகில் – மேகம்

செருப்பின் பயன் .

கல்லும் உருத்தாது; காலில்முள் தையாது;
எல்லைமார்த் தாண்டன்சூடு ஏறாது– தொல்லைவரு
மாலை இருளில் வழிநடக்கக் கூசாது;
காலில் செருப்பு இருந்தக் கால்.

ஒருவன் காலில் செருப்புப் போட்டுக்கொண்டு இருப் பான், ஆனால், அடிகளை வழியில் உள்ள கல்லும் உறுத்தித் துன்புறுத்தாது; காலில் முள் தைக்காது; காலின் எல்லைக் குள் சூரிய வெப்பத்தினால் சூடேறாது தடுக்கும்; தொல்லை– வரக்கூடிய முன்னிருட்டில் வழி நடப்பதற்குக் கால் தயக்கம் அடையாது.

மார்த்தாண்டன் – சூரியன்; தொல்லை – துன்பம்.

கவிதைப் பண்பு.

குச்சிலிய மாதர்குய மும்; குவல யத்தோர்
மெச்சுதமிழ் மாதர்வியன் முலையும் – சிச்சீ !
தெலுங்குமட மாதர்சிங் காரக் கொங்கை
கலிங்கம்என வேசொல் கவி.

கூர்ச்சர நாட்டுப் பெண்களின் முழுவதும் மூடிய கொங்கைகளும், உலகினர் பாராட்டும் தமிழ்ப் பெண்களின் நன்கு மூடாத பருத்த முலையும் வெறுப்பை உண்டாக்குவனவாகும். ஆதலால் இளமை மிக்க தெலுங்கப் பெண்களது அழகு தெரியும்படி துணியினால் மூடியும் மூடப்படாமலும் இருக்கின்ற கொங்கைகளைப் போன்று இருக்கும்படியாகப் பாட்டு இயற்றுவாயாக.

நயம்: பாட்டின் பொருளும் அழகும் படிப்போர்க்கு எளிதில் புலப்படுமாறு அமைய வேண்டும். அதற்காக வெளிப்படையாக விளங்குமாறு சொல்நயமும் பொருள் ஆழமும் இல்லாமல் பாடக்கூடாது அல்லது சொல் நயமும் பொருள் ஆழமும் அமைய வேண்டும் என்பதற்காக யாரும் எளிதில் அறிந்துகொள்ளமுடியாதவாறு பாட்டு இயற்றவும் கூடாது. பாட்டின் பொருள் தெரிந்தும் தெரியாமலும் இருக்க வேண்டும் என்பது கருத்து. இதனை அறிஞர்கள் 'பாட்டு' என்பது ' தேங்காயைப் போலவோ பலாப்பழத்தைப் போலவோ, இருக்கக்கூடாது. எளிதில் உடைத்து உள்ளிருக் கும் மணிகளை எடுப்பதற்கு ஏற்றவாறு அமைந்துள்ள 'மாதுளம் பழம்' போல இருக்கவேண்டும்" என்பர். புலவர் தான் கண்டு அனுபவித்த மூவகைப்பட்ட கொங்கைகளின் அழகில் ஈடுபட்டமையால், அவற்றையே உவமையாகக் கூறியுள்ளார்.

குச்சிலிய–கூர்ச்சரம் (தற்கால குஜராத்); குவலயம் – பூவுலகம்; மெச்சு– பாராட்டும்; வியன்– பரந்த; சிங்காரம் – அழகிய; கலிங்கம் –துணி.

தமிழின் சிறப்பு.

ஒங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்கடியும் –ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

உயர்ந்த மலையில் தோன்றி மேன்மக்கள் தொழுது ஏத்து மாறு விளங்கி, இரைந்து ஒலிக்கும் கடல் சூழ்ந்த உலகத்தின் இருள் அகற்றுவதாயும், பொதிய மலையில் தோன்றி அறிவுடையோர் தொழுது 'போற்றுமாறு விளங்கி இரைந்து ஒலிக்கும் கடல் சூழ்ந்துள்ள உலகத்தில் வாழும் மக்களுடைய உள்ளத்தே உள்ள அறியாமை இருளைப் போக்குவதாயும் இருக்கின்றவற்றுள் ஒன்று ஒளியும், அழகும் ஒற்றைச் சக்கரத் தேரையும் உடைய கதிரவன்; மற்றொன்று தனக்கு வேறொரு மொழியும் ஒப்பாக இல்லாத தமிழ்.

நயம்: கதிரவனும், தமிழும் முறையே உலகத்தின் புற இருளையும், அக இருளையும் அகற்றுகின்றன. கதிரவன் கீழ்த் திசையில் உதயகிரியில் தோன்றுகிறது. பேர் இரைச்சல் இடும் கடல் சூழ்ந்த உலகில் வாழும் சான்றோர் தொழுது வணங்குமாறு விளக்கமுற்று காய்கிறது. உலகில் சூழ்ந்துள்ள இருளைப் போக்குகிறது.

தமிழ் மொழி பொதியமலையில் தோன்றியது. கடல் சூழ்ந்த உலகில் வாழும் மேன்மக்களால் சிறப்பாகப் போற்றி வணங்கப்படுகிறது. அறியாமை இருள் கவ்வி இருக்கின்ற உலக மக்களுடைய அக இருளைப் போக்கி அறிவொளி பரப்புகிறது. கதிரவன் உலகின் புறத்தே உள்ள இருளைத்தான் போக்குகிறான். அதற்கு மேல் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தமிழ்மொழி கதிரவனாலும் செய்யமுடியாத செயற்கரிய செயலைச் செய்கிறது. மக்களுடைய இருள் அடர்ந்த குகைபோன்ற உள்ளத்தில் பரவியுள்ள 'அறியாமை' என்னும் இருட்டை உடலின் உள்ளே ஊடுருவிச் சென்று அகற்றுகிறது. ஆதலின், தமிழ்மொழி கதிரவனைக் காட்டிலும் சிறப்புடையதாகும். மேலும் உலகில் உள்ள வேறு எந்த மொழிகளுக்கும் இல்லாத இளமை, செம்மை, பழமை முதலிய பண்புகள் தமிழ் மொழிக்கே உரிய தனிச் சிறப்புக்களாகும். எனவே தமிழ் மொழி தன் நிகரில்லா தனிப்பெரும் மொழியாக நின்று நிலவிவருகிறது.

புலவர் தமிழனைக் கதிரவனோடு ஒப்பிட்டுள்ளமையால் தமிழ் மொழியின் தொன்மையையும் ஒருவாறு உய்த்து உணரலாம்.

"திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள்"

என்னும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கருத்து இதனைத் தெளிவாக எடுத்து இயம்புகிறது.

ஓங்கல் – மலை; எங்கு – இரையும்; ஞாலம்– உலகம்: உலகில் உள்ள உயிரினங்களில் சிறந்தவரான மக்கள்; கடியும் –போக்கும்: மின்னேர். மின்னலை ஒத்த; தனியாழி –ஒற்றைச்சக்கரம், வெங்கதிர்–சூரியன்; ஏனையது – மற்றது.

வேண்டுகோள்.

ஓராது எழுதினேன்; ஆயினும் ஒண்பொருளை
ஆராய்ந்து கொள்வது அறிவுடைமை – சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

யான் ஆராயாது அறிந்தவற்றை எழுதினேன். ஆயினும், அதன் நுட்பமான பொருளை ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ளுவது அறிவுடையோரின் கடமையாகும். அதன் சிறப்பினை ஆராய்ந்து குற்றங்குறைகளை நீக்கி, யான் கூறாதனவற்றை இடத்திற்கேற்ப அமைத்துப் படித்தல் கல்வி அறிவில் சிறந்து விளங்கும் மக்களின் கடமையாகும்.

ஓராது–ஆராயாது ; ஒண்பொருள்– நுட்பமான பொருள்; குறைபெய்து –கூறாதவற்றை அமைத்துக் கொள்ளுதல்.

.....

பாட்டு முதற்குறிப்பு அகராதி.

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்
அக்காளை	47	இந்திரன் நீ	217
அங்கங்களவால்	17	இம்மென்னும்	101
அஞ்சலென்ற	197	இம்பர்வான்	202
அடகெடுவாய்	163	இரவலனே	57
அந்தநாள்	63	இருந்து	23
அந்திவெடி	177	இல்லெனும்	206
அப்பிலே	65	இழையொன்று	169
அரனவன்	120	இன்னம்	213
அரியது	37	இனியது	35
அருங்கிரியே	216	ஈதலறம்	31
அன்னம்	110	ஈயாத	50, 161, 233
அன்னைதனை	202	ஈராறும்	127
ஆசுகவியால்	45	உங்களிலே	173
ஆடும் கடைமணி	71	உருகி உடல்	5
ஆடும் தியாகரே	104	உரையேன்	147
ஆட்டுக்கு ஆவல்	17	உலைக்குரிய	78
ஆயகலைகள்	75	ஊரைச்	143
ஆயத்துறையில்	234	எட்டேகால்	26
ஆறுகுளம்	125	எழுதரிது	226
ஆறுதலை	65	என்ன செயம்	195
ஆஈன	54	என்று பெறுவேன்	71
ஆனெய்தனைப்	47	ஏடாயிரம்	211
இட்டடி நோவு	6	ஏடும் புண்ணாகி	194
இட்டமுடன்	38	ஏழில் ஒருகிரி	132
இட்டமுடன் முதலி	222	ஐயநின்	119
இத்தரம்	190	ஒட்டாக	145
இந்திரன்	136	ஒருமாடும்	130

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்
ஒன்றாகக்காண்பதே	38	காய்ந்து சிவந்தது	160
ஓங்கல் இடை	238	கார் என்று	108
ஓட்டம் கடியதால்	97	காலை அரவிந்தம்	144
ஓடும் இருக்கும்	96	கான்தெண்டன்	147
ஓராது	240	கிளையாளன்	114
ஓர் ஒற்றி	48	குச்சிலிய மாதர்	237
ஓர் தட்டிலே	159	குடம் ஓடு	121
கச்சிருக்கும்	132	குட்டுதற்கோ	164
கஞ்சிகுடியாளே	65	குன்றும்	43
கடல்கிழக்கு	83	குன்றக்குடி	86, 194
கத்துகடல்	110	கூற்றுவனை	107, 108
கரிக்காய்	100	கொக்குப்பறக்கும்	179
கருங்காலி	34	கொங்கைகளம்	48
கரும்புகை	16	கொங்கைகும்ப	192
கலக்கடமா	189	கொடியது	35
கல்லும் உறுத்	237	கொற்கையான்	82
கல்லடிக்கும்	159	கோரத்துக்கு	70
கல்லாத ஒருவனை	53	சக்கரத்தினால்	15
கல்லாத மூடர்	89	சண்டாளி	25
கல்லால் அடி	14	சற்றே பருத்த	7
கல்லைத்தான்	55	சார்பினால்	1
கற்றது	28	சித்திதருகிற	9
கவிகற்றவர்	205	சித்திரமா மண்டபம்	177
கவியாகு	146	சித்திரமும்	22
காடுவெட்டி	195	சின்னம் சிறு	158
காணக்கண்	24	சீராடை	209
காணாமல்	22	சீர்கருத்த	134
காய்சினம்	18	சுத்தபாற்கடல்	92
காய்தல் உவத்தல்	234	சூரியா நின்	219

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்
செங்கமலப்	11	தேங்குபுகழ்	41
செந்தமிழ் அடை	230	தேங்குழல்	87
செந்தில்வேல்	88	தேரையார்	81
செருப்புக்கு	17, 71	தேர் உருளை	79
செய்வேன்	5, 58, 217	நஞ்சு இருக்கும்	94
செல்லாரும்	135	நஞ்சு தின்னப்	15
செற்றலரை	101	நடக்கில் அன்னம்	131
சேய்கொண்டு	122	நல் அம்புலி	64
சொல்லாமலே	27	நல்லவர்கள்	12
ஞானம் பெருமை	12	நாட்டுக்கு	184
தம்பியோ	46	நத்துமலர்	9
தடக்கும்ப	152	நாராய் நாராய்	112
தண்ணீரும்	25	நாணி என்பதை	122
தண் தமிழ்முன்	220	நாண் இலான்	232
தன்னைப்புகழ்	10	நாண் என்றால்	44
தன்னை அளித்	224	நீரின் உளதால்	97
தன்னைத்தான் பேணா	231	நீரோ பிறவா	99
தாயோடு	31	நீயாவி	221
திங்கள் நுதலார்	109	நிலவாய் விளங்கு	96
திருநெடுமால்	167	நின்று படியளக்கும்	142
திருமணியை	183	நேசனைக் காணா	30
தீத்தான் உன்	105	நையும்படியே	72
துங்கவரை	178	பகலோன் தெறு	236
துதிவாணி	103	பத்தாவுக்கு	24
துயிலையிலே	138	பக்திச்சுவை	186, 197
துறைநீங்கின	220	பத்துக்கால்	125
தென்னரங்கன்	131	பத்துக்கொண்டன	69
தென்னவன்	168	படிகநிறமும்	76
தேட்டாளன்	161	பணியாரம்	208

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்
பறவாத தும்பி	109	மட்டாரும்	145
பார இளநீர்	139	மதலையைப் பெறு	229
பாரார் சொல்லார்	154	மதியாதார்	29
பாரி பறித்த	26	மதுகரத்தை	61
பாணர்க்குச்	99	மரமது	127
பாணியிலே	148	மனைக்கு விளக்கு	225
பாலுக்குச் சர்க்கரை	229	மன்னவன்	168, 231
பால் அயிலாள்	115	மன்னவனு நீயோ	82
பானுகிரணம்	115	மாடில்லான்	30
பிறப்பித்தோன்	224	மாடேறுநாளும்	138
புதுவை	60	மாதரின்றி	221
புரைதபு குண	228	மாதர்க்கு இதழ்	63
பூநக்கி	102	மாலினால்	226
பூமாது இருந்தென்ன	152	மாலே நிகராகும்	204
பூவேந்தர்	172	மாலைதனைப்	58
பெரியது	36	மின்தொழில்	218
பெரியவிடமே	95	மின்னிய மதியு	183
பெருமாளும்	102	முத்து	9
பெண்ணைச் சடை	223	முத்தியில் விருப்	227
பேரரசர்	77	முற்பாதி	18
பொரவிசையம்	191	முழவொலி	233
பொருந்தமர்	191	முன்னாள்	207
பொருள் இல்லார்க்கு	233	முனிஅதட்டு	236
பொய்யருக்கு	210	முன்னே கடிவா	103
பொல்லாத மூர்க்கர்	162	முன்னொரு	59
பொன்போலும்	173	மூங்கிலிலே	52
போந்த உதாரனுக்கு	32	மூங்கிலில் பிறந்த	232
போற்றினும்	83	மூடர்முனே	43
மஞ்சும்	153	மூவொன்பது	180

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்
மூவர்கோ	32	வாலிமடிந்தது	107
மேழி பிடிக்கும்	77	வாழிச்சோழ	174
மேற்குப்பவள	85	வாழ்த்துதிருநாகை	106
மேவு இனிய	14	வான்குருவி	21
மைவடிவக்	4	விரகரிருவர்	23
மோட்டு எருமை	76	விருந்தின	227
மோனை முத்தமிழ்	72	விண்ணுக்கும்	164
யாக்கையெனும்	198	வில்லை வளையாதே	63
வஞ்சகர்பால்	55	விழிந்ததுளி	174
வடக்குத்திசை	112	விறகுதரிக்க	56
வடவைக்	209	வெங்காயம்	139
வணக்கம்வரும்	50	வெண்ணெய்	51
வண்டுறைசோலை	151	வெண்ணெயுற்ற	11
வண்டோவிழி	203	வெள்ளரிக்காய்	19
வரகரிசிச்சோறு	28	வெள்ளாறு	83
வழிமேல்விழி	162	வெள்ளைக்கலை	91
வாதக்காலாம்	105	வெறும்புற்கை	113
வாதக்கோன்	29	வேண்டுங்கால்	218
வாயிலொன்று	205	வேய் ஈன்ற	42
வாரணங்கள்	91	வேலைக்குள்	219
வாரிக்களத்து	93	வேழம் உடைத்து	33
வாணன்பெயர்	78		

●●●●●●●●●●●●

34. நூலாசிரியரின் நூல்கள்

தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகம் – தமிழிணையம் – இணையத் தளத்தில் [https://www.tamil/digitallibrary.in] புத்தகங்களைக் காணலாம்.

(அ) வரலாற்று நூல்கள்:

1. சிந்துவெளிதரும்ஒளி,வள்ளுவர்பதிப்பகம்,புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் வாழ்வும், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு முதல் பகுதி –"விடி வெள்ளி" தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975,
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1976.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு. சங்கக் காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.

10. Rajaraja, the Great, Madras Publications, 1984.
11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.
12. Chieftains of the Sangam Age, 2001.
13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.
14. தமிழ்நாட்டு வரலாறு சங்கக்காலம்–வாழ்வியல் (நாகரிகமும், பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.
15. History of Tamilnadu (A Birds Eye View) Authors Guild of India, 1986.

(ஆ) ஓரங்க நாடகம் :

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.
17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981.

(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974–இல் பெற்ற நூல்)
19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.
20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.
21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.
22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.
23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.
24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு)) பாரி நிலையம், சென்னை, 1979.
25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.

26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம்,1984.
27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.
28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைகழகம், 2001.
29. திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

(ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.
33. Historical Heritage of the Tamils, Vol. I. International Institute of Tamil Studies, Madras, 1983.
34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–1 (பதினெண் கீழ்க்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
35. திறனாய்வு அணுகுமுறைகள் (கத.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1971.
37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1972.
38. Tributes and Translations of Tirukkural, 1986.
39. Historical Heritag of the Tamils
    Dr.S.V. Subramaniyan & Dr.K.D. Thirunavukkarasu IITS, Tharamani, 1985

(ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1965,
41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு– 3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.
42. இலட்சுமிநாத பெஸ்பரூவா, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

(எ) இலக்கணம்

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

35. தமிழில் வெளியிட்ட கட்டுரைகள்

1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

1952 – 53

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:–

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952–53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.
15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.
16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954

17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.

18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954

19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.

21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955

22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" – ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956

23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.

24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.

26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்றுக் கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.

27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.

28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.

30. தமிழகததில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.

31. ரோமானியர் கண்ட தமிழகம், எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)

32. மருதனாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

1960

38. மனிதன் – அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்கக் காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத், 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியசு கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963. (நான்கு கட்டுரைகள்)

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி –5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பானம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.

63. நெடுநல்வாடை – திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.

64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.

65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.

67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.

68. இன்பம், கல்வி, சென்னை, 1966.

69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.

70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125 ஆவது விழா மலர், சென்னை, 1966.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

72. சிந்தாதிரிப்பேட்டை,கல்யாணம்மகளிர்உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

73. பரணியின் பல்சுவை – இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.

74. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

1968

75. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

76. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

77. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

78. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

79. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

80. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

81. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

82. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

83. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை – 1, 1968.

1969

84. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

85. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

86. தமிழகத்தின் இசைக் கருவிகள்,குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

87. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

88. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1969.

89. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

90. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

91. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

92. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

93. திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

94. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

95. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

96. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

97. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

98. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை, 1969.

1970

99. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

100. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

101. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

102. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

103. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

104. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு – திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

105. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

106. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

107. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

108. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

110. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

111. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப் பொன்விழா மலர், கழகம் சென்னை –1, 1970

112. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை –7, 1970.

1971

113. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை

1971

114. தமிழகத்தின் ஆண்டுக் கணக்குமறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

115. வரலாற்றின் எச்சரிக்கை விசய்நகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

116. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

117. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

118. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாசி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

119. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

120. வள்ளுவர் கண்ட மனிதன் – 1, தமிழியல்(JOTS) சென்னை, 1972.

121. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

122. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

123. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

124. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

125. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

126. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

127. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

128. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

129. தமிழர் திருநாள், சமயம், 1972.

1973

130. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

131. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

132. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

133. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி 1973.

134. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

135. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

136. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

137. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

138. வள்ளுவர் கண்ட மனிதன் –2, தமிழியல், சென்னை, 1973.

139. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

140. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு – 1973.

141. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1973.

1974

142. சும்மா, மலைச்சாரல், சோளிங்க புரம், ஏப்ரல், 1974.

143. நூறாண்டு வாழ்க – திறனாய்வு, தமிழ்ப்பணி, 1974.

144. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

145. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

147. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

148. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

149. தாயா? தமக்கையா?, ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

150. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

151. எழிலோவியம் காணவாரீர்.

152. தமிழிற்கு ஓர் அறண்

153. அறிஞர் அறவாழி

154. சிலப்பதிகாரத்தின் மாண்பு

155. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை – 18, 1975.

1977

156. டாக்டர் மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை –30, 1977.

1978

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

164. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பா; 1978

165. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 20,1978.

166. நூல்அறிமுகம் – காளிதாசன் உவமைகள்,புலமைதொகுதி –4, பகுதி 3,4, சென்னை –18, 1978.

167. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

1979

168. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆண்டு 1979.

169. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

170. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010–ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

1980

171. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை12, தொகுதி1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

172. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

173. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை – 17.

174. மறுமலர்ச்சி

175. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

176. தமிழ் உரைநடை

177. உவமை

178. பொற்காலம்

179. பாவியலில் கற்பனை

180. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.3.1978.

181. கல்லணையைக் கட்டியது யார்?

182. பசி

183. பகை பிறந்தெறிதல்

184. நான்கண்ட அடியாருக்கு நல்லார்–தி.க.நாராயணசாமிநாயுடு 80–ஆம் ஆண்டு நினைவு விழா மலர்.

185. நன்னூல் உரை ஆசிரியர்கள்

186. சிறுநெறி

187. அறிவு என்பது என்ன?

188. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

189. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

190. தமிழரின் கலைக்கோட்பாடு, உ.த.ஆ. நிறுவனம் 9.2.87

191. மறுமலர்ச்சிப் பாடல்களில் கவிதை இன்பம்

192. முடமோசியார் – யவனரா?

193. பழியும், பாவமும்

194. வினையின் பயன்

195. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

196. இருட்டறை

197. மதுராந்தகம்

198. குறவஞ்சி

199. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

200. வேளிர்

201. மனம்

202. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

203. தேசீயம்

204. வரலாற்றுக் காலம்

205. வள்ளலார் காட்டிய வழி

206. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

207. வேதங்கள்

208. வீரயுகப் பாடல்கள்

1988

209. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர், 1988

210. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர், 1988

211. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

212. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

213. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

214. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல் 1989

215. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

216. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

217. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

218. பழந்தமிழ்க்குடிகள், "முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

219. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை –4, நாள் 7.11.71

220. A Tamil Savant From the City of Madras (8.1.1901 to 27.8.1988)

221. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

222. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் – உ.த.க. நிறுவனம் 8.6.1977 83–ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

223. குறவஞ்சி

224. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுங்கங்களும்

225. இந்திய நாடகக் கலையின் தந்தை

226. படிமங்கள்

.....

36. வாழ்க்கைக் குறிப்பு

1)	தோற்றம் – மறைவு	20.11.1931 - 05.05.1989
2)	பிறந்த ஊர்	கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்
3)	கல்வி	சிந்தாதரிப்பேட்டை ஆண்கள்
	பள்ளிக்கல்வி	உயர்நிலைப்பள்ளி, சென்னை
	புதுமுக வகுப்பு	விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை
	இளங்கலை	1951–1954
	(ஹானர்ஸ்)	பச்சையப்பன் கல்லூரி
	தமிழ்	சென்னைப் பல்கலைக்கழகம், முதல்
	பின்னர் முதுகலை	வகுப்பு, முதல்நிலை
	(தமிழ்)	
	முதுகலை வரலாறு	சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப்படிப்பு (1956)
	முதுகலை இலக்கிய	"பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்"
	ஆராய்ச்சி	(ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்லைக்கழகம் (1963)

மொழியியல்	அண்ணாமலை பல்கலைக்கழகம்
பெருஞ்சான்று	(1963)
முனைவர்பட்டம்	பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1979.
ஆசிரியர் பணி	1. 6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959.
	2. 7 ஆண்டுகள், துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை 1962–1968
	3. 2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968–1969
	4. 3 ஆண்டுகள், திருக்குறள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம்," 1962–1972.
	5. 19 ஆண்டுகள், இணைப் பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியியல்), உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
தெரிந்த பிறமொழிகள்	சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்
விருதுகள்	1. சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம்
	2. தி.ரு.வி.க விருது 1985

.....

குறிப்புகள்

நூலாசிரியர், அவர் படைப்புகள்
பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க /
பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர்
படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-13-4